# கம்பன் சுயசரிதம்



கலைமணி

தொ.மு. பாஸ்கரதொண்டைமான்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கம்பன் சுயசரிதம்

[கட்டுரைத் தொகுப்பு]


கலைமணி

தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்



புதிய இலக்கு புதிய தடம்

**நிவேதிதா பதிப்பகம்**

எண்.1, 3ஆவது மாடி,
புதூர் 13 ஆவது தெரு,
அசோக் நகர், சென்னை – 83.
✆ : 55688527

First Edition : July 2005

# KAMBAN SUYASARITHAM

by
T. M. Bhaskara Thondaimaan

Copy Right :
Rajeswari Natarajan
Sarojini Subramaniam

Pages : 192

**Price : Rs. 50.00**

Published by
**NIVETHITHA PATHIPPAGAM**
No. 1, 3rd Floor,
Puthur 13th Street, Ashok Nagar,
Chennai - 600 083.
Ph : 55688527

Laser by
**Amma Systems**
Chennai - 600 017.
☎ : 2436 1518

Printed at :
S K B Printers, Chennai - 600 015.

# முன்னுரை

**"கல்வியில் பெரியவன் கம்பன்"**

**"கல்விச் சிறந்த தமிழ்நாடு – புகழ்க்**
**கம்பன் பிறந்த தமிழ்நாடு"**

என்றெல்லாம் சின்னஞ்சிறு வயதிலேயே, பள்ளிக் கூடத்தில் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கம்பன் யார் என்று தெரியாமலேயே, நாமும் கிளிப் பிள்ளை மாதிரி, பள்ளியில் படித்ததை சொல்லிக் கொண்டிருந்திருக்கிறோம். பின்னர், வளர்ந்து, பெரிய வகுப்புகளுக்கு வந்தபின்,

**யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,**
**வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்**
**பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை"**

என்ற பாரதியின் பாடலைப் படிக்க நேர்ந்தபோதுதான், ஆகா! இந்தக் கம்பன், பெரிய ஆள் போலிருக்கிறதே, அதனால்தான், கம்பனுக்குக் கவிச்சக்கரவர்த்தி என்று பட்டம் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்கள், கற்றறிந்த பெரியோர்கள் என்று உணர ஆரம்பித்திருக்கிறோம். அப்படி என்னதான் இந்தக் கம்பன் பாடியிருக்கிறான், இத்தனை பேரும் புகழும் எப்படி வந்தது என்று, அவன் ஆக்கித் தந்த கம்பராமாயணத்தைப் படிக்க முனைகிறோம். படிக்கப் படிக்க அதன் சுவை, நம் நாவில் மட்டுமல்ல, நம் உள்ளத்திலும் உணர்விலும் ஊறி நமக்கு உவகை ஊட்டுகிறது. கதையென்னமோ வால்மீகி முனிவர் தந்த கதைதான். ஆனால் அந்தக் கதையை அங்கங்கே, செதுக்கிச் சீராக்கி, தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப, கம்பன் கொண்டு செல்கின்ற திறம், கம்பன் கவி நலம், கம்பன் பாத்திரப் படைப்புகள் இவையெல்லாம் நம்மை பிரமிப்பில் ஆழ்த்துகின்றன. அவன் பாடிச் சென்றுள்ள பன்னீராயிரம் பாடல்களையும் நாம் படித்து அனுபவிக்க அவகாசம் இருக்கிறதோ இல்லையோ,

அப்படியெல்லாம் சிரமப்பட வேண்டாம் என்றே பி.ஜி. ஆச்சார்யா, முதுபெரும் புலவர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார், ரசிகமணி டிகேசி போன்றவர்கள், அந்தக் கம்பராமாயணத்திலிருந்து தெள்ளி எடுத்து, அவற்றைக் கம்ப சித்திரமாகவும், கம்பராமாயண சாரமாகவும், கம்பர் தரும் காட்சியாகவும் நமக்குத் தந்திருக்கிறார்கள்.. அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கம்பன் திருக் கூட்டமே தென் தமிழ்நாட்டில் உருவாகிவிட்டது. கம்பனுக்கு முதன்முதலாக 'திருநாள்' கொண்டாடிய பெருமை திருநெல்வேலிக்கே உரியது. பின்னர், கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் காரைக்குடியில் கம்பன் கழகத்தை நிறுவி, ஆண்டுதோறும் நான்கு நாட்கள் திருவிழா கொண்டாடி வந்தார்கள். 'கம்பன் அடிப்பொடி' என்று பவ்யமாகப் பெயர் சூடிக் கொண்டாலும், கவிச் சக்கரவர்த்தி கம்பனுடைய தானைத் தளபதி அவர்கள்தான். கம்பன் அடியார்கள் அத்தனை பேரையும், கம்பன் பெயரைச் சொல்ல, கட்டி இழுத்து வந்து காரைக்குடி கம்பன் விழா மேடையில் ஏற்றிவிடுவார்கள். ரசிகமணி டிகேசி, குன்றக்குடி அடிகளார், பாஸ்கரத் தொண்டைமான், ஜஸ்டிஸ் மகாராஜன், பேராசிரியர் சீனிவாசராகவன், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., அ.ஞானசம்பந்தன், கம்பராமன், தோழர் ஜீவா, எஸ்.ராமகிருஷ்ணன் என்று கம்பன் அடியார் கூட்டமே வந்து குவிந்துவிடும். நானும் என் திருமணத்துக்குப் பின், ஏறத்தாழ இருபது ஆண்டுகள், அந்தக் கம்பன் விழா மேடை ஏறியிருக்கிறேன். என் கணவரும் ஏறி இருக்கிறார். கிடைத்தற்கரிய பேறு அது. இன்றும் காரைக்குடியில் கம்பன் விழா தொடர்ந்து நடைபெறுகிறது. காரைக்குடியில் மட்டுமல்ல, கோவையிலும், பாண்டிச்சேரியிலும், சென்னையிலும் அதன் கிளைகளாகக் கம்பன் விழாக்கள் நடக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது, கம்பன் எப்படி தமிழ் அறிஞரைக் கவர்ந்திருக்கிறான், கவிச்சக்கரவர்த்தியாகத் தமிழ் நெஞ்சங்களில் கோலோச்சிக் கொண்டிருக்கிறான் என்று நாம் அறிய முடிகிறது.

காரைக்குடி கம்பன் விழாக்களின் போது ஆண்டுதோறும் மலர் வெளியீடும் நடந்தது. அந்த மலர்களில் எல்லாம் என்

தந்தையார் பாஸ்கரத் தொண்டைமானின் கட்டுரைகளும் தவறாமல் இடம்பெற்றன. அவற்றையெல்லாம் தேடி எடுத்துப் பதிப்பிக்க வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாளைய ஆசை. அவற்றைத் தேடிய போது, அத்தனை கட்டுரைகளும் கிடைக்கவில்லை. 'கம்பன் ஒரு சோக சிகரம்' என்று ஓர் அருமையான கட்டுரை. அது எனக்கு மிகவும் பிடித்த கட்டுரை. அது கிடைக்காமற் போனது பெரிய சோகம். கிடைத்தவற்றை மட்டும் தொகுத்துத் தந்திருக்கிறேன். அவற்றை நூலாக்கித் தர நிவேதிதா பதிப்பகம் முன் வந்திருக்கிறது.

இந்த ஆண்டு என் தந்தையாரின் நூறாவது ஆண்டு. இந்தச் சந்தர்ப்பத்தில், அச்சேறாத தந்தையாரின் நூல்களை எல்லாம் தமிழ் உலகத்துக்கு வழங்கிவிட வேண்டும் என்றும் ஒரு பெரிய ஆர்வம் என்னுள் எழுந்திருக்கிறது. ஆர்வம் என்பதைவிட வேகம், வெறி என்று கூடச் சொல்லலாம் தவறில்லை. நானும் வாழ்வின் ஓரத்துக்கு வந்துவிட்டேன். ஆகவே உடனடியாகச் செய்வதென்று முனைந்துவிட்டேன். நிவேதிதா பதிப்பக உரிமையாளர், வீடுதேடி வந்து என் வேகத்துக்கு மேலும் ஊக்கம் தருகிறார். அழகாக அச்சிட்டுத் தந்திருக்கிறார். அவருக்கு நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு ஆயிரமாயிரம் படையல்கள். இது மேலும் ஒரு படையல். இதனை என் தந்தையின் உடன்பிறவா சகோதரரும், எனக்கு வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொடுத்து அரவணைத்து வரும் என்றும் என் வணக்கத்துக்கு உரியவருமான கம்பன் அடிபொடி, கவிச்சக்கரவர்த்தியின் தானைத் தளபதி சா. கணேசன் அவர்களின் திருவடிகளில் சேர்ப்பதில் மகிழ்ச்சியும் நிறைவும் பெறுகிறேன்.

**இராஜேஸ்வரி நடராஜன்**

*பாஸ்கர நிலையம்,*
*சாஸ்திரி நகர்,*
*சென்னை - 20.*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கம்பன் சுயசரிதம் | 7 |
| 2. | கவிஉலகில் கம்பர் இடம் | 37 |
| 3. | கம்பன் கலைக்கோயில் | 50 |
| 4. | கம்பன் கண்ட இராமன் | 59 |
| 5. | கம்பன் பிறந்த ஊர் | 100 |
| 6. | கம்பன் கவிச்சித்திரம் வர்ணனை | 108 |
| 7. | மலைக்குல மயில் | 113 |
| 8. | கம்பனும் டி.கே.சியும் | 123 |
| 9. | கம்பன் காவியமாளிகை | 147 |
| 10. | கம்பன் ஒரு சிறந்த சினிமா டைரக்டர் | 157 |
| 11. | கம்பன் ஒரு கடல் | 164 |
| 12. | கம்பன் என் பகைவன் | 180 |


இம்பர் நாட்டில் செல்வம் எலாம்
எய்தி அரசாண்டிருந்தாலும்
உம்பர் நாட்டில் கற்பகக்கா
ஓங்கும் நீழல் இருந்தாலும்
செம்பென் மேரு அனைய புயத்
திறல் சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையைப் போல்
கற்போர்க்கு இதயம் களியாதே!

# 1 கம்பன் சுயசரிதம்

**த**ஞ்சையில் ஸரஸ்வதி மஹால் என்ற ஒரு நிலையம். மராத்திய மன்னன் சரபோஜியால் உருவாக்கப்பட்டது. மன்னன், அவன் காலத்தில் வெளிவந்த ஆங்கிலப் புத்தகங்கள் அத்தனையையும் வாங்கியிருக்கிறான். தமிழ், தெலுங்கு, மராத்தி முதலிய மொழிகளில், எத்தனை ஏடுகள் கிடைக்குமோ அத்தனையையும் சேகரித்திருக்கிறான். காவியம் ஓவியம், சித்திரம் சிற்பம், சங்கீதம் நடனம், வைத்தியம் சோதிடம், தாவரம் மிருகம், யந்திரம் தந்திரம் இன்னும் என்ன என்ன விஷயங்களைப் பற்றி வேண்டுமானாலும், அங்கே அற்புதம் அற்புதமான ஏட்டுச் சுவடிகளைப் படிக்கலாம். இந்த ஏட்டுச் சுவடிகளைத் தேடி நானாகவே போவதுண்டு சில சமயம். சில சமயம் வெளியூரிலிருந்து வரும் அன்பர்களுக்காக அவர்களுக்கு வேண்டும் சுவடியைத் தேட அவர்களுடனும் செல்வதுண்டு. அந்த மஹாலின் அத்யக்ஷகர் ஸ்ரீ K. வாசுதேவ சாஸ்திரியார், வருபவர்களுக்குச் சுவடி பார்ப்பதற்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து கொடுப்பார்.

ஒருநாள் சாவதானமாக நான் சரஸ்வதி மஹாலில் நுழைந்தபோது, நண்பர் சாஸ்திரியார் "சார்! கேட்டீர்களா? இங்கு ஓர் அற்புதமான ஏடு ஒன்றிருக்கிறதே தெரியுமா?" என்று கேட்டார். "சரஸ்வதி மஹாலிலே எல்லாம்

அற்புதம்தானே சார்! புதிதாக என்ன அற்புதத்தைக் கண்டீர்கள்" என்றேன் நான். "சார், இங்கே ஒரு ஏடு, கம்பன் எழுதிய சுய சரிதம் என்று இருக்கிறது" என்றார். உடனே ஒரு துள்ளு துள்ளி, "என்ன? கம்பன் எழுதிய சுயசரிதமா! ஆட்டோபயாகிராபியா? என்ன சார் சரடு விடுகிறீர்கள். அப்படி ஒன்றிருந்தால் இதுவரை உங்களுக்குக் கூடத் தெரியாமலா இருந்திருக்கும். அப்படி ஒன்றிருந்தால் - எத்தனை விவாதங்கள், விவகாரங்கள் எல்லாம் என்றோ முடிந்திருக்குமே. இன்றைய ஆராய்ச்சியாளர் பலரின் தலைவலியும் எப்போதோ தீர்ந்திருக்கும். சரி சார், அந்த ஏட்டை எடுங்கள். என்ன வேலை இருந்தாலும் அதை முதலில் படித்துவிட்டுத்தான் மற்ற வேலை. எடுங்கள் சார் - எடுங்கள்" என்று அவசரப்பட்டேன். சாஸ்திரியாரோ போய் அலமாரியைத் திறந்து பல ஏடுகளைப் புரட்டி, கடைசியில் நான்கு ஐந்து ஏடுகளை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தார். ஏடுகளைப் பெற்ற நான் சௌகரியமாக ஒரு மேஜை முன்பு உட்கார்ந்து ஏடுகளைப் புரட்ட ஆரம்பித்தேன். அந்த ஏடுகளில் ஒன்றிலாவது முகப்பு ஏடு இருக்கவில்லை. ஓரிடத்திலாவது சுயசரிதம் என்ற தலைப்பும் இல்லை. உடனே பக்கத்திலிருந்த சாஸ்திரியாரிடம், "என்ன சார் சுயசரிதம், சரித்திரம் என்றெல்லாம் பிரமாதமாகச் சொன்னீர்கள். ஒன்றையும் காணோமே" என்றேன். "சார், எனக்குத் தெரியும். நீங்கள் அவசரக் குடுக்கை என்று. கொஞ்சம் சாவதானமாக ஏட்டைப் புரட்டுங்கள். இருந்து படியுங்கள். படித்துப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். ஏட்டில் முதல் ஏடு முகப்பு ஏடு, இல்லை என்பதனால், ஏட்டைத் திருப்புவதையே விட்டுவிடாதீர்கள். உங்களுக்குத்தான் தெரியுமே, எங்கள் சரஸ்வதி மஹாலில் எத்தனையோ ஏடுகளுக்கு முகப்பு ஏடு இல்லை என்று. வாலும் இல்லாமல் தலையும் இல்லாமல் இருக்கும் ஏடுகள்தான் எத்தனை எத்தனை. அத்தனை ஏடுகளிலும் உள்ளே விஷயத்தைப் படித்துத்தானே இது எந்த ஏடு என்று கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. ஆதலால் ஆர அமர இருந்து ஏட்டைத்

திருப்புங்கள். அப்போது தெரியும் சார் இது கம்பனின் சுயசரிதம்தான் என்று". இப்படி சாஸ்திரியார் சொல்லிவிட்டு அவர் இடத்திற்குப் போய்விட்டார்.

அன்று முழுவதும், கிட்டத்தட்ட நான்கு ஐந்து மணி நேரம் உட்கார்ந்து ஏட்டைப் புரட்டினேன். ஏடு ஏடாகப் படித்தேன். அற்புதமான பாக்களிலே அந்த நூல் முழுவதும் எழுதப்பட்டிருந்தது. பாக்களைப் படிக்கப் படிக்க, அவைகளை முன்னமேயே படித்திருப்பது போல ஒரு உணர்ச்சி உண்டாகிக் கொண்டே இருந்தது. முதலடியைப் படித்த உடனேயே பல பாக்கள் எனக்கு முன்னமேயே தெரிந்த பாட்டுக்களாகத் தோன்றிற்று. இன்னும் சில பாட்டுக்கள் எத்தனையோ வருஷகாலமாக எங்கள் தலைவர் - அமரர் ரஸிகமணி அவர்கள் நாவில் நின்று நடம் ஆடி, அவர்களுடன் சேர்ந்து மற்றவர்களையும் ஆடச் செய்து ஓர் இன்ப லாகிரியை உண்டாக்கி இருக்கிறதே என்று தோன்றிற்று. ஒருவேளை இதெல்லாம் என்னுடைய பிரமையோ என்று நினைத்தேன். திரும்பவும் கண்ணைக் கசக்கிக் கொண்டு, கண்ணாடி அணிந்து கொண்டு, புரட்டினேன், புரட்டினேன். கிட்டத்தட்ட ஐயாயிரம், ஆறாயிரம் பாடல்களுக்கு மேல் படித்துப் பார்த்துவிட்டேன். ஒன்றும் தெரியவில்லை, அது கம்பனின் சுய சரித்திரம் என்று சொல்வதற்கு.

சாஸ்திரியார் பேரிலோ கோபம் கோபமாக வந்தது எனக்கு. அவரிடம் போனாலோ, சும்மா அமைதியாகயிருந்து படியுங்கள் தம்பி! அவசரப்படாதீர்கள் என்கிறார். அவர் இருந்த இருப்போ, படித்து முடித்தாலொழிய என்னை வெளியே போக விடமாட்டார் போல் இருந்தது. திரும்பவும் ஏடு கிடந்த இடம் சென்று உட்கார்ந்து மறுபடியும் புரட்டினேன் ஏடுகளை.

அப்படிப் புரட்டிக் கொண்டிருந்தபோது, ஒரு பெரியவர், வயது அறுபதுக்கு மேலிருக்கும் கம்பீரமான நடைபோட்டுக்

கொண்டு வந்தார். ஏதோ சரஸ்வதி மஹால் பண்டிதர்களில் ஒருவர் என நினைத்துக்கொண்டேன். ஆனால் அவரோ நான் இருக்கும் நாற்காலி பக்கமே வந்தார். எதிரே இருந்த நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டு ஜம் என்று உட்கார்ந்து கொண்டார். இது என்னடா பூஜை வேளையில் கரடி என நினைத்தேன். ஆனால் வந்தவரோ, நல்ல கவர்ச்சியான உருவம் உடையவராயிருந்தார். கட்டுமஸ்தான உடல். ஆஜானு பாகுவான தோற்றம், அகன்று பரந்த நெற்றி, அடர்ந்து செறிந்த புருவம், அலட்சியமாக வாரிவிடப்படாத ஆக்ஸ்போர்ட்கிராப், செழித்து வளர்ந்த மீசை, கூர்ந்து நோக்கும் கண்கள், ரொம்பச் சொல்வானேன். அசப்பில் பார்த்தால் அமரர் டிகேசியே அங்கு ஒரு நடை வந்ததுபோல் இருந்தது. ஆனால் அவர் அணியும் துல்லிய கதராடை இல்லை. மடித்துத் தோளில் லாவகமாகப் போட்டிருக்கும் அங்கவஸ்திரமும் இல்லை. வந்தவர் அழகான ஒரு பொன்னாடையால் தன் உடலைப் போர்த்தியிருந்தார். காதுகளில் மகர குண்டலம். கழுத்திலோ நவரத்தின கண்டி, கைகளிலே வைர மோதிரங்கள் பளிச்சிட்டன. ஆளைப் பார்த்தாலே ரூபாய் ஐம்பதினாயிரத்துக்கு ஜாமீன் கொடுக்கலாம்போல் இருந்தது. விழித்த கண் விழித்தபடியே அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன் சில நிமிஷ நேரம். அவரோ என்னைச் சும்மாவிடுபவராக இல்லை. பேச்சுக் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

“என்ன ஐயா - சும்மா என்னையே பார்க்கிறே! என்ன படிக்கிறே! என்றார். இனி நடக்கிறது பேச்சு இருவருக்கும்

நான் - “இல்லை. சும்மாத்தான் பார்த்தேன். எங்கேயோ பார்த்த முகமாயிருக்கிறதே” என்று.

வந்தவர் - எங்கே என்னைப் பார்த்தே?

நான் - அதுதானே ஞாபகம் வரமாட்டேன் என்கிறது.

வந்தவர் - கொஞ்சம் நினைத்துத்தான் பாரேன் . கண்டது காவிரிக் கரையிலா அல்லது காரைக்குடியிலா?

நான் - ஆமா, ஆமா! காரைக்குடியில் கம்பன் திருவிழாவில் மேடைமீது கொலுவீற்றிருக்கும்...

வந்தவர் - என்னையா கண்டாய்?

நான் - இல்லை. தங்கள் திருவுருவப்படத்தைக் கண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன்.

வந்தவர் - ரொம்ப சரி. நான் தான் அந்த ஆசாமி. சரி, அது கிடக்கட்டும். இப்போது உட்கார்ந்து என்னமோ புரட்டிக் கொண்டிருக்கிறாயே? என்ன ஏடு அது?

நான் - இதுவா? இது தங்கள் சுயசரிதம் என்று நண்பர் சாஸ்திரியார் கூறுகிறார்.

வந்தவர் - என்ன! சுயசரிதமா? அது இங்கே எப்படி வந்தது?

நான் - என்ன - என்ன? அப்படி ஒன்று எழுதியிருக்கிறீர்களா?

வந்தவர் - எழுதினேன். ஆனால் அதை இந்தத் தமிழர்கள் படிக்கமாட்டார்கள் என்று எண்ணி வெளியிடவில்லையே. ஆனால் அது எப்படியோ இந்த மராத்திய மன்னன் கையில் அகப்பட்டுக் கொண்டதுபோல் இருக்கு.

நான் - எனக்கென்னமோ தங்கள் வார்த்தையில் நம்பிக்கையில்லை. இந்த ஏடு முழுவதையும் திருப்பிவிட்டேன். இதில் தங்கள் சுயசரிதைக் குறிப்பு ஒன்றுமே இல்லை.

வந்தவர் - அப்படியா? அப்படியானால் இப்படிக் கொடு (என்று ஏட்டை வாங்கினார் - ஒரு புரட்டுப் புரட்டினார்)

தம்பீ! இது என் சுயசரிதம்தான். ஏடு என்னிடம் இருக்கட்டும். உனக்கு விளங்காததை எல்லாம் கேள். நான் சொல்கிறேன் பதில். ஒரே ஒரு நிபந்தனை. நாளையே கம்பருடன் பேட்டி •- நமது நிருபர் தரும் தகவல் என்று கொட்டை எழுத்தில் நான் சொல்லியதை எல்லாம் பத்திரிகையில் பிரசுரித்துவிடாதே.

நான் - அதைப் பின்பு பார்த்துக் கொள்ளலாம் ஐயா. கேள்விகள் கேட்கலாமோ?

வந்தவர் - சரி கேளேன்.

நான் - ஆமா, முதலிலே உங்களுடைய பேர்தான் என்ன?

கம்பன் - என்ன தம்பி! முதல் முதலிலேயே அடி மடியில் கை போடுகிறாய். பேரில் என்ன இருக்கிறது. என் தாய் தந்தையர் இட்ட பேர் என்னவோ? எனக்கே தெரியாது. எப்படியோ கம்பன் என்ற பேர் நிலைத்துவிட்டது. கச்சி ஏகம்பன் எங்கள் முன்னோர்களின் வழிபடு தெய்வமாக இருந்திருக்கலாமோ என்னவோ? ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக்கூடாது என்பதை அறியாயா!

நான் - சரி, வகையாக மாட்டிக் கொண்டீர்களா, நீங்கள் பிறந்த ஊர் எது?

கம்பன் - உனக்குத்தான் தெரியுமே - நான் பிறந்த ஊர் தேர் அழுந்தூர் என்று வழங்கும் திருஅழுந்தூர். கம்பன் பிறந்த ஊர் காவிரி தங்கும் ஊர் என்ற பாட்டெல்லாம் உனக்கு மனப்பாடம்தானே.

நான் - இதை ஒத்துக்கொள்ளமாட்டேன். அது எல்லாம் வேறு ஆட்கள் பாடினது. தாங்களே சொல்லியிருக்கிறீர்களா தங்கள் சுயசரிதத்தில்?

கம்பன் - நான் என்ன இந்த திருநெல்வேலிக்காரர்களைப் போன்றவனா? சும்மா தன் ஊர்ப் பெருமையே பேச. ஒரே ஒரு இடத்தில்

**அழிந்ததேர் அழுந்தா முன்னம்**
**அம்பொடு கிடந்து வெம்பி**

என்று மட்டும் குறித்திருக்கிறேன். அந்த ஊர் தான் தம்பி திருஅழுந்தூர். ஆம், நான் அங்கு பிறப்பதற்கு முன்னமேயே, திருஅழுந்தியிருந்த ஊர் அது. திருஅழுந்திய ஊரில் தேரும் அழுந்திற்று அதைக் குறித்திருக்கிறேன்.

நான் - நல்ல ஆளையா தாங்கள் - ஏதோ யுத்த களத்தில் தேர் அழுந்தியதைக் குறித்துவிட்டு, அடே! இதுதான் என் ஊரைப் பற்றிய குறிப்பு என்று கயிறு விடுகிறீர்களே!

கம்பன் - பின்னே என்ன! இப்படிக் கேள்வி கேட்டால் இப்படித்தான் பதில் சொல்வேன். இன்றைய ஆராய்ச்சியாளர்களாகிய நீங்கள் எல்லாம் இப்படித்தானே ஆராய்கின்றீர்கள். ஆராய்ந்து முடிவு கட்டுகிறீர்கள்.

நான் - அப்போது என்ன கேள்விகள் எப்படித்தான் கேட்க வேண்டும் என்கிறீர்கள்?

கம்பன் - நான் பிறந்த நாடு, நான் வளர்ந்த காலம், நான் பாடிய காவியம், நான் வணங்கிய தெய்வம், நான் விரும்பிய பாத்திரம், நான் போற்றிய புலவன், நான் கண்ட கனவுகள் என்பதைப் பற்றியெல்லாம் கேள்விகள் கேட்டால் தக்க பதில் சொல்வேன்.

நான் - இனி நான் கேள்வி கேட்கமாட்டேன். தாங்களே சொல்லுங்கள் தங்கள் சரிதத்தை. நான் கேட்கிறேன். இடையிடையே சந்தேகம் எழுந்தால் மட்டும் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன். இந்த ஏற்பாடு சரிதானே. சொல்லுங்கள்.

(இனி அவர் சொன்னதை எல்லாம் கீழே தருகிறேன்)

நான் பிறந்த நாடு

நான் பிறந்த நாடு எது என்று சொல்லத் தேவையே இல்லை. நான் பிறந்தது தமிழ்நாடு. வற்றாது வளங்கொழிக்கும் காவிரி பாய்ந்து பெருகும் அந்தப் பொன்னி நாடே நான் பிறந்த நாடு. காவிரி நாடன்ன கழனி நாட்டைத்தானே நான் கண்டேன். கங்கை என்னும் கடவுள் திருநதியை வருணிக்க நேர்ந்தபொழுது கூட தெய்வப் பொன்னியே பொருவும் கங்கை என்று தானே பாடினேன்.

**வரம்பெலாம் முத்தம் தத்தும்**
**மடையெலாம் பணிலம் மாநீர்க்**
**குரம்பெலாம் செம்பொன் மேதிக்**
**குழியெலாம் கழுநீர்க் கொள்ளை**
**பரம்பெலாம் பவளம் சாலிப்**
**பரப்பெலாம் அன்னம் பாங்கர்க்**
**கரம்பெலாம் செந்தேன் சந்தக்**
**காவெலாம் களிவண்டீட்டம்.**

என்பதெல்லாம் இந்தக் காவிரி பாயும் சோழநாட்டின் வளம்தானே.

**கன்னி இளவாழை கனி ஈவ, கதிர்வாலின்**
**செந்நெல் உள, தேன் ஒழுகுபோதும் உள, தெய்வப்**
**பொன்னி எனலாய புனல் ஆறும்.**

இன்னும் இருக்கிறதே. காவிரி நாட்டிற்கு அடுத்தபடியாக நான் மிகவும் மதித்த நாடு, அந்தப் பொன் திணிந்த புனல்

பெருகும் பொருநை நாட்டைத்தான். பொருநை நாடு என்றால் அங்குள்ள பொதிகைமலை, அம்மலை வீழ் அருவிகள், அம்மலையிடை வாழ்ந்த அகத்தியர் எல்லாம் என்கண் முன்னாலே வருகிறார்கள். ஞாபகத்தில் வைத்துக்கொள். நான் பிறந்த நாட்டிலே மலையே கிடையாது. அப்படிப்பட்டவன்

**ஓங்குமரன் ஓங்கி, மலை ஓங்கி, கழை ஓங்கி**
**பூங்குலை குலாவும் குளிர்சோலை புடைவிம்ம**
**தூங்குதிரை ஆறுதவழ்**

சூழல்களையும் குன்றுகளையும் பாடி இருக்கிறேன் என்றால் உங்கள் நாட்டிற்கும் வந்திருக்கிறேன் என்று தெரிந்து கொள்வாய் அல்லவா! எங்கள் நாட்டில் நடந்து கிடந்த நதிகள் எல்லாம் அந்தப் பொதிகை மலையிலே அருவியாக நிமிர்ந்து நிற்பதைக் கண்டு அதிசயித்திருக்கிறேன். இம்மட்டோ, தமிழ் எனும் அளப்பரும் சலதி தந்தவனை, தழற் புரைசுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தவனை, என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண்டவனை வாயாரப்பாடி மகிழ்ந்திருக்கிறேன். அவன் வளர்த்த அந்த சங்கத்தினை

**"தென்தமிழ் நாட்டு அகன் பொதியில்**
**திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற்றிரேல்**
**என்றும் அவன் உறைவிடமாம்"**

என்று மனமாரப் பாராட்டியிருக்கிறேன். அதன் மூலம் என் வணக்கத்தை அந்தத் தமிழ் முனிவனுக்குச் செலுத்தியிருக்கிறேன்.

நான் - (இடைமறித்து) சரிதான். நீங்கள் எதைத்தான் நன்றாகப் பாடவில்லை. கோதாவரியையும் தான் அழகாகப் பாடியிருக்கிறீர்கள்.

கம்பன் - தம்பி! உள்ளதைச் சொல்கிறேன். நான் அங்கெல்லாம் போனதே இல்லை. போயிருந்தால் கோதாவரியை வர்ணிக்க சான்றோர் கவியை உவமானமாக

நாடியிருப்பேனா. விந்தியமலை, விதர்ப்பநாடு, நர்மதை நதி, பம்பைப் பொய்கை எல்லாம் நான் கண்ணால் காணாதவைகள். சம்பிரதாயமாகச் சொன்னவைதான். (பின்னும் சொல்கிறார்) நான் பிறந்த நாட்டைச் சொன்னேனே. நான் வளர்ந்த ஊரைச் சொல்லவேண்டாமா? நான் வளர்ந்தது - வெண்ணெய்நல்லூர் - அந்த ஊரிலே தான் என்னை வளர்த்த வள்ளல் சடையப்பர் இருந்தார். அவரையும் அவர் புகழையும் எத்தனையோ இடங்களில் என் காவியத்தில் பாடியிருக்கிறேன். பண்ணை வெண்ணெய்ச் சடையன் புகழ் எங்கும் பரவ வேண்டும் என்பது தான் காவியம் எழுதும்போதெல்லாம் என் உள்ளத்தெழுந்த ஆசை.

நான் - (இடைமறித்து) சரி, அந்த வெண்ணெய்நல்லூர் எங்கிருக்கிறது ஐயா? இன்று கதிராமங்கலம் என்று அழைக்கப்படும் ஊர்தான் அந்த ஊர் என்கிறார்களே. அது சரிதானா?

கம்பன் - சரிதான் தம்பி! இன்று அதன் பெயர் கதிராமங்கலமா? அன்று மக்கள் அதற்குக் கொடுத்த பெயர் கதிர்வேய்மங்கலம். நான் இராமகாதை பாடிக் கொண்டிருந்தபோது ஒருநாள் இரவு அகோர மழை பெய்ய, அந்த மழையில் நான் இருந்த வீடு ஒழுக, அதைக் கண்டு பொறாது சடையப்பர் பக்கத்திலிருந்த வயலில் முற்றி முதிர்ந்து கிடந்த கதிரை அறுத்து நானறியாமலேயே என் கூரையை வேய்ந்திருக்கிறார். இது தெரிந்தவர்கள் அதைக் கதிர்வேய்மங்கலம் என்றிருக்கிறார்கள். அங்குள்ள **சடையன்திடல், கழுநீர்வயல்** எல்லாம் அன்றைக்கு அவர் புகழுக்குச் சான்று பகர்ந்தன.

நான் - அன்றைக்கு என்ன? இன்றைக்கும் தான் அவை அதே பெயரில் நின்று நிலவுகின்றன. கழுநீர் வயல் என்றீர்களே அதைக்கூடத் தாங்கள்

**முட்டில் அட்டில்**
**முழங்குற வாக்கிய**
**நெட்டுலை கழு நீர்**
**நெடு நீத்தந்தான்**
**பட்டு மென் கமுகு**
**ஓங்கு படப்பை போய்**
**நட்ட செந் நெலின்**
**நாறு வளர்க்கும்.**

என்று பாடியிருக்கிறீர்களே. அது இந்தக் கழுநீர்வயலை நினைந்துதானே?

கம்பன் - சரி. அப்படித்தான் என்று வைத்துக் கொள்ளேன். இத்துடன் நான் பிறந்த ஊரில் ஒரு அதிசயம் தெரியுமா! நாட்டில் எல்லாம் சமயச் சண்டை மலிந்திருந்த காலத்து, எங்கள் ஊரிலே கோயில் கொண்டுள்ள சிவனும் விஷ்ணுவும் ஒருவரை ஒருவர் எதிர்நோக்கி நிற்கிறார்களே தெரியுமா? வேதபுரீஸ்வரரும் ஆமருவியப்பரும் அப்படி நிற்கும் கோலமே

**அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன்**
**என்றுரைக்கும் அறிவிலார்க் கெல்லாம்**

ஒரு சூடு இல்லையா? வேதபுாஸவரனை வணங்கியவர்கள் எல்லாம்

**வேதங்கள் அறைகின்ற உலகெங்கும்**
**விரிந்தன உன்**
**பாதங்கள் இவை என்னில்**
**படிவங்கள் எப்படியோ!**

என்றுதானே பாடினார்கள்.

**தாய்தன்னை அறியாத கன்றில்லை**
**தன் கன்றை,**

**ஆயும் அறியும், உலகின்**
**தாயாகி ஐய!**
**நீயறிதி எப்பொருளும்**
**அவை உன்னை நிலையறியா**

என்று பாடும்போது அந்த ஆமருவியப்பன் நம் கண் முன்னாலே வந்து போய்விடுவானே இப்படியெல்லாம் தான் நான் பிறந்த நாட்டையும் வளர்ந்த ஊரையும் பற்றிக் கூறியிருக்கிறேன் என் சுய சரிதத்தில்.

நான் - ஊரைப் பற்றி என்ன ஐயா? நல்ல காவிரிக் கரையிலே சின்னஞ்சிறிய ஊர். அங்கு கோயில் கொண்டிருக்கும் **தேவாதி தேவனை, ஆமருவி நிரைமேய்க்கும் அமரர் கோமான்** அழகையே பார்த்துக் கொண்டிருக்கலாமே. பக்கத்திலிருக்கிறார்கள் கருடாழ்வாரும், மார்க்கண்டேயருமே, இவர்களை எல்லாம் தூக்கியடிக்கிறாளே - அந்த அழகு மங்கை காவேரித்தாய் - அடடா! அஞ்சலி ஹஸ்தத்தோடு அவள் இருக்கும் அழகு!

**மெலியும் இடை தடிக்குமுலை**
**வேயிளந்தோள் சேயரிக்கண் வென்றிமாதர்**

என்றெல்லாம் பாடினீரே - அந்த வென்றிமாதரையும் வெற்றி காண்கிறாள் இந்தக் காவேரி - சிலை உருவில்.

கம்பன் - ஏது, திரு அழுந்தூர் புகழ்பாட ஆரம்பித்துவிட்டாய்? நான் பிறந்த ஊர் என்பதைவிட காவேரித்தாய் இருக்கிறாள் என்றே அந்த ஊரின் மதிப்பை உயர்த்திவிடுவாய் போலிருக்கிறதே. போகட்டும் எப்படியாவது அந்தச் சிற்றூரின் புகழ் பரவட்டும்.

நான் - ஆம். பரவத்தான் போகிறது. அங்கு கம்பன் கலைக்கோயில் ஒன்று கட்ட முனைந்திருக்கிறார்களே தமிழ் மக்கள்.

கம்பன் - அது கிடக்கட்டும்.

இனி நான் வளர்ந்த காலம்

பண்டைத் தமிழர் வாழ்வை எல்லாம் நீயறிவாய். சங்க இலக்கியங்கள் எல்லாம் நீ படித்தவன் தானே. அந்தக் காலத்தில் தமிழன் விரும்பியதெல்லாம் போரும் காதலும்தான். வீட்டில் இருந்தால் காதல் வாழ்விலே திளைப்பான் தமிழன். வெளியே இறங்கினால் போரிட முனைவான். **நானிலம் அதனில் உண்டு போர் என நவிலின் தேனினும் களிப்புச் செய்யும் சிந்தையனாக** அல்லவா வாழ்ந்திருக்கிறான் அன்றைய தமிழன். ஆண் மக்கள் தம் வீரம் காத்தலை வேண்டும் பெண்கள் தானே அன்று நிறைந்திருந்தார்கள். அப்போதுதான் சமணரும் பௌத்தரும் தமிழை விரும்பிக் கற்று நல்ல இலக்கியங்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஒழுக்கத்திற்கு ஓர் உயரிய ஸ்தானம் அளித்திருக்கிறார்கள். ஆனால், அதன்பின் நாட்டிலே ஏற்பட்ட குழப்பங்களால் வீரமும் காதலும் ஓதலும் ஒழுக்கமும் குன்றியிருக்கிறது. பல்லவர் காலத்தே வடமொழி தமிழ்நாட்டில் தலைதூக்கியிருக்கிறது. இந்த வடமொழிக் கலப்பால் தமிழ்வளம் பெற்றிருக்கிறது. கங்கையும் யமுனையும் கலந்து உறவாடியதுபோல இரண்டு கலாச்சாரமும் இணைந்திருக்கிறது. **தென்சொற்கடந்தவன் வடசொற்கலைக்கு எல்லை தேர்ந்தவனாக ஆகியிருக்கிறான். கங்கையாளொடு கரியவள் கலைமகள் கலந்த சங்கமம்** போற்றப்பட்டிருக்கிறது.

வீரத்தையும் காதலையுமே பொருளெனக் கண்ட தமிழர்,

**'உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்**
**நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகிலா விடையாட்டுடைய'**

ஒரு தனிப் பரம்பொருளைக் காண முற்பட்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் சமணமும்

பௌத்தமும் நாட்டைவிட்டு ஓட ஆரம்பித்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் வேத கோஷங்கள், தேவாரப் பண்கள், திவ்யப் பிரபந்தங்கள் ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றன. வடநாட்டுத் தெய்வங்கள் எல்லாம் தமிழ்நாட்டில் புகுந்திருக்கின்றன. அரசர்களும் பாறைகளைக் குடைந்து குகைகள் உருவாக்க முனைந்திருக்கிறார்கள். மலைகளை வெட்டிச் செதுக்கி ரதங்களை அமைத்திருக்கிறார்கள். குகைகளில் எல்லாம் சித்திரங்கள். தூண்களில் எல்லாம் சித்திரங்கள். மாடங்களில் எல்லாம் மூர்த்தங்கள். மன்றங்களிலெல்லாம் நடனத் திருவுருவங்க்ள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. பல்லவர்களுக்குப் பின் வந்த சோழ மன்னர்கள் தமிழை வளர்ப்பதில் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள், கலைகளைப் போற்றியிருக்கிறார்கள். எண் தோள் ஈசற்கு எழில் மாடம் எழுது கட்ட முனைந்திருக்கிறார்கள். முழுக்க முழுக்கக் கல்லாலேயே கோயில்களும், அந்தக் கோயில்களில் மூர்த்திகள், தேவியர் என்றெல்லாம் பிரதிஷ்டை ஆரம்பித்திருக்கிறது. **கறை மிடற்று இறை, திங்கள் மேவும் செஞ்சடைத் தேவன், அழல் நிறக்கடவுள், பாதி மதிசூடி, கற்றைவார் சடைமுடி கணிச்சி வானவன்** என்று சிவபெருமான் பாராட்டப்பட்டிருக்கிறான். **நாறுபூங்குழல் நங்கை, கற்றைப் பூங்குழலாள் கருந்தடங் கண்ணி, கரும்பையும் சுவை கைப்பிக்கும் செல்வி, தெய்வவாயகி** என்றெல்லாம் பர்வதராஜன் மகளுக்குப் பெயரிட்டு இருக்கிறார்கள். இருவரையும் சேர்த்தே உமையொரு பாகத்து ஒருவன், மங்கை பங்கன், தையல் பாகன், பஞ்சில் மெல்லடியாள் பாகன் என்றெல்லாம் வணங்கியிருக்கிறார்கள். இப்படி நாடு முழுதும், தமிழும் பக்தியும் உருவெடுக்கின்ற காலத்தில் தான் நான் பிறந்தேன், வளர்ந்தேன்.

நான் - (இடையிட்டு) சரி சரி. அப்போது நீங்கள் சோழ சாம்ராஜ்யம் மகோன்னத நிலையில் இருந்தபோது தமிழ்நாட்டில் வளர்ந்தீர்கள் என்று சொல்லுங்கள்.

கம்பன் - என்ன அவ்வளவு எளிதாக முடிவுகட்டிவிட்டாய். என் காலத்தில் சோழ மன்னர்கள் தலை எடுக்க ஆரம்பித்து இருந்தார்களே ஒழிய மகோன்னத நிலையை அடைந்து விடவில்லை. அடைந்திருந்தால் அந்தச் சோழ மன்னர்களைப் பற்றியெல்லாம் விரிவாகக் கூறியிருக்கமாட்டேனா? என் காலத்தில் நான் அறிந்த சோழ மன்னர்கள் எல்லாம் விஜயாலயனும், ஆதித்தனும்தான். ஆதித்தன் குலமுதல்வன் மநுவினை யார் அறியாதார்? என்றுதானே ராமனது குலமுறையையே கிளத்தத் துவங்கியிருக்கிறேன்.

நான் - அப்போ ராஜராஜன் கட்டிய பெரிய கோயிலைத் தாங்கள் அறியீர்கள் - அப்படித்தானே.

கம்பன் - ராஜராஜனா? அவன் யார்? ஓ! அந்தத் தஞ்சையில் நிமிர்ந்து நிற்கிறதே பெரிய கோயில் அதைச் சொல்கிறாயா? ஆம் தம்பி அது என் காலத்தில் கட்டப்படவில்லை. கட்டப்பட்டிருந்தால் அதைப்பற்றி ஒரு வார்த்தைக்கூடச் சொல்லாது செல்ல எனக்கு மனம் வந்திருக்குமா என்று நீயே சொல்லு.

நான் - மனம் வந்திருக்காது தான். என்றாலும் ஒரே ஒரு இடத்தில் அகல்வானம் தீண்ட நிமிர்ந்த பெரும் கோயில் என்று குறிப்பிடுகிறீர்களே அது எதைக் குறித்தோ?

கம்பன் - அதுவா? நான் வாழ்ந்த காலத்தில் கோயில்கள் தோன்றின என்றாலும் அவை எல்லாம் சின்னஞ்சிறு கோயில்களாகத்தான் இருந்தன. எல்லாம் வல்ல கோமகனுக்கு ஏற்ற இல்லங்களாக அவை இருக்கவில்லை. ஆதலால் நான் ஒரு லக்ஷியக் கனவு கண்டேன். நீண்டு நிமிர்ந்த பெரும் கோயில்கள், விமானங்கள், கோபுரங்கள் எல்லாம் உருவாக வேண்டும் என்று. என் கனவெல்லாம் நனவாகியிருக்கிறது பின்னால். அதனால்தான் இத்தனை கோயில்கள் இந்தத் தமிழ்நாட்டில்.

நான் - இன்னும் ஒரே ஒரு சந்தேகம் சுவாமி. சிவபிரானது மூர்த்தங்களில் உங்களுக்கு உகந்த மூர்த்தம் எதுவோ?

**"பஞ்சில் மெல்லடியாள் பாகன்**
**பாதுகம் அல்லது**
**அஞ்சலித்து அறியாச் செங்கை"**

உடையவன் அல்லவோ நான். நானிருந்த காலத்தில் கோயில்களின் கர்ப்பக் கிருஹத்தின் பின்புறத்தில் எல்லாம் அந்த **மாதிருக்கும் பாதியினது** சிலைதானே வைக்கப்பட்டிருக்கும்.

நான் - ஆமாம். இந்த இராஜராஜன் அதை எடுத்துவிட்டு லிங்கோத்பவரை நிறுத்தியிருக்கிறான். அப்போது நீங்கள் சொல்கிறது சரி. நீங்கள் ஆதியும் அந்தமுமிலா அரும்பெரும் சோதியைக் கூறவேயில்லை என நினைக்கிறேன். அப்போது நீங்கள் ராஜராஜனுக்குப் பின்னால் எப்படியிருந்திருக்க முடியும். இருந்திருந்தால் அதை எப்படிக் கூறாதிருக்க முடியும்.

கம்பன் - சரி, சரி, ரொம்ப ஆராய்ச்சியில் இறங்கிவிட்டாய்போல் இருக்கிறது.

நான் - இல்லை, இல்லை. இன்னும் ஒரே ஒரு கேள்வி மட்டும். நீங்கள் **சென்னி நான் தெரியல் வீரன் தியாக விநோதனைக்** குறிக்கிறீர்கள் - இந்தத் தியாகவிநோதன் என்ற பட்டம் மூன்றாம் குலோத்துங்கனின் சிறப்புப் பெயர். ஆதலால் தாங்கள் அவன் காலத்திலேயே வாழ்ந்தவர்தான் என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவு கட்டுகிறார்களே? அதற்கென்ன சொல்கிறீர்கள்?

கம்பன் - அதுவா? அதுதான் நான் முன்னமேயே சொன்னேனே. ஒரு சொற்றொடரை மட்டும் பிடித்துக்கொண்டு ஆடாதே என்று. நான் தியாக விநோதன் என்று கூறியது - நீ சொல்கிறாயே யாரோ மூன்றாம் குலோத்துங்கன் என்று

அவனைப் பற்றியே அல்ல. அந்த ஆசாமி யார் என்றே எனக்குத் தெரியாது. பல்லவ அரசர்களில் நந்தியம் பெருமாள் தொண்டைமான் - ஆம் உன் குல முதல்வன் தான் - ஒருவன் இருந்திருக்கிறான். அவன் பேரில் கலம்பகம் பாடியிருக்கிறான் எங்கள் பரம்பரையில் ஒரு முன்னோன். அவன் கூறியிருக்கிறானே அவனைப் பற்றி. தியாக விநோதன் என்ற பெயர் எங்களுக்கெல்லாம் விநோதமான பெயராகவே தெரியவில்லையே. இதை வைத்துக்கொண்டு நீ இத்தனைக் கூத்து அடிப்பானேன்.

நான் - சரி இனிமேல் உங்களை அதிகம் தொந்தரவு செய்யவில்லை. நீங்கள் எந்தக் காலத்தில் இருந்தால் என்ன? காலம் எப்படியிருந்தாலும் தங்களால் நாடும், ஊரும், காலமும் பொழுதும் உயர்ந்திருக்கிறது. தங்கள் காலம் - கம்பர்காலம். தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய காலம். அது போதும் எங்களுக்கு.

இனி நான் பாடிய காவியம்

கம்பன் - இன்று தமிழ்நாட்டிலே நடக்கும் கிளர்ச்சிகள் எல்லாம் எனக்குத் தெரியும். இந்தத் தமிழ்நாட்டுக் கம்பன், ஏன் அந்த வடநாட்டுக் கதையைக் காவியமாகப் பாடினான் என்று சிலர் கேட்கிறார்கள் என்பதும் தெரியும். நான் வாழ்ந்த காலத்தில் எப்படி வடநாடு தென்னாடு என்ற வேற்றுமை எல்லாம் இல்லாதிருந்தது என்பதைத்தான் முன்னமேயே சொன்னேனே. இந்த வேற்றுமை உணர்ச்சி இல்லாதது மட்டுமல்ல எனக்கு என்னமோ இந்த இராமகாதை நிரம்பவும் மனதுக்கு உகந்ததாயிருந்தது. காரணம். உள்ளங்கை அகலமே உள்ள சின்னஞ்சிறு ராஜ்யத்தை அன்று ஆண்டு வந்த அந்த சேர சோழ பாண்டியர்களுக்குள்தான் எத்தனை எத்தனை பூசல்? எத்தனை எத்தனை போர்.

**யாரொடும் பகை கொள்ளலம் என்றபின்**
**போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது**

என்பதை இவர்கள் உணர்ந்தார்கள் இல்லையே. அண்ணன் தம்பியாய் வாழவேண்டிய இவர்கள் இப்படி அடித்துக் கொள்கிறார்களே என்று பல தடவை நினைத்திருக்கிறேன். இப்படிப்பட்ட நாட்டிலே, சொன்ன வாக்கை நிறைவேற்ற அருமந்த மைந்தனையே காட்டிற்கு அனுப்புகிறான் ஒரு தந்தை. தாய் உரை செய, தந்தை ஏவ, ஒரு சாம்ராஜ்யத்தையே துறந்து காட்டிற்குப் புறப்படுகிறான் ஒரு மகன். தாயுரை கொண்டு தாதை உதவிய தரணி தன்னை தீவினை என்ன நீத்து, காடு சென்ற தமையன் நாடு திரும்பும் வரை தவக் கோலம் தாங்குகிறான் ஒரு தம்பி. இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாதவனாக இருந்து அண்ணனும் அண்ணியும் தூங்கும் போதும் வில்லையூன்றிய கையொடும், வெய்துயிர்ப்பொடும் கண்கள் நீர் சொரியக் கங்குல் எல்லை காண்பளவும் இமையாது நின்று காக்கிறான் இன்னொரு தம்பி. இம்மட்டோ! தான் சக்ரவர்த்தி திருமகன் என்பதையே மறந்து காட்டிலே ஒரு வேடனையும், ஒரு குரங்கினையும், ஒரு அரக்கனையுமே உடன் பிறந்தானாகச் சேர்த்துக் கொள்ளுகிறான் அந்த வீர புருஷன், என்றெல்லாம் அறிந்தபோது அந்தக் கதை தமிழ் மக்களுக்குச் சொல்லப்பட வேண்டியது என்று நினைத்தேன். நான் நினைத்ததில் தவறில்லை தானே. மேலும் ஒத்த குலமும், ஒத்த கல்வியும், ஒத்தநலனும் உடைய ஆடவன் ஒருவனும் பெண்ணொருத்தியும் ஒன்றி வாழ்ந்த இந்த தமிழகத்திலே அரசன் ஒவ்வொருவனும் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணந்து வாழ்ந்தது நமது தமிழகத்தின் பண்பிற்கே விரோதமாகப்பட்டது. அந்தச் சமயத்தில், ஒரு காதலன் ஏகும் நல்வழி அவ்வழி என்மனம் என்ற உறுதிப்பாட்டோடு இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் என்று கூறும் செவ்விய வரம்பில் நிற்கிறான் என்றால் அந்தத் தமிழனை நாயகனாக வைத்து ஒரு காவியம் எழுத வேண்டும் என்று நான் துணிந்ததில் வியப்பில்லை அல்லவா? இப்போது தெரிகிறதா தம்பி நான் ஏன் இந்தக் காவியம் எழுதினேன் என்று?

நான் - தெரிகிறது ஐயா! தெரிகிறது. ஆனால் காவியம் எழுதும்போது தமிழ்நாட்டுக்கு ஒவ்வாத நிகழ்ச்சிகளை காவியத்தில் சோத்திருக்கிறீர்களே, அதற்கென்ன சொல்கிறீர்கள்.

கம்பன் - எதைச் சொல்கிறாய்? வில்லொடித்த வீரனே சீதையைப் பரிசாகப் பெறுகிறான் என்பதைத்தானே. ஆம் அந்த நிகழ்ச்சியை என்னால் மாற்ற முடியவில்லைதான். மாற்றினால் மூலக் கதைக்கே முற்றுப்புள்ளி வைத்திருக்க வேண்டியதுதான். வில்லொடித்த நிகழ்ச்சியை காவியத்தி லிருந்து நீக்க விரும்பவில்லை. ஆனால், அதைத் தமிழ்ப் பண்புக்குப் பழுதுவராத வகையில், எப்படியெல்லாம் மாற்றியிருக்கிறேன் என்பதைத்தான் நீ அறிவாயே. என்னுடைய சீதை இருக்கிறாளே அவள் ஒன்றும் அறியாப் பேதை அல்ல. கன்னிமாடத்திலிருந்தே முனிவர் முன்செல, தம்பி பின்வரச் சென்ற ராமனைக் காண்கிறாள். அண்ணலும் நோக்குகிறான் அவளும் நோக்குகிறாள். இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்துகிறார்கள். பின்னால் வில்லொடித்த விவரம் கேட்கிறாள். என்றாலும் வில்லொடித்த காரணத்திற்காக மட்டும் அவனைத் தன் காதலனாக ஏற்றுக் கொள்கிறாள் இல்லை. தன் தோழி நீலமாலை சொல்லும்

**கோமுனியுடன் வரும் கொண்டல்**
**என்ற பின்**
**தாமரைக் கண்ணினான்**
**என்ற தன்மையால்**

ஆம், அவனே கொல் என்று ஐயம் நீங்குகிறாள். இது மட்டுமா?

**சொல்லிய குறியின்**
**அத் தோன்றலே அவன்**
**அல்லனேல் இறப்பன் என்று**

வேறே அகத்து உன்னுகிறாள். இப்படியெல்லாம் இடர்ப்பட்டு, இடர்ப்பட்டுக் கதையை உருவாக்கியிருக்கிறேன்.

என்னுடைய காவியத்தில் இந்தக் காதல் கட்டத்தில் இந்த வில் குறுக்கே கிடந்து எவ்வளவு வேதனை கொடுத்தது தெரியுமா? அந்த வேதனையைக் கூட

**போதகம் அனையவன் பொலிவு நோக்கி இவ்**
**வேதனை தருகின்ற வில்லை நோக்கி**

என்று குறிப்பாகச் சுட்டியிருக்கிறேனே கவனித்தாயா.

இந்த ஒரு வேதனைதானா காவியம் எழுதும்போது இல்லை. இந்தப் பொல்லாத தமிழர்கள் இருக்கிறார்களே, அவர்கள் கற்பனை பண்ணிய கற்பொழுக்கம் இருக்கிறதே அது ஒரு அசாத்தியமானதொன்று.

**"மண்டினி ஞாலத்து மழைவளம் தரும்**
**பெண்டிராயிற் பிறர் நெஞ்சு புகார்"**

என்று பிறர் நெஞ்சு புகுவதே கற்பொழுக்கத்திற்குத் தவறு என்றல்லவா கூறியிருக்கிறார்கள். அப்படியிருக்க, பிற நாட்டில், அயலான் மனையில், அவன் மயிர் பிடித்திழுத்து மடிமீது வைத்து எடுத்துச்சென்று சிறை வைக்கப்பட்ட சீதையின் கற்பொழுக்கத்திற்கு இந்தத் தமிழர்கள் குறை கூறாதிருப்பார்களா? ஆதலால் தான், சீதையை அவள் இருந்த பர்ணசாலையில் அந்தப் பர்ணசாலை கட்டியிருந்த இடத்தை எல்லாம் சேர்த்து "கீண்டான் நிலம் யோசனை கீழொடு மேல்" என்று மாற்றினேன் - இதைத் திரும்பவும் கீண்டுகொண்டெழுந் தேகினன் கீழ்மை யான்" என்றும் குறித்தேன். என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறாய். நல்ல பலாப்பழம், தேன் சொட்டும் சுளைகள் உள்ளே இருக்கின்றன. அதைச் சுற்றி சக்கையும் பிசினும், தோலும் முள்ளும், இருந்தால் அவற்றை அகற்றிவிட்டு, சுளையை மட்டும் எடுத்து தமிழர்களுக்கு விருந்தளிக்க நான் தயங்கலாமா? இப்படிப்பட்ட முயற்சியில் தான் நான் காவியம் உருவாக்கியிருக்கிறேன்.

நான் - ரொம்ப சரி. நீங்கள் காவியம் எழுதியது, அதை அற்புதமாக ஆக்கியதெல்லாம் சரி. நீங்கள் அந்த வான்மீக முனிவரது கவிதை உணர்ச்சியிலே அவ்வளவு அழகாக ஒன்றியிருக்கிறீர்கள். அவர் புகழைப் பரப்புவதற்கு தக்க கருவியாய் அமைந்திருக்கிறீர்கள். நல்ல கவிஞர் புகழைப் பரப்புவது மற்றொரு கவிஞரின் பணி தானே.

கம்பன் - என்ன தம்பி ஆழம் பார்க்கிறாய். நான் வான்மீகரது புகழைப் பரப்புவதற்காகவே காவியம் எழுதினேன் என்கிறாயா? அதிலும் உண்மை உண்டு. அந்தக் கவிஞரின் பேரில் அவன் இயற்றிய அந்தக் காசில் கொற்றத்து இராம கதையின் பேரில் ஒரு ஆசை பற்றி இழுக்கத்தான் செய்தது. அந்த வான்மீகிதான் என்ன சாமானியமானவனா? வாங்கரும் பாதம் நான்கும் வகுத்தவன் அல்லவோ? தீங்கவி செவிகள் ஆரத் தேவரும் பருகச் செய்தவன் அல்லவோ? ஆனால் இதற்கெல்லாம் மேலாக உன் உள்ளத்தின் அடித்தளத்தில் வேறொரு ஆசையும் இருக்கத்தான் செய்தது தம்பி! தமிழர்களெல்லாம் தலைதூக்கி நிற்கச் செய்த அன்பன், அறிஞன், கவிஞன் - அந்த வள்ளுவன்தான். அவனைத் தானே அன்று முதலே பொய்யில் புலவன் என்று பாராட்டியிருக்கிறோம். அவன் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வழிகளை எல்லாம் திறம்பட வகுத்துவிட்டான். அவன் வகுத்த வழிகளை எல்லாம் ஒரு நல்ல கதை உருவத்தில் இந்த தமிழர்களுக்குக் கொடுத்தால் அந்த அறவுரைகளிலே ஒரு கவர்ச்சி தோன்றாதா என்ற ஆசையும் உண்டு எனக்கு. ஆதலால்தான் அவன் சொன்ன அறநெறிகளுக்கு விளக்கம் தரும் வகையிலே இந்தக் காவியம் எழுதினேன். இதைக் குறிப்பாகவும் முதலிலேயே உணர்த்தியும் இருக்கிறேன்.

**“பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்**
**தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே”**

என்று

நான் - அடே! தெய்வமாக் கவி என்று தாங்கள் குறித்தது அந்த வள்ளுவரைத்தானா? நாங்கள் எல்லாம் வான்மீகரைத்தான் குறிக்கிறீர்கள் என்றல்லவா நினைத்திருந்தோம்.

கம்பன் - நீங்கள் ஏமாந்தால் அதற்கு நானா பழி? நான் போற்றிய புலவன் வள்ளுவனே. இன்னும் விளக்கமாகக் கூறவேண்டுமா என்ன?

நான் - காவியத்தை எழுதினீர்களே. காவியத்தில் எத்தனையோ பாத்திரங்களை நடமாட விட்டிருக்கிறீர்களே, அதில் உங்களுக்கு உகந்த பாத்திரம் எது என்று சொல்லலாமோ?

கம்பன் - நீயும்தான் என் காவியத்தைப் பல வருஷங்களாய்ப் படித்திருக்கின்றாய். இதைக் கண்டுபிடிக்க முடியாமலா போயிற்று.

நான் - லக்ஷிய புருஷன் ராமன் தங்களுக்கு உகந்த பாத்திரம் என்பதை அறிவேன். அவனை விலக்கி விட்டு மற்றைய பாத்திரங்களில் தங்களுக்கு உகந்தவன், தங்கள் கொள்கைகளை எல்லாம் வெளியிடுவதற்குத் தகுந்தவனாகக் கருதுகின்ற பாத்திரம் யார் என்று அறியலாமா என்று பார்த்தேன். அவ்வளவுதான்.

கம்பன் - அதையும்தான் நீயே கண்டுபிடியேன்.

நான் - குணாதிசயத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் பரதன் தான் தங்களுக்கு உகந்தவன் என்று தெரிகிறது. அவனைத்தான் ஆயிரம் ராமருக்கும் மேலே என்றும் எண்ணில் கோடி ராமர்கள் அவன் அருளுக்கு ஒவ்வார் என்றும் உரைத்தீர்கள்.

கம்பன் - இவ்வளவுதானா உன்னுடைய படிப்பு? பரதன் உத்தமோத்தமன்தான். ஆனால் அவன் தன் முயற்சியால்

தியாகத்தால் தானாகவே உயர்ந்தவன். உணர்ச்சி வயத்திலே உருவானவன். அவன் மூலம் என் எண்ணங்களை வெளியிட முடியுமா? என்னுடைய கருத்துக்களை ஏற்ற இடத்தில் எல்லாம் தக்க தக்கப் பாத்திரங்கள் மூலம் வெளியிட்டிருக்கிறேன். என்றாலும் என் உள்ளத்தெழுந்த அற்புதமான உண்மைகளையெல்லாம் வெளியிட ஒரு பாத்திரத்தை சிருஷ்டித்துக் கொண்டேன். அந்தப் பாத்திரம்தான் அனுமன். முதல் முதலிலேயே

**இல்லாத உலகத்து எங்கும்**
**இங்கு இவன் இசைகள் கூறக்**
**கல்லாத கலையும் வேதக்**
**கடலுமே என்னும் காட்சி**
**சொல்லாலே தோன்றிற்றன்றே**
**யார் கொல் இச்சொல்லின் செல்வன்.**

என்றுதானே அவனை அறிமுகப்படுத்துகிறேன். ஆற்றலும், நிறைவும், கல்வி, அமைதியும், அறிவும் என்னும் வேற்றுமை இவனோடு இல்லை என்பதை நன்கு உணர்ந்தவன் நான். நாட்படா மறைகளாலும், நவைபடா ஞானத்தாலும், கோட்படாப் பதமே அந்தக் குரங்கு உரு எடுத்திருக்கிறது, என்று நம்பினவன். ஆதலால்தான் அவனைப் பிடித்தேன் என் கருத்துக்களை வெளியிட.

நான் வணங்கிய தெய்வம் என்ன என்பதைச் சொல்கிறேன் என்று முன்னமேயே சொன்னேன் அல்லவா. அதை இந்த அனுமன் மூலம் தான் சொல்கிறேன். விராதன் துதியிலும், சரபங்கன் ஆச்சிரமத்தில் இந்திரன் துதியிலும், எல்லாம் வல்ல இறைவனின் தன்மையை விளக்கமாகக் கூறத்தான் செய்கிறேன் என்றாலும், என் சிந்தையிலே வளர்ந்த தெய்வத் திருவுருவை அனுமன் மூலம்தான் வெளியிட விரும்பினேன்.

நான் சைவனாகப் பிறந்தேன். மங்கை பங்கனுக்கே ஆட்பட்டேன் என்றாலும், இராமகாதை எழுத எழுத முழுக்க முழுக்க அந்த ராமனுக்கே அடியவன் ஆகிவிட்டேன். அழகனாக என் கவிதையில் பிறக்கிற ராமன், பின்னால் வீரனாக வளர்கின்றான், லக்ஷிய புருஷனாக வாழ்கின்றான். முடிவில் தேவ தேவனாகத்தான் காட்சி கொடுக்கிறான். அவன் மனிதருள் தலையாய மனிதன், மனிதருள் மாணிக்கம் என்றெல்லாம் தான் எண்ணினேன். என்றாலும் கடைசியில் அவன் மனித உருத் தாங்கிய தெய்வம் என்றே நிச்சயித்தேன். அதனால்தான் ராமன் அவதரித்ததால் தெய்வப் பிறப்பையும் மனிதப் பிறவி வென்று விட்டது என்று முடிவு கட்டினேன். அதை

**ஆறுகொள் சடிலத்தானும்**
**அயனும் என்று இவர்களாதி**
**வேறுள குழுவை எல்லாம்**
**மானிடம் வென்றது.**

என்று முதலில் சுக்ரீவன் கூற்றாகப் போட்டேன். ராமன் பின்னும் என் சிந்தையில் வளர்ந்து கொண்டே போனான். கடைசியில் அனுமன் வாயிலாக

**மூலமும் நடுவும் ஈறும்**
**இல்லதோர் மும்மைத்தாய**
**காலமும் கணக்கும் நீத்த**
**காரணன், கைவில் ஏந்தி**
**சூலமும் திகிரி சங்கும்**
**கரகமும் துறந்து, தொல்லை**
**ஆலமும் மலரும் வெள்ளிப்**
**பொருப்பும் விட்டு அயோத்திவந்தான்**

என்று சொன்னேன். பின்னும் சொன்னேன்.

**அறந்தலை நிறுத்தி, வேதம்**
**அருள் சுரந்து அறைந்த நீதி**
**திறம் தெரிந்து, உலகம் பூணச்**
**செந்நெறி செலுத்தி, தீயோர்**
**இறந்துக நூறி, தக்கோர்**
**இடர்துடைத்து ஏக, ஈண்டு**
**பிறந்தனன், தன் பொற்பாதம்**
**ஏத்துவார் பிறப்பறுப்பான்**

என்று முத்தாய்ப்பு வைத்தேன். இதைவிட நான் வணங்கிய தெய்வத்தைப் பற்றி நான் எப்படித்தான் சொல்ல நான் விரும்பிய பாத்திரம் அனுமன். நான் வணங்கிய தெய்வம் ராமன் - போதுமா!

இனி நான் கண்ட கனவுகள்

கம்பன் - இதுவரை நான் சொல்லியதிலிருந்தே என்னுடைய லக்ஷியங்கள் என்ன என்ன என்பதை அறிந்திருப்பாய். **மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம்** என்றானே அந்த அறம் வழுவாது மக்கள் வாழவேண்டும் என்று விரும்பினேன். அதனால்தான் நீதியும் தருமமும் நிறுவத் தோன்றியவனைப் பாராட்டினேன். சேனுயர் தருமத்தின் தேவை செம்மையின் ஆணி என்றேன்.

**அறம் துணை ஆவதல்லால்**
**அருநரகம் அமைய நல்க**
**மறம் துணையாக மாளாப்**
**பழியொடும் வாழமாட்டேன்**

என்று பாத்திரங்களைக் கூற வைத்தேன். இதையே திரும்பத் திரும்ப காவியம் முழுவதும் வலியுறுத்திக் கொண்டே போனேன். "அறங் கடந்தவர் செயல் இது" என உலகம் ஆர்க்கும் வகையில் இராவணன் வாழ்க்கையை உருவாக்கிக் காட்டினேன். எத்தனையோ நல்ல குணங்களும்

பண்புகளும் வாய்த்தவனாக இருந்தும் - பிறர்மனை நோக்காத பேராண்மை இல்லாதவனாக அமைந்த ஒரே காரணத்தால், எவ்வளவு தவறிவிடுகிறான் என்பதைத்தான் விளக்கினேன் அவனுடைய வாழ்க்கையில்.

**"ஈசனை இமையா முக்கண் இறைவனை இருமைக்கேற்ற**
**பூசனை முறையாய்ச் செய்தவனே"**

ஆனாலும் - தருமத்தின் தனிமை தீர்ப்பவன் முன்னால் தலை எடுக்க முடியாது என்பதை அவன் வாழ்க்கையில் நினைவுபடுத்தினேன். அறம் வளர்க்கும் நாடாக நமது தமிழகம் உருவாக வேண்டும் என்பதே நான் கண்ட கனவு. அப்படிப்பட்ட நாட்டிலேதான் கல்வியும் செல்வமும் செழித்து வளரும். அங்கேதான் மக்கள் எல்லா நலமும் பெற்று வாழ்வார்கள். இன்று ஏதோ பொது உடைமையைப் பற்றிப் பலர் பேசுகிறார்களே - ஏதோ எத்தனையோ கடலுக்குள் அப்பாலுள்ள நாடுகளில் இருந்தெல்லாம் கொண்டு வந்து சான்று காட்டுகிறார்களே - இது எல்லாம் எனக்குத் தெரியாதா என்ன? இவர்கள் சொல்லும் முதலாளி தொழிலாளி, பணக்காரன் ஏழை, படித்தவன் படியாதவன் என்ற வேற்றுமையே நாட்டில் இருக்கக்கூடாதுதான். அதற்காக எல்லோரையுமே தொழிலாளிகளாக, ஏழைகளாக, படியாதவர்களாக ஆக்கிவிடக்கூடாது. எல்லோருமே முதலாளிகளாக, பணக்காரர்களாக, படித்தவர்களாக உருப்பெற்றுவிட வேண்டும்.

**"கல்லாது நிற்பார் பிறர் இன்மையில்**
**கல்வி முற்ற**
**வல்லாரும் இல்லை அவை வல்லர்**
**அல்லாரும் இல்லை**
**எல்லாரும் எல்லாப் பெருஞ்**
**செல்வமும் எய்தலாலே**
**இல்லாரும் இல்லை, உடையார்களும்**
**இல்லை"**

என்பதுதானே நான் கனவு கண்ட கோசலம். இத்தகைய நாட்டிலேதான் ராமராஜ்யம் நிலவும் என்று எண்ணினேன். அந்த ராஜ்யத்தில்

**ஏகம் முதற் கல்வி முளைத்து**
**எழுந்து எண்ணில் கேள்வி**
**ஆகம் முதல் திண்பனை போக்கி**
**அருந் தவத்தின்**
**சாகம் தழைத்து அன்பு அரும்பித்**
**தருமம் மலர்ந்து**
**போகம் கனியொன்று பழுக்கும்.**

என்று துணிந்து கூறினேன். இந்த ராஜ்யத்தின் அரசன் அல்லது ஆள்வோர் மன்னுயிரையெல்லாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பி அந்த உயிர் எலாம் உறையும் ஓர் உடம்புபோல் இருத்தல் வேண்டும் என்று அறுதியிட்டு உரைத்தேன். வையகம் முழுதும் வறிஞன் ஓம்பும் ஓர் செய் எனக்காத்து இனிது அரசு செய்தால் ராமராஜ்யம் நின்று நிலவும் என்று நம்பினேன்.

இப்படி ராமராஜ்யம் நடக்கும் நாட்டில்தான் மக்களுக்கு இறை உணர்ச்சி உண்டாகும். இறை உணர்ச்சி தெய்வ நம்பிக்கை எல்லாம் ஏற்பட, நாட்டில் கோயில்கள் பல தோன்றவேண்டும். அங்கெல்லாம் வழிபாடுகள் முறையாக நடக்க வேண்டும். புதுக் கோயில்கள் கட்ட முடியாவிட்டாலும் அந்தப் பழைய செட்டிநாட்டு அன்பர்களைப் போல் பழைய கோயில்களை எல்லாம் புதுக்கிப் பணிபுரிய வேண்டும் என்றெல்லாம் கூறினேன்.

**"ஆலயம் புதுக்குக, அந்தணாளர்தம்**
**சாலையும் சதுக்கமும் சமைக்க, சந்தியும்**
**காலையும் மாலையும் கடவுளர்க்கு அணி**
**மாலையும் தீபமும் வழங்குக"**

என்று தானே நான் தமிழர்களை எல்லாம் கூவியழைத்திருக்கிறேன். ஆனால் நான் கூவி அழைத்த குரல் இன்னும் எல்லோர் காதிலும் நன்றாகப்படவில்லைபோல இருக்கிறது. அது நன்றாக விழும்படி செய்வதே உன் போன்றவர்களின் சேவையாகயிருக்க வேண்டும். (இன்னும் இப்படியே என்ன என்ன எல்லாமோ சொல்லிக்கொண்டே போனார் மிக்க உணர்ச்சிப் பெருக்கோடு)

நான் சரி ஐயா. தங்களை மிகவும் சிரமப்படுத்திவிட்டேன். ஒரேயொரு கேள்வி மட்டும் கேட்கிறேன். எவ்வளவோ விஷயங்களைச் சொன்னீர்களே. உங்கள் குடும்ப விவகாரங்களைக் கொஞ்சம் சொல்லலாமோ? அந்த அருமந்த மகன்?

கம்பன் - தம்பி எதைப பறறிப பேசககூடாதோ அந்தப் பேச்சை எடுத்துவிட்டாய். என் மனம் நோகச் செய்துவிட்டாய். என் சுய சரிதத்திலிருந்து என் வாழ்விலே தவிர்க்க முடியாத சோகம் ஒன்று நிகழ்ந்திருக்கிறது என்பதை உன்னால் ஊகிக்க முடியவில்லையா? வீரத்தையும் காதலையும் விளக்கமாக உரைத்த நான் சோகத்தைப் பற்றிப் பாடும் போதெல்லாம் என் இதயத்தையே பிழிந்து வைத்திருக்கிறேனே! ராமனைப் பிரிந்த தயரதன், மேகநாதனைப் பிரிந்த ராவணன் துயரத்தை எல்லாம் நான் உணர்ந்தவன். பாடியவன். இன்னும் ஒன்றே ஒன்று மட்டும் சொல்கிறேன்.

**தேனடைந்த சோலைத்**
**திருநாடு கைவிட்டு**
**நான் அடைந்தேன் என்னத்**
**தரியாது காவல நீ**
**வானடைந்தாய் இன்னம்**
**இருந்தேன் நான் வாழ்வு உகந்தே**

என்று ராமன் கதறும் கதறல் யாருடைய கதறல் என்று நினைக்கிறாய் தம்பி.

நான் - ம்ன்னிக்கவேண்டும் ஐயா! மன்னிக்க வேண்டும். ஆறாத்துயரை ஆற்றும் ஆற்றல் இல்லாவிட்டாலும், அதைக் கிளறாமலாவது இருந்திருக்கலாம். எல்லாம் என் அறியாமைதான்.

கம்பன - பரவாயில்லை தம்பி! நான் விதியைப் பூரணமாக நம்புகிறவன் என்பதைத்தான் அறிவாயே. வெஞ்சின விதியினை வெல்வதற்கு ராமனாலேயே முடியவில்லை. நாமெல்லாம் எம்மாத்திரம். துதியறு பிறவியின் இன்பதுன்பந்தான் விதிவயம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்.

நான் - ஆம் ஐயா!

கம்பன் - நீயும் வேண்டுமென்றா இந்தக் கேள்விகளைக் கேட்கிறாய். எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையினால்தானே. அது கூட விதிதான்.

நான் - ஆம் ஐயா. நாங்கள் எல்லாம் கம்பன் கழகங்கள் நிறுவி - ஏதோ உங்கள் புகழ் பரப்பும் பணியில் ஈடுபட்டிருக்கிறோமே! நாங்கள் செய்வதெல்லாம் சரியா? இன்னும் என்ன செய்ய வேண்டும்? எது எது செய்யக்கூடாது?

கம்பன் - இதற்கெல்லாம் நான் பதில் சொல்லமாட்டேன். அதையெல்லாம் **கம்பன் கழகச் செயலாளர் சா. கணேசனிடம்** கேட்டுக் கொள். ஒன்றே ஒன்று சொல்கிறேன். என் புகழ் பாட வேண்டாம். என்னைத் திட்டாமல் இருந்தால் சரி. வையம் என்னை இகழவும், மாசு எனக்கு எய்தவும் செய்யாதீர்கள்.

இதுதான் என் விருப்பம்.

சரி சுவாமி என்று சொல்லி நான் என் இருப்பிடத்திலிருந்து எழுந்து அவர் காலில் விழுந்து வணங்கி ஆசி பெறுவதற்காகத் தலை குனிந்தேன். அவர் அப்படியே என் தலையில் கையை வைத்துத் தலையை நிமிர்த்தினார்.

நிமிர்ந்து பார்த்தேன். கம்பனைக் காணவில்லை. என் கண்முன் நின்றவர் அமரர் டிகேசி. அவரைக் கட்டிப்பிடித்துக்கொள்ள விரைந்தேன். ஆனால் அவரோ, தம்பி உனக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன். கம்பன் காவியத்தை ஆராயாதே, ஆராயாதே, அனுபவித்துப் படி. பிறரும் அனுபவிக்கும்படியாக ஏதோ உன்னால் சொல்லக்கூடுமானால் சொல்லு என்று. இவ்வளவு சீக்கிரத்தில் என் உபதேசத்தை எல்லாம் மறந்துவிட்டு ஆராய்ச்சியில் இறங்கிவிட்டாயே என்று கண்டித்தார்.

நான் - இல்லை ஐயா! நான் செய்தது தவறுதான். இனி அப்படியெல்லாம் செய்யமாட்டேன். இதற்கெல்லாம் காரணம் முன்பு சின்னப்பட்டமாக இருந்து இன்று பெரிய பட்டம் வகித்திருக்கும் எங்கள் தலைவர் - திரு. எ. சி. பால்நாடார் அவர்கள்தான். அவர்கள்தான் என்னை இப்படி ஆராயத் தூண்டிவிட்டவர்கள். இனி நான் இந்தத் தொழிலிலேயே இறங்கமாட்டேன். இறங்கவேமாட்டேன் என்று பன்னிப் பன்னிக் கூறினேன். என் முன் நின்ற அமரர் டிகேசியும் அந்தர்த்தியானம் ஆகிவிட்டார்கள். திரும்பவும் திரும்பவும் கண்ணைக் கசக்கினேன். என்முன் மேஜைமீது கம்பராமாயணச் சுவடிகளில் சில அவிழ்ந்து கிடப்பதைக் கண்டேன். சாஸ்திரியாரும் என்ன சார்! கம்பனின் சுயசரிதம் படித்தீர்களா? எப்படியிருக்கிறது? என்று கேட்டுக்கொண்டே வந்தார். எப்படி இருக்கிறது என்று நான் என்ன சொல்ல? சொல்ல வேண்டியவர்கள் நீங்கள் அல்லவா?

# 2 கவி உலகில் கம்பர் இடம்

கலை, இலக்கியம், முதலிய காரியாதிகளிலே பழம் பெருமை வாய்ந்தவர்கள் கிரேக்கர். ஹோமர் போன்ற மகாகவிகளும், அரிஸ்டாட்டில், பிளேட்டோ, ஸாக்ரடீஸ் போன்ற அதிமேதாவிகளும் கிரேக்கர்களின் இலக்கிய வளத்திற்குப் பெருமை கொடுக்கிறார்கள். ஆதலால் எதற்கெடுத்தாலும், எந்த இலக்கியத்தையெடுத்தாலும் எந்தக் காவியத்தைப் பார்த்தாலும் கிரேக்க இலக்கியங்களோடு ஒப்பு நோக்கியோ அல்லது அரிஸ்டாட்டில் பிளேட்டோ முதலானவர்கள் சொல்லும் இலக்கண உரை கல்லில் உரைத்துப் பார்த்தோதான் எடை போடுகின்ற பழக்கம் ரசிகர்களிடையே, விமர்சகர்களிடையே ஏற்பட்டிருக்கிறது.

ஒரேயொரு சின்ன விஷயம். அதைப் புலவர், பல தேசத்துப் புலவர், பல பாஷைக் கவிஞர்கள் எப்படி எப்படி எல்லாம் சொல்ல முற்படுகிறார்கள் என்று பார்க்கலாம்.

கிரேக்கர்களின் சிறந்த இலக்கியம் ஹோமர் எழுதிய இலியட். டிராய் நகரத்து அரசன் பாரிஸ் என்பவன் ஹெலன் என்ற பெண்ணைத் தூக்கிச் செல்கிறான். அதனால் சண்டை மூளுகிறது. டிராய் நகரத்திலே எல்லாம் சீதாபஹரணத்தினால் ஏற்பட்ட இராம ராவணப் போர் போலத்தான். டிராய் நகரத்தின்

மீது கிரேக்கர்களின் போர்க்கடவுளான மார்ஸ் (Mars) தன் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்துவிடுகிறான். அந்த நேரத்தில் அந்த நாட்டில் எழுந்த உற்பாதங்களை ஹோமர் வர்ணிக்கிறார்.

The Mountains Shock

The Rapid Streems Stood Still.

என்றும் நிலைபெற்றிருக்கிற மலைகளும் நடுங்கிவிட்டன. விரைவாக ஓடிக் கொண்டிருந்த நதிகளும் அப்படியே நின்றுவிட்டன. சலனமில்லாததும், சலனமுடையதுமே ஸ்தம்பித்து விடுகின்றன, நாட்டில் ஏற்பட இருக்கும் ஒரு பெரிய தீமை காரணமாக என்று அறிகிறோம்.

ஆங்கில நாட்டில் உயந்த கவி என்று மதிக்கப்படுகிறார் ஜான் மில்டன். அவர் பாடியுள்ள சுவர்க்க நீக்கம் (Paradise Lost) சுவர்க்க மீட்சி (Paradise Regained) என்பவை உலகப் பிரசித்தமான இலக்கியங்கள். சுவர்க்க நீக்கம் மேலை நாட்டு மொழிகள் அத்தனையிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அந்தக் கவிஞனுக்கும் ஹோமருக்குக் கிடைத்தது போல ஒரு சிறு சந்தர்ப்பம் கிடைக்கிறது. இன்ப வாழ்வின் இருப்பிடமாகிய ஏதேன் தோட்டத்தில் ஆதி மக்களாகிய ஆதாமையும் ஏவாளையும் இருக்கும்படி பணிக்கிறார். இறைவன் அவர்கள் அங்கே வாழ்வதற்கு ஒரு சிறு நிபந்தனையையும் போடுகிறார் அவர். அந்தத் தோட்டத்தில் உள்ள எல்லா மரத்தின் கனிகளையும் பறிக்கலாம், சாப்பிடலாம். ஆனால் ஒரேயொரு மரத்தை மட்டும் அணுகக் கூடாது. அதில் பழுக்கும் பழங்களையும் விலக்க வேண்டும் என்று சொல்கிறார். ஆனால், சாத்தான் சும்மா இருப்பானா? ஏவாளை அணுகினான். விலக்கப்பட்ட மரத்தின் கனி ருசியைப் பற்றிப் பிரமாதமாகப் பேசினான். இந்தக் கடவுள் இந்த ஒரு மரத்தை மட்டும் விலக்கி

வைத்திருப்பானேன்? அதிலே தானே அவருடைய சூது இருக்கிறது என்றெல்லாம் தூபம் போட்டான். அந்த மரத்தின் கனியை உண்டு தனக்கும் வருங்கால சந்ததியருக்கும் பாப மூட்டையைக் கட்டிக் கொடுக்கத் தயாராகிவிட்டாள் ஏவாள். எல்லாம் சாத்தானின் சாகசப் பேச்சில் மயங்கித்தான். ஏவாள் அந்த மரத்தை அணுகி பழத்தைக் கொய்கிறாள். அவளுடைய செய்கையால் உலகமே துன்பத்தில் உழல இருக்கிறது. ஒரு பெரிய உத்பாதமே நிகழ இருக்கிறதல்லவா? இயற்கை இந்தச் செயலை அறிந்து துடிக்கிறது. இதை வர்ணிக்கிறார் மில்டன்.

Earth felt the wound

And nature from her seat

signinp though all her works

Gave signs of woe

That all was lost.

என்பது மில்டன் கூறுவதாகும். பூமாதேவியின் இதயமே புண்பட்டுவிட்டது. இந்தக் காரியத்தால் இயற்கை தன்னுடைய ஒவ்வொரு செய்கையாலும் பெருமூச்செறிகிறாள். ஐயோ எல்லாம் பாழாகிவிட்டதே என்று அங்கலாய்க்கிறாள் என்று மில்டன் கூறும்போது, ஏது ஹோமர் சொல்லிய கருத்துகளின் எதிரொலி போலல்லவா இருக்கிறது இது என்று தோன்றுகிறது நமக்கு.

சரி மேலைநாட்டினர் தாம் அவர் தம் இலக்கியங்களில் இப்படியெல்லாம் சொல்லக்கூடும் என்றில்லை. கீழை நாட்டுக் கவிஞர்கள் இலக்கிய கர்த்தர்கள் இதே விஷயத்தை எப்படி எப்படி எல்லாம் சொல்லுவார்கள். சொல்ல முற்படுவார்கள் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா.

வடமொழிக் கவிஞனான வான்மீகி, ராமாயணத்தின் ஆதிகர்த்தாதான், இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை வர்ணிக்க வேண்டிய அவசியம் ஒன்றை உண்டாக்கிக் கொள்கிறான். பஞ்சவடியிலே பர்ணசாலை அமைத்துக் கொண்டு, ராமனும் சீதையும் லக்ஷ்மணனும் வாழ்ந்து வருகிறார்கள். ராமன் மேல் தீராத மையல் கொண்ட சூர்ப்பனகை, சீதையைத் தாக்க முயன்று, இலக்குவனால் மூக்கறுபட்டு, மானபங்கம் அடைகிறாள். சூர்ப்பனகையின் தூண்டுதலால் இராவணன் சீதையை எடுத்துப்போக விரைகிறான். மாயமானை ஏவுகிறான். இராமனையும் லக்ஷ்மணனையும் சீதையிடம் இருந்து பிரிக்கிறான். தனித்திருக்கும் சீதையிடம் மாய சந்நியாசி வேடத்தில் அணுகுகிறான். சீதாபஹரணத்தினால் என்ன என்ன விளைவுகள் உத்பாதங்கள் எல்லாமோ நேரிடப் போகிறதோ அரக்கர் குலத்தின் அழிவே அல்லவா அதனால் ஏற்பட இருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் இயற்கை எப்படி துடித்தது என்பதைச் சொல்ல விரும்பிய வான்மீகி

**ஜனஸ்தானத்தில் நின்ற மரங்கள்**
**அசைவொழிந்தன**
**காற்று அடங்கிவிட்டது**
**கோதாவரி நதியும் பயந்து**
**அப்படியே ஸ்தம்பித்து மெல்ல**
**நகர ஆரம்பித்துவிட்டது**

என்று நயமாகச் சொல்கிறார்.

இந்த வான்மீகி சொன்ன கதையே ஆசையோடு தமிழர்களுக்கு தர விரும்பிய கவிச் சக்கரவர்த்தி கம்பன் இதே கட்டத்தைச் சொல்கிறான்.

**நடுங்கின மலைகளும்**
**மரமும் நா அவிந்து**
**அடங்கின பறவையும்**
**விலங்கும் அஞ்சின**

**படம் குறைந்து ஒதுங்கின**
**பாம்பும் பாதகக்**
**கடுந்தொழில் அரக்கனைக்**
**காணும் கண்ணினே.**

என்று. ஹோமர், மில்டன், வான்மீகி, கம்பன் எனும் நான்கு மகாகவிகள் ஒரே விஷயத்தை எப்படி எப்படி எல்லாம் சொல்கிறார்கள் என்று பார்த்தோம். அறம் திறம்பிய ஒரு காரியத்தால் இயற்கையே துயருறும் என்ற சாதாரண விஷயத்தைத் தான் சொல்கிறார்கள் நால்வரும். மலைகளை நடுங்க வைக்கிறார், ஓடும் நதியை ஸ்தம்பிக்கச் செய்கிறார், ஹோமர். இயற்கையின் இதயத்தையே கீறிக் காட்டுகிறார் மில்டன். வான்மீகரோ மரங்களை அசைவற்றிருக்கச் செய்கிறார், ஓடும் நதியை ஸ்தம்பிக்கச் செய்கிறார். ஏன், காற்றின் மூச்சையே பிடித்து அமுக்கி நிறுத்திவிடுகிறார். இத்தனை பேர் சொன்னதையும் தொகுத்துச் சொல்பவன் போல கம்பன் மலைகளையும், மரங்களையும், நடுங்க வைக்கிறான். பறவைகளையும் விலங்குகளையும் அஞ்ச வைக்கிறான். மேலும் ஊரும் இனமாகிய பாம்பையும் படத்தைக் கீழே போட்டுப் படுக்க வைக்கிறான். கருத்துகள் எல்லாம் ஒரே படித்தாக இருந்தாலும் அவைகளைச் சொல்லுவதிலே சொல்லுக்குச் சொல்லழகு ஏற்றுவதிலே கம்பன் எல்லோரையும் விஞ்சத்தான் செய்கிறான். இக்கவிஞர்கள் ஒருவரிலிருந்து ஒருவரைப் பிரித்து வைக்கும் இடை நெடுங்காலமும், தூரமும் எவ்வளவினதாகவோ இருக்கிறது. இருந்தாலும் மகாகவிகள், மகா மேதாவிகள் எல்லாம் ஒரு படித்தாகவே எண்ணுவார்கள் என்ற உண்மையை விளக்கிவிடுகிறார்கள் இவர்கள்.

இதிலிருந்து தெரிகிறது கவிச் சக்கரவர்த்தி கம்பன் உலக மகாகவிகளோடு ஒருங்கு வைத்து எண்ணப்படுகிறார் என்று. கிரேக்கர்களுக்கு ஹோமர் எப்படியோ, ரோமர்களுக்கு விர்ஜில்

எப்படியோ, இத்தாலியர்களுக்கு டாண்டி எப்படியோ, ஜெர்மானியர்களுக்கு கெத்தே எப்படியோ, ஆங்கிலேயர்களுக்கு மில்டன், ஷேக்ஸ்பியர் எப்படியோ வட இந்தியர்களுக்கு வான்மீகியும் காளிதாசனும் எப்படியோ அப்படியே தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்குமே பெருமை கொடுக்கிறான் கம்பன் என்பர் ராவ், சாஹிப், பால் நாடார் அவர்கள். அவர்கள் சொன்னது அத்தனையும் உண்மையே என்று நான் இப்போது தெரிந்துகொண்டேன்.

கவி உலகிலே கம்பனுடைய இடம் என்ன என்று கேள்வி எழும்போது, அது சாதாரணமாகத் தமிழ்க்கவி உலகிலே அவர் ஸ்தானம் என்ன என்பதைப் பற்றிஅல்ல. தமிழ்க் கவி உலகிலே அவன்தான் ஏக சக்ராதிபத்யம் செய்கிறானே! கவிச் சக்கரவர்த்தி கம்பன் என்ற நிறைந்த மொழிகளால் அழைக்கப்படுகிறான். கல்வியில் பெரியவன் கம்பன் என்றும் பாராட்டப்படுகிறான். ஆதலால் அவனுடைய ஸ்தானத்தை தமிழ்க்கவி உலகிலே நிர்ணயிப்பது என்பது பிரமாதமான காரியமே இல்லை தான்.

ஆனால் உலக மகாகவிகளோடு ஒருங்கு வைத்து எண்ணப்படும் இக்கம்பன் அவர்களிடையே வகிக்கும் ஸ்தானம் என்ன என்பதைப் பற்றித்தான் கேள்வி. இந்தக் கேள்விக்குத் தீர்மானமாக ஒரு விடை நாம் பெறுவதற்கு மேல்நாட்டு இலக்கிய ரசிகர்கள் உதவியைத்தான் முதன்முதலில் நாம் நாடவேண்டும். மேல்நாட்டு இலக்கியங்கள் அத்தனையும் ஒன்றாய்ச் சேர்த்து எடை போட்டு அதன் தராதம்யங்களை நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்த ரசிகர்கள், விமர்சகர்கள் ஒரு சிலரே உண்டு. அவர்களின் டிரைடன் (Dryden) என்ற ஆங்கிலப் புலவன் ஒருவன் அந்த வேலை செய்வதில் ஒப்பற்றவன்தான். அவன் சொன்னான், ஒரு காலத்தில் இந்த உலகத்திலே இத்தனை வருஷங்களுக்கிடையிலே மூன்றே மூன்று மகா கவிகள்தான் தோன்றியிருக்கிறார்கள்.

அவர்களால் புகழ்பெற்ற நாடுகள் கிரீசும் இத்தாலியும், இங்கிலாந்துமே. இம்மூவரில் முன்னவனான ஹோமர் அர்த்த கவுரவ முதிர்ச்சியுடைய பாக்களை அருளினான். இடைநின்ற வர்ஜிலோ கவிதா நடையின் உன்னதத்தினால் மாண்பு பெற்றான். மூன்றாவது கவிஞனை உருவாக்க இயற்கையன்னை நெடுநாள் தவம் கிடந்தாள். கடைசியாக அந்த கவுரவத்தில் தலைநின்ற ஹோமரையும் உன்னத கவிதாநடையினால் பெருமை பெற்ற வர்ஜிலையுமே இணைத்து மில்டன் என்ற பெயரோடு ஒரு மகா கவிஞனை உருவாக்கிவிட்டாள். அவனே உலக மகாகவி அவனுக்கு ஒப்பாரும் இல்லை. மிக்காரும் இல்லை என்று அறுதியிட்டுக் கூறுகிறான். இத்தனை அருமையான கருத்துக்களையும

Three poets in three distant ages born Greece Italy and England did adorn the first in Loftiness of thought surpassed; The next in Majesty; in both the last the force of nature could no further go; to make a third she joined the former two.

என்று ஆறு அழகிய அடிகளில் சொன்னான் அவன். இந்த முத்தாய்ப்பை மேல்நாட்டு அறிஞர்கள் எல்லாம் அப்படியே ஒப்புக் கொள்கிறார்கள். மறுப்பவர் ஒருவரும் இலர்.

சரி. இப்போது காரியம் எளிதாகிவிட்டது. உலக மகா கவிகளுக்குள்ளே ஒப்பற்ற ஸ்தானம் வகிக்கிறவன் மில்டன். அவனோடு மட்டும் கம்பனை ஒப்புமை காட்டி கம்பனுடைய ஸ்தானத்தை உலக மகாகவிகளில் விடுவது கஷ்டமான காரியம் இல்லையே. பார்க்கலாம் அதையும்.

மில்ட்டனது சுவர்க்க நீக்கம் என்ற காவியத்தில் எல்லோரா்லும் பாராட்டப்படுகிற பகுதி ஒன்று உண்டு. இறைவனோடு என்னேரமும் போராடுவதையே தன் நித்திய கர்மமாகக் கொண்ட சாத்தான் சுவர்க்கத்திலிருந்து அகற்றப்படுகிறான். எரிவாய் நரகத்தில் தள்ளப்படுகிறான்.

அவனுடைய சகாக்களுடன் நரகத்தில் கிடந்து உழலும் அவன் எழுந்து தன் சகாக்களைப் பார்த்தே பேசுகின்றான். அவன் பேச்சு அவன் தன் மனோவலிமையைக் காட்டுகிறது. அந்த நேரத்திலும் அந்தப் பேச்சை மில்டன் வெகு அழகாகத்தான் சொல்லியிருக்கிறான் அவனுடைய காவியத்திலே.

இன்பத்தையும் துன்பத்தையும் உருவாக்குவதெல்லாம் மனம் தானே. தான் இருக்கும் நிலையில் இருந்து கொண்டே சுவர்க்கத்தை நரகமாக்கும், நரகத்தைச் சுவர்க்கமாக்கும் அது. அதனால் நமக்கென்ன? நாம் மட்டும் மன உறுதியைத் தளரவிடாமல் இருந்தால் அந்தக் கடவுளை அவர் சிருஷ்டித்த படி பெரியவராக ஆக்கியிருக்கலாம். அதனால் நாம் ஏன் அவருக்குத் தணிந்து போக வேண்டும். இங்காவது நாம் சுதந்திரமாக வாழலாம். இங்கே நாம் இருப்பதைக் கண்டு அந்தக் கடவுள் பெருமைப்படவும்மாட்டான். இங்கிருந்து நம்மைத் துரத்தவும் செய்யான். இங்கே நம்முடைய ஏகச் சக்ராதிபத்யம்தான். அரசாள வேண்டியதுதானே நமது குறிக்கோள். அது நரகத்திலேயானாலும் சரி தான். சுவர்க்கத்திலே அடிமையாக வாழ்வதைவிட நரகத்தில் அரசனாக இருப்பது மேல்தானே என்பதுதான் சாத்தானின் ரணரங்கப் பிரசங்கம். இதைப் படித்தவர்கள் எல்லாம் (High water mark of poetry) உயர்ந்த கவிதை, கருத்து கருத்தின் அர்த்த கவுரவ முதிர்ச்சியும் கவிதா நடையின் உன்னதமும் மில்டனுக்கு ஒரு பெரிய ஸ்தானத்தையே அல்லவா அளிக்கிறது கவிதை உலகிலே, என்றெல்லாம் பாராட்டப் படுகின்றார்கள்.

இதைப் போலவே ஒரு சந்தர்ப்பம் நமது கம்பனுக்கு வாய்த்தால் அவன் எப்படிச் சொல்லுவான்? மகா கவியாகிய கம்பனுக்கு இப்படி ஒரு சந்தர்ப்பம் வாய்க்கத்தான் செய்கிறது. அவன், ஆளப் பிறந்தவன் நான், அது நரகம் ஆனாலும் சரி சுவர்க்கம் ஆனாலும் சரி என்று மட்டும் சொல்லித்

திருப்தியடைந்துவிடமாட்டான். அவன், சொன்னால் அதற்கு ஒரு தனிப் பண்பே இருக்கும்.

இலக்குவனும் இந்திரசித்தனும் நிகும்பலையில் போர் புரிகின்றார்கள். இந்திரசித்து விடும் சரங்களையெல்லாம் இலக்குவன் தடுத்து விடுகிறான். அவ்வாறு தன் வலிமிகுந்த படைகள் எல்லாம் பலனற்றுப் போவதைக் கண்ட இந்திரசித்தன் கடைசியாக நாராயணாஸ்திரத்தையே எடுத்து இலக்குவனைக் குறி பார்த்து விடுகிறான். நாராயணாஸ்திரம் தானே அந்த ராம ராவணர் காலத்து அடாமிக்பாம். அந்த நாராயணா ஸ்திரம் என்ன செய்தது தெரியுமா? இலக்குவனை வலம் வந்தது. நமஸ்கரித்தது. இந்திரசித்தனிடமே திரும்பவும் வந்து சேர்ந்தது. பார்த்தான் இந்திரசித்தன். "இத்தகைய புயவலியும், இறைவனது அருள்வலியும் கொண்ட இந்த ராம லக்ஷ்மணர்களோடு போர் புரிந்து வெற்றி பெறுவது என்பது இயலாத காரியம். அரக்கர்கள் வாழ வேண்டுமானால் அவர்கள் சந்ததி அழியாதிருக்க வேண்டுமானால் சீதையை அவர்களிடம் திருப்பி அனுப்பிவிடுவதுதான் சரி. அவர்களும் பெருந்தன்மையுடனே போரை நிறுத்தி விடுவார்கள். இதுவரை நாம் செய்த பிழைகளையெல்லாம் மன்னித்து விடுவார்கள் என்றெல்லாம் எண்ணினான். சரி, கடைசி முறையாக நாம் சொல்ல வேண்டியதையும் தந்தையிடம் தெரிவித்து விடுவோமே இப்போதாவது திருத்த முடிகிறதா என்று பார்ப்போமே, என நினைத்து மாயையில் மறைந்து இராவணன் கொலுவீற்றிருக்கும் அந்த ராஜ சபைக்கே வருகிறான். நடுங்கும் உடலோடும் நனைந்த உடையோடும் இராவணனைப் பார்த்தே பேச ஆரம்பித்துவிடுகிறான். அவன் பேச்சை கம்பன் சொல்கிறான்.

**நிலஞ் செய்து விசும்பும் செய்து**
**நெடியவன் படைநின்றானை**
**வலம் செய்து போவதா னால்**
**மற்றினி வலிய துண்டே**

**குலஞ்செய்த பாவத்தாலே**
**கொடும் பழிதேடிக் கொண்டோம்**
**சலஞ் செயின் உலகம் மூன்றும்**
**இலக்குவன் முடிப்பன் தானே**

*என்று சொல்லியதுடன் நிறுத்திக் கொண்டானா? இல்லை*

**ஆதலால் அஞ்சினேன் என்று**
**அருளலை ஆசைதான் அச்**
**சீதைபால் விடுதியாயின்**
**அனையவர் சீற்றம் தீர்வர்**
**போதலும் புரிவர் செய்த**
**தீமையும் பொறுப்பர் உன்மேல்**
**காதலால் உரைத்தேன் என்றான்**
**உலகெலாம் கலக்கி வென்றான்**

என்றெல்லாம் பன்னிப் பன்னித்தான் சொல்கிறான் இந்திரசித்தன்.

இந்திரசித்தனது பேச்சைக் கேட்டு இராவணன் அப்படியே தோள்கள் குலுங்கச் சிரித்தான். "என்னடாப்பா என் மகன் இந்திரனையே ஜெயித்தவன் என்றல்லவா எண்ணினேன். இப்படி மனிசரைமதித்து அவர்கள் வீரத்தைக் கண்டு மயங்க ஆரம்பித்து விட்டாயா? போதும்! போதும்! அதோடாவது விட்டாயா? குலம் செய்த பாவத்தாலே கொடும்பழி தேடிக் கொண்டோம் - என்று குலத்தின் பேரிலே வேறு பழியைப் போடுகிறாய். நான் சீதையை அன்று தண்டகாரண்யத்தி லிருந்து தூக்கி வந்தேனே, அன்றே தெரியும் எனக்கு இப்படி ராமலக்ஷ்மணர் பகை வரும் என்று. ஆனால் அன்று நான் அந்த பகையை வலிந்து தேடிக் கொள்ளும்போது, இப்போது இதுவரை இந்த இலங்கையில் போர் செய்து மாண்டு மடிந்த வீரர்கள் என்னைக் காப்பாற்றுவார்கள் என்றாவது, அல்லது இன்னும் என் பக்கத்திலேயே இருந்து போர் புரியத் தயாராக இருக்கும் வீரர் பலர் என் பகையை முடிப்பார் என்றாவது,

அல்லது என் மகன் இந்திரசித்தன் இந்த வலியுடைய பகைவர்களையெல்லாம் கொன்று குவித்து விடுவான் என்றாவது எண்ணி நான் இந்தப் பகையைத் தேடவில்லை. நான் நெடும் பகை தேடினால் அக்கொடும்பகை முடிக்கும் வலி என்னிடம், ஆம் என்னிடமே தான் உண்டு என்று நினைந்து தானே தேடிக் கொண்டேன் என்றெல்லாம் ஆங்காரமாய்ப் பேசுகிறான். அத்துடன் விட்டானா?

மகனே! சீதையை விட்டுவிடு என்று வேறே சொல்லுகிறாய். உன் பேதைப் புத்தி இதிலிருந்தே தெரிகிறதே. சீதையை எதற்காக விடவேண்டும். எல்லாம் இந்த உடலையும் உயிரையும் காப்பதற்குத்தானே. இந்த உடலும் உயிரும் என்ன அவ்வளவு சாஸ்வதமா? என் புகழை விட. இப்போது நடக்கும் போரில் வெற்றி எனதே தான். ஒருவேளை நீ சொல்கிறபடி நான் வெற்றி பெறாமல் தோற்றே போகிறேன் என்று தான் வைத்துக் கொள்வோமே. அப்போதும்தான் என்ன குடிமுழுகிப் போய்விடுகிறது. இந்த ராமனுடைய பெருமையெல்லாம் வலி மிகுந்த ராவண வீரனை வென்றான் என்பதில் தானே. ராமனது புகழ் உலகில் என்றளவும் நின்று நிலவுகிறதோ அன்று வரை என் புகழும் நின்று நிலவத்தானே வேண்டும். அத்தகைய புகழுக்கு மடிவும் உண்டா? சரி, போருக்கு நீ போக வேண்டாம் நானே போகிறேன். வருக தேர் - வருக என்று ஆரவாரித்துக் கொண்டே எழுந்து விடுகிறான் ராவணன். இதைச் சொல்கிறார் கம்பர் மூன்று அருமையான பாடல்களிலே.

**முன்னையோர் இறந்தாரெல்லாம்**
**இப்பகை முடிப்பார் என்றும்**
**பின்னையோர் நின்றாரெல்லாம்**
**வென்றனர் பெயர்வர் என்றும்**
**உன்னைநீ அவரை வென்று**
**தருதி என்று உணர்ந்தும் அன்றால்**
**என்னையே நோக்கியான் இந்**
**நெடும்பகை தேடிக் கொண்டேன்**

**பேதமை உரைத்தாய் மைந்த!**
**உலகெலாம் பெயரப் பேராக்**
**காதை என் புகழனோடு**
**நிலைபெற, அமரர் காண**
**மீதெழும் மொக்குளண்ண**
**யாக்கையை விடுவதல்லால்**
**சீதையை விடுவதுண்டோ**
**இருபது திண்தோள் உண்டு**
**வென்றிலன என்றபோதும்,**
**வேத முள்ளளவும் யானும்**
**நின்றளன் அன்றோ அவ்**
**இராமன் பேர் நிற்குமாயின்**
**பொன்றுதல் ஒரு காலத்தும்**
**தவிருமோ? பொதுமைத்தன்றோ**
**இன்றுளார் நாளை மாள்வர்**
**புகழுக்கும் இறுதி யுண்டோ**

மூன்று பாக்களையும் பாடப்பாட இராவணன் மனோ வலி, அவன் புகழுக்குச் செய்யும் வியாக்கியானங்கள் எல்லாம் நம்மை அப்படியே அதிசயித்து நிற்கச் செய்துவிடும்.

மில்டனுடைய காவியத்திலே ஈடுபட்டு உள்ளம் பறி கொடுத்திருந்த ஒரு வெள்ளைக்காரப் பெண்மணியிடம், நான் மேலே சொன்ன பாக்களின் கருத்துக்களை மட்டும் (தாளலயத்தில் அமைந்துள்ள அருமையான கவிகளையல்ல) சொன்னபோது, அந்த அம்மாள், அடேயப்பா உங்கள் கம்பன் எங்கள் மில்டனோடு தோள் தட்டியே அல்லவா நிற்கிறான். (your kamban stands shouldor to shoulder with our Milton) என்று சொன்னாள். அதற்கு நான் சொன்ன பதில் இதுதான்.

இல்லை, அம்மணி! எங்கள் கம்பன் உங்கள் மில்டனோடு தோள் தட்டி மட்டும் நிற்கவில்லை. அந்த

மில்டனது தோள் மேலேயே அல்லவா ஏறிக் கொண்டு நிற்கிறான். (Our kamban stands over the shoulder of your Miltan) என்று நான் சொன்னவுடன் அந்த அம்மாள் புன்னகையுடனேயே என்னுடைய திருத்தத்தைக் கூட அங்கீகரிக்கத்தான் செய்தாள்.

மில்டனுக்கு உலக கவிகளிடையே கிடைத்திருக்கும் ஸ்தானம் தெரியும். அந்த மில்டனையே முதுகுக்கு மண் காட்டி விடுகிறான் கம்பன். பின் கேட்பானேன். கவி உலகில் கம்பன் ஸ்தானம் என்ன என்று இதையெல்லாம் தெரிந்து தானே சொன்னார் வ.வே.சு ஐயர், கவிதாலோகத்தின் பேரரசர்கள் என்று சொல்லத் தகுந்தவர்கள் எல்லாம் கவிச் சக்கரவர்த்தி கம்பன் சந்நிதியிலே முடி சாய்த்துத் தலைவணங்க வேண்டியதுதான் என்று.

❖ ❖ ❖

# 3 கம்பன் கலைக்கோயில்

தமிழ்நாட்டில் ஒரு கோயில். ஏன் ஒரு கோயில்? தமிழ்நாடு முழுவதும் எத்தனை எத்தனையோ கோயில்கள் வானுற ஓங்கி வளர்ந்து நிமிர்ந்திருக்கின்றன.

**விண் மறைக்கும் கோபுரங்கள்**
**வினை மறைக்கும் கோயில்கள்**
**வேறு எந்த நாட்டில் உண்டு**
**வேலையின் விசித்திரம்**

என்றெல்லாம் தமிழ்நாட்டுக் கோயில்கள் பாராட்டப் படுகின்றன. இருந்தாலும் எல்லாக் கோயில்களையும் விடப் பெரிய கோயில் ஒன்று, இன்று தமிழ்நாட்டில் உண்டு. ஆம் உருவத்திலும் பெரிய கோயில்தான். பெயரிலும் பெரிய கோயில்தான். கோயில் அமைப்பும் மற்றக் கோயில்களைப் போலச் சாதாரணமானதல்ல. கோயிலைச் சுற்றி ஓர் அகன்ற அகழி. அகழிக்கு உள்ளடங்கிய ஓர் உயர்ந்த மதில். மதிலுக்கு உள்ளே வெளிப்பிரகாரம். அதன் உள்ளே கோயில். அர்த்த மண்டபம், மகா மண்டபம், நர்த்தன மண்டபம், வாத்திய மண்டபம். எல்லாவற்றிற்கும் நடு நாயகமாய்க் கர்ப்பக்கிருகம். கர்ப்பக் கிருகத்தின் உள்ளே கோயில் கொண்டிருக்கிறார் இறைவன் லிங்க உருவத்தில். பெரிய கோயிலில் உள்ள

லிங்கமும் பெரிய லிங்கம்தான். பெருவுடையார் அல்லது பிருஹதீசுவரர் என்பது அவர் பெயர். கர்ப்பக் கிருகத்திற்கு மேலே பிரம்மாண்டமான கோபுரம். மேருமலை போன்ற தஷிணமேரு அது. அதன் விமானத்தின் உச்சியில் சதுரவடிவமான பிரம்மரந்திரத் தளக்கல், பொற்கலசம், பொன் போர்த்த ஸ்தூபி எல்லாம் உண்டு. பிரம்மரந்திரத் தளக்கல் ஒரே கருங்கல், இருபத்தைந்து கன அடி, எண்பது டன் நிறையுள்ளது. அதை அந்தக் கோயில் கட்டிய இடத்திலிருந்து நாலு மைலுக்கு அப்பாலுள்ள சாரப்பள்ளம் என்ற கிராமத்திலிருந்தே சாரம் போட்டு இச்சிகரத்தில் ஏற்றினார்களாம். இந்தப் பெரியகோயில் இன்று இருப்பது தஞ்சை நகரிலே. இதை அன்று கட்டினான் ராஜராஜன் என்னும் சோழ மன்னன். சோழ அரசர்கள் ஏன் தமிழ்நாட்டு மூவேந்தர் எல்லோரும் எடுப்பித்த கோயில்களில் எல்லாம் தலை சிறந்து விளங்குவது இந்தத் தஞ்சைப் பெரிய கோயில்தான். ராஜராஜன் கி.பி. 985 முதல் இருபத்தொன்பது ஆண்டு சோழ சாம்ராஜ்யத்தைப் பரிபாலித்திருக்கிறான். ராஜராஜன் கட்டிய கலைக்கோயில் இன்று ராஜராஜேசுவரம் என்று வழங்கப்டுகிறது. ஆம், அது தமிழரின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்ட அமைந்த ஒரு கலைக்கோயில்தான்.

**கலை என்றால் என்ன?**

கடவுள் என்றால் யார்? என்று கேட்டால்கூட எளிதாகச் சுட்டிக்காட்டிவிடலாம் போலிருக்கிறது. கலை என்றால் என்ன? என்று சொல்வது மட்டும் முடிகிற காரியமாக இல்லை. கலைகளைப் பற்றி மேல்நாட்டார் எழுதிய புத்தகங்களையெல்லாம் புரட்டலாம். ரஸ்கின், தாகூர், ஹாவெல், ஆனந்த குமாரசாமி முதலிய அறிஞர்கள், கலா ரசிகர்கள் எழுதியதையெல்லாம் படித்துப் படித்துப் பார்த்தாலும் கலை என்றால் என்ன என்ற கேள்விக்குச் சரியான சுருக்கமான ஒரு விடை கிடைப்பது என்னவோ சாத்தியமில்லைதான்.

அழகுணர்ச்சிக்குத் திருப்தி அளிக்கக்கூடியதெல்லாம் கலை என்பார் ஒருவர். கலை என்பது மனிதனுடைய சௌந்தர்ய உணர்ச்சியில் பிறந்து அவனுடைய இச்சையைப் பூர்த்தி செய்வது என்பார் மற்றொருவர். அழகைப் பற்றிய சாஸ்திரமே அது என்பார் இன்னும் ஒருவர். சரி இந்த வியாக்யானங்கள் எல்லாம் கலை என்ன என்பதைக் காட்டி விடுகின்றனவா? என்று கேள்வி. கன்னியாகுமரியில் கடற்கரையில் நின்று கொண்டு காலைக்கதிரவன் கடல் அலைகளின் மீது மிதந்து கொண்டு உதயமாகிற காட்சியைப் பார்க்கிறான் ஒருவன். அந்தக் காட்சி அவனுடைய சௌந்தர்ய உணர்ச்சியில்தான் பிறக்கிறது. அவனுடைய உள்ளத்திலே ஓர் ஆனந்தத்தை உண்டாக்கத்தான் செய்கிறது. அப்படியானால் அந்தச் சூரியன், அந்தக் கடல், அந்தச் சூரிய உதயக் காட்சி எல்லாம் கலையா? கடலை விட்டு மலைக்குப் போவோம். திருக்குற்றால மலையில் சித்திரா நதி ஓர் அருவியாகக் குதிக்கிறது. ஒரு கண்கொள்ளாக் காட்சி. அந்த அருவி நீர் ஓசையோ, நம் செவிகளில் இசையமுதத்தையே பொழிகிறது. அந்த அருவியில் ஆடினாலோ உடல் மாத்திரம் அல்ல, உள்ளமுமே குளிருகிறது. மலையும் மலைவீழ் அருவியும் அருவி நீர் ஓசையும் நமது அழகுணர்ச்சிக்கு ஒரு திருப்தியைக் கொடுக்கின்றன. ஓர் ஆனந்தத்தையே உண்டாக்குகின்றன. ஆனால், இந்த மலை, இந்த அருவி இந்த ஓசையெல்லாம் கலையா? ஒரு பெண் அழகே உருவமாக அமைந்தவள். மன்மதனுக்கு ஏற்ற ரதி. அவள் சௌந்தர்யம் மக்கள் எல்லோரையும் வசீகரிக்கிறது. அவள் மனிதனது அழகுணர்ச்சியைத் தூண்டுகிறாள். உள்ளத்திற்கு ஓர் ஆனந்தத்தைக் கொடுக்கிறாள். அப்படியானால் அந்தப் பெண் கலையா? எல்லாக் கேள்விக்கும் ஒரே பதில். இவை எல்லாம் கலை அல்ல என்பதுதான். ஏன்? இவையெல்லாம் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டவை.

இறைவனது அருளைத் துணைகொண்டு மனிதன் தனது கற்பனையினால் சிருஷ்டிப்பதுதான் கலை. கலை என்பது கற்பனை சிருஷ்டி. கலை மனிதனுடைய அநுபவத்தின் மொழிபெயர்ப்பு என்று கூறலாம். மனிதன் ஜீவிப்பதே சிந்தனை செய்யத்தான். நான் சிந்திக்கிறேன். அதனால் நான் ஜீவிக்கிறேன் என்பதுதான் டேகாட் என்ற பிரஞ்சுத் தத்துவ ஞானி கண்ட உண்மை. மனிதன் தன் அறிவாற்றலால் ஆலோசிக்கும் காரியங்கள், உணர்ச்சிப் பெருக்கால் அவன் உள்ளத்தில் எழுகின்ற சிந்தனைகள் எல்லாம் விண் பார்க்கின்றன? ஆராய்ந்து பார்த்ததற்கும் இயலாத தத்துவங் களுக்குள்ளும் நுழைந்து எல்லா இடத்தும் பறந்து நிற்கும் இறைவனையும் கூட எட்டிப் பார்த்து விடுகின்றன. சிந்தனை செய்கிற மனிதன் தன் சிறுமையை மறந்து விடுகிறான். கற்பனா சக்தியாகிய புஷ்பக விமானத்தில் ஏறி ஆகாய வீதிகளில் சஞ்சரிக்க ஆரம்பித்து விடுகிறான். இந்த விதமாகச் சிந்தனையில் பிறக்கின்ற கற்பனா சிருஷ்டியை, சப்த சித்திரத்திலும், வர்ணப் பூச்சுக்களிலும், கல்லுருவங்களிலும் பரிணமிக்கும்படி செய்கிறவன் எவனோ அவனே கவிஞன். அவனே சித்திரக்காரன். அவனே சிற்பி. அவர்களது சிருஷ்டியே கலை. கலை உண்மைக்கும் உலகியலுக்கும் மாறுபட்டதல்ல. உலகியலில் காணுகின்ற உண்மையை எடுத்துக்காட்டி மக்கள் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை ஓர் உன்னத நிலைக்கு உயர்த்துகிற திறம் படைத்ததுதான் கலை.

சூரிய உதயம் கலை அல்ல என்று கண்டோம். ஆனால் அதே சூரிய உதயத்தை,

**தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கி**
**எங்கும் பரப்பிய தோர் இங்கிதமோ**

என்று ஒரு கவிஞன் கற்பனா சக்தியால் சப்த ஜாலத்தில் அமைத்துக் காட்டினால் அந்தச் சிருஷ்டி கலையாகிவிடுகிறது. திருக்குற்றால மலையும், அருவியும் கலையல்ல. ஆனால்

அங்கு நாம் காணும் மலைகளையும், மரங்களையும் மணிக்கற்பாறைகளையும், தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகுவதையும் ஒரு சித்திரக்காரன் ஒரு பலகையில் வர்ணங்களைக் குழைத்துப் பூசிச் சித்தரித்து விடுவானேயானால் அது கலையாகிவிடுகிறது.

**ஓங்கு மரன் ஓங்கி மலை ஓங்கி மணல் ஓங்கி,**
**பூங்குலை குலாவுகுளிர் சோலை புடை விம்மத்**
**தூங்குதிரை ஆறுதவழ் சூழலதோர் குன்று.**

என்ற சொற் சித்திரம் எவ்வளவு அழகாக இருக்கிறது. ஓர் அழகிய பெண் கலையல்ல தான். ஆனால் அந்தப் பெண்ணுருவை சௌந்தர்ய தேவதையை, ஒரு சிற்பி தன் கற்பனைத் திறன் முழுவதையும் காட்டி, தன் சிற்றுளியால் செதுக்கி நிறுத்தி விடுவானேயானால், அந்தச் சிலை கலையாகிவிடுகிறது. ஆகவே, மனிதன் தன் கற்பனா சக்தியால் சிருஷ்டித்து, அப்படிச் சிருஷ்டிக்கப்பட்ட பொருளைப் பிறர் உணர்ந்து அது அனுபவிக்கத்தக்க விதமாகச் சொல்லிலோ, இசையிலோ, ஆட்டத்திலோ, சித்திரத்திலோ, அல்லது கல்லிலோ காட்டி விடுவானேயானால் அது கலையாகி விடுகிறது. Art is to be imagined first and then made manifest through the medium of visible materials, visible movements, audible sounds, and perceptible smells என்ற ஆங்கில விளக்கம் இந்தக் கொள்கைக்கு அரண் செய்கின்றது.

சரி இனி கம்பனைப் பார்க்கலாம். கம்பனுடைய காவியம் இமயமலையைப் போன்ற ஒரு கம்பீரமான காவிய மாளிகை. கம்பன் அந்தக் காவிய மாளிகையையும் அந்தக் காவிய மாளிகையில் நடமாடும் பாத்திரங்களையும், எத்தகைய கலையழகோடு சிருஷ்டித்திருக்கிறான் என்பதை எண்ணும் போது, கம்பன் கலை உணர்ச்சியின் வேகம் நமக்குப் புலப்படுகின்றது. இராமகாதையிலே வரும் பாத்திரங்களில்

எல்லாம் அதிமுக்கியமான பாத்திரமான சீதாதேவியை கம்பன் எப்படிச் சித்தரித்திருக்கிறான் என்று பார்ப்போம்.

ஜனகன் மகள் ஜானகி மிதிலையில் அவதரிக்கிறாள். பொன்னின் ஜோதி, போதினில் நாற்றம், தென்னுண்தேனின் தீஞ்சுவை, செந்சொற் கவி இன்பம் எல்லாம் திரண்டு உருவெடுத்தவளாக அவள் இயங்குகின்றாள். அவள் ரூப சௌந்தர்யத்தின் எல்லை காணுகின்றாள்.

**கணங் குழையாள் எழுந்ததற் பின்**
**கதிர் வானிற் கங்கை யெனும்**
**அணங்கு இழியப் பொலிவிழந்த**
**ஆறெத்தார் வேறுற்றார்**

என்று பாராட்டப்படுகின்றாள். இளமை நலமெல்லாம் நிறைந்து விளங்கும் பேதைதான் அவள். அந்த நிலையிலே தான் கன்னி மாடத்திலிருந்து தெருவூடே செல்லும் இராமனைக் காண்கின்றாள். காதல் கொள்ளுகிறாள். வில்லொடித்த வீரன் என்பதற்காக இராமனை மணக்க அவள் இசைகின்றாள் இல்லை. தான் முன்னர் கண்டு காதலித்த தலைவனே என்று ஐயமற உணர்ந்த பின் தான் அவனை மணக்க இசைகின்றாள். இளமை உள்ளந்தான் எனினும் அதில் உறுதியும் உறைந்து கிடக்கின்றது. இவள்தான் நாம் மிதிலையில் காணுகின்ற சீதை.

பின்னர் அயோத்தியில், சக்கரவர்த்தியின் மருமகளாய், அண்ணல் வெஞ்சிலைக் குரிசிலாகிய இராமனை இணைபிரியாது பெண்ணின் இன்னமுது அன்னவளாகிய சீதை வாழ்கின்றாள். இராமன் தாயுரை கொண்டு தாதை உதவிய தாணி தன்னை நீத்துக் கானாளப் புறப்பட்ட போதும், நாயகன் வனம் நண்ணலுற்றான் என்றும் மேயமண் இழந்தான் என்றும் விம்மலள் அவள். அவன் நீ வருந்தாதே, இங்கேயே இரு என்று சொன்ன தீய வெஞ்சொல்தான் அவளைச் சுட்டு

வருத்துகின்றது. கல்லரக்கும் கடுமைய அல்லநின் சில்லரக் குண்ட சேவடிப் போது - என்று செல்லும் வழியின் கஷ்டத்தையெல்லாம் இராமன் பன்னிப் பன்னி எடுத்துரைத்தாலும் நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்பதுதான் அவள் பதிலாக நிற்கின்றது. இராமனும் பின்னர் ஒன்றும் செய்ய இயலாதவனாய், தையல் தன் கற்பையே துணையெனக் கொண்டு காட்டிற்குச் செல்கின்றான். இது நாம் அயோத்தியில் காணுகின்ற சீதை. சீதையின் ரூப சௌந்தர்யமும் குண சௌந்தர்யமும் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன.

கானகத்திற்குத் தன் தலைவனான இராமனுடன் போவதில்தான் எவ்வளவு உத்ஸாகம் அவளுக்கு. பாலுடை மொழியாளும் பகலவன் அனையானும், சேலுடை நெடு நன்னீர் சிந்தி விளையாடிப் போகும் காட்சியைக் காணும்போது சீதை காட்டுக்குப் போகிறோமே என்று அஞ்சியவளாகவா இருக்கிறாள்? சித்திரக் கூடத்திலே இலக்குவன் கட்டிய பர்ணசாலையில் சீதைக்கு ஓர் அந்தப்புரமும் அமைக்கிறான். சித்திரக்கூடத்திலும் பின்னர்ப் பஞ்சவடியிலும் சீதை தன் நாயகனுடன் உறையும் ஆனந்தத்திலேயே முழுகி இருக்கிறாள்.

**ஓதிமம் ஒதுங்கக்கண்ட உத்தமன் உழையள் ஆகும்**
**சீதை தன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்கிறான்**
**மாதவள் தானும் ஆங்கு வந்து நீர் உண்டு மீளும்**
**போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூக்கறாள.**

இதுதான் அவர்களுடைய மகிழ்ச்சியான வாழ்க்கையின் எல்லையாகிவிடுகிறது. இவள் தண்டகாரண்யத்தில் நாம் காணும் சீதை.

இலக்குவன் கட்டிய பர்ணசாலை, அந்தப் பர்ணசாலை கட்டியிருந்த இடம் - எல்லாவற்றையுமே பெயர்த்தெடுத்து

இராவணன் சீதையைத் தூக்கிச் செல்கிறான். இலங்கை நகரிலே, அசோகவனத்திலே சிறை வைக்கிறான். இங்கே சிறையிருக்கும் செல்வியாகிய சீதையின் சௌந்தர்யம் சுடச்சுட ஒளிரும் பொன்னேபோல் மேலும் மேலும் பிரகாசிக்கின்றது. ரூப சௌந்தர்யத்தின் எல்லையாக நின்ற அவள் குண சௌந்தர்யத்தின் எல்லையாகவும் நமக்குக் காட்சி அளிக்கிறாள்.

**ஆவி அந்துகில் புனைவதொன் றன்றி வேறு அறியாள்**
**தூவி யன்னமென் புனலிடைத் தோய்கிலா மெய்யாள்**
**தேவு தெண்கடல் அமுது கொண்டு அனங்கவேள் செய்த**
**ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள்**

என்று தீட்டும் சோகச் சித்திரத்தில் அவளுடைய ரூப சௌந்தர்யம் குறையத்தான் செய்கிறது.

**அருந்து மெல்லடகு யாரிட அருந்துமென்று அழுங்கும்**
**விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்**
**மருந்து முண்டுகொல் யான் கொண்ட நோய்க்கு என மயங்கும்**

என்ற புலம்பும் நிலையில் சீதையின் குண சௌந்தர்யம் உச்ச ஸ்தானத்தையே அடைகிறது. இந்த நிலையில்தான் இராமதூதனாகிய அநுமன் வந்து சீதையைக் காண்கின்றான். ஆழி கொடுத்து ஆற்றுகின்றான். திரும்பிச் சென்றுதான் சீதையைக் கண்டு களித்ததை இராமனிடம் கூறுகின்றான்.

**விற்பெருந் தடந்தோள் வீர வீங்கு நீர் இலங்கை வெற்பில்**
**நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்**
**இற்பிறப்பு என்ப தொன்றும் இரும்பொறை என்பதொன்றும்**
**கற்பெனும் பெயரெதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்**

என்று அவன் தான் கண்ட காட்சியை வர்ணிக்கின்றான்.

**உன் பெருந் தேவி என்னும் உரிமைக்கும், உன்னைப் பெற்ற**
**மன் பெரும் மருகி என்னும் வாய்மைக்கும், மிதிலை மன்னன்**
**தன் பெரும் தநயை என்னும் தகைமைக்கும் தலைமை சான்றாள்**
**என் பெருந்தெய்வம் ஐயா!**

என்று வாயாரப் பாடி நாவாரத் துதித்து, சீதையை ஒரு சௌந்தர்ய தேவதையாகவே ஆக்கிவிடுகிறான். சௌந்தர்ய தேவதையை அத்துடன்விட்டானா அவன்? அவளுக்கு அழகான கோயிலையும் கட்டிக் கொடுத்து, அதில் அந்தத் தேவதையைப் பிரதிஷ்டை செய்துவிட்டான். ஆழியாகிய அகழி, இலங்கையாகிய மதில், அதனுள் அசோகவனமாகிய கோயில், கோயிலுள், இலக்குவன் கட்டிய பர்ணசாலையாகிய கர்ப்பக்கிருகம். அதனுள் தவமும் தவஞ்செய்து பெற்ற சௌந்தர்ய தேவதை கோயில் கொள்ளுகிறாள்.

**"வேலையுள் இலங்கை என்னும் விரிநகர் ஒருசார், விண்தோய்**
**காலையும் மாலைதானும் இல்லதோர் கனகக் கற்பச்**
**சோலை, அங்கு அதனுள் உம்பி புல்லினால தொடுத்த தூய**
**சாலையுள் இருந்தாள் ஐய, தவம் செய்த தவமாம் தையல்"**

என்று கம்பர் சௌந்தர்ய தேவதைக்குக் கட்டிக்கொடுக்கும் கலைக்கோயிலையும், ராஜராஜன் பெருவுடையாருக்குக் கட்டிக்கொடுத்திருக்கும் கலைக் கோயிலையும் ஒப்பிட்டு நோக்கினால் அவற்றின் ஒப்புமை தெரியும். இல்லாவிட்டால் முந்தையோர், செய்யுள் போல் செய்த திருக்கோயில் என்று தெரியாமலா பாடி வைத்தார்கள்?

கம்பன் பாட்டைப் படித்து ராஜராஜன் கோயிலைக் கட்டினானா? அல்லது ராஜராஜன் கலைக்கோயிலைப் பார்த்துக் கம்பன் கவி அமைத்தானா? அதை ஆராய்ச்சி செய்ய வேண்டியவர்கள் சரித்திர ஆசிரியர்கள். கம்பனையும் கலையையும் நாம் அனுபவித்தால் போதும். ராஜராஜன் கோயிலையோ அல்லது அதனுள் கோயில் கொண்டிருக்கும் பெருவுடையாரையோ கண்டு தமிழர் பலர் தலை வணங்காமல் இருக்கலாம். ஆனால் இந்த அரிய கலைக்கோயிலை அமைத்த தெய்வத் தச்சன், மகாகவி கம்பன் சந்நிதியிலே தமிழர் எல்லோரும் தலைதாழ்த்தித்தான் நிற்கிறோம்.

# 4 கம்பன் கண்ட ராமன்

## அந்தம் இல் அழகன் - இராமன்

மங்கியதோர் நிலவினிலே
  கனவில் இதுகண்டேன்,
வயது பதினாறு இருக்கும்
  இளவயது மங்கை
பொங்கிவரும் பெரு நிலவு
  போற்ற வருந் தோற்றம்
துங்கமணி மின் போலும்
  வடிவத்தாள் வந்து
'தூங்காதே எழுந்து என்னைப்
  பார்' என்று சொன்னாள்.
அங்கு அதனில் கண் விழித்தேன்
  அடடாவோ! அடடா!
அழகென்னும் தெய்வம்தான்
  அது என்றே கண்டேன்.

என்று தன் அழகுத் தெய்வ தரிசனத்தைக் கூறுகிறான் பாரதி. அழகுத் தெய்வம் அவனுக்குப் பதினாறு வயது நிரம்பிய இளவயது மங்கையாகக் காட்சி கொடுத்திருக்கிறது. உண்மையிலேயே அழகுத் தெய்வம் பெண்மை உருவினதுதானா? ஆண்மையில் அழகே இல்லையா?

ஆண்மையின் அழகைப் பெண்மையின் அழகு வென்று விடுகிறது என்று அர்த்தமா? பெண்ணே அழகுடையவள் என்று சொன்ன பெருமக்கள், கவிஞர்கள், கலைஞர்கள் எல்லாம் ஆண்மக்களே அல்லவா? பறவை இனத்தை எடுத்துக் கொண்டால், சேவல் கோழியைவிட அழகுடையதாக இருக்கிறது; ஆண் மயில் பெண் மயிலை விட அழகு வாய்ந்தது என்பதை மறுப்பவர் இல்லை. அதுபோலவே, மிருக உலகிலும், பசுவை விடக் காளையும், பெண் சிங்கத்தை விட ஆண் சிங்கமும் அழகுடையதாய் இருக்க, இந்த மக்கள் இனத்திலே மட்டும், பெண் எப்படி ஆணை விட அழகாய் இருந்துவிட முடியுமா? இது நியாயமான கேள்வி. ஆடவர் தங்கள் பலவீனத்தை மறைக்கவே இப்படி பெண்ணின் அழகை மிகைப்படுத்திக் கூறி இருக்கிறார்கள். இந்த ஆண்களில் ஒரு சிலராவது நெஞ்சில் உரம் உள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். 'பெண்ணின் அழகெல்லாம் எண்ணிப் பிரித்திடில் பீழை சதை என்றே கண்டிடுவோம்; வண்ண மலரிடை வாய்ந்த வனப்பெலாம் வாடி வதங்குதல் யாமறிவோம்' என்று ஒரு இளங்கவிஞர் துணிந்து கூறி ஆண்களின் மானத்தையே காத்திருக்கிறார்.

இன்னும் அழகு ஆராய்ச்சியில் பலர் செய்கிற தவறு ஒன்று. 'ராஜா மக்கள் ரோஜா மலர் நிறம்' என்பர். சிவந்த நிறம் உடையவர்களே அழகு உள்ளவர்கள், கருப்பு நிறம் என்றால் அழகே இல்லாதவர்கள் என்பதுதான் பொதுஜன அபிப்பிராயம். இதிலே கூட அழகை ஆராதனை பண்ணுகிறவர்கள் தவறுதான் செய்கிறார்கள். மஞ்சள் கலந்த சிவப்பு கொஞ்சம் கவர்ச்சி உடையதே. அதற்காக செம்மேனி எம்மானையோ வெள்ளை வெளேரென்ற வெள்ளை நிறத்தவரையோ அழகுடையவர்கள் என்று சொல்லிவிடுதல் முற்றிலும் தவறு. குளிர்ச்சியில் ஒரு ருசி என்று கண்டவனே கருப்பில் ஒரு அழகு என்றும் சொல்லி மகிழ்ந்திருக்கிறான்.

நாம் வணங்கும் தேவர்கள் உலகிலே, பச்சைப் பசுங்கொடி அந்த கருப்பில் அழகி உமை, சிவந்த லக்ஷ்மியின் அழகுக்கோ அல்ல வெள்ளை நிறத்து கலைமகள் அழகிற்கோ கொஞ்சமும் குறைந்தவள் அல்லவே. விஷ்ணுவின் நீலமேக சியாமள நிறத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டாம். ஆணழகன் அருச்சுனனும், காதற் கடவுள் காமனும் நல்ல கருத்த நிறத்தினரே. இவர்கள் எல்லாம் அழகிற்கே எடுத்துக்காட்டாக விளங்கியவர் ஆயிற்றே. அப்படியிருக்க, கருப்பைவிடச் சிவப்பு அழகு என்று கலா ரசிகர்கள் சொன்னால் அவர்களது ரசிகத் தன்மையை என்ன என்று சொல்வது?

இந்தப் பிரச்சனைகளுக்கு எல்லாம் ஒரு முடிந்த முடிவை நிலைநிற்கச் செய்கிறான் காவிய நாயகனான ராமன். வான்மீகர், ராமனது அழகில் எப்படி ஈடுபட்டாரோ? மூலத்தைப் படித்துப் பார்க்கும் வாய்ப்பு இல்லாததினால் கூறுவதற்கில்லை. ஆனால் கவிச்சக்கரவர்த்தி கம்பன் இருக்கிறானே அவன் ராம செளந்தர்யத்தில் அப்படியே ஈடுபட்டு மெய் மறக்கிறான். ‘அல்லையாண்டு அமைந்த மேனி அழகன்’ என்று அந்த அழகனை நிறைந்த பெருமையோடேயே குறிப்பிடுகிறான். அதிலும் அவனது கரிய நிறத்தையே பாராட்டி நல்ல இருட்டைப் போலக் கரிய நிறத்தவன் என்றே கூறுகிறான். இந்த ‘இருங்கடக் கரதலத்து எழுதரிய திருமேனிக் கருங்கடலை’ மனதிற்கும் எழுத ஒண்ணாச் சீதை கன்னிமாடத் திருந்து கண்டு காதல் கொள்கிறாள் என்பது கம்பன் சொல்லும் கதை. இந்த அழகனது அழகைத் தான் சீதை எப்படி அனுபவித்திருக்கிறாள். அதைக் கவிஞன் தானே சொல்ல வேண்டும். சொல்கிறான்; அழகு ஒழுகும் தமிழ்ப்பாட்டிலே

**இந்திர நீலம் ஒத்து**
**இருண்ட குஞ்சியும்,**
**சந்திர வதனமும்**
**தாழ்ந்த கைகளும்,**

**சுந்தர மணிவரைத்**
**தோளுமே, அல;**
**முந்தி என் உயிரை**
**அம்முறுவல் உண்டதே**

என்பதுதானே சீதையின் கூற்றாகக் கம்பன் சொல்வது. காதலுற்ற கன்னி சீதை கண்வழி நுழைந்த கள்வனாம் ராமனது அழகில் ஈடுபட்டு நின்றது வியப்பில்லை. பின்னர் ராமன் மிதிலை நகரிலே உலாவந்தபோது, வீதி வீதியாய் வீடுகளில் உள்ள பெண்கள் எல்லாம் தலைவாயிலுக்கு ஓடி வந்து ராமனைக் காணுகிறார்கள். ராமனது அழகு அவர்களை எப்படி வசீகரிக்கிறது? சிலர் அவன் தோளைப் பார்த்தார்கள்; சிலர் தாளைப் பார்த்தார்கள்; தோளைப் பார்த்தவர்கள் தோளில் பதிந்த பார்வையை வேறு திருப்ப முடியாது தவித்தார்கள். தாளைப் பார்த்தவர்களும் தடக்கையைப் பார்த்தவர்களும் அப்படி அப்படியே. இப்படியே ஒருவராலும் அவனது வடிவம் முழுவதையும் கண்டுகளிக்க முடியாமலே போய் விடுகிறது. ஒவ்வொரு அங்கமுமே அத்தனை வசீகரம் என்றால், முழுவடிவினையும் எப்படி என்று சொல்ல?

**தோள் கண்டார் தோளே கண்டார்;**
**தொடுகழல கமலம் அன்ன**
**தாள் கண்டார் தாளே கண்டார்;**
**தடக்கை கண்டாரும் அஃதே;**
**வாள் கொண்ட கண்ணார் யாரே**
**வடிவினை முடியக் கண்டார்?**
**ஊழ் கொண்ட சமயத்து அன்னான்**
**உருவு கண்டாரை ஒத்தார்**

என்பது பிரபலமான பாட்டாயிற்றே. அடடே; இந்த சௌந்தர்ய ஈடுபாட்டை வைத்துக்கொண்டு, சமயவாதிகள் ஒவ்வொருவரும் இறைவனது திருஉருவில், ஒவ்வொரு அம்சத்தையே காண்கிறார்கள் என்ற அற்புத உண்மையைக் கூட அல்லவா கவிச்சக்கரவர்த்தி எளிதாக விளக்கிவிடுகிறான்.

சீதையும் இராமனும் காதலித்துக் களிக்கும் வாழ்வில்தான் எத்தனை அழகு? அவர்களது அழகுடைய வாழ்க்கைக்கு மிதிலா நகரமோ, அல்லது அயோத்திப் பட்டணமோ, இல்லை அங்குள்ள அரச மாளிகைகள் தான் வேண்டும் என்றில்லை. கங்கையிலே, தோணியிலே ஏறிச் சென்றாலும் சரி, தண்டகாரண்யத்திலே கோதாவரிக் கரையானாலும் சரி, அழகனும் அழகியும் குதூகலமாகவே இருக்கிறார்கள். படகில் செல்லும்போதோ,

**பால் உடை மொழியாளும்**
**பகலவன் அனையானும்**
**சேல் உடை நெடுன்னீர்**
**சிந்தினர் விளையாடி**

என்பதுதான் காட்சி. இன்னும் கோதாவரிக் கரையிலே ஓதிமம் ஒதுங்கக் கண்டால், பக்கத்தில் உள்ள சீதையின் நடையோடு, அன்னத்தின் நடையை ஒப்பிட்டு, அன்ன நடை சீதையின் நடைக்குத் தோற்கிறதே என்று சிறுநகை செய்கிறான் ராமனும். சீதையோ, அங்கு வந்து நீருண்டு மீளும் யானைக்குட்டி நடப்பதைத் தன் கணவன் நடையோடு ஒப்பிட்டு, யானையின் நடையையும் விஞ்சுகின்றதே தன் காதலன் நடை என்று பெருமிதம் அடைந்து, புதியதோர் முறுவலே பூக்கிறாள். இப்படியே இன்னும் எத்தனையோ காட்சிகள் காவியம் முழுவதும்.

பெற்ற தந்தையாம் தயரதனோ, அன்னையரோ, இல்லை வில்வித்தை பயிற்றிய விஸ்வாமித்திரனோ ராமனது அழகில் ஈடுபட்டு நிற்பது வியப்பில்லை. கிஷ்கிந்தையை அடுத்த மலையிலே ஒழிந்திருந்த வானர வீரன் சுக்ரீவன் கூட, அந்த குண்டலம் துறந்த கோலத்திலும் குளிர்ந்த கண்களின் அழகிலும் ஈடுபட்டு நிற்கிறானே. அடடே, புயல் தழுவிய மரகத மலை போன்ற அந்தத் தோள்களின் பேரிலே மதி தவழும் முகமாகிய புண்டரீகங்கள் அல்லவா பூத்துக் குலுங்குகின்றன

என்றே அதிசயிக்கிறான் அவன். இராமனது சௌந்தர்யத்திலே குகன் ஈடுபடுகிறான், அனுமன் ஈடுபடுகிறான், விபீஷணன் ஈடுபடுகிறான், என்றெல்லாம் எத்தனையோ சான்றுகள். எல்லாவற்றையும் விட, அந்த காமவல்லியாம் சூர்ப்பனகை ஈடுபடுகிறாளே அதை என்ன என்று சொல்ல? பஞ்சவடியிலே பன்னக சாலையிலே இருக்கின்ற ராமனைக் காண்கின்ற சூர்ப்பனகை இவன் என்ன மன்மதனா? ஆம், அன்று கற்றைவார் சடையவன் கண்ணில் எழுந்த தீயினால் வெந்த அநங்கன், எத்தனையோ வருஷ காலம் தவம் செய்து இந்த நல்ல உருவைப் பெற்றிருக்க வேண்டும் என்பதே அவளது தீர்மானம். அவனது மணிக்கரம், வீரத்தோள் எல்லாம் கிடக்கட்டும் அவனது அகன்ற மார்பு இருக்கிறதே அதை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் பார்க்க கண்களுக்கு நீளம் போதாது போல் இருக்கிறதே என்று வேறே ஐயுறுகிறாள். கடைசியில் அந்த அழகன் வாள் முகம் பொதி அவிழ் தாமரைப் பூவை ஒத்ததா? இல்லை மதியை ஒத்ததா என்றெல்லாம் தீர்மானிக்க முடியாமல் தத்தளிக்கிறாள். இத்தனை அழகை இவன் பெறத் தவமே தவம் செய்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறாள். இம்மட்டோ பின்னர் சீதையையும் இராமனையும் சேர்த்துப் பார்த்த பின் 'இரு திறத்தார்க்கும் செய்த வரம்பு இவ்விருவர்' என்றே அவர்களது அழகை அனுபவிக்கிறாள். இப்படி எல்லாம் ராமனது அழகை அனுபவித்த சூர்ப்பனகை, இலங்கைக்கே ஓடி இராவணனிடம் தன் மூக்கு அறுபட்ட கதையைச் சொல்கிறாள். சீதையின் அழகை வர்ணிப்பதற்கு முன்பே, யாவர்க்கும் எழுத ஒண்ணாத ராமனை வர்ணிக்கிறாள். கடைசியில் விரகதாபத்தால் வெந்து கொண்டிருக்கும் ராவணன், தன் உரு வெளித்தோற்றத்தில் கண்ட சீதை தானா அவள் சொன்ன சீதை என்று சூர்ப்பனகையிடம் கேட்க, அவள் ராமனையே அவளது உரு வெளித்தோற்றத்தில் கண்டு. ஆம் அவனே,

**செந்தாமரைக் கண்ணொடும்,**
**செங்கனி வாயினோடும்,**
**சந்து ஆர்தடந் தோளொடும்,**
**தாழ் தடக்கைகளோடும்**
**அம்தார் அகலத் தோடும்**
**அஞ்சனக் குன்றம் என்ன**
**வந்தான் இவன் ஆகும்**
**அவ்வல் வில் இராமன்**

என்கிறாள். ராமனது அழகை எல்லோரையும் விட, நன்றாக அனுபவித்தவள் (கவிச் சக்கரவர்த்தி கம்பன் சொற்படி) சூர்ப்பனகை என்று சொன்னால் வியப்பில்லைதான்.

இந்த கருநிறக் கமலக் கண்ணன் போர் செய்யப் புறப்பட்டாலும் அதிலுமே ஒரு அழகு. 'சரன் படர் புட்டில் கட்டி, சாபமும் தரித்து, தள்ளா உரன்படர் தோளில் மீளாக் கவசம் இட்டு, உடைவாள் ஈர்த்து' அவன் போருக்கு எழும் காட்சியும் அழகாகவே இருக்கிறது. இப்படியே இருந்தால், எழுந்தால், நடந்தால், கிடந்தால் எல்லாம் ராம சௌந்தர்யம் வளர்ந்துகொண்டே போகிறது. இன்னும், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் எல்லோருமே ராமனது அழகில் ஈடுபட்டு நிற்கிறார்கள். இப்படி ஒரு ராமனை, அந்தமில் அழகனை உருவாக்கிய கம்பன் கடைசியில் தானுமே அவன் அழகில் ஈடுபட்டு மெய்மறக்கிறான். 'ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தான்' என்பான் ஒருதரம். ஆடவரும் பெண்மையை அவாவுவர் அவன் தோள்களை அணைய என்பான் மறுதரம். இதனால் எல்லாம் திருப்தி அடையாது

**வெய்யோன் ஒளிதன் மேனியின்**
**விரி சோதியின் மறைய**
**பொய்யோ எனும் இடையாளொடும்**
**இளையானொடும் போனான்**
**மையோ! மரகதமோ! மழைமுகிலோ**
**ஐயோ! இவன் வடிவு என்பதுஓர்**
**அழியா அழகுடையான்**

என்றே முடிப்பான். அவன் அழியா அழகினை அழியாக் காவியத்திலேயே நிலைநிறுத்திவிடுகிறான் கம்பன். அந்த அழகை ஆராதனை பண்ணிப் பண்ணியே காவியம் வளர்கிறது, விரிகிறது, உயர்கிறது என்று சொன்னால் அது மிகையே அல்ல.

## விற்பெரும் தடந்தோள் வீரன் – ராமன்

தமிழர்களது வீரம் பிரசித்தமானது. இன்றைய தமிழர்களை, நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமும் இன்றி நிற்கும் தமிழர்களைச் சொல்லவில்லை. பழைய சங்க காலத்திய தமிழர்களைத் தான் சொல்கிறேன். சேர சோழ பாண்டிய பல்லவ மன்னர்களின் வீரப் பிரதாபங்களும் மெய்க் கீர்த்திகளுமோ அனந்தம். இந்த அரசர் பெருமக்கள் எல்லாம் எப்படிச் சிறந்த வீரர்கள் ஆனார்கள்? நல்ல வீரர்களைத் தங்கள் படை வீரர்களாகவும், படைத்தலைவர்களாகவும் வைத்திருந்ததினாலே அல்லவா? பரணி பாடிய ஜயங்கொண்டார் நமக்கு ஒரு வீர மனைவியை, அவள் மூலமாக ஒரு வீர புருஷனையே நமக்கு அறிமுகப்படுத்துகிறார். போருக்குச் சென்ற தலைவன் போரில் விழுந்துவிடுகிறான். அவனது உடலைத் தேடி ஓடுகிறாள் மனைவி. அவள் எதைத் தேடுகிறாள்?

**பொருதடக்கை வாள் எங்கே?**
**மணிமார்பு எங்கே?**
**போர்முகத்தில் எவர் வரினும்**
**புறங்கொடாத பருவயிரத்**
**தோள் எங்கே? எங்கே?**

என்று கேட்டுக்கொண்டே ஓடும் வீரப்பெண்ணை நினைக்கும்போது, அவள் புருஷன் எத்தனை வீரனாக இருக்க வேண்டும் என்றே நினைக்கத் தோன்றுகிறது. வீர மனைவியை மாத்திரமா பார்க்கிறோம் வீரத் தாயாரையுமே பார்க்கிறோம் போர்க்களங்களில். நரம்பு எழுந்து உலறிய பழுத்த கிழவி

ஒருத்தி போருக்குச் சென்றிருந்த தன் மகன் அங்கே விழுந்து விட்டான் என்று கேட்டு, மகனைத் தேடிச் செல்கிறாள் போர்க்களத்திற்கு. வாளேந்திச் செல்லும் அவளது ஆதங்கம் எல்லாம் அவன் எப்படி இறந்தான் என்று அறிவதிலேதான். மார்பிலே வேலை ஏற்றா அல்லது முதுகிலே புண்பட்டா? என்பதே அவளது கேள்வி. போர்க்களத்தைச் சுற்றிவந்து தன் மகன் மார்பிலே விழுப்புண் பெற்றே மடிந்து வீழ்ந்திருக்கிறான் என்று அறிந்தபோது, அவனை ஈன்றபொழுதில் பெற்ற மகிழ்ச்சியைவிட பெரிய மகிழ்ச்சியே அடைகிறாள். இவள் வீரத்தாய். நல்ல தமிழ் மகள். இத்தகைய வீர மனைவியரை, வீரத் தாயரைப் பெற்றிருந்தது அன்றைய தமிழகம் என்றால் அர்த்தம் என்ன; நாடு முழுவதும் நல்ல வீரர்கள் நிரம்பி இருந்தார்கள் என்பதுதானே.

இப்படி வீரர்கள் நிறைந்த நாட்டிலே பிறந்த வீரக் கவிஞன் ஒரு வீர காவியம் எழுதுகிறான். காவிய நாயகனோ வீர மரபிலேயே வந்தவன், வீர மன்னனின் மகன், ஏன் கோதண்டம் ஏந்திய கையன். அவனைப் பற்றி அவன் வீரத்தைப் பற்றியே காவியம் முழுவதும் எழுதித் தீர்க்கிறான். எண்ணிக்கையிலும் ஆற்றலிலும் மிகுந்த அரக்கரது பலமே முன்னிற்கிறது. ராமன் வில்லேந்தி தன்னந் தனியனாய் அவர்கள் முன் நிற்கிறான். அவன் வில்லின் நாணை வளைக்கிறான், சரங்கள் பாய்கின்றன. வில்லில் கட்டிய மணிகள் ஒலிக்கின்றன. அந்த ஒலியைக் கேட்கிறான் கவிஞன். வில்லின் ஆற்றலைச் சொல்கிறான் காவியத்திலே

**படுமத கரிபரி சிந்தின;**
**பனிவரை இரதம் அவிந்தன;**
**விடுபடை திசைகள் பிளந்தன;**
**விரிகடல் அலறது எழுந்தன;**
**அடுபுலி அவுணர்தம் மங்கையர்**
**அலர்விழி அருவிகள் சிந்தின**
**கடுமணி நெடியவன் வெஞ்சிலை**
**கணகண, கணகண எனுந்தோறும்**

என்ற பாடலை இரண்டு மூன்று தடவைப் பாடித்தான் பாருங்களேன். வில்லின் மணியோசை கேட்கும் உங்கள் காதில் 'கணகண' என்று. வில்லேந்திய வீரனாம் ராமனை இப்படி இலங்கைப் போர்க்களத்திலே காட்டுகிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

ராமனது வீரம் எத்தகையது என்று தெரியப் போர்க்களத்திற்கே போகவேண்டாம். அயோத்தியிலே அரண்மனையிலேயே இருக்கட்டுமே, அங்குமே அவன் வீரனாகத்தான் வாழ்கிறான். அந்த இளவயதிலே அவனை விரும்பிக் கேட்டுப் பெறுகின்றார் விஸ்வாமித்திரர் தன் வேள்வி காக்க. அவருடன் புறப்படுகிறான் தம்பி இலக்குவன் உடன்வர.

**வென்றிவாள் புடை விசித்து**
**மெய்ம்மைபோல்**
**என்றும் தேய்வுறாத் தூணி**
**யாத்து, இரு**
**குன்றம்போல் உயர்**
**தோளில் கொற்றவில்**
**ஒன்று தாங்கி**

அவன் புறப்படுவதைச் சொல்கிற கம்பன் அப்படியே ஒரு வீரனை, இளைஞனான வீரனைத்தான் நம் கண் முன் கொணர்கிறான். விஸ்வாமித்திரர் வேள்வி காக்கிற நேரத்திலேயே அவன் முதற்போர் ஆரம்பித்து விடுகிறது. அந்தக் கன்னிப் போரில் காகுத்தனுக்கே வெற்றி. அதில் ராமனுக்கு மட்டும் ஒரு குறை. முதற்போரில் தன் எதிராளி ஒரு பெண்ணாய் அமைந்துவிட்டாளே என்று. தாடகை என்பவளையும் பெண்களின் வரிசையிலா சேர்ப்பது? பெண்ணுருவில் வந்த பெரும்பூதம் ஆயிற்றே. ஆதலால் குரு 'கொல்' என்ற உடனே வில்லை வளைக்கிறான். தாடகையின் சூலம் இற்று விழுகிறது. அவள் உடலில் சுடுசரம் பாய்ந்து வெளிவருகிறது. அவளும் விழுந்து மடிகிறாள். இப்படி ராமன் முதற்போரிலே வெற்றிபெற்றதை, பார்த்தவர்களிடம் எல்லாம்

சொல்லிச் சொல்லி மகிழ்கிறார் விஸ்வாமித்திரர். சீதையின் தந்தையாய ஜனகனிடத்து ராமனை அறிமுகப்படுத்தும் போது,

**அலைஉருவக் கடல் உருவத்து**
**ஆண்தகைதன் நீண்டு உயர்ந்த**
**நிலை உருவப் புயவலியை**
**நீஉருவ நோக்கு ஐயா!**
**உலைஉருவக் கனல உமிழ்கண்**
**தாடகைதன் உரம்உருவி**
**மலைஉருவி, மரம்உருவி**
**மண்உருவிற்று ஒருவாளி**

என்று எவ்வளவு கம்பீரமாகப் பெருமிதத்தோடு சொல்கிறார்.

சீதையை மணக்க நிபந்தனையாக அமைந்த அந்த அரனது வில்லை, எடுத்ததைப் பார்த்தனர் கூடி இருந்தவர், பின்னர் அது இற்றதையே கேட்டனர். எத்தனையோ வீரர்களால் அசைக்கவே முடியாத அந்த வில், இராமன் எடுத்து நாணேற்றுவதற்குள்ளே ஒடிந்தே விடுகிறது என்றால் எவ்வளவு வலியுடையவனாக அவன் இருந்திருக்க வேண்டும்? இது மட்டுந்தானா? பரசுராமன் ஏந்தி வந்த அந்த நாரணன் வலியன் ஆண்ட அந்த வெற்றி வில்லையுமே வளைத்து இதற்கு இலக்கம் தருக என்று பரசுராமனிடத்திலேயே கேட்க வேண்டும் என்றால் எவ்வளவு வீரனாக வாழ்ந்திருக்க வேண்டும். இந்த வீரம் அவன் கைகளில் மாத்திரம்தானா இருக்கிறது, அவன் நெஞ்சிலுமேதான் இருக்கிறது. இந்த வீரமே தண்டகாரண்யத்திலும், பின்னர் இலங்கையில் நடந்த போரிலும் துணைநின்று வெற்றியை ராமனுக்குத் தேடித் தந்திருக்கிறது.

பஞ்சவடியிலே நடக்கிறது ஒரு போர். அந்தப் போரிலோ, கரன் தூடணன் திரிசிரா என்ற வீரர்களை எல்லாம் 'வில்லொன்றால் கடிகை மூன்றில்' கொன்று குவித்து விடுகிறான். இந்த சுந்தரத் தனி வில்லியே பின்னர்

இலங்கையிலே, கும்பகர்ணனையும், இராவணனையும் முடிக்கிறான். மூல பலத்தையே நிர்மூலம் ஆக்குகிறான். இத்தனையையும் கவிஞன் எத்தனையோ தரம் எப்படி எப்படி எல்லாமோ சொல்லிச் சொல்லி மகிழ்கிறான்.

இதில் எல்லாம் விசேஷம் என்ன என்றால், குன்றாத வலியுடை அரக்கர் தலைவனாம் ராவணன் முதல் நாள் போரில், இராமனிடம் தோற்று, தார்அணி மவுலிபத்தையும், சங்கரன் கொடுத்த வாளையும் வீரத்தையும் களத்திலேயே விட்டு வெறுங்கையோடு இலங்கை புகுந்தவனே, ராமனது வீரத்தைப் புகழ்ந்து புகழ்ந்து போற்றுகிறான். 'அந்த ராமனால் செய்யமுடியாத காரியம் என்னதான் இருக்கிறது? மேருவைப் பிளக்க வேண்டுமா? விண்கடந்து ஏகவேண்டுமா? பாரினை உருவ வேண்டுமா? பெளவத்தைப் பருக வேண்டுமா? அத்தனையும் செய்யவல்லது அவன் விடும்சரங்கள். அவன் எப்படி வில்லை வளைக்கிறான், நாணேற்றுகின்றான், எப்படி அம்பை எய்கின்றான் என்பதை எல்லாம் யார் கண்டார்கள்? யார் அவன் செய்கை தேர்வார்' என்று தன் பாட்டனான மாலியவானிடமே சொல்லிச் சொல்லி ஆற்றாது நைகிறான். 'அடடா! அவன் வில்லினின்றும் எழும் பகழி இருக்கிறதே அதை என்ன சொல்ல' என்று அலறுகின்றவன் ஒரு கவிஞனாகவே ஆகிவிடுகின்றான்.

**நல்இயல் கவிஞர் நாவில்**
**பொருள் குறித்து அமர்ந்த நாமச்**
**சொல்என, செய்யுள் கொண்ட**
**தொடை என, தொடையை நீக்கி**
**எல்லையில் சென்றும் தீரா**
**இசை என, பழுது இலாத**
**பல் அலங்காரப் பண்பே**
**காகுத்தன் பகழி மாதோ!**

என்பதே அவனது பாராட்டு. வீரனை வியவாத வீரனும் உண்டோ என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இந்த

இராவணன் பாராட்டுக்களைக் கம்பன் கவியாக நாம் படிக்கிறபோது.

கடைசியில் இந்த வீரன் ராவணனது மார்பையே சல்லடைக் கண்களாகத் துளைத்து விடுகிறது ராமனது சரம். போர்க்களத்தில் விழுந்து உயிர் துறந்து கிடக்கிறான். அவன் மனைவி மண்டோதரி வந்து மேல் விழுந்து புரண்டு அழுகிறாள். அவன் உடலை, ராமனது அம்புகள் எப்படித் துளைத்திருக்கின்றன என்பதைப் பார்க்கிறாள். புலம்புகிறாள்,

**வெள் எருக்கம் சடைமுடியான்**
**வெற்பு எடுத்த திருமேனி**
**மேலும் கீழும்**
**எள் இருக்கும் இடம் இன்றி**
**உயிர் இருக்கும் இடம் நாடி**
**இழைத்த வாறோ!**
**கள் இருக்கும் மலர்க் கூந்தல்**
**ஜானகியை மனச் சிறையில்**
**கரந்த காதல்**
**உள் இருக்கும் எனக் கருதி**
**உடல் புகுந்து தடவியதோ**
**ஒருவன் வாளி**

என்பதுதானே அவள் தன் அங்கலாய்ப்பு. 'சொல் ஒன்றே, மனைவி ஒன்றே, அம்பும் ஒன்றே' என்ற புகழ் நிறுவிய வீரன் ராமனின் பெருமைகளைக் கவிஞனும் சொல்லிக் கொண்டே போகிறான். நானும் சொல்லிக்கொண்டே இருக்கலாம். முடிவு வேண்டுமே என்றுதான் நிறுத்தவேண்டியிருக்கிறது.

ஒரேயொரு ஐயம். 'ராவணாதியர் வதத்தை நிகழ்த்தி முடித்தது, ராமனது வீரம் மட்டுந்தானா? சீதைக்கு இந்த வெற்றியில் பங்கே இல்லையா? அவள் தன் கற்பு என்னும் கனலும் ராமனது அம்போடு சேர்ந்து அரக்கர்களைச் சுட்டெரிக்கவில்லையா? பஞ்சு எரி உற்றது போல, அரக்கர் எல்லாம், சீதையின் கற்பாகிய கனலில் அல்லவா வெந்து

மடிகிறார்கள். ஏன்? விபீஷணனே ராவணன் இறந்து வீழ்ந்ததும்,

**உண்ணாதே உயிர் உண்ணாது**
**ஒரு நஞ்சு ஜானகி எனும்**
**பெருநஞ்சு உன்னைக்**
**கண்ணாலே நோக்கவே**
**போக்கியதே உயிர் நீயும்**
**களப்பட்டாயே**

அண்ணாவோ! அண்ணாவோ! என்று அலறுகின்றானே. ஆதலால் ராமவீரத்திற்குத் துணை நின்றது சீதையின் கற்பும்கூடத்தான் என்றும் சொல்லலாமே' என்கிறார் ஆராய்ச்சி அறிஞர். சொல்லலாம்தான். ராமனிடம் அமைந்திருந்த வீரம், சீதையின் கற்பு காத்த வீரம். ஏன் அறம் நிலைநிறுத்திய வீரம் என்றெல்லாம் விரித்தாலும் வீரம் வீரம் தானே. ஆகவே, அந்த வீரம் விளைத்த வீரனுக்கே நமது அஞ்சலி.

## உத்தமபுருஷன் – இராமன்

வான்மீகி முனிவரைக் காண நாரதர் ஒருநாள் வருகிறார். சண்டைகளை ஆரம்பித்து வைப்பவரும் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பவரும் நாரதர்தானே. அதனால் நாரதரிடம் தன் சந்தேகங்கள் தீர வான்மீகர் கேட்கிறார். இந்த நிலவுலகத்திலே பிறந்தவர்களுள்ளே சிறந்த வீரியவான் யார்? சிறந்த குணவான் யார்? நல்ல தருமம் அறிந்தவன் யார்? நன்றி அறிதல் உள்ளவன் யார்? சத்தியமே உரைப்பவன் யார்? திடமான விரதம் உள்ளவன் யார்? என்று அடுக்கிக் கொண்டே போகிறார். நாரதர் அவரை இடைமறித்து இத்தனை கேள்விக்கும் பதில் ஒன்றுதான். வீரமும் குணங்களும் நிறைந்தவன் ராமன், சத்திய சந்தன் ராமன், தருமம் உணர்ந்தவன் ராமனே என்று கூறிவிடுகிறார். அத்தகைய சகல குண சம்பன்னனாகவே ராமன் உருவாகியிருக்கிறான்.

வான்மீகியின் ஆதிகாவியத்திலே சிறந்த புருஷனுக்கு இருக்கவேண்டிய குணங்கள் பதினாறு என்பர். அதில் முதன்மையாக இருக்கவேண்டியது சீலம் என்று சொல்லுவர். சீலம் என்றால் அரிய பண்பு. பெரிய நிலையில் உள்ளவர்கள், தன்னைவிடத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களிடத்து அன்பு காட்டி அவர்களையும் அரவணைத்துக் கொள்வதுதான். அந்தச் சீலம் நிரம்பியிருந்தவன் ராமன். சீலம் இன்னது என்று அருந்ததிக்கு அருளிய திருவாகிய சீதையை மணம் முடித்துக் கொண்டதனால் மட்டும் சீலவானாக அவன் அமையவில்லை. அது அவனுக்குக் கருவிலே வாய்த்த திரு. சக்கரவர்த்தி. திருமகனாகப் பிறந்து வளர்ந்தவன். இளவயதிலேயே, தெருவில் போவோர் வருவோர்களைச் சந்திக்கும்போதெல்லாம் அவர்கள் நலன் வினவுவான் என்பான் கம்பன்.

**எதிர் வரும் அவர்களை**
**எமை உடை இறைவன்**
**முதிர் தரு கருணையின்**
**முக மலர் ஒளிரா**
**எதுவினை? இடர் இலை?**
**இனிதின் நும் மனையும்?**
**மதி தரு குமரரும்**
**வலியர் கொல்?**

என்றெல்லாம் விசாரிப்பது கொஞ்சம் வயதுக்கு மூத்த செயலே என்றாலும் சீலம் நிறைந்தது என்பதை மறுக்க முடியாது. இதே சீலமே, பின்னர், கங்கைக் கரையில் உள்ள குகனிடத்தும், கிஷ்கிந்தையில் இருந்த சுக்ரீவனிடத்தும், இன்னும் தன்னோடு தொடர்பு கொள்ளும் எல்லாப் பாத்திரங்களிடத்தும். இப்படி அவன் நடந்து கொள்வதே அவனை ஓர் உத்தமபுருஷன் ஆக்குகிறது. குகனோ வேடன். அவன் செய்கின்ற காரியம் கங்கையைக் கடக்கத் தோணிவிடுதல். இதைத்தான் செய்கிறான் குகன், ராமன், இலக்குவன், சீதை மூவரும் கானகம் செல்லும் வழியில்

கங்கை கரைக்கு வந்தபொழுது. ஏதோ அன்பின் மிகுதியால், தராதரம் அறியாமலே 'தேன்உளது, தேனை உண்டு தேவரும் நுகர்தற்கு ஆம் ஊன் உளது, துணைநாயேம் உயிர் உளது, விளையாடக் கான் உளது, புனலாடக் கங்கையும் உளது, வேறு என்ன வேண்டும். இங்கேயே நீ இருந்துவிடு' என்று இராமனை மிக்கப் பரிவோடு வேண்டிக் கொள்கிறான். குகனது அன்பினை அறிந்த ராமன் அப்படியே கனிந்து உருகி விடுகிறான். தன்னுடன் சக்கரவர்த்தியின் மக்களாகப் பிறந்தவர் இலக்குவன் பரதன் சத்ருக்கனன் என்ற மூவர் மாத்திரம் அல்ல. இங்கேயும் ஒருவன் இருக்கிறானோ, நான்காவது குமாரனாக என்றே எண்ணுகிறான்.

**என்னுயிர் அனையாய் நீ**
**இளவல் உன் இளையான்;**
**நன்னுதல் அவர் நின்கேள்;**
**நளிர் கடல் நிலம் எல்லாம்**
**உன்னுடையது, நான் உன்**
**தொழில் உரிமையில் உள்ளேன்**

என்றே கூறி அவனை மகிழ்விக்கிறான். தானுமே சந்தோஷமுறுகிறான். இந்த சீலம் வளர்க்கும் சகோதரத்துவம் இன்னும் விரிந்து கொண்டே போகிறது. கிஷ்கிந்தையில் ஒரு வானர வீரன் சுக்ரீவன் அடுத்த தம்பியாகிறான். இலங்கை அரக்கர் கோனின் தம்பி விபீஷணனையும் ஆறாவது சகோதரனாகவே ஏற்றுக் கொள்கிறான்.

**குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு,**
**பின் குன்று சூழ்வான்**
**மகனொடும் அறுவர் ஆனேம்,**
**எம்முறை அன்பின் வந்த**
**அகன் அமர் காதல் ஐய!**
**நின்னொடும் எழுவர் ஆனேம்**
**புகல் அரும் கானம் தந்து**
**புதல்வரால் பொலிந்தான் நுந்தை**

என்றே பாடுகிறான் கம்பன். அற்புதமான சீலமே உருவாகிவிடுகிறது. கம்பன் கண்ட ராமாயணத்தில் தசரதன் தன்னுடைய தந்தை மட்டுமல்ல. வீபிஷணனுக்கே தந்தை என்றல்லவா கூறுகிறான் ராமன். இந்த சகோதர தத்துவத்தையே விளக்க எழுந்த கதையாகவே, கம்பனது ராமாயணம் உருவாவதைப் பார்க்கிறோம். இந்தச் சகோதர உணர்ச்சியே கதை முழுவதும் வியாபித்து நிற்கிறது.

ராமன் சீலம் நிறைந்தவன் மட்டும் அல்ல. மக்களுள், நல்ல பிள்ளைக்கும், நல்ல கணவனுக்கும், நல்ல அரசனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் உத்தம புருஷனாகவும் இருக்கிறான். வயது முதிர்ந்த தந்தை, 'இருளுடை உலகம் தாங்கும் இன்னலை' இளவயதிலேயே ராமன் மீது ஏற்ற விரும்பிய போது அந்த அரச பதவியை விரும்பவும் இல்லை. இகழ்ந்து ஒதுக்கவும் இல்லை. ஆகவே கடன் என உணர்ந்து அரசன் என்ன பணி செய்யச் சொல்கின்றானோ அதனைச் செய்வதே நீதியும் தருமமும் என்று மிக்க அடக்கமாகவே ஏற்றுக் கொள்கிறான். ஆனால் மறுநாளே, மந்தரையின் சூழ்ச்சியால் மனம் மாறிய கைகேயிக்குக் கொடுத்த வாக்குக்குக் கட்டுப்பட்டு 'காட்டுக்குப் போ' என்று ராமனை, தந்தையும் தாயும் ஏவியபோதும், 'தந்தை ஏவ, அதைத்தாய் உரைக்க இயைந்து; என்னைவிடப் பிறந்த பயன் எய்தினவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்' என்று அமைதியோடு ஏற்றுக் கொள்கிறான். இந்த நிலையில் கவிச்சக்கரவர்த்தி கம்பன், அந்த செப்பருங்குணத்து ராமன் திருமுகச் செவ்வியை நோக்குகிறான். அப்போதும், அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினையும் வென்று நிற்கும் முக அழகைக் கண்டு அப்படியே பரவசம் அடைகிறான், என்னே இவனது உள்ளத்தின் உயர்வு என்று. கோசலை, சுமித்திரை முதலிய தாயாரிடம் அவன் விடைபெறும் காட்சி, அவன் சிறந்த மகன் என்பதையே காட்டும். வள்ளுவன் சொன்னானே 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, இவன் தந்தை என்னோற்றான்

கொல் என்னும் சொல்' என்று. அதையே நினைவு கூறுகிறோம் நாம், இத்தகைய புதல்வனைப் பெறுவதற்கு தந்தையாம் தசரதன் எவ்வளவு தவம் செய்திருக்க வேண்டும் என்று.

ராமன் ஏக பத்னி விரதன் என்பது பிரசித்தம். எவ்வளவோ சொல்லியும் கேளாமல் சீதை ராமனுடன் காட்டிற்குப் புறப்பட்டு விடுகிறாள். எல்லையற்ற இடர் இதனால் நேரும் என்று தெரிந்தும் உடன்கூட்டிச் செல்கிறான். அங்கும் அந்த சீதை சொல்கேட்டு மாரீசன் என்னும் மாயமானையே தொடர்கிறான். அதனால் சீதையை அரக்கன் சிறை எடுக்கவே காரணமாக இருக்கிறான். பின்னர் சிறையிலிருந்த செல்வியாம் சீதையைத் தேடி இலங்கை சென்று ராவணனைக் கொன்று சீதையைச் சிறைமீட்டு வருகிறான். சீதை அசோகவனத்தில் சிறை இருந்த காலம் எல்லாம் அவளுக்கு உறுதுணையாக இருந்து அவள் உயிர் காத்தது என்னது என்று நினைக்கிறீர்கள். ராமன் அவள்பால் கொண்டிருந்த அன்புதான்.

அன்று மிதிலையில் வந்து தான் கரம் பற்றிய போது 'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்று கூறி அந்தச் செவ்விய வரம்பிலேயே நின்றிருக்கிறான் என்றால், அதனைச் சீதையால் பாராட்டாதிருக்க முடியுமா? சீதையின் பிரிவால் அவன் துயறுற்றுப் புலம்பும் நிலையெல்லாம் அவனை ஓர் உத்தம புருஷனாகத்தானே காட்டுகின்றது.

இந்த மாவீரன் ராமனுக்குத்தான் விதியின் விளையாட்டில் எத்தனை நம்பிக்கை. 'வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ' என்று தன்னையே தேற்றிக் கொள்ளும் வகையைக் கம்பன் பல இடங்களில் கூறுகின்றானே. ஏன் அன்று ராமனுக்குப் பட்டம் இல்லை, பரதனுக்குத் தான் பட்டம் என்பதை இலக்குவன் அறிந்து கொதித்து எழுந்தபோது, அவனது ஆறாக்கனல் ஆற்றும் அஞ்சனமேகம் போன்றல்லவா இருந்திருக்கிறான். அத்தோடு தம்பி இலக்குவனைப் பார்த்து

**நதியின் பிழை அன்று**
**நறும் புனல் இன்மை: அற்றே**
**பதியின் பிழை அன்று**
**பயந்து நமைப் புரந்தாள்**
**மதியின் பிழை அன்று;**
**மகன் பிழை அன்று; மைந்த!**
**விதியின் பிழை; நீ இதற்கு**
**என்கொல் வெகுண்டது**

என்றுதானே சமாதானம் கூறுகிறான். மனிதனாய்ப் பிறந்தவனிடத்து, சக்கரவர்த்தித் திருமகனாக வாழ்ந்தாலும், விதி தன் வலியைக் காட்டியே தீரும் என்பதில் தான் இந்த ராமனுக்கு எவ்வளவு நம்பிக்கை.

ராமன் எப்படி ஆட்சி செய்தான் என்பதை கவிஞனுக்குக் கூற வாய்ப்பு இல்லை. காவியம் பட்டாபிஷேக மகோத்ஸவத்தோடேயே நின்றுவிடுகிறது. ஆனால் கவிச் சக்கரவர்த்தி, ராமராஜ்யம் எப்படி இருந்திருக்கும் என்று நாமெல்லாம் கற்பனை பண்ண உதவியிருக்கிறான். நல்ல அறத்தை அடிப்படையாகக் கொண்டே ராஜ்யபாரம் நடந்திருக்கவேணும். 'ஆற்ற நல் அறம் அல்லது இல்லாமையால் ஏற்றம் அல்லது இழிதகவு இல்லை.' அந்த ராம ராஜ்யத்தில் வறுமை இன்மையால் வண்மையே இல்லை. பலரும் கல்வி கேள்விகளில் உயர்ந்திருந்ததால், ஒள்ளிய அறிவு படைத்தோர் என்ற கூட்டமே அங்கு இல்லை என்கிறான் கவிஞன். திருடும் கள்ளர்களே இல்லாததால், காவல்காரர்களே வேண்டியிருக்கவில்லை. கொடுப்பதை ஏற்கப் பிச்சைக்காரர்களே இல்லாததால், தானம் கொடுப்பவர்களுமே இல்லை என்கிறான். இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோல்

**கல்லாது நிற்பார் பிறர்**
**இன்மையின், கல்வி முற்ற**
**வல்லாரும் இல்லை, அவை**
**வல்லர் அல்லாரும் இல்லை**

**எல்லோரும் எல்லாப் பெருஞ்**
**செல்வமும் எய்தலாலே**
**இல்லாரும் இல்லை உடையார்**
**களும் இல்லை மாதோ**

என்று இன்றைய சோஷலிச சமுதாயத்தையே உருவாக்கிக் காட்டுகிறான். அப்படியெல்லாம் ராமராஜ்யம் நடக்கும், நடந்திருக்க வேணும் என்றே கோடி கோட்டுகிறான். ராமனைப் போன்ற உத்தம புருஷனது ராஜ்யத்தில் இப்படி வசியும் வளனும் நிறையாது பசியும் பிணியுமா இருக்கும் என்றெல்லாம் நம்மை எண்ண வைக்கிறான்.

ராமன் புருஷ உத்தமன்தான். ஆனால் அவன் வாலியை மறைந்து நின்று அம்பு எய்து கொன்றானே அது உத்தமன் செயல்தானா? என்று ஒரு கேள்வி. ஒத்துக்கொள்ள வேண்டியதுதான். என்னதான் தத்துவங்களை எல்லாம் விளக்கி, இராமனுக்குச் சப்பைக் கட்டு கட்டினாலும், வாலிவதம் அவனுக்கு ஒரு தீராத வசையே. ஆனால் நான் சொல்லுவேன் இது ஒன்றே அவனை மனிதனாகக் காட்டுகிறது. அப்பழுக்கே இல்லாத ஒரு மனிதனைக் காட்டி இருந்தால் நாம் நம்பியே இருக்க மாட்டோம். எல்லா நல்ல குணங்களும் நிறைந்த மனிதன் வழுக்கி விழுகிறபோதுதான் அடே, இவன் ஒரு மனிதன்தான் என்ற உணர்ச்சி வருகிறது. அந்த உணர்ச்சியை உருவாக்கவே இந்த வசைஉள்ள காரியத்தையுமே அவன் செய்கிறான்.

வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி சொன்னவன் வள்ளுவன். அந்த வள்ளுவன் காட்டிய வழியில் நின்றவன் ராமன். அந்த ராமன் புகழைப்பாடி, பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல் தெய்வமாக் கவிமாட்சி தெரிக்கச் செய்தவன் கம்பன்.

## அவதார மூர்த்தி – இராமன்

வாலியால் துரத்தப்பட்ட அவன் தம்பி சுக்ரீவன், அனுமன் முதலிய வானர வீரர்களோடு கிஷ்கிந்தையை அடுத்த ஒரு மலையிலே ஒளிந்து வாழ்கிறான் இந்த மலைப்பக்கமே வருகின்றனர் ராமனும் இலக்குவனும். இருவரையும் எதிர்சென்று கண்டு அளவளாவி, அவர்களது நட்பை சுக்ரீவன் பெறவைத்தால், வாலியை வெல்லலாம் என நினைக்கிறான் அனுமன். அவர்களை அழைத்துக்கொண்டு சுக்ரீவன் இருக்கும் இடம் வருகிறான். தூரத்தே வருகின்ற ராம லக்குமணர்களைச் சுக்ரீவன் பார்க்கிறான். ஏதோ அவர்கள் தவக்கோலம் பூண்டிருந்தாலும் அவர்கள் முகத்தில் அழகு சுடர்விடுகிறதைக் காண்கிறான். இதைச் சொல்கிறான் கம்பன்.

**கண்டனன் என்ப மன்னோ**
**கதிரவன் சிறுவன், காமர்**
**குண்டலம் துறந்த கோல**
**வதனமும், குளிர்க்கும் கண்ணும்**
**புண்டரி கங்கள் பூத்துப்**
**புயல்தழீஇப் பொலிந்த திங்கள்**
**மண்டலம் உதயம் செய்த**
**மரகதக் கிரி அனானை**

தூரத்திலே வருகிறபோது சுக்ரீவன் காணுவது மரகத மலை என வளர்ந்த தோள்களையுடைய அழகர் இருவரை. இந்த மதனன் அஞ்சுறு வடிவினர், இன்னும் கொஞ்சம் நெருங்கியே வருகிறார்கள். அவர்களை அப்போதுதான் கூர்ந்து நோக்குகிறான். இவர்கள் ஏதோ அழகு நிறைந்த புருஷர்கள் மாத்திரம் இல்லை. நல்ல வலியுடைய வீரர்களாக அல்லவா தெரிகிறது. ஏதோ இந்த உலகம் தவம் செய்து பெற்ற வீரர்களே இவர்கள் என்று அறிகிறான். இதையும் சொல்கிறான் கம்பன்.

**நோக்கினான், நெடிது நின்றான்**
**நொடிவு அருங்கமலத்து அண்ணல்**
**ஆக்கிய உலகம் எல்லாம்**
**அன்று தொட்டு இன்று காறும்**
**பாக்கியம் புரிந்த எல்லாம்**
**குவிந்து இருபடிவம் ஆகி**
**மேக்கு உயர் தடந்தோள் பெற்று**
**வீரராய் விளைந்தது என்பான்**

அழகைக் கண்டவர்கள், வீரர்களாக காட்சி தருகிறார்கள். ஊன்றி நோக்கும்போது இன்னும் கொஞ்சம் பக்கத்திலேயே வந்துவிடுகிறார்கள் அவர்கள். ஆர அமர அவர்களது வடிவினைக் கண்டு நோக்கியபோது விஷயம் விளங்குகின்றது சுக்ரீவனுக்கு. இவர்கள் ஏதோ சாதாரண மனிதர்கள் அல்ல. மனித உருவில் வந்திருக்கும் தேவரும் தொழும் தேவரே. ஆம் இவர்கள் அவதார புருஷர்களாகவே அவதரித்திருக்கிறார்கள் என்று தேறுகிறான். இதனையும் விளக்கமாகவே கூறுகிறான்.

**தேறினன், அமரர்க்கு எல்லாம்**
**தேவர் ஆம் தேவர் என்றே**
**மாறி இப்பிறப்பில் வந்தார்**
**மானுடர் ஆகி மன்னோ**
**ஆறு கொள் சடிலத் தானும்**
**அயனும், என்ற இவர்கள் ஆதி**
**வேறுள குழுவை எல்லாம்**
**மானுடம் வென்றது அன்றே!**

என்று சுக்ரீவன் உணர்கிறான். உண்மைதானே! வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, மனிதர் எல்லாம் வானுறையும் தேவர்களாக விரும்பும் நேரத்தில் வானுலகில், உள்ள தேவர்கள், மனிதர்களாக அவதாரம் செய்யவேண்டும் என்றால், இந்த மானுடப் பிறவியில் ஏதோ விசேஷம் இருக்கத்தானே வேண்டும். ஆதலால் தான் கம்பன்

சொல்கிறான், அயன் அரன் என்ற தேவர் கூட்டத்தையே மானுடம் வென்றுவிடுகிறது என்று. இது மனிதனின் வெற்றியோ இல்லையோ? ராமன் ஓர் அவதார மூர்த்தி என்பதே கம்பனது எண்ணமாக இருந்திருக்கிறது. சுக்ரீவன் கூற்றாகக் கூறும் இந்த மூன்று பாடல்களின் மூலம் கம்பன் ராமனை எப்படிக் காண்கின்றான் என்ற உண்மையே தெற்றென விளங்கிவிடுகிறது. ராம கதை நாட்டில் வளர்ந்த விதமுமே, தெரிகிறது. நல்ல அழகனாக, சக்ரவர்த்தித் திருமகனாகப் பிறந்த ராமன் வான்மீகரது காவியத்திலே வீரனாக வளர்கிறான். கம்பனது ராமவதாரத்திலே ஓர் அவதார புருஷனாக உருக் கொள்கிறான். பின்னர் துளசிதாஸரது ராம சரித்திர மானசிலே அவதார மூர்த்தியாகவே ஆகிவிடுகிறான். எல்லோரும் வணங்கும் தெய்வமாகவே அவன் கருதப்படுகிறான்.

மகாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களிலே, ராமாவதாரம் மிகச் சிறப்புடையது. தச அவதார தத்துவமே, உலகத்தின் பரிணாமத்தை விளக்க எழுந்ததுதானே. இறைவனும் உலகத்தோடேயே வளர்கிறான். முதன்முதல் நீரில் மாத்திரமே வாழக்கூடிய மீனாக அவதரிக்கிறான். பின்னர் நீரிலும் நிலத்திலும் வசிக்கக்கூடிய ஆமையாக, அதன்பின் நிலத்தினை உழுகின்ற வராகமாக உரு எடுக்கிறான். அதன்பின்னர் பாதி மிருகமும், பாதி மனிதனும் ஆன உருவில், அதன்பின் வளர்ச்சியுறாத மனித உருவிலும் தோன்றுகிறான். இப்படியெல்லாம் மீனாக, கூர்மம் ஆக, வராகமாக, நரசிங்கமாக, வாமனன் ஆக அவதரித்தவனே, நல்ல பூர்ணத்துவம் வாய்ந்த மனிதனாக, ஆம் ராமனாகவே அவதரிக்கிறான். மற்ற அவதாரங்களில் எல்லாம் காணாத நிறைவை ராமாவதாரத்திலே பெறுகிறான். இப்படித்தான் ராமனது அவதார மகிமை பேசப்படுகின்றது பக்தர்களால், பரம பாகவதர்களால்.

ராமன் அவதார மூர்த்தி என்பதைக் கம்பனும் உணர்ந்திருக்கிறான். அதை எத்தனையோ இடங்களில் எப்படி

*எப்படி எல்லாமோ சொல்லிச் சொல்லி மகிழ்கிறான். ஜனகனது பேரவையில் வீற்றிருக்கின்ற ராமனை ஜனகனுக்கு விஸ்வாமித்திரன் அறிமுகம் செய்து வைக்கிறான். அவனது குலமுறையையே கிளத்துகிறான்.*

**விரிந்திடு தீவினை செய்த**
**வெவ்விய தீவினையாலும்**
**அருங்கடைஇல் மறைஅறைந்த**
**அறம் செய்த அறத்தாலுமே**

*பிறந்தவன் ராமன் என்பதே கம்பன் எண்ணம். அதையே கூறுகிறான் விஸ்வாமித்திரன். ஏன்?*

**கோனும் சிறிய கோத்தாயும்**
**கொடுமை இழைப்பக் கோல்துறந்து**
**கானும் கடலும் கடந்து இமையோர்**
**இடுக்கண் காத்த கழல்வேந்தாம்**
**ராமனே, வானின்று இழிந்து வரம்பு இகந்த**
**மாபூதத்தின் வைப்பு எங்கும்**
**ஊனும் உயிரும் உணர்வும்போல்**
**உள்ளும் புறத்தும் உள்ள**

*இறைவன் என்றே கடவுள் வணக்கம் கூறுவான் கம்பன். இன்னும் தண்டக ஆரண்யத்திலே ராமனால் தோள் துணிக்கப்பட்டு மண்ணில் வீழ்ந்து சாப விமோசனம் பெற்ற விராதன் துதியைத் தான் படித்துப் பார்ப்போமே.*

**பனிநின்ற பெரும் பிறவிக்**
**கடல்கடக்கும் புணைபற்றி**
**நனிநின்ற சமயத்தோர்**
**எல்லோரும் நன்று என்ன**
**தனிநின்ற தத்துவத்தின்**
**தகைமூர்த்தி நீஆகில்**
**இனிநின்ற முதல்தேவர்**
**என்கொண்டு என்செய்வாரே**

என்றுதானே பாடுகின்றான். சரபங்கன் பரத்துவாசன் முதலியவர்கள் அனுபவம் எல்லாம் இப்படித்தானே இருக்கிறது. இப்படியே விபீஷணன். ஏன்? வாலி, ராம நாமத்தையே மந்திரமாக மதிக்கிறான்.

இந்த அவதார ரகசியத்தை எல்லோரையும் விட மிகவும் நன்றாக அறிந்திருந்தவன் கம்பனே. ராம காதையில், தன்னுடைய கருத்துகளை எல்லாம் வெளியிட ஒரு நல்ல பாத்திரத்தையே தேடி வைத்துக் கொள்கிறான். அந்தப் பாத்திரமே அனுமன். அவன் வாயிலாக முடிந்த முடிபாக, கம்பன் சொல்வதையே கேட்கலாம்.

**மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர்**
**மும்மைத் தாய**
**காலமும் கணக்கும் நீத்த**
**காரணன் கைவில் ஏந்தி**
**சூலமும் திகிரி சங்கும்**
**கரகமும் துறந்து, தொல்லை**
**ஆலமும், மலரும், வெள்ளிப்**
**பொறுப்பும் விட்டு அயோத்திவந்தான்**

என்று சொன்னதோடு திருப்தி அடையாமல்,

**அறம்தனை நிறுத்தி, வேதம்**
**அருள் சுரந்து அறைந்த நீதித்**
**திறம்தெரிந்து, உலகம் பூணச்**
**செந்நெறி செலுத்தி, தீயோர்**
**இறந்து உகநூறி, தக்கோர்**
**இடர்துடைத்து ஏக, ஈண்டு**
**பிறந்தனன், தன் பொற்பாதம்**
**ஏத்துவார் பிறப்பு அறுப்பான்**

என்று முடிக்கிறான்.

ராமாவதாரம் என்னும் கம்பனது காவியமே நல்ல சரணாகதி சாஸ்திரம் தானே. அதைத் தானே அனுமன் மூலமாகக் கூறுகிறான் கம்பன்.

**மறை திறம் பாத வாய்மை**
**மன்னர்க்கு முன்னம் சொல்லும்**
**துறை திறம்பாமல்**
**காக்கத் தோன்றினான்**

ராமன் என்பது தானே நாம் அறிந்தது. அவன் ஓர் அவதார மூர்த்தி என்பதை

**மேல் ஒரு பொருளும் இல்லா**
**மெய்ப்பொருள் வில்லுந் தாங்கி**
**கால் தரை தோய நின்று**
**கட்புலனுக்கு உற்ற தம்மா**

என்று வாலி கூறுவது யாருடைய கூற்று என்று நினைக்கிறீர்கள்? அதுவும் கவிச்சக்கரவர்த்தி கம்பனது கூற்றுத்தானே. கம்பனுக்கு முன்னாலேயே இந்த எண்ணத்தை உருவாக்கியவர்கள் உண்டு. வால்மீகி உருவாக்கிய உத்தம புருஷன் - காளிதாஸனது வருணனைகளிலும், ரஸிகர்களது ரஸானுபவங்களிலும், ஆழ்வார்களது பக்தி அனுபவங்களிலும் வளர்ந்து, கம்பனது காவியத்தில் - அவதார புருஷனாக, அவதார மூர்த்தியாகவே ஆகிவிடுகிறான். இவனே பின்னர், பக்த தியாகராஜரது கீர்த்தனைகளினாலே தென்னாட்டிலே நிலைபெற்று நின்றுவிடுகிறான். அந்த அவதார மூர்த்தியை அறிமுகப்படுத்துவதிலே கம்பன் பெருமிதம் கொள்கிறான். அதைச் சொல்வதிலே நான் புளகாங்கிதமே அடைகிறேன்.

## ஏரி காத்த பெருமான் – இராமன்

கவிச் சக்ரவர்த்தி கம்பன் தமிழ்நாட்டில் பல தலங்களுக்குச் சென்றிருக்கிறான். தொண்டை நாட்டில், உள்ள அந்தப் பிரபலமான கச்சிக்கே சென்றிருக்கிறான். அங்குள்ள ஏகம்பனையே வணங்கியிருக்கிறான். கம்பன் ஏதோ கம்பங்கொல்லையைக் காத்ததினாலாவது இல்லை கம்பை ஊன்றி நடந்ததினாலாவது தான் கம்பன் என்று பெயர் பெற்றான் என்று கூறுவது அறியாமையே. தேரழுந்தூரில்

வழி வழியாகச் சைவப் பெருங்குடியில் வந்த கம்பனது முன்னோர்களுக்கு கச்சி ஏகம்பனே வழிபடு தெய்வமாக இருந்திருக்கிறான். ஆதலால் ஏகம்பன் பெயரையே அவன் தந்தை அவனுக்குச் சூட்டியிருக்கிறார். அதனால்தான் கம்பன் என்ற பெயர் நிலைத்திருக்கிறது. தக்க புகழையுமே பெற்றிருக்கிறது. இந்தக் கம்பன், தொண்டை நாடு சென்று கச்சி ஏகம்பனைக் கண்டு தொழுதுவிட்டு, தன் சொந்த ஊராகிய தேரழுந்தூருக்குத் திரும்பி வருகிறான். வருகிற வழியில் ஒரு ஊர். அந்த ஊரில் கோயில் கொண்டிருப்பவர் கோதண்டராமர் என்று அறிந்தபோது கோயிலுள் சென்று தன்னை ஆட்கொண்ட பெருமானான ராமனை வணங்கித் துதிக்க நினைத்திருக்கிறான். அவசரமாக ஊர் திரும்புகின்ற பயணம். ஆதலால், கடைகளில் நுழைந்து ஆராதனைக்குரிய பொருள்களை வாங்கிக் கொள்ளவோ நேரமில்லை. ஆதலால் கையை வீசியே நடக்கிறான்; கோயிலுள் நுழைகின்றான்; நேரே கர்ப்பக் கிரஹத்திற்கே வந்து விடுகிறான். அங்கு சீதா லக்ஷ்மண சமேதனாக நிற்கும் கோதண்டராமனை, அவன் ஆராதித்த கருணாகரனை எல்லாம் கண்குளிரக் காணுகின்றான். அல்லையாண்டு அமைந்த மேனி அழகனை, அந்த அழகனது அழகை எல்லாம் எத்தனையோ பாடல்களில் ராமகதை முழுவதும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தவன் ஆயிற்றே. என்றாலும் செந்தாமரைக் கண்ணோடும் செங்கனி வாயினோடும் சந்தார் தடந்தாளோடும் தாழ் தடக்கைகளோடும் வில்லேந்தி நிற்கும் அந்த ராமனைக் கண்டபொழுது, தான் சொல்ல வேண்டுவது இன்னும் எவ்வளவோ இருக்கிறதுபோல இருக்கிறதே என்ற எண்ணம். இப்படித் தன் எண்ணங்களை அலைபாய விட்டு அப்படியே மெய்மறந்து நின்றிருக்கிறான். மேலே கிடந்த உத்தரீயத்தை எடுத்துப் பவ்வியமாக அரையில் கட்டிக்கொள்ளவேண்டும் என்று தோன்றவில்லை. மூர்த்தியைக் கைகூப்பி வணங்க வேண்டும் என்றும் தோன்றவில்லை. இந்த நிலையில் நிற்கும் கம்பனைப்

பக்கத்திலே நின்று கொண்டிருந்த பரம பாகவதர் ஒருவர் பாரக்கிறார். அவருக்கோ இவன் பேரில் ஒரே கோபம். ‘இப்படியும் இருக்குமா ஒரு பிரகிருதி? சந்நிதி முன் வந்தும் வணங்காமல் நிற்கிறானே அப்படி இவன் என்ன வணங்கா முடியனா?’ என்றெல்லாம் எண்ணுகிறார். அவருக்கு இருந்த ஆத்திரத்தில் கம்பன் விலாவிலேயே ஒரு குத்துக் குத்தி ‘என்ன ஐயா? ஆராதனைக்கு உரிய பொருள்கள் ஒன்றும் கொண்டுவரவில்லை என்றால், சந்நிதியில் மூர்த்தியைக் கைகூப்பித் தொழவுமா தெரியாது’ என்று கேட்கிறான், அப்போதுதான் விழித்துக்கொண்ட கம்பன், அப்பரம பாகவதருக்குப் பதில் சொல்கிறான். கவிச்சக்ரவர்த்தி அல்லவா! பதில் பாட்டாகவே வருகிறது. பாட்டு இதுதான்

**‘நாராயணாய நம’ என்று**
**விண்ணோடு**
**பாராளும் பாதம் பணிந்து**
**ஏத்துமாறு அறியேன்**
**காராளும் மேனிக்**
**கருணாகர மூர்த்திக்கு**
**ஆராதனை என்**
**அறியாமை ஒன்றுமே**

என்ற பாடலை பரம பாகவதருடன் சேர்ந்து நாமும் கேட்கிறோம். கோயிலை அறிந்தாலும் கும்பிடத் தெரியாத தன் அறியாமையை எவ்வளவு எளிமையோடு சொல்கிறான். அதைவிட அவன் ஆராதனைக்குக் கொண்டு வந்த பொருள் தன் அறியாமையே என்று சொல்கிறபோது எத்தகைய விளக்கம் பெறுகிறோம். உண்மைதானே! இறைவனையும் பெரியவர்களையும் காணும்போது நாம் கொண்டுபோக வேண்டுவதும், நம்மிடம் நிறைய இருப்பதும், அவர்களிடம் கொஞ்சமும் இல்லாததுமான பொருளைத்தானே கொண்டு போய் காணிக்கையாக வைத்து ஆராதிக்க வேண்டும். நம்மிடம் நிறைய இருப்பது அறியாமை. இறைவனிடத்துக்

கொஞ்சம்கூட இல்லாதிருப்பதும் அறியாமை. ஆதலால் நமது அறியாமையையே ஆராதனைப் பொருளாகக் கொண்டு கொட்ட வேண்டியதுதானே. அதைத்தானே செய்கிறான் கம்பன். நம்மையும் செய்யும்படி வற்புறுத்துகிறான். இப்படி கம்பன் ஆராதித்த கோதண்டராமனை அந்த ராமன் ஆராதித்த கருணாகரனைக் காண, கம்பன் சென்ற ஊருக்கே நாமும் செல்ல வேண்டாமா, அந்த ஊர்தான் மதுராந்தகம்.

மதுராந்தகம் செங்கல்பட்டு ஜில்லாவிலே உள்ள தாலுகாவின் தலைநகரம். நிரம்பச் சிறிய ஊரும் அல்ல. நிரம்பப் பெரிய ஊரும் அல்ல. சென்னைக்குத் தெற்கே ஐம்பது மைல் தூரத்திலே இருக்கிறது இந்த ஊர். ரயிலிலும், பஸ்ஸிலும் ஏன் நல்ல காரிலுமே செல்லலாம். வடக்கே இருந்து வந்தாலும், தெற்கே இருந்து வந்தாலும், இந்த ஊருக்கு மேற்கே உயர்ந்த கரையோடு கூடிய பெரிய ஏரி நம் கண் முன் வரும். அந்த ஏரியின் மறுகாலே, கல்லாறு என்ற பெயரோடு ஒரு பெரிய நதியாக ஓடுகிறது என்றால் கேட்பானேன். இந்த ஏரி, தமிழ்நாட்டில் உள்ள பெரிய ஏரிகளில் ஒன்று. கரையின் நீளம் 12,960 அடி. அதன் நீர்ப்பிடி விஸ்தீரணம் பதின்மூன்று சதுரமைல். ஏரி நீர் நிறைந்தால் நூறு அடிக்கு மேல் ஆழம். ஏரிக்கு ஐந்து மதகுகள். அந்த மதகுகள் வழியாகப் பாய்ந்து பெருகும் தண்ணீர், வளர்பிறை, அருங்குணம், முள்ளி, முன்னத்திக்குப்பம், மதுராந்தகம் முதலிய ஊர்களில் உள்ள 2,702 ஏக்கர் நிலங்களில் மூன்று போகம் நெல் விளையும் நன்செய்களுக்குப் பயன்படுகிறது. இந்த ஏரியின் தண்ணீர் வழிந்தோட அமைந்திருக்கும் கலிங்கல் நூற்று ஐம்பது அடி நீளம் என்றால் ஏரியைக் கொஞ்சம் கற்பனை பண்ணி மானசீகமாகவே பார்த்துக் கொள்ளலாம்தானே. இந்தத் தலத்தில் நாம் முதல் முதல் காண வேண்டுவது, கோதண்டராமன் கோயிலையல்ல, இந்த ஏரியில் உள்ள இந்தக் கலிங்கலைத்தான். ஆம். இந்தக் கலிங்கலில் தானே கோயிலுள் சிலை உருவில் நிற்கும் ராமனும்

இலக்குமணனும் சோதிவடிவிலே காட்சி கொடுத்திருக்கிறார்கள் வெள்ளைக்காரக் கலெக்டர் துரை கர்னல் பிளேஸுக்கு. இந்த ராமன் காரியமே இப்படித்தானே. நாளும் ராம நாமத்தையே ஸ்மரணம் செய்து கொண்டிருக்கும் பக்தர்களுக்குத் தரிசனம் தரமாட்டான். ஆனால் அவனைப் பற்றிக் கொஞ்சமும் நினைக்காதவர்களைத் தேடிப்பிடிக்க ஓடுவான். ராமதாஸின் சரித்திரம் தான் தெரியுமே. அல்லும் பகலும் அனைவரும் துதித்து, பத்ராசலத்தில் கோயில் எடுப்பித்த அந்த கோபண்ணாவின் கனவில் கூடத் தோன்றாத அவன் ஹைதராபாத்தில் உள்ள பாதுஷாவின் பள்ளியறைக்கு விரைந்திருக்கிறான். அவனுக்குத் தரிசனம் தந்திருக்கிறான். மொகராக்களாகவே அவன் முன் கொட்டி இருக்கிறான் என்றால் கேட்பானேன். ஆனால் இந்தக் கலெக்டர் பிளேஸுக்குத் தரிசனம் தந்தது மிக்க ரசமான கதை.

மதுராந்தகத்து ஏரி பெரிய ஏரிதான், என்றாலும் இந்த ஏரிக்கு ஒரு சாபமோ என்னவோ, வருஷா வருஷம் கரை உடைத்துக் கொள்வது தவறுவது இல்லை. எண்ணற்ற பொருள் செலவில் ஏரிக்கரையைப் பழுது பார்ப்பார்கள் இந்த மராமத்து இலாகா அதிகாரிகள். என்றாலும் நல்ல ஐப்பசி கார்த்திகை மாதங்களில் அடைமழை பெய்து ஏரி நிறைந்துவிட்டால் ஒரே கவலைதான். எங்கேயோ ஒரு இடத்தில் பிய்த்துக்கொண்டு கரை உடையும்; தண்ணீரெல்லாம் வெளியே ஓடும்; ஓடும் வழியில் உள்ள பயிர்களை அழிக்கும்; மாடு மனையை மக்களை எல்லாம் வாரிக்கொண்டே போய்விடும். ஏரியில் உள்ள தண்ணீர் எல்லாம் இப்படி வடிந்துவிட்டால் பயிர் விளைவதேது? நிலவரி வசூலாவது ஏது? இதனால் எல்லாம் சர்க்காருக்கு ஒரே நஷ்டம். கலெக்டர்களுக்கோ ஓயாத தலைவலி.

*1795 - 1798* வருஷங்களில் செங்கல்பட்டு ஜாகீரில் கலெக்டராக இருந்தவர் கர்னல் லயனல் பிளேஸ் என்ற ஆங்கிலத் துரை. இவருக்கு இந்த மதுராந்தகம் பெரிய ஏரி

கதை தெரியும். அவர் கலெக்டராக வந்த அந்த வருஷத்திலே (1795 இல்) ஏரி உடைப்பு எடுத்து அதனால் மக்களுடன் சர்க்கார் அடைந்த நஷ்டங்களைப் பற்றியெல்லாம் விவரங்கள், குறிப்புகளை எல்லாம் படித்திருக்கிறார். ஆதலால் 1798 இல், இந்த ஏரிக்கரையைப் பலப்படுத்த விசேஷ சிரத்தை எடுத்திருக்கிறார். மழைக்காலம் முழுவதும் இங்கேயே மராமத்து இலாகா அதிகாரிகளுடன் முகாம் செய்வது என்று திட்டமிட்டுக் கொள்கிறார். தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவே முனைந்திருக்கிறார். அப்படி முகாம் பண்ணிய போது, ஏரியை, நகரை எல்லாம் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தவர் கோதண்டராமசாமி கோயில் வாயிலுக்கும் வந்திருக்கிறார். கோயில், கோயில் கோபுரம் எல்லாவற்றையும் கண்டு அதிசயித்து நின்ற துரைமகனை, அர்ச்சகர்களும், ஊர்ப் பிரமுகர்களும் கோயிலுக்குள் வந்து மற்ற அழகுகளையும் காண அழைத்திருக்கின்றனர். அவரும் காலில் உள்ள பாதரட்சைகளை எல்லாம் கழற்றி வைத்துவிட்டு கோயிலுக்குள் நுழைந்து வெளிப் பிரகாரத்தைச் சுற்றி வந்திருக்கிறார். அங்கு ஓரிடத்தில் கற்கள் பல குவித்து வைத்திருப்பதைப் பார்த்து இவை ஏன் இங்கு குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டிருக்கிறார். அங்குள்ளவர்கள் 'இங்கு கோயில் கொண்டிருப்பவர் சக்ரவர்த்தித் திருமகனான ராமன். அவருடைய தர்மபத்தினி ஜானகிக்கு என்று ஒரு தனிக் கோயில் இல்லை. அந்தத் தலைவிக்கு ஒரு கோயில் கட்டலாம் என்றே கல் எல்லாம் சேகரித்தோம். ஆனால் கட்டி முடியவில்லை. வருஷா வருஷம் விளைச்சல் இல்லாத காரணத்தால் மக்களிடமும் போதிய பணம் வசூலிக்க முடியவில்லை. கோயில் கஜானாவிலுமே பணம் இல்லை. அதனால்தான் எடுத்த காரியம் தடைபட்டுக் கிடக்கிறது' என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் கேட்ட கலெக்டரோ கொஞ்சம் ஏளனமாகவே, 'என்ன ஐயா உங்கள் சாமிக்கு இந்த ஏரி உடையாமல் பார்த்துக் கொள்ளத் தெரியவில்லை.

இவருக்கு ஒரு கோயில், இவர் மனைவிக்கு ஒரு கோயில். இது எல்லாம் வீண் பண விரயந்தானே' என்று பேசி இருக்கிறார். இதைக்கேட்ட அர்ச்சகர்கள் துடிதுடித்து, 'துரைவாள் அப்படி எல்லாம் சொல்லக்கூடாது. எங்கள் இராமன் இக்கலியுகத்தில் கண்கண்ட தெய்வம். அவனை உள்ளன்போடு ஆராதிப்பவர்களுக்கு எல்லாம், அவர்கள் வேண்டுவதை எல்லாம் முட்டின்றி அருளுவான்' என்றெல்லாம் சொல்கிறார்கள்· எண்ணம் எல்லாம். ஏரிக்கரையில் இருந்த கலெக்டரும் இதைக் கேட்டு, 'சரி உங்களுக்கும் உங்கள் இராமனுக்குமே ஒரு சவால். நான் உள்ளன்போடு உங்கள் ராமனிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன். இந்த வருஷத்து மழையில் இந்த ஏரிக்கரை உடையாமல் இருந்தால் நானே இந்த ராமன் மனைவி ஜானகிக்கு கோயில் கட்டித் தருகிறேன். பார்ப்போம் இதை' என்று சொல்லிவிட்டு முசாபரி பங்களாவிற்குத் திரும்பி விடுகிறார்.

அன்றிரவே நல்ல மழை. மறுநாள் காடு மேடு எல்லாம் நீர் வழிந்து ஓடுகிறது. ஏரியில் தண்ணீர் மட்டம் ஏறிக்கொண்டே இருக்கிறது. கலெக்டர் கோதண்டராமனை மட்டும் நம்பி சும்மா இருந்துவிடவில்லை. மராமத்து இலாகா அதிகாரிகள் அத்தனை பேரையும் ஏரிக்கரையில் பல இடங்களில் காவல் போட்டு, கரை எங்கே உடைத்துக் கொள்ளும் என்று தோன்றுகிறதோ அந்த பாகத்தையெல்லாம் பலப்படுத்த முஸ்தீபுகள் செய்கிறார். பகல் முழுவதும் மழை பெய்கிறது. இரவும் நிற்கக் காணோம். கலெக்டருக்கு ஒரே கவலை இரண்டாம் நாளும் உத்தியோகஸ்தர்கள் எல்லாம் சோர்வு இல்லாமல் கரையைக் காவல் காப்பார்களா என்று. ஆதலால் அவர்களைச் சடுதி பார்க்க, இரவு பத்து மணிக்கு, கலெக்டர் புறப்படுகிறார், குடை ஒன்றை எடுத்துக்கொண்டு. தாசில்தார், டபேதார், மற்றும் ஊர்க்காரர் சிலரும் பின்னாலேயே வருகிறார்கள். எல்லோருமே ஏரிக்கரை மீது நடக்கிறார்கள் கொட்டுகிற மழையிலே. கலங்கல் பக்கம் வந்ததும் துரை

தன் கையில் உள்ள குடையையும் தொப்பியையும் தூர எறிந்துவிட்டு, மண்டியிட்டு, கூப்பிய கையராய்த் தொழுதுகொண்டு இருக்கிறார். பக்கத்தில் உள்ளவர்கள் துரை வழுக்கி விழுந்துவிட்டார் போலும் என்று எண்ணி அவரைத் தூக்கிவிட முனைகிறார்கள். அவரோ 'அடே! முட்டாள்களே, அதோ பாருங்கள், அதோ பாருங்கள். கலிங்கல்களின் இரு பக்கத்திலும் தேஜோமயமாக இரண்டு வீரர்கள் அல்லவா நின்று காவல் புரிகிறார்கள். அவர்கள் வில்லேந்தி நிற்கின்ற அழகுதான் என்ன? முகத்தில்தான் எத்தனை மந்தஹாசம்' என்று கூவவே ஆரம்பித்து விடுகிறார். பக்கத்தில் நிற்கும் பக்தர்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. கலெக்டருக்குக் கிடைத்த கோதண்டராமன் தரிசனம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கலெக்டரும் மக்களும் ஊர் திரும்புகிறார்கள். அன்று ஏரிக்கரை உடையவில்லை. ஏன் அந்த வருஷமே உடையவில்லை. கலெக்டரும் தான் சொன்ன சொல்லை நிறைவேற்ற மறக்கவில்லை. ஜானகிக்கு ஒரு கோயிலை அவருடைய மேற்பார்வையிலேயே கட்டி முடித்துக் கொடுத்து விட்டுத்தான் தன் தாய்நாட்டிற்குக் கப்பல் ஏறி இருக்கிறார். 'இந்தத் தருமம், கும்பினி ஜாகீர் கலெக்டர் கர்னல் லயனல் பிளேஸ் துரை அவர்களது' என்று கோயில் மண்டபத்திலே கல்லில் வெட்டி வைத்திருக்கிறார்கள். இதை இன்று அங்கு செல்பவர்கள் காணலாம். கலெக்டர் வேண்டுகோளுக்கு இணங்கி ஏரி காத்த இந்த இராமனையே ஏரி காத்த பெருமாள் என்று இன்றும் அழைக்கிறார்கள் மக்கள்.

இத்தனை விஷயங்களும் தெரிந்தபின் இனி நாமும் கோயிலுள் செல்லலாம். கம்பன் கண்ட கோதண்டராமனை ஏரிகாத்த பெருமாளைக் கண்டு வணங்கலாம். கோயிலுக்கு முன்னாலே பெரிய திருக்குளம். குளக்கரையில் எல்லாம் நல்ல தென்னஞ் சோலைகள். இச்சோலைகளுக்கும் ஏரிக்கரைக்கும் இடையிலே கோயில். இந்தக் கோயிலிலே மூலவர் கோதண்டராமன். உற்சவமூர்த்தி இருவர். ஒருவன் கருணாகரன்,

மற்றொருவன் கோதண்டராமன். இவர்களிடையே ஒரு பெரிய வேற்றுமை. கோதண்டராமனோ ஏகபத்தினி விரதன். கருணாகரனோ இரண்டு பெண்டாட்டிக்காரன். ஸ்ரீதேவி, பூதேவி சமேதனாக அவன் நிற்கிறான். ஆனால் இந்தக் கருணாகரனே ராமன் வணங்கிய நாராயணமூர்த்தி என்கிறார்கள். கோதண்டராமன் கோயிலுக்கு வலப்பக்கத்திலே ஜனகவல்லித் தாயாரின் கோயில். இதைத்தான் கலெக்டர் லயனல் பிளேஸ் கட்டியிருக்கிறார். இத்தலம் வைஷ்ணவர் களுக்கு மிகவும் உகந்த ஸ்தலம். இங்குதான் ராமானுஜருக்கு, பெரியநம்பி, பஞ்ச சம்ஸ்காரம் என்னும் வைஷ்ணவ தீக்ஷை செய்து வைத்திருக்கிறார். அதனால் இது திவ்யம் விளைந்த திருப்பதி என்று கொண்டாடப்படுகிறது. கோயிலின் வட பக்கத்தில் பெரிய நம்பி, ராமானுஜருக்கு எல்லாம் சந்நிதி இருக்கிறது. இருவருக்கும் இடையில் சமீப காலத்தில் திருப்பணி செய்யும்போது பூமியில் இருந்து கிடைத்த நவநீதக் கண்ணன், திருவிலச்சினைக்குரிய சங்கு சக்கரங்கள், பூஜாபாத்திரங்கள், தாமிரத் தட்டு எல்லாம் வைக்கப்பட்டிருக் கின்றது. ராமானுஜருக்குத் தீக்ஷை நடந்த இடம் மகிழ மரத்தடியில். அந்த மகிழ மரமும், ஸ்தலப் பெயரான வகுளாரண்யம் என்பதை நிலைநிறுத்த அங்கேயே நின்று கொண்டிருக்கிறது. இந்த மகிழடியையே ஸ்ரீவைகுண்ட வர்த்தனம் என்று அழைக்கிறார்கள். கம்பன் கண்ட கருணாகரனை, கோதண்டராமனை இளைய பெருமாளுடன் நிற்பவனைத் தரிசித்துவிட்டு வருவதுடன் பெரியநம்பி, இராமானுஜர், மகிழடி எல்லோரையுமே சேவைசெய்து திரும்பலாம்.

## காவேரி தீர ரஸிகன் – இராமன்

நல்ல பங்குனி சித்திரை மாதம். மாலைவேளையில் வீட்டில் இருக்க முடியவில்லை. ஆதலால் காவிரிக் கரைக்குச் சென்று அங்கு ஆற்று மணல் பரப்பிலே அமர்ந்திருந்தேன்,

ஒருநாள். உடன் வந்திருந்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பன். ஆம், காலை வேளையிலே உலாவப் புறப்பட்டாலும் அந்திவேளையிலே வீட்டில் அமர்ந்திருந்தாலும், நீண்ட பயணத்தை ரயிலில் துவங்கினாலும் என்னுடன் வருபவன் கம்பன்தான். நிரம்பச் சொல்வானேன். இரவு பத்து மணிக்கு உறக்கங்கொள்ளாமல் உருண்டு பிறழும்போது என்னைக் கட்டி அணைப்பவன் கம்பனே. அதாவது, இந்த வேளையில் எல்லாம் ஒன்று நான் கம்பன் பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பேன்; இல்லை கம்பராமாயணப் புத்தகம் என்னுடன் வந்து கொண்டிருக்கும். அவ்வளவுதான். அதேபோல அன்றும் நான் கம்பராமாயணப் புத்தகத்தை உடன் எடுத்துச் சென்றிருந்தேன். ஏதோ தனிமையில் இருந்து படிக்கலாம் என்றுதான்.

ஆனால் அங்கு அப்போது மூன்று நண்பர்கள் வந்தார்கள். ஒருவர் பகுத்தறிவுத் தோழர், மற்றொருவர் சிவபக்தர், மூன்றாவது நபர் செஞ்சட்டை வீரர். மூவரும் எனக்கு மிகவும் நன்றாக அறிமுகமானவர்களே, வந்தார்கள். வந்தவர்களை வரவேற்றேன். வணக்கம் செலுத்தி பக்கலில் அமர்ந்தார்கள். கையில் வைத்திருந்த புத்தகத்தைப் பார்த்தார்கள். அவ்வளவுதான். மூன்று பேருக்குமே என்பேரில் கோபம் ஏற்பட்டது. ‘கன்னித் தமிழ்மொழியில் காவியத்தைத் தானெழுத கதை வேறே கம்பனுக்குக் கையில் கிடைக்கலையோ. வடநாட்டு வான்மீகி வன்மமொடு திராவிடரைத் திடமாக இழிவு செயத் தீட்டி வைத்த அக்கதையை, இந்தப் பயல் கம்பன் ஏனோ தமிழருக்காய் சொந்தக் கதையாக்கி சொகுசாய் உரைத்திட்டான். இதைப் படித்துக் கொண்டிருக்கிறீர் நீர்’ என்று என்மேலே பாய்ந்தார் பகுத்தறிவாளர். சிவபக்தரும், ‘எல்லாம் சரிதான், தமிழும் சைவமும் தழைத்து வளர்ந்த இந்தத் தமிழ்நாட்டில் தக்க கதை கம்பனுக்கு வேறு கிடைக்கலையோ. பிறவாத யாக்கை உடைப்பெரியோன் சிவனிருக்க, இறவாப் புகழை எல்லாம் இராமனுக்கே

ஏற்றினனா' என்று அங்கலாய்த்தார். மூன்றாவது நபரும் சளைக்கவில்லை. 'உடுக்க உடையும், உண்ண உணவும் இல்லாமல் தவிக்கும் வேளையில் கலை என்று கதைபேசித் திரிகின்றீர்; கவியென்றும் கம்பனென்றும் காலம் கழிப்பதற்குப் புவியில் இன்று நேரமில்லை புகல்கின்றேன் புகல்கின்றேன்' என்று ஆவேசத்தோடு ஆடியே தீர்த்துவிட்டார். இந்த மூவருக்கும் அன்று நான் விடை சொல்லியிருக்கக்கூடும். ஆனால் வீண்வாதத்தை வளர்க்க விரும்பவில்லை. 'சரிதான் நீங்கள் சொல்வது' என்று சிரித்து மழுப்பிவிட்டு அன்றிரவு வீடு திரும்பிவிட்டேன்.

ஆனால் வீடு திரும்பியபின், அதன்பின் பலநாளாக இந்த வாதங்கள் என் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டே இருந்தன. உண்மைதானே. கங்கைக் கரையிலே பிறந்த ராமகதை, காவேரி தீரத்தில் வந்து நிலைத்திருப்பானேன். வடநாட்டு ராமன் தென்னாட்டுத் தமிழர் இதயத்திலே இடம்பெறுவானேன். மனிதனாகப் பிறந்து மனிதனாகவே வாழ்ந்த அந்தச் சக்கரவர்த்தித் திருமகனை இங்குள்ளார் தெய்வமாக்கி, சிலை செய்து கும்பிட்டு வணங்குவானேன். இந்த அற்புதம் எல்லாம் நிகழ்வதற்கு மூலகாரணன் கவிச்சக்கரவர்த்தி கம்பன்தானே. காவிரி தீரத்தில் பிறந்து வளர்ந்து, கலைமகள் அருளால் கருவிலேயே திருவினைப் பெற்ற கம்பன், ராமகதையை, ஆம், அந்த வான்மீகர் சொன்ன கதையைத் தான் கேட்டிருக்கிறான். அவர் உருவாக்கிய ராமனை அன்றைய சோழ மன்னர்களோடு ஒப்பிட்டு நோக்கியிருக்கிறான். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பழந்தமிழ்ப் பண்பிற்கேற்ப வடநாட்டு ராமனைத் தென்னாட்டு வீரனாக மாற்றியிருக்கிறான், அவ்வளவுதான். விடிந்தால், பொழுது போனால், ஒருவருக்கொருவர் ஏசலும், பூசலுமாக வாழ்ந்த மன்னர் மத்தியிலே வளர்ந்தவன் உள்ளத்தில், சொன்ன வாக்கை நிறைவேற்றுவதற்காகத் தன் அருமந்த மைந்தனையே காட்டிற்கு அனுப்புகிற தந்தை, தாய்

உரைசெய தந்தை ஏவ ஒரு சாம்ராஜ்யத்தையே துறந்து காட்டிற்குப் புறப்படும் ஒரு மகன், காடு சென்ற தமையன் நாடு திரும்பும் வரை தவக்கோலம் தாங்கி வாழும் ஒரு தம்பி, காடு சென்ற இடத்திலும், வேடன் ஒருவனையும், குரங்கு ஒன்றையும், அரக்கன் ஒருவனையுமே தன் உடன் பிறந்தானாகச் சேர்த்துக்கொள்ளும் ஒரு வீர புருஷன், எல்லோரும் இடம்பெற்றது வியப்பில்லைதானே.

இன்னும், ஐந்து மனைவியரை அடுக்கடுக்காய் மணந்த அரசர்கள் பரம்பரையை அறிந்த கம்பன், 'ஏகும் நல்வழி அவ்வழி என்மனம்' என்ற உறுதிப்பாட்டில் நிலைத்து, இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்று செவ்விய வரம்பில் நின்று, ஏக பத்தினி விரதனாக வாழ்ந்த அந்த ராமன் பேரிலேயே காதல் கொண்டிருக்கிறான். தன்னுடைய கற்பின் வலி எத்தகையது என்று தெரிந்திருந்தும் அதனால், தானே சிறை மீள்வது தன் நாயகன் வில்லின் ஆற்றற்கு மாசு தருவதாகும் என்று கருதி, அசோகவனத்தில் சிறையிருந்த செல்வி தமிழ்நாட்டுப் பெண்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டல்லவோ என்று கம்பன் நினைத்திருந்தால் அது தவறில்லை தானே. ஆகவேதான் கம்பன் ராமகாவியம் எழுத முனைந்தான்; வெண்ணெய் அண்ணல் வேண்டும் ஆதரவு தந்தான்; காவியம் உருவாயிற்று; காவிய நாயகனும் உருவானான் இந்தக் காவிரிக் கரையிலே.

நாரதர் விரும்பியபடி ராமாயணம் பாடப் புறப்பட்டிருக்கிறார் வான்மீகி. அதையே பாடினான் காளிதாசன் ரகுவம்சத்தில். அந்த ராமனையே துதித்திருக்கிறார்கள் குலசேகரர் போன்ற ஆழ்வார்கள். இவர்களது அடிச்சுவட்டையே பின்பற்றியிருக்கிறான் கம்பன்.

இதனால்தான் காசில் கொற்றத்து 'ராமன் திருக்கதை, ராமாவதாரப் பேர்த்தொடை நிரம்பிய தோமறு மாக்கதை'யாகத் தமிழ்நாட்டில் நிலைத்துவிட்டது. கதை நிலைத்து காவியம்

எழுந்ததின் காரணமாகவே, காவிய நாயகன் வழிபாடும் ஆரம்பித்திருக்கிறது. ரகுராமன், சீதாராமன், கோதண்டராமன், வேங்கடராமன், கல்யாணராமன், சந்தானராமன், வல்வில் ராமன் என்னும் எண்ணற்ற திருப்பெயரால் அந்தக் காவிய புருஷன் அழைக்கப்பட்டிருக்கிறான், என்றால் அதற்கு இந்தக் காவிரிக்கரையில் உள்ள கோயில்களில் உருவாக்கி வைத்திருக்கும் சிற்ப உருவங்களும், அச்சிற்ப உருவங்களை வடித்த சிற்பிகளின் கற்பனையுமே காரணம். தஞ்சை ஜில்லாவில் காவிரி தீரத்தில் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் ஒவ்வொரு விஷ்ணுகோயிலிலும் ராமனுக்குத் தனி சன்னதி உண்டு. சில இடங்களில் சிலா ரூபமாகவும் பல இடங்களில் செப்பு விக்கிரகமாகவும், சீதா லக்ஷ்மண அனுமத் சமேதனாய் ராமன் நின்று கொண்டிருக்கிறான். தஞ்சை ஜில்லாவில் வடுவூர் ராமனும், தில்லை விளாகம் ராமனும் பிரசித்தமான வர்கள். தில்லை விளாகம் ராமன் அலங்கரிக்கப்பட்ட பெரிய மேடையில் சர்வாலங்கார பூஜிதனாக லக்ஷ்மணனுடனும் சீதையுடனும், அனுமனுடனும் நின்று கொண்டிருக்கிறான். மாயூரம் திருவாரூர் பாதையில் உள்ள முடிகொண்டான் என்ற பெரிய ஊரில் உள்ள ஒரு சிறிய கோயிலிலும் ராமன் சீதா லக்ஷ்மணரோடு நின்று கொண்டிருக்கிறான்.

இவனையும் கண்டு தரிசித்துவிட்டு இன்னும் கொஞ்சம் தெற்கே போய் மேற்கே திரும்பினால் நன்னிலத்துக்கு வந்து சேரலாம். இந்த நன்னிலத்துக்கும் வடமேற்கே நாலு மைல் தொலைவில் அடம்பர் என்று ஒரு சிற்றூர் இருக்கிறது. அந்த ஊர் பாடல் பெற்றது. பாடல் என்றால் ஏதோ சம்பந்தரோ அல்லது அப்பரோ, இல்லை திருமங்கை ஆழ்வார் தாமோ பாடியது அல்ல. அந்த ஊரில் வழங்கும் பாடல் இதுதான்.

**ஆயிரம் வேலி அதம்பார்**
**ஆனை கட்டும் தாள்**
**வானைமுட்டும் போர் – அதில்**
**ஆறுகொண்டது பாதி**

**துறுகொண்டது பாதி – அதனால்**
**கொட்டாங்கச்சியிலே நெல்லு**
**கொடுங்கையிலே வைக்கோல்.**

இந்தப் பாட்டைப் படித்துவிட்டால் ஊர் நிலைமை தெரிந்துவிடும். எங்கு பார்த்தாலும் ஒரே குட்டிச்சுவர்தான். கல்யாண ரங்கநாதர் கோயில் எங்கிருக்கிறது என்றால், ஒரு கள்ளிக்கோட்டை ஓடு போட்ட ஒரு கொட்டகையைக் காட்டுவார்கள். அர்ச்சகருக்காகக் காத்திருந்து சாவி பெற்று கதவைத் திறந்து கோயிலுக்குள் நுழைந்தால் அங்கு ஒரு கோதண்டராமன் எதிரே நிற்பான். பக்கலிலே லக்ஷ்மணனும் சீதையும் நிற்பார்கள். நான் பார்த்த ராமன் சிலைகளுக்குள்ளே சிறந்தது இதுதான். அதனால்தான் அந்த ராமனையே அட்டைப் படமாகப் பார்க்கிறீர்கள். "அந்தமில் அழகன்", "அல்லையாண்டமைந்த மேனி அழகன்", "ஆடவர் பெண்மையை அவாவும் தோளினான்" என்றெல்லாம் பாடுகிறானே கம்பன் அதெல்லாம் இந்த அழகனைக் கண்டபின் தானோ என்னவோ. ராமனை உருவாக்கும் சிற்பிகள் அவன் கையில் கோதண்டத்தையும் அம்பையும் வைக்கமாட்டார்கள். வைக்க மறந்து போய்விடுகிறார்கள் என்றில்லை; வில்லை ஏந்திய கையைக் காட்டிவிட்டு பார்ப்பவர்கள் வில்லைக் கற்பனைப் பண்ணிக் கொள்ளட்டுமே என்று விட்டுவிடுவார்கள் அவ்வளவுதான். ஆனால் இன்றைய ரஸிகர்கள் இருக்கிறார்களே அவர்கள் அந்த வில்லேந்திய கரத்தில் வில் வைக்கத் தவறுவதில்லை. வில்லை எவ்வளவு கேவலமாக வைப்பார்கள் என்பதை முடிகொண்டான் ராமன் கையில் வைத்திருக்கும், அதாவது இவர்கள் திணித்திருக்கும் வில்லும் அம்புமே சான்று பகரும். தில்லைவிளாகத்தில் வில் பரவாயில்லை என்றாலும் அம்பை இப்படி போலீஸ்காரனைப் போல் ராமன் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டாம் என்று சொல்லத்தோன்றும். அடம்பர் ராமரின் கையில் உள்ள அம்பு உரிய அளவுக்கு அதிகமே என்றாலும் அவர் கையில்

தாங்கியிருக்கும் கோதண்டம் நல்ல அழகுடன் அமைந்திருக்கிறது. அதில் கட்டியிருக்கும் மணி ஒலிக்கும்போது - ஏன் ஒலிக்காத போதுமே - அந்தக் 'கருமணியின் நெடிய சிலை கண, கண, கண என்றே கம்பனுடன் சேர்ந்து பாடும்.'

இந்த அற்புதமான சிற்ப வடிவங்களுக்கெல்லாம் காலத்தால் முற்பட்டது என்று நான் கருதுவது திருச்சேறையில் உள்ள ராமன் சீதை சிலைகளைத்தான். திருச்சேறை கும்பகோணத்திற்குக் கிழக்கே பத்து மைல் தூரத்தில் உள்ள ஊர். அங்கு சாரநாதர் கோயிலில் வைத்திருக்கும் ராமனும் சீதையும் அழகுத் திருவுருவங்கள். செந்தாமரைக் கண்ணோடும், செங்கனி வாயினோடும், சந்தார் தடம்தோளொடும், தாழ் தடக்கைகளோடும், அம்தார் அகலத்தொடும் இருக்கும் வீரன் அவன். சிற்ப வடிவங்களுக்கு அழகு தரும் அந்தத் திரிபங்க நிலை அளவுக்கு மேற்படாமல் அற்புதமாக அமைந்திருக்கிறது. பக்கத்தில் நிற்கும் இராமானுஜன், இராமன் சீதையை உருவாக்கிய சிற்பியின் சிருஷ்டி அல்ல. இதைச் சொல்ல வெள்ளெழுத்து வேண்டாம். எல்லாவற்றிற்கும் மேலாக சீதை நிற்கின்ற ஒயில், அவள் உடுத்தியிருக்கும் உடை, அணிந்திருக்கும் அணியெல்லாம் அழகுக்கு அழகு செய்கின்றன. அன்று சீதையைப் பஞ்சவடியில் ராமன், பக்கலில் கண்டபோது சூர்ப்பனகை சொன்னாளே

**கண்பிற பொருளில்ச் செல்லா**
**கருத்தெனின் அஃதே; கண்ட**
**பெண்பிறந்தேனுக் கென்னில்**
**என்படும் பிறருக்கு**

என்று, அதையே சொல்ல வேண்டியிருக்கிறது நாமும் இன்று. மேலும் அங்குள்ள ராம லக்ஷ்மணர் கையிலிருந்து வில்லையும் (ஆம் புதிதாக வைக்கப்பட்டவைகளைத்தான்) நீக்கிவிட்டுப் பார்த்தால்தான் அந்தச் சிலைகளின் முழு அழகும் தெரியும். இந்த ராமனை எல்லாம் பாாக்க வேண்டும் என்ற ஆவலை

உங்கள் உள்ளத்தில் நான் தூண்டியிருந்தால் என் முயற்சியில் வெற்றி பெற்றவனாவேன்.

இன்னும் எத்தனையோ ராமர்களைக் கண்டிருக்கிறேன், இந்தக் காவிரிக்கரையில். கடைசியில் பெறுதற்கரிய பெரும் பேறு பெற அந்த ஒப்பிலிஅப்பன் சந்நதிக்கே வந்தேன். அர்ச்சகரை அர்ச்சனை ஒன்று செய்யச் சொன்னேன். பெருமாளின் கல்யாண குணங்களை எல்லாம் அடுக்கடுக்காய்ச் சொல்லிக் கொண்டு வந்தவர், 'காவிரி தீர ரஸிகாய நமா ஓம்' என்றும் அர்ச்சித்தார். என்ன அழகான பட்டம். கங்கைக் கரையில் பிறந்து காவிரி தீரத்தைத் தேடிவந்த இந்தக் காவிய நாயகனை காவிரி தீர ரஸிகன் என்று அழைக்காமல் வேறு என்ன பெயரிட்டு அழைப்பது. ஆம். இந்தக் காவிரி தீர ரஸிகனை உருவாக்கியவன் அந்தக் காவிரி தீர ரஸிகமணியான கம்பன்தானே. மேலும் காவிரிதீர ரஸிகமணியை நினைக்கும் போது அந்தப் பொதியை முனிவர் அமரர் ரஸிகமணியுமே நம் கண்முன் வந்து விடுகிறாரே. ஆம், ராமனுக்கு, கம்பனுக்கு, ரஸிகமணிக்கு எல்லாம் நமது வணக்கம் உரியதுதானே.

❖ ❖ ❖

# 5 கம்பன் பிறந்த ஊர்

தமிழ்நாட்டின் சைவ வைணவச் சண்டை பிரசித்தம். கருது செம்பொன்னின் அம்பலத்திலே கடவுள் நின்று நடிக்கும். காவிரித் திரு நதியிலே கருணை மாமுகில்துயிலும். என்று ஒரே பாட்டிலே பாடத் தெரிந்த புலவர்களைப் படைத்திருந்தாலும், அந்த சிவன், அந்த விஷ்ணு அவர்களின் பக்தர்களுக்குள்ளே பூசல்களுக்குக் குறைவேயில்லை. திருவானைக்கா சைவர், ஸ்ரீரங்கத்துக் கோயில் மதில்மேல் மூக்கைத் நீட்டிய காக்கையைப் பார்த்து, ஓ! சைவ காக்கையே, சைவ காக்கையே, அப்படித்தான், இந்தப் பெருமாள் கோயிலை இடித்துத் தள்ளு என்று கூறின கதை நமக்குப் புதிதல்ல. அத்தோடு ஆலமுண்டான் எங்கள் நீலகண்டன் என்று சொன்ன சைவப் புலவனைப் பார்த்து, ஆம் அன்று ஆலமுண்டபோது எங்கள் பெருமாள் அந்த ஆலமுண்ட கண்டனையும் கூட உண்டான் என்றெல்லாம் ஒரு வைணவர் பேசினார் என்பதும் நாம் அறிந்ததே. இந்தப் பூசல் வளர்ந்திருக்கிறது தமிழ்நாட்டில் ஒரு காலத்தில். நம்முன்னோர் ஊர் தோறும் கோயில் கட்டினார்கள். ஈஸ்வரன் கோயில் எழுந்தது ஒரு புறம் என்றால் மற்றொருபுறம் பெருமாள் கோயிலும் எழுந்திருக்கிறது. என்றாலும் கோயில்களும் அடுத்தடுத்து இருக்காது. ஒன்றை ஒன்று ஒட்டியே இருக்கும்.

கொள்ளிடத்திற்கும் காவிரிக்கும் இடையில் அமர்ந்த தீவிலே ஸ்ரீரங்கமும் திருவானைக்காவும் உருவாயிற்று என்றால், இரண்டு கோயிலுக்கு இடையில் உள்ள தூரம் இரண்டு மைலுக்கும் குறைதான். ஆனைக்கா அண்ணல் மேற்கே நோக்கி நின்றால், அவருக்கு நேரே காலை நீட்டிக் கொண்டு அலக்ஷியமாக பள்ளி கொண்ட ரங்கநாதர் அறிதுயில் அமர்ந்திருப்பார். நாயக்க மன்னர்கள் கட்டிய சிவன் கோயில்களில் எல்லாம் இலிங்கம் இருக்கும். கர்ப்பக் கிருஹத்தின் வெளிச்சுவரிலே மேற்கே பார்க்க. ஆம் சிவலிங்கத்தினைத் திரும்பிக் கூடப் பார்க்காத பெருமாளையே நிறுத்தி இருப்பார்கள். இப்படி இவர்கள் நிற்கிறார்களே என்று கண்டுதான் ஒரு சில பக்தர்கள் ஒரு கோயில் மதில்களுக் குள்ளேயே இரண்டு பேரையும் பிரதிஷ்டை செய்து வைத்துப் பார்த்திருக்கிறார்கள். பிரபலமான சிதம்பரம் கோயிலில் நடராஜன் சந்திக்கு அருகிலேயே கோவிந்தராஜப் பெருமாளுக்கும் சந்நிதி உண்டு. சிக்கல் சிங்கார வடிவேலவரோ தந்தை வெண்ணெய் வண்ணப் பெருமானுக்கும், தாய்மாமன் நவநீத கிருஷ்ணனுக்கும் இடத்தை ஒழித்துக் கொடுத்துவிட்டுத் தான் கொஞ்சம் ஒதுங்கியே நின்று கொள்கிறார். இப்படி, இன்னும் சில கோயில்கள் தமிழ்நாட்டில் இருக்கிறது என்றாலும் இருவருக்கும் இடையில் உள்ள வெளி மட்டும் குறையவில்லை.

இந்த நிலையில் ஓர் ஊரில் இரண்டு கோயில்கள். ஒன்று சிவன் கோயில் மற்றொன்று பெருமாள் கோயில். பெருமாள் கோயில் கிழக்கே பார்த்து, சிவன் கோயில் மேற்கே பார்த்து வழக்கமாக கிழக்கே பார்த்து நிற்கும் சிவனும் மைத்துனன் பேரில் உள்ள கோபதாபத்தையெல்லாம் விட்டு மேற்கே பார்க்கத் திரும்பி, பெருமாளுக்கு எதிராக நிற்கிறார். இரண்டு கோயிலுக்கும் இடையில் இரண்டு மூன்று பர்லாங்கு இருந்தாலும், இருவருடைய சந்நிதித் தெருவும் ஒரே தெருதான். சிவன் கோயில் மேலவீதியும் பெருமாள் கோயில்

கீழவீதியும் ஒரே தெருதான். நிரம்பச் சொல்வானேன். திருவனந்தலிலிருந்து முக மலர்ந்து எழுந்திருந்தால் பெருமாள் சிவன் முகத்தில்தான் விழிக்க வேண்டும். சிவனும் அப்படியே. இப்படி அமைத்திருக்கிறார்கள் ஓர் ஊரில் சோழநாட்டில்! அந்த ஊர் தான் அழுந்தூர். அந்த ஊர்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பிறந்த ஊர்.

தமிழ்நாட்டில் கம்பன் தான் பிறக்க தக்கதொரு சிறு ஊரைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறான். நல்ல சைவ குலத்திலே பிறந்தவன் கம்பன். இறை மிடற்று இறை, திங்கள் மேவும் செஞ்சடைத்தேவன், பாதி மதி சூடி என்றெல்லாம் இறைவனைப் பாடிப் பாராட்டத் தெரிந்தவன் எப்படி விஷ்ணுவின் அவதாரமாக அமைந்த ராமனை

**மூலமும் நடுவும் ஈறும் இல்லதோர்**
**மும்மைத்தாய**
**காலமும் கணக்கும் நீத்த**
**காரணன் கைவில் ஏந்தி**
**சூலமும் திரியு சங்கும்**
**கரகமும் துறந்து, தொல்லை**
**ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்**
**விட்டு அயோத்தி வந்தான்**

என்று பாராட்டத் தெரிந்தான் என்றால், அவனுக்கு ஒரு அருமையான காவியத்தை எழுத முனைந்தான் என்றால் அது இந்த ஸ்தலத்தின் மகிமை தானோ என்னவோ! இவ்வளவோடு நிற்கவில்லை. சிவன் பெரியவன் விஷ்ணு பெரியவன் என்று சண்டை போட்டுக் கொள்பவர்களுக்கு எல்லாம்

**அரன் அதிகன் உலகளந்த அரி அதிகன்**
**என்று ரைக்கும் அறிவில்லார்**

என்றெல்லாம் பட்டம் சூட்டி விடுகிறான். எவ்வளவு நல்ல சமரச பாவத்தை வளர்த்திருக்கிறான் கம்பன். அப்படி அவன்

வளர்க்க உறுதுணையாக நின்றிருக்கிறது இந்த ஊர். கம்பன் பிறந்த ஊர் என்று இந்த ஊர் பெருமைப்படுகிறது போலவே இந்த ஊரிலே பிறந்தோமே நாம் என்று கம்பனும் பெருமைப்படலாம் என்று தோன்றுகிறது எனக்கு.

கம்பனைப் பற்றிய விவாதங்கள் எத்தனை எத்தனையோ என்றாலும், அவன் பிறந்த ஊர் திருவழுந்தூர் என்பதைப் பற்றி இன்றுவரை விவாதமே இல்லை. இதை பேராசிரியர் வையாபுரி பிள்ளையவர்கள்கூட மாற்றிச் சொல்லக் காணோம்.

நாராயணன் விளையாட்டெல்லாம் என்ற பாடல் திருவழுந்தூரில் வாழ்ந்தவன் கம்பன் என்று தான் கூறுகிறது என்றால்

**கம்பன் பிறந்த ஊர்**

**..**

என்ற பாடல் கம்பன் பிறந்த ஊர் இந்த திருஅழுந்தூர் என்றே அறுதியிட்டு உணர்த்தி விடுகிறது. வேதங்கள் அறைகின்ற உலகெலாம் என்று அந்த ஊரில் கோயில் கொண்டிருக்கும் வேதபுரி ஈஸ்வரனைப் பாடிய வாயிலேயே

**தாய் தன்னை... அறியாத கன்றில்லை**

என்று அங்கே இருக்கும் அமருவியப்பன் பெருமாளையும் பாடியிருக்கிறான் கம்பன். இந்த அத்தாட்சி போதாதா நமக்கு.

இந்த ஊர் மாயவரம் என்னும் பிரபலமான மாயூரத்தினுக்குத் தென்மேற்கே மூன்று மைல் தொலைவில் குத்தாலத்துக்குத் தென்கிழக்கே இருக்கிறது. இப்போது ரயில்வேக்காரர்கள் கூட ஒரு சின்ன கொடி வீட்டை (Flag Station) அங்கு வைத்திருக்கிறார்கள். அத்தோடு அழுந்தூர் கம்பன் மேட்டுக்கு இங்கே இறங்குங்கள் என்று ஒரு பெரிய போர்டு வேறே எழுதித் தொங்கவிட்டிருக்கிறார்கள். ஊர் அந்த ரயில்வே ஸ்டேஷனிலிருந்து இரண்டு மைல் தூரத்தில்

இருக்கிறது. கம்பன் பிறந்த ஊரைக் காண சும்மா ரயிலில் இருந்து இறங்கிவிட்டால் மட்டும் போதாது. காலில் தெம்பு உள்ளவர்கள் எல்லாம் நடக்கத் தயாராக வேணும். இல்லை கொம்பில்லாத மொட்ட மாடுகள் பூட்டிய வண்டிகளில் ஏறி ஊர் சென்று சேர வேண்டும்.

ஊர் செல்லுமுன் ரயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கே ஓடும் காவிரி நதியிலே இறங்கி குளித்துக் கொள்ளலாம். இதைத் தவற விட்டவர்கள் ஊரை அடுத்துள்ள ஒரு குளத்தில்தான் குளிக்க வேண்டும். ஆனால் குளமும் நமக்கு வேண்டாம் என்பவர்கள் கூட கிணற்றில் குளித்துக் கொள்வதில் அதிக வேலை இல்லை. வேதங்களும் விரைந்தவர்களும் அஷ்டதிக்குப் பாலகர்களும் பூஜித்த இடம். அந்த வேதபுரி ஈஸ்வரர் கோயில் சம்பந்தர் பாடிய தேவாரம் உரை

**தொழுமாறு வல்லார் துயர்தீர நினைந்து**
**எழுமாறு வல்லார் இசைபாட விம்மி**
**அழுமாறு வல்லார் அழுந்தை மறையோர்**
**வழிபாடுசெய் மாமட மன்னினையே.,**

என்ற அழகான பாடலைப் பாடிக்கொண்டே கோயிலை வலம் வரலாம். அம்பிகை சௌந்தரவல்லியையும் கண்டு தொழலாம். ஆனால் இந்தக் கோயிலை விட்டு வெளிவரும் போது இதுக்கு ஏதோ ஏழைப் பங்காளன் கோயில் என்ற எண்ணத்தோடேதான் வெளியே வருவோம். பணத்தில் மட்டுமல்ல, ஏழ்மை; சிற்பச் செல்வத்திலுமே ஏழ்மையானதுதான்.

ஆனால் இந்தக் கோயிலை விட்டு வந்து சந்நிதித் தெருவில் கண்ணை மூடிக்கொண்டு நேரே நடந்தாலும் நம்மை பெருமாள் கோயில் வாசலில் கொண்டு வந்துவிட்டுவிடும். ஆனால் கோயில் இடத்திலே வருவதற்கு முன் கண்கள் திறந்து புஷ்பகரணியையும் சுற்றிக் கொண்டு வந்தால்

ஊஞ்சல் மண்டபத்திற்கு வராது போகலாம். இனி பெருமாள் கோயிலுக்குள் நுழையலாம். நுழைந்ததும் ராஜ கோபுரத்தின் இடப்பக்கத்திலே இரண்டு மாடங்கள் இருக்கும். அந்த மாடங்களில் இருப்பவர்கள் கம்பர்களும் அவர் மனைவிகளும் இதென்ன கம்பர்கள் என்று கேட்காதீர்கள். இங்குள்ளவர்களைக் கேட்டால் கம்பனையும் அவர் மனைவியையும் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அந்த சதிபதிவிக்கிரஹங்கள் பின்னம் அடைந்துவிட்டது. அதனால் புதிய சிலைகளை பண்ணி அவைகளையும் வைத்திருக்கிறோம் என்பார்கள். சரி இருக்கட்டும். நான் அறிந்த மட்டிலும் நாம் படித்த அறிவுகளைக் கம்பனுக்கும் இந்தச் சிலைக் கம்பனுக்கும் யாதொரு ஒற்றுமையும் இல்லைதான். இல்லாவிட்டாலும் தமிழ்நாட்டில் கம்பன்கள், கம்பன் போன்றவர்கள் பலர் தோன்றத்தானே வேண்டும். அதற்கு அறிகுறியாக ஒன்றுக்கு இரண்டாக இங்கே கம்பன் நின்று கொண்டிருக்கிறானோ என்று எண்ணத் தோன்றுகிறது. இனி காலதாமதம் செய்ய நேரமில்லை, நேரே விறுவிறு என்று துவஜஸ்தம்பம், இரண்டாவது கோபுர வாயிலில் மகாமண்டபம் எல்லாவற்றையும் கடந்து பெருமாள் சந்நிதிக்கே வந்துவிட வேண்டியதுதான். அங்கு வேலை நிறைய இருக்கிறது. அர்த்தமண்டபத்தின் படிக்கட்டுகளின் பேரில் ஏறுகின்றபோதே கிட்டத்தட்ட பன்னிரண்டு அடி உருவில் நின்றிருக்கும் கோலத்தில் ஆஜானுபாகுவாக நல்ல சிலை உருவில் பெருமாள் சேவை சாதிப்பார். அணிந்திருக்கும் ஆடைகளும் அணிகளும் அவன் திருவுக்கும் திருவாகிய செல்வன் என்பதைப் பறைசாற்றும். தலையிலே தங்கக் கிரீடம், இடையிலே தசாவதார பெல்ட், கழுத்திலே சஹஸ்ரநாமமாலை, தோள்களிலே வாகுவலயம், மார்பிலே லக்ஷ்மி. எல்லாம் தங்கத்தால் ஆனவை. நெற்றியிலோ வைரத்திருநாமம். இப்படியே பொன்னாலும் மணியாலும் வைத்து இழைத்திருக் கிறார்கள் பக்தர்கள். ஆனால் இவைகளை எல்லாம் விட அழகொழுகும் சாந்தமும் அற்புதமான புன்னகையுமே தவழும்

அந்த திருமுகத்தில். இந்த மூலமூர்த்திக்கு முன்னாலேதான் பசு வந்து அணையப் பெற்ற ஆமருவி அப்பன் செப்புவிக்ரக உருவில் காட்சி கொடுப்பார். ஸ்ரீதேவி பூதேவி இருவரும் உடனிருப்பார்கள். மூவரும் ஆடை அணிகளால் தங்களை நன்றாக மூடி இருப்பார்கள். நகைகள் எல்லாம் ஒரே சிவப்புக் கல் மயம். இந்த நகைகளையோ உடைகளையோ களைவது பெருமாள் திருமேனியின் அழகை எல்லோரும் கண்டுவிட முடியாது. காணவிடமாட்டார்கள் அர்ச்சகர்கள். ஆனால் இந்த அர்ச்சகர்கள் முதுகுக்கும் மண்காட்டியவன் நான். ஆடி பதினெட்டில் ஆமருவியப்பன் காவேரிக்கு திருமஞ்சனத்திற்கு எழுந்தருளிய போது நானும் உடன் போனேன். அங்கு மறைந்திருந்து மேனியின் முழு அழகையும் கண்டு களித்தேன். சிற்பி அளவோடே பெருமாளுக்கு அணிகளை அணிவித்திருக் கிறார். நீண்டுயர்ந்த மணிமகுடம் தலையை அலங்கரிக்க சங்கு சக்ரதாரியாய் அபயஹஸ்தத்துடன் அழகாக நிற்கிறார். கையில் கதை வைத்திருக்கும் அழகையே பார்த்துக் கொண்டிருக்கலாம். இவனை ஆமருவி நின்ற மயக்கும் அமரர் கோமான் என்று பாடினாரே அந்தத் திருமங்கை மன்னன், அவனது எல்லைதான் என்ன.

கர்ப்பக் கிரகத்தில் இப்படியெல்லாம் ஊரைப் பற்றியும் கோயிலைச் சுற்றியும் புராண வரலாறுகள் பின்னிக் கிடக்கின்றன.

கோயிலை விட்டு வெளியே வந்து, தேர்வீதியில் நடந்தால் கீழ் வீதியில் எண்ணிறந்த முஸ்லீம்கள் குடியிருப்பதைக் காண்பீர்கள். இந்த முஸ்லீம்கள் சைவ வைணவர் சண்டை ஈடுபடுகிற தில்லை. தமிழ்நாட்டின் கவிச்சக்கரவர்த்தி கம்பனை சைவ .வைணவர்களுக்கு மாத்திரம் விட்டு விடுவதில்லை கம்பன் திருவிழாவிலே, வந்து கலந்து கொள்வார்கள். கம்பரைப் புகழ்ந்து பாடுவார்கள். ஏன் கம்பன் கவிதையைப் பற்றிப் பேசும் முஸ்லீம் இளைஞர்களும் உண்டு என்றால் அதிசயிக்கத்தானே செய்வீர்கள்.

இந்த முஸ்லீம் சகோதரர்கள் இருக்கும் ரதவீதியையும் தெருவையும் கடந்து மேற்கே வந்து தெற்கே திரும்பினால், ஒரு சிமிண்ட் போர்டு இருப்பதைப் பார்ப்பீர்கள். கம்பன் மேடு என்று எழுதியிருக்கும். பக்கத்தில் புதை பொருள் ஆராய்ச்சியாளர் நிறுத்தியிருக்கும். இரண்டு போர்டுகள் இருக்கும். கம்பன் காலத்தைப் பற்றி இரண்டு அபிப்பிராயம். ஒன்று ஒன்பதாம் நூற்றாண்டு என்று, இல்லை பன்னிரெண்டாம் நூற்றாண்டுதான் என்று. இந்தப் புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள், இருவருக்கும் விரோதம் இல்லாமல் சராசரி விகிதம் பார்த்து தென்காசி வழக்காக பத்தாம் நூற்றாண்டில் பிறந்த கம்பன் என்று போட்டிருப்பார்கள். பொற்காசுகள் சில முன்பு கிடைத்ததாகச் சொல்கிறார்கள். தங்க சாலை அங்கிருந்திருக்கலாம் போலும். இதை வைத்துக் கொண்டு கம்பன் பொன் வாணிக மரபில் வந்தவன் தான் என்று ஆராய்ச்சியாளர் சொன்னால் ஆச்சர்யமில்லைதான். இந்தப் புனிதமான இடத்திற்குச் சென்ற நான் அங்கிருந்து சில ஒட்டாஞ்சல்லிகளை கம்பன் ஞாபகமாக எடுத்து வந்திருக்கிறேன். இப்படியே அங்கு செல்லும் தமிழர்கள் எல்லாம் செய்தால் மேடு, சமதளம் ஆகிவிடும் சில வருஷங்களில்.

இந்தக் கம்பன் பிறந்த ஊரில் கம்பனுக்கு ஒரு கலைக்கோயில் கட்ட முயற்சி நடக்கிறது. கவர்னர் பிரகாசா அஸ்திவாரக் கல் நாட்டிவிட்டே சென்றுவிட்டார்கள். தமிழ் மக்கள் தான் அஸ்திவாரத்தின் மேல் கட்டிடம் எழுப்ப முனையவில்லை. பங்குனி உத்திரத்தில் கம்பன் திருநாள் நடக்கும் நாளில் இதற்கான உருப்படியான முயற்சிகள் நடந்தால் நல்லது. அதைச் செய்வார்களா தமிழ் தலைவர்கள்.

பி.கு. இப்போது கம்பன் மேட்டில் கட்டிடம் எழுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

❖❖❖

# 6 கம்பன் கவிச்சித்திரம் வர்ணனை

சந்தனமும், சண்பகமும், தேமாவும், தீம்பலமும், ஆசினியும், அசோகமும், கோங்கும், வேங்கையும், கரவையும் விரிந்து நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌமொடு மனம் கமழ்ந்து, பாதிரியும் பாவை ஞாழலும் பைங்கொன்றையொரு பிணி அவிழ்ந்து பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொரு முகை சிறந்து. வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாட தண்தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிவது நடுவன் ஒரு மாணிக்கச் செய்குன்றின்மேல் விசும்பு துடைத்து பசும்பொன் பூத்து வண்டு துவைப்பத்தன் தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டார் என்பது ஒரு வர்ணனை. இதே கதியில் ஒரு பொழிலிடத்தே தலைவி ஒருத்தியும், தலைவன் ஒருவனும் கொடுப்பாரும், அடுப்பாரும் இன்றி ஊழ்வினை வயத்தால் எதிர்ப்பட்டு காதல் வயப்படுவதை மேலும், மேலும் வர்ணிக்கிறார் நல்லிசைப் புலவர் நக்கீரர் தமது இறையனார் அகப்பொருள் உரையில்.

இதைப் போன்ற ஒரு காட்சியைத்தான் கவிச்சக்கரவர்த்தி கம்பரும் வர்ணிக்க முற்படுகின்றார். தனக்கே உரிய ஒரு அற்புத முறையில் மாலைப்பொழுதில் மெல்லிய தென்றல்

மிதிலை மாநகரில் வீசுகிறது. மாடங்களில் அமைந்த மணிப்பூங்கொடிகள் அசைந்து ஆடுகின்றன. அரச வீதியில் இரு மருங்கும் வரிசையுள் விளங்கிய வீடுகளினின்றும் எழுந்து வீணை ஒலி வாயில் வழியே தவழ்ந்து வருகின்றது. முத்துப்போல் பூத்து, மரகதம் போல் காய்த்து, பவளம் போல் பழுத்து இலங்கும் கமுக மரத்தில் கட்டிய ஊஞ்சலில் பருவ மங்கையர் இருந்து பாடி ஆடுகின்றனர். பூஞ்சோலைகளில் பளிங்கு போன்ற பந்துகளை வீசிப் பிடித்து பாவையர் விளையாடுகின்றனர். அரங்குகளில் நடனமாதர் கைவழி நயனம் செல்ல கண்வழி மனமும் செல்ல களி நடனம் புரிகின்றனர். இத்தகைய இன்பம் நிறைந்த அந்த அணிவீதியில் கோமுனிவர் முன்னே செல்ல, தம்பி பின்வர மஞ்செனத் திரண்ட கோல மேனியும், கஞ்ச மொத்தலர்ந்த கண் வாய்ந்த இராமன் செல்கின்றான்.

அப்பெரு வீதியிலே அமைந்த கன்னிமாடத்தின் மேடையிலே மிதிலை மன்னன் மகளாகிய சீதை மெல்லிய பூங்காற்றின் இனிமையை நுகர்ந்து இன்புறுகிறாள். அருகே அமைந்த அழகிய துறையில் அன்னம் பெடையொடு ஆடக்கண்டு களிக்கின்றாள். அந்நிலையில் கன்னிமாடத்தின் மருங்கே செல்லும் கமலக்கண்ணன், மேடையிலே இலங்கும் மின்னொளியை நோக்குகின்றான். பருவமங்கையும் எதிர்நோக்குகின்றாள். இருவர் கண் நோக்கும் இசைகின்றது. பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணிப்புற்ற இராமன் காதலை மனத்தில் கரந்து வீதியின் வழியே சென்று மறைகின்றான். இது கம்பனது வர்ணனை.

இந்த வர்ணனையில் இயற்கை எழிலுற வர்ணிக்கப்படுகிறது. அதற்குமேல் காதலர் உள்ளம் ஒன்றோடொன்று கலந்து உறவாடும் நிலையும் அழகாக வர்ணிக்கப்படுகிறது. கம்பனது காவியத்தில் பலபல அம்சங்கள் நம் உள்ளம் கவர்கின்றது. அதன் கதை அமைப்பு

காவியக் கட்டுக் கோப்பு, பாத்திர சிருஷ்டி, நாடக பாவம், உவமை அழகு முதலியவை நிரம்பிய காவியம் அது. எப்படி எந்தெந்த கோணத்திலிருந்து ஆராய்ந்தாலும் கம்ப இராமாயணத்தில் சிறந்த அம்சம் கவிதை. அந்தக் கவிதை மூலம்தான் எவ்வளவு அழகு அழகான கற்பனைகள், வர்ணனைகள்; எத்தனை எத்தனை அற்புத சித்திரங்கள். கம்பன் இயற்கையைத் தான் சிறப்பாக வர்ணிக்கிறான் என்றில்லை. ஒரு ஆடவனையோ இல்லை ஒரு பெண்ணையோ வர்ணித்தாலும் சரி, ஒரு காதல் காட்சியை, ஒரு சோக பாவத்தை, ஒரு போர்க்களக்காட்சியை, ஓர் அவலநிலையை, எதை வர்ணித்தாலும் அதில் அவனது தனித்தன்மை விளங்கும்படி செய்யும் பேராற்றல் பெற்றவனாக இருக்கிறான். அதனால்தானே கல்வியில் பெரியவன் கம்பன், கவிச்சக்கரவர்த்தி கம்பன் என்றெல்லாம் பாராட்டப்பட்டு வந்திருக்கிறான். இன்று எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஒரு சில நிமிடங்களில் கம்பனது வர்ணனை அழகு முழுவதையும் சொல்லிவிட முடியாது தான் என்றாலும், அவன் வர்ணனைகள் வெறும் இயற்கை வர்ணனைகளாக மட்டும் அமையாமல் மனித உள்ளத்தில் உருவாகும் உணர்ச்சிகளையும், கலந்து விளங்கும் ஒரு அற்புதப் படைப்பாக எப்படி இருக்கின்றன என்பதற்கு மட்டும் ஒன்றிரண்டு சான்று தர விரைகின்றேன்.

காவியங்களில் சூரிய உதயம், சூரியஸ்தமனம், சந்திரோதயம் முதலிய சிறப்பான வர்ணனைகளாக அமைவதுண்டு. தங்கம் உருக்கி தழல் குறைத்துத் தேனாக்கி எங்கும் பரப்பியதோர் இங்கிதமாக இலங்கும் பாரதியின் சூரியோதயம் நம் நெஞ்சை விட்டு அகலாத சித்திரம் அன்றோ. அதைப் போலவே கம்பனும் வானரங்கில் நடம் புரியும் கண்ணுதல் வானவன் கனகச்சடை விரித்தால் என விரிந்து கதிர்களால் காலைச் சூரியன் ஒளிவீசி வெளிவருவதை வர்ணிக்கிறான். அதுபோலவே அவனது காவியத்தில் அந்திதரு சித்திரமும், அழகோவியமாகவே அமைந்துவிடுகின்றது

என்றாலும் அவனுடைய சந்திரோதய வர்ணனை ஒன்று மிகவும் சிறப்பாக இருக்கிறது.

ராமன், லக்ஷ்மணன், சீதை மூவரும் அயோத்தியை விட்டுக் காடு நோக்கிச் செல்கிறார்கள். மூவரும் காட்டிற்குள் நுழைந்து போகிறபோது, வழி மறிப்பதுபோல இருள் தொடர்கிறது. அவர்களோடு தோழமை பூண்ட இருள் அப்படித் தடுக்கும்போது, தேவர்கள் சும்மா இருப்பார்களா? அந்த இருளைத் துரத்த ஒரு கை விளக்கு எடுத்துக்கொண்டு வந்து விடுகிறார்கள். அப்படி வானவர்கள் ஏந்தி வந்த விளக்குப் போலவே சந்திரன் உதயமாகிறான் என்று பாடுகிறான்.

**பொய் வினைக்கு உதவும் வாழ்க்கை**
**அரக்கணப் பொருந்தி, அன்னார்**
**செய்வினைக்கு உதவும் நட்பால்**
**செல்பவர் தடுப்ப தேய்க்கும்**
**மை விளக்கியதே அன்ன**
**வயங்கு இருள் துரத்த வானம்**
**கை விளக்கு எடுத்த தென்ன**
**வந்தது கடவுள் திங்கள்**

என்பது கம்பன் வர்ணனை. இது வெறும் வர்ணனையாக மட்டும் இருக்கவில்லை. ராமாவதார ரகஸ்யத்தையே வெளிப்படுத்தும் வகையில் அல்லவா வர்ணனை வடிவெடுக்கிறது. புரந்தரனார் செய்த பெருந்தவந்தானே பரந்தாமனை ராமனாக அவதாரம் செய்யும்படி செய்திருக்கிறது. அந்த உண்மையையே மனித உள்ளத்தோடு விளக்கும் வகையில் வர்ணிக்கிறான் கம்பன்.

இன்னும் பெண்ணின் பெருமையை எப்படி எப்படி எல்லாமோ வர்ணனை செய்து இருக்கிறார்கள் கவிஞர்கள். மலையிடைப் பிறவா மணி, அலையிடப் பிறவா அமுது என்றெல்லாம் சிலப்பதிகார காப்பிய நாயகியை இளங்கோ

வர்ணிக்கிறார். ஆனால் கவிச்சக்கரவர்த்தி சிறையிலிருந்த செல்வியாம் சீதை வர்ணனை விண்நோக்கி உயருகிறது. அசோகவனத்தில் சிறை இருந்த சீதையைச் சென்று காண்கிறான் அனுமன். அவள் காதலுக்கு இரங்கி நிற்பதையும் பார்க்கிறான். அவனைத் துரும்பென மதித்து சீதை பேசும் பேச்சையும் கேட்கிறான். அத்தனையும் பார்த்துவிட்டு கிஷ்கிந்தைக்குத் திரும்பி, ராமனிடம் அச்சிறை இருந்தாளின் ஏற்றத்தைக் கூறுகிறான். எத்தனை எத்தனை விதமாகவோ சோகத்தில் மூழ்கி இருக்கும் நங்கையாய் சீதையின் கற்பொழுக்கத்தால் தேவ மகளிர் எல்லாம் உயரிய நிலையை அடைந்து விடுகிறார்கள். இதுவரை சிவபிரானின் திருமேனியில் இடது பக்கத்தில் மாத்திரம் இடம்பிடித்திருந்த பார்வதியே சிவபெருமானது தலைமேலேயே ஏறி உட்கார்ந்து கொள்கிறாள். தாமரை மலரில் இருந்த லக்ஷ்மி தேவியும் திருமாரின் மார்பில் இருந்தவள் இப்போது திருமாலின் ஆயிரக்கணக்கான முடிகளுக்கும் மேலாக ஒரே வியாபகமாக வீற்றிருக்கிறாள். அவ்வளவு உயர்வு வந்துவிட்டது பெண்மைக்கு என்று முழங்குகிறான்.

**சோகத்தால் ஆயநங்கை**
**கற்பினால் தொழுதற்கொத்த**
**மாகத்தார் தேவிமாரும்**
**வான்சிறப்பு உற்றார், மற்றைப்**
**பாகத்தாள் இப்போது ஈசன்**
**மகுடத்தாள் பதுமத்தாளும்**
**ஆகத்தாள் அல்லள், மாயன்**
**ஆயிரம் மௌலி மேலாள்**

என்பது கம்பனது வருணனை. ஆம் பெண்ணின் பெருந்தக்க யாவுள என்னும்படியாக அல்லவா அமைந்திருக்கிறது இந்தக் கற்பனையும் வருணனையும்.

❖❖❖

# 7 மலைக்குலமயில்

காவியம் ஆனாலும் சரி, நாடகமானாலும் சரி, சிறுகதை என்றாலும் பெரிய நாவல் என்றாலும் அவையெல்லாம் பல பல பாத்திரங்களைக் கொண்டே நடைபெற வேண்டியிருக்கும். கதையை உருவாக்கும் முக்கிய பாத்திரங்களை காவிய நாயகன் காவிய நாயகி என்பர். இவர்களை சுற்றிப் பலபல சம்பவங்களைச் சித்தரிக்க உதவுபவர்களே சிறிய பாத்திரங்கள். சாதாரணமாகக் கதையோ காப்பியமோ எழுதுபவர்கள் தங்கள் திறமையை எல்லாம் காவிய நாயகன் அல்லது காவிய நாயகியை உருவாக்குவதிலேதான் காட்டுவர். மற்ற பாத்திரங்களை ஏதோ அவசரக் கோலம் அள்ளித் தெளி என்பது போல கொஞ்சம் முன்னும் பின்னுமாகத்தான் உருவாக்கியிருப்பர். ஆனால் கவிச் சக்கரவர்த்தி கம்பன் போன்ற மகாகவிகளோ பிரதான பாத்திரங்களை உருவாக்குவதற்கு எத்தனை அக்கறை காட்டுகிறார்களோ அத்தனை அக்கறையையும் உப பாத்திரங்கள் உருவாக்குவதிலும் காட்டுவர். அப்படி உருவாக்கப்பட்ட ஓர் அரிய பாத்திரம்தான் இராம கதையில் கிஷ்கிந்தை மன்னனான வாலியின் மனைவியாக உருவாக்கப்பட்டிருக்கும் தாரை.

தாரை என்று ஒரு பாத்திரப் படைப்பு இல்லாமலேயே காப்பியம் உருவாகியிருக்கக் கூடும். கதையின்

கட்டுக்கோப்புக்கு அந்தப் பாத்திரம் அவசியமான பாத்திரமே அல்ல என்றாலும் சிறியன சிந்தியாத வாலியின் பெருங்குணத்தைச் சித்தரித்துக் காட்டுவதற்கு உதவும் ஒரு பாத்திரமாக தாரையை அமைக்கிறான் கம்பன். மேலும் பெண்ணின் பெரு நலத்தை எல்லாம் விளக்க எழுந்த ஒரு சிறந்த பாத்திரமாகவே அவள் அவனது காவியத்தில் உருப் பெறுகிறாள்.

காவிய அரங்கிலே அவளை அழைத்து வரும் போதே தாரை அமிழ்தத்தில் தோன்றிய வேயிடைத் தோளினாள் என்று மிக அழகாகவே அறிமுகப்படுத்துகிறான். சுக்ரீவன் தன் சகோதரனான வாலியைப் போருக்கு அழைக்க, அந்தச் சவாலை ஏற்றுப் போருக்கெழுந்த வாலிய இடை நின்று தடுக்கிறாள். அவனது மனைவி தாரை. ஆனால் வீரருள் வீரனான வாலியோ விடுவிடு என்றே அவளை உதறிவிட்டு முன் நடக்கிறான். அப்போதுதான் அவளை மலைக்குல மயில் என்று அருமையாக அழைக்கிறான். மேலும் தனது மனைவியை மயில் இயல், குயில் மொழி என்றே போற்றுகிறான். வானரமாகப் பிறந்தவளே ஆனாலும் வாலிக்கு அவள் மயிலின் சாயலையும் குயிலின் குரலையும் பெற்றுள்ள கோமள சுந்தரியாகவே தோன்றுகிறாள். ஆதலால் தானோ என்னவோ அமிழ்தில் தோன்றியவள் என்றே கம்பன் நமக்கு அவளை அறிமுகம் செய்து வைக்கிறான். அத்தகைய மனைவியிடம் தன் வீரப் பிரதாபத்தையெல்லாம் அளக்கிறான் வாலி. மந்தர நெடுவரை மத்தாக்கி வாசுகியாம் கயிறு கொண்டு பாற்கடலைக் கடைந்த தேவர்களும் அசுரர்களும் அழைத்து நின்ற போது தான் ஒருவனாகவே இருந்து கடல் கடைந்த தன் கரதலங்களின் வலியை எல்லாம் எடுத்து உரைக்கிறான். மேலும் தன்னை 'எதிர்ப்பவர் பலத்தில் பாதியைத் தான் பெறும், வரத்தையும் நினைவூட்டுகிறான். ஆதலால் நீ துயர் ஒழிக மலைக்குலமயிலே என்றே பேசிவிட்டு விரைய முனைகிறான்.

ஆனால் தாரையோ அன்புள்ள மனைவியாக மட்டும் இருக்கவில்லை. அறிவு படைத்த மதி மந்திரியாகவும் அல்லவா இருந்திருக்கிறாள். ஆதலால் முன் கூட்டியே ஒற்றாடி, இதுவரை பதுங்கிக் கிடந்த சுக்ரீவன் இன்று போருக்கு எழும்பக் காரணம் என்ன? ஏதோ ஒரு நல்ல துணை அவனுக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறாள். அப்படித் துணையாக வந்திருப்பவர் சாதாரண ஆளில்லை, மிக்க ஆற்றல் படைத்த ராமனே என்பதையும் தெரிந்திருக்கிறாள். ஆதலால் ஆயவனுக்கு இன் உயிர் நட்பு அமைந்து இராமன் உன் உயிர் கோடலுக்கு உடன் வந்திருக்கிறான் என்றும் சொல்லித் தடுக்க முனைகிறாள். ராமன் இப்படி சுக்ரீவனுக்குத் துணை வந்திருக்கிறான் என்று தாரை சொன்னதும் அந்த ராமனாம் சக்கரவர்த்தித் திருமகனைப் பற்றி முன்னர் தான் கேட்டிருந்த செய்திகளை எல்லாம் நினைக்கிறான் வாலி. தருமத்தின் தனிமை தீர்ப்பவன், அறத்தின் மூர்த்தியாக விளங்கிடும் இராமனுக்கு எத்தகைய ஒரு பெரிய அவலத்தைத் தேடி வைத்துவிட்டாள் தன் துணைவி என்று அவள் பேரிலேயே திரும்புகிறான். சொல்லுகிறான் வாலி, ஆம் வாலி சொல்வதாகக் கம்பன் கூறுகிறான்..

**உழைத் வல் இருவினைக்கு**
**ஊறு காண்கிலாது**
**அழைத்து அயர் உலகினுக்கு**
**அறத்தின் ஆறெலாம்**
**இழைத்தவற்கு, இயல்பல**
**இயம்பிஎன் செய்தாய்**
**பிழைத்ததனை பாவி உன்**
**பெண்மையால் என்றான்.**

அடிபாவி, உன் பெண் புத்தி உன்னை விட்டுப் போகவில்லையே. அப்படியே எதையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் பெண்ணாய் பிறந்திருப்பாய் அல்லவா,

தருமத்தின் வேலியான ராமனைப் பற்றி சொல்லத் தகாதவற்றை எல்லாம் சொல்கிறாய் என்று கொதித்தே எழுகிறான். ராமன் எவ்வளவு பெரிய அரசன். அவனா இந்தப் புன் தொழில் குரங்காம் சுக்ரீவனை நாடி வந்து நட்பு கொண்டாடப் போகிறான். அத்தோடு தம்பியர் வாழ்வே தன் வாழ்வு என மதித்து ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே தன் தம்பிக்கு கொடுத்துவிட்டு வந்திருக்கும் ராமன் என் தம்பியும் நானும் போட்டுக் கொண்டிருக்கும் தாயாதிச் சண்டையில் இடைபுகுந்து என் தம்பிக்கு உதவ வருவானோ? என்று ராமனின் நேர்மையில் மிக்க நம்பிக்கை உடையவனாக இருக்கிறான்.

**தம்பியர் அல்லது தனக்கு வேறு உயர்**
**இம்பரில் இலது என எண்ணி ஏய்ந்தவன்**
**எம்பியும் யானும் உற்று எதிர்ந்த போரிடை**
**அம்படை தொகுக்குமோ அருளின் ஆழியான்**

என்றெல்லாம் தாரையை எதிர்த்துப் பேசிவிட்டு என் தம்பி சுக்ரீவனின் உயிர் குடித்து, அவன் உடன் வந்தால் யார் என்றாலும் அவர்களையும் அழித்து விரைவில் வருவேன் கலங்காதே என்று சொல்லித் தேற்றிவிட்டுப் போருக்குப் போகிறான். தாரையும் அதன்பின் உரைவிளம்ப அஞ்சி ஒதுங்கிக் கொள்கிறாள் என்று கம்பன் அவள் அரங்கத்தில் தோன்றும் முதல்காட்சியை முடித்துக் கொள்கிறான்.

வாலிக்கும் சுக்ரீவனுக்கும் போர் நடக்கிறது. இருவரும் போர் எதிரும்போது யார் வாலி யார் சுக்ரீவன் என்று வேற்றுமை அறிய இயலாது போய்விடுகிறது ராமனுக்கு. ஆதலால் திட்டமிட்டபடி வாலி மீது அம்பு எய்ய இயலவில்லை, அவனுக்கு. அதனால் சுக்ரீவன் போரில் நலிந்து திரும்புகிறான். அவனை கொடிப் பூ மாலை ஒன்று அணிந்து திரும்பவும் போருக்குச் செல்லச் சொல்கிறான் ராமன். அப்படியே செல்கிறான் சுக்ரீவன். அச்சமயத்தில் மறைந்து

நின்ற ராமன் வாலி மீது அம்பெய்து அவனை வீழ்த்துகிறான். அதன்பின் வாலியும் மண்மீது விழுந்து விடுகிறான். மறைவிடத்தை விட்டு வெளிவந்த ராமனைக் கண்டு வாலி பேசும் பேச்சுக்கள் எல்லாம் ராமன் புகழைக் குறைக்கின்றன. அதை எல்லாம் விளக்கில் பெருகும். கடைசியில் ராமன் தன் சுய உருவை வாலிக்குக் காட்ட

**மேல் ஒரு பொருளும் இல்லா**
**மெய்ப்பொருள் வில்லும் தாங்கி**
**கால்தரை தோய நின்று**
**கட்புலனுக்கு உற்றது அம்மா**

என்று நிறைந்த மனத்தோடு வாலி முத்தி எய்துகிறான். அதுவரை போர்க்களத்துக்கு வராத தாரை அதன்பின் தான் வருகிறாள். வாலியின் ஆற்றலையும் அவனது சிவ பத்தியையும் நினைந்து நினைந்து புலம்புகிறாள்: தனக்கு ஆர்பாகனை ஆசைதோறும் உற்று வணங்காநாள் மலர்தூவி வணங்கும் அவனது தெய்வ பக்தி எல்லாம் இனி என்ன ஆவது என்றே புலம்புகிறாள். இடையிடையே தான் தடுத்தும் கேளாமல் போர்க்களம் புகுந்த வாலிக்காக மிகவும் வருந்துகிறாள் என்றாலும், ராமனைப் பற்றிக் குறைவாகவே பேசக் காணோம். அது அவள்தன் சிறந்த பண்பையே குறிக்கிறது. இத்துடன் இரண்டாவது காட்சி முடிகிறது.

இதன்பின் நாம் தாரையை மூன்றாவது தடவையாகவும் சந்திக்கிறோம். சுக்ரீவபட்டாபிஷேகம் நடத்தி பின் கார்காலம் வந்துவிட்டதால் சீதையைத் தேடுவதை கார்காலம் கழியும் மட்டும் ஒத்தி வைக்கிறார்கள். சுக்ரீவன் கிஷ்கிந்தையில் அரண்மனையில் வசிக்கிறான். உல்லாசமான கேளிக்கைகளில் திளைக்கிறான். கார்காலம் கழிந்து விடுகிறது. சுக்ரீவன் வந்து ராமனைப் பார்க்கவில்லை. இராமனோ அவனைச் செய் நன்றி கொன்றவனாகவே கருதுகிறான். லக்ஷ்மணனை அனுப்பி சுக்ரீவனை அழைத்துவரச் செல்கிறான். லக்ஷ்மணனுக்கும் ஒரே

கோபம். அப்படி கோபித்த நிலையில்தான் கிஷ்கிந்தை அரண்மனையில் நுழைகிறான். வானவர்கள் எல்லாம் நடுங்குகின்றனர். அமைச்சனான அனுமன் நினைக்கிறான். இலக்குவனது கோபம் தணிப்பதற்கு தாரை ஒருத்தியால்தான் முடியும் என்று. ஆதலால் அவளையே இலக்குவனை வரவேற்க அனுப்புகிறான். வான மகளிர் புடை ஆட தாரை வருகிறாள். அத்தனை பெண்களையும் ஒருங்கே கண்ட லக்ஷ்மணன் நாணுகிறான். மாமியர் குழுவில் வந்த மைந்தன் என நிற்கிறான். ஆனால் தாலியிழந்து மற்ற நகைகளும் அணியாது உடலை எல்லாம் நன்றாகப் போர்த்திக் கொண்டு கைம்மைக் கோலத்தோடு வந்து நிற்கும் தாரையைக் கண்டவுடனே லக்ஷ்மணனுக்கு சித்ர கூடத்தில் கைம்மைக் கோலத்தில் வந்த தன் தாய்மார் நினைவு வருகிறது. ஆதலால் அவர்களை நினைந்து அப்படியே கண்ணீர் சிந்துகிறான். அதன்பின் தாரை தன் கணவனின் சகோதரன் சுக்ரீவன் இழைத்த பிழைக்காக வருந்திப் பேசுகிறாள். அதற்காக ராம லக்ஷ்மணர்களின் மன்னிப்பையே வேண்டுகின்றாள். இலக்குமணன் சீற்றம் தணிகிறான். அதன்பின்தான் அனுமன் வருகிறான். சுக்ரீவனிடம் அழைத்துச் செல்கிறான். கதை மேலே நடக்கிறது.

தாரையை நமக்கு அறிமுகப்படுத்துவது எல்லாம் இந்த மூன்று காட்சிகளில்தான். ஆனால் இந்தச் சிறு பாத்திர சிருஷ்டியை கம்பன் எவ்வளவு சிறப்பாகச் செய்திருக்கிறான் என்று தெரிய ஆதிகாவியம் வான்மீகர் காட்டிய தாரையையும் பார்க்க வேணும். பிலத்தினுள் வாலி மடிந்துவிட்டான் என்ற எண்ணத்தோடு சுக்ரீவன் நாடு திரும்பி மற்றைய வானரங்கள் விரும்பியபடி பட்டம் ஏற்றுக் கொண்டதுமே சுக்ரீவனது காதற் கிழத்தியாக தாரை அமைந்துவிடுகிறாள். அவள் சுக்ரீவனிடத்து இரண்டாவது மனைவியாக இருந்தனள் என்று வால்மீகத்தில் சொல்லப்படாவிட்டாலும் இரண்டு மூன்று இடங்களில் சொல்லாமல் சொல்கிறார். ராமனிடம் தனது கஷ்டங்களை

எடுத்துரைக்கும் சுக்ரீவன் மாயாவியைத் துரத்திச் சென்ற வாலி பிலத்துனுட் புகுந்து வராதபோது நான் திரும்பி வந்து மக்கள் விருப்பப்படி பட்டம் ஏற்றுக் கொண்டேன். அப்போது கிஷ்கிந்தை அரசோடு ருமை, தாரை என்னும் இருவரையும் பெற்றேன் என்கிறான் சுக்ரீவன். இதன் பின்னர் இலக்குவன் சீற்றத்தோடு வருவதைப் போல பேசும் பேச்சிலே ராமனது அருளால் அல்லவா சுக்ரீவன் சிறந்த புகழையும் சாஸ்வதமான வானரர் வரவையும் ருமையையும் என்னையும் பெற்றுளான் என்றே கூறுகிறாள். இதையெல்லாம் விட மோசமாக இவர்களை எதிர்நோக்கி வரும் தாரையை வான்மீகர் வர்ணிக்கிறபோது கொஞ்சமும் சந்தேகத்திற்கு இடம் வைக்காமலே பேசி வருகிறார்.

**ஸாபுஷ்கலந்தீ**
**மதவிஹ்வலக்ஷி**
**பிலெம்ம காஞ்கீருண**
**ஹேமஸதேகிக**
**ஸலக்ஷனாலக்ஷ்மண**
**ஸந்நிதானம்**
**ஜகாமதாவி**
**நமிதாங்கயஷ்டி**

என்பதே அவரது வர்ணனை.

சுக்ரீவனது அந்தப்புரத்திலிருந்து வந்த தாரை கலவியால் உண்டான தளர்ச்சியோடு தடுமாறிக் கொண்டே வந்தாள், மதுபானத்தினால் தழுதழுத்த நோக்கினை உடையவளாக இருந்தாள். அரைநூல் வடம் இழுப்புண்டு வரும் நிலையில் படுக்கையில் கிடந்த படியே தேவதையாய் ஸம் போக சின்னங்கள் காணலாம் படி வந்தாள் என்பதே. வான்மீகர் தரும் தாரைக்கோலம். இந்தத் தாரையை அடியோடு மாற்றுகிறான் கம்பன்.

மங்கல அணியை நீக்கி
  மணி அணிதுறந்து வாசக்
கொங்கு அலர் கோதை மாற்றி
  குங்குமம் சாந்தம் தெவிட்டாப்
பொங்கு வெம்முலைகள்
  புகக்க் முத்தொடு மறையில் போற்றது
நங்கையைக் கண்ட வனப்பில்
  நயனங்கள் பனிப்ப நின்றான்.

அத்தோடு

பார்குலாம் முழுவெண்திங்கள்
  பகல்வந்த படிவம் போலும்
ஏர்குலாம் முகத்தினாளை
  இறைமுகம் எடுத்து நோக்கி
தார்குலாம் அலங்கல்மார்பில்
  தாயரை நினைந்துணர்ந்தான்

என்றல்லவா கம்பன் கூறுகிறான். இந்த ஒரு சிறு மாற்றத்தால் தாரை என்னும் பாத்திரத்தை எவ்வளவு உயர்ந்த பாத்திரமாகச் செய்திருக்கிறான் அவன்.

இந்த மாற்றத்தினைச் சுட்டிக் காட்டிய பொழுது வடமொழிப் புலவரின் வானரம் என்னும் விலங்கினுக்கு ஒழுக்கம் என்று ஒன்று இருத்தல் இயலாது. அத்துடன் அண்ணன் மனைவியைத் தம்பி சேர்த்துக் கொள்வது வானரர்களது வழக்கமாயிருத்தல் கூடும். கணவன் இறந்த பின் மறுமணம் செய்து கொள்வது வான்மீகர் காலத்து சாஸ்திர சம்மதமாக இருத்தல் கூடும் என்றும் சொல்கின்றனர், என்றாலும் வான்மீகர் அடி ஒற்றி தாரையை வர்ணிக்காமல் கம்பனுக்கு ஏன் தாரையை ஓர் உத்தம பத்தினியாக ஆக்க வேண்டும் என்று தோன்றியிருக்கிறது? அதில்தான் தமிழ் நாட்டின் பெருமையெல்லாம் அடங்கிக் கிடக்கிறது என்று

தோன்றுகிறது எனக்கு. தாடகை சூர்ப்பனகை போன்ற அரக்க மகளிர் ஆனாலும் சரி, ருமை, தாரை போன்ற வானர மகளிர் ஆனாலும் சரி, அவர்களுமே பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்னும் வள்ளுவர் கூறும் பெண்மை நலம் தருகிற புகழையே ஏற்றவர்களாய் வாழும் நெறியையே உருவாக்கிக் காட்ட வேண்டும் என்று எண்ணியிருக்கிறான். இதை விளக்க இன்னும் ஒரேயொரு சிறிய உதாரணம் கொடுத்தால் போதும்.

காவியத்தோடு அவயவ சம்பந்தமில்லா கதைதான் அகலிகை, விமோசனம். கல்லாய்க் கிடைத்த அகலிகை ராமனது பாதத்துளியால் சாபம் நீங்கிப் பழைய பெண்ணுரு பெறுகிறாள். அவள் கதையைச் சொல்கிறார் விஸ்வாமித்திரர், அகலிகை என்னும் அழகிய பெண்ணை தேவேந்திரன் காதலிக்கிறான். ஆனால் கோதம முனிவர் அவளை மனைவியாய் அடைகிறார். பிறன்மனை நயவாத பேராண்மை படைத்திராத இந்திரன் அகலிகையை எப்படியும் அடைய விரைகிறான். நடுயாமத்திற்கு முன்பே கோழியைக் கூவ வைத்து கோதமனை பர்ணசாலையினின்று ஆற்றங்கரைக்கு அகற்றுகிறான். பின்னர் கோதமன் உருவிலேயே பர்ணசாலையில் புகுந்து அகலிகையைப் புணர்கிறான். திரும்பி வந்த கோதமன் நடந்ததை அறிந்து இருவரையும் சபிக்கிறார். இக்கதையை வான்மீகி சொல்லும் போது புதிதாக வந்திருப்பவன் இந்திரன் என்று அறிந்த பின்னும் அவனுடன் கூடி மகிழ்ந்திருந்தாள் என்பார். தேவராஜருதுசலஹ என்பது வான்மீகர் வாக்கு. இதையே திருவானைக்கால் புராணம் உடையார்

**இந்திரனே நமை இருக்கின்றானோ**
**புந்தியின் அரும்பிய பொருவில் ஓதையார்**

என்று கூறுவார். ஆனால் கம்பனோ அகலிகையை நெஞ்சினால் பிழைப்பிலாள் என்றே கூறுகிறான். புதிதாக கோதமன் உருவில் வந்த இந்திரன் புதிய ஆள் என்று பயிர்ப்பு

உணர்த்தியபோது தக்கது தகாதது இன்ன இன்னது என்று உணராதே தாழ்ந்தனர் என்பான்.

**புக்க அவளொடும் காமப்**
**பதுமணமது வின்தேறல்**
**ஒக்க உண்டிருந்த வோரும்**
**உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்**
**தக்கது அன்று என்ன ஓராள்**
**தாழ்ந்தனள் இருப்பதாழா**
**முக்கனான் அனைய ஆற்றல்**
**முனிவனும் முருகி வந்தார்**

என்பதே கம்பன் பாட்டு. இப்படியே நெடுகிலும் பெண்மை நலம் பழுதுபடா வகையில் காவியம் எழுதிய கம்பன் தாரையை கைம்மைக் கோலத்தில் வந்தவளாக உருவாக்கிக் காட்டுவது வியப்பல்ல தானே.

❖❖❖

# 8 கம்பனும் டி.கே.சியும்

**ரா**மனும் அனுமனும் ஒருநாள் அயோத்தியிலிருந்து வெளியூருக்குப் புறப்படுகிறார்கள். போகிற வழியில் ஒரு ஆற்றைக் கடக்க வேண்டியிருக்கிறது. ஆற்றிலோ வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. படகு இல்லாமல் ஆற்றைக் கடக்க முடியாது என்று படுகிறது ராமனுக்கு. ஆனால் அனுமனோ ராமா, ராமா என்று சொல்லிக்கொண்டே ஆற்றில் இறங்கி விடுகிறான். ஆற்றில் ஓடிய வெள்ளமும் அப்படியே ஸ்தம்பித்து நின்று ஓர் ஆள் போகக்கூடிய அளவிற்கு வழி அமைத்துக் கொடுக்கிறது. அனுமன் ஆற்றைக் கடக்கிறான், ராம நாம ஸ்மரணை செய்து கொண்டே. ராமனும் அவன் பின்னாலேயே இறங்கி, நடந்தே கடக்கிறான் ஆற்றை.

இப்படி ஒரு கதை. கதை உண்மையாய் இருக்க வேண்டும் என்பதில்லை. ராமனால் சாதிக்க முடியாத ஒன்றை, ராமநாமத்தில உள்ள அளவற்ற நம்பிக்கை காரணமாக, அனுமனால் சாதிக்க முடிந்தது என்பதுதான் விஷயம். ராம பக்தியில் அத்துணை அசையாத நம்பிக்கை அனுமனுக்கு.

இதேபோலத்தான் கம்பனுக்கும் டிகேசிக்கும் இருந்த உறவு. டிகேசிக்குக் கம்பன் கவிதையில் இருந்த நம்பிக்கை, கம்பனுக்கே அவன் கவிதையில் இருந்திருக்கும் என்று

உறுதியாகச் சொல்ல முடியாது. கம்பன் புகழ் பரப்பும் பணியில் ஈடுபட்டவர்கள், ஈடுபடுகிறவர்கள், ஈடுபட இருக்கின்றவர்கள் எத்துணையோ பேர். ஆனால் அத்தனை பேருடைய சேவையையும் விஞ்சி நிற்கிறது ரசிகமணியின் சேவை. இருவருக்கும் ஏற்பட்டுள்ள உறவு, ஏதோ ஊனிற்கலந்த உறவாக இல்லை. உயிரில் கலந்த உறவாக உணர்வில் கலந்த உறவாக இருக்கிறது. அதனால் தான் அத்துணை ஈடுபாடு, ஆர்வம் எல்லாம், அவர்களுக்குக் கம்பன் கவிதையில். இந்த உறவைப் பற்றி எழுதும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது எனக்கு.

ஐம்பது, அறுபது வருஷத்திற்கு முன்னால் தமிழ் படிக்கிறது, பாடம் கேட்கிறது என்றெல்லாம் இருந்தது தமிழ்நாட்டில். சிறந்த வித்துவான்களை அடுத்து, அவர்களுடனேயே குருகுலவாசம் செய்து வருஷக்கணக்காகத் தமிழ் படித்தவர்களும் உண்டு. மேலும் புலவர் பலர் கூடி ஒரு வள்ளலின் ஆதரவில் வளர்ந்து, பாட்டுக்களும் சீட்டுக் கவிகளுமாக பொழுதுபோக்கிய காலமும் உண்டு. அங்கெல்லாம் அடிபடுவது யமகம் திரிபுகள்தாம். அந்தச் செய்யுள்களுக்குப் பொருள் உரைப்பது என்பதே பெரிய வெற்றி என்று எண்ணியிருந்தவர்களும் உண்டு. இப்படிப்பட்ட புலவர் குழாத்திடையே எல்லாம் கம்பன் தலை காட்டியதில்லை. கம்பன் என்ன எல்லாம் வெள்ளைக்கவி பாடியவன் தானே, யமகம் திரிபுகள் எல்லாம் பாடவில்லையே என்று ஒதுக்கியே வைத்திருந்தார்கள். இவர்களைவிட, சைவப் பெருமக்கள், கம்பன் காவியம் பக்கமே வரமாட்டார்கள். அக்காலத்தில் கம்பராமாயணம் படித்தவர்கள், முக்காடிட்டுக் கொண்டே படித்தார்கள். காலம் மாறியது. ஆனால் வேறொரு திசையை நோக்கி.

முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன், ஆங்கிலம் நம் நாட்டில் ஆதிக்கம் பெறலாயிற்று. ஆங்கிலம் கற்ற தமிழர்கள்

எல்லாம், தமிழில் என்ன இருக்கிறது? என்று நினைக்க ஆரம்பித்தார்கள். வீட்டிலிருந்தாலும் சரி, வெளியில் ரயில் பயணம் செய்தாலும் சரி, ஆங்கிலப் புத்தகங்களையே வாங்கிப் படித்தார்கள். நண்பர்களோடு அளவளாவிய போதெல்லாம் ஆங்கிலத்திலேயே உரையாடினார்கள். மேடைகளிலே ஏறி, எனக்குத் தமிழ் பேச வராது என்று சொல்லி ஆங்கிலத்திலேயே பேசினார்கள். அதுதான் கவுரவம் என்று கூடக் கருதினார்கள். இத்தனைக் காரியங்களுக்கும் உலை வைத்தார் டிகேசி.

தமிழ்ப் புலவர்கள் எல்லோரையும் தம் பக்கம் இழுத்துக் கொள்வதில் டிகேசி பூரண வெற்றி பெறாவிட்டாலும் ஆங்கிலம் கற்ற மேதைகளை எல்லாம், தமிழ் மொழியில், தமிழ்க் கவிதையில், கம்பராமாயணத்தில் மோகம் கொள்ளச் செய்தார். கவிதையைக் கருவியாக வைத்து, அடிப்படைத் தத்தவங்களையும், காவிய ரசனைகளையும் அவர்கள் விளக்க ஆரம்பித்த பின்தான், தமிழில் இப்படி எல்லாமா இருக்கிறது? என்று அதிசயித்தார்கள் அநேகர்.

**நதியின் பிழை அன்று**
**நறும்புனல் இன்மை அற்றே**
**பதியின் பிழை அன்று**
**மகன் பிழை அன்று, மைந்த**
**விதியின் பிழை, நீ இதற்கு**
**என்னை வெகுண்டது? என்றான்**

என்ற பாட்டை வைத்து இறைவனின் நியதியை என்றோ விளக்கியதை ஆங்கில மோகமும், சமஸ்கிருதக் காதலும் நிறைந்திருக்கும் திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் இன்றும் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார்கள். ராஜாஜி அவர்களைக் கம்பன் கவியில் ஈடுபடுத்தியதை எல்லாம் தமிழ் உலகம் நன்கு அறியும்.

தமிழ்நாட்டின் கவி உலகில் கம்பன் அன்று முதல் இன்று வரை ஏக சக்ராதிபத்யம் செய்து வருகிறான். பண்டிதரும் பாமரரும் ரசிக்கும் வகையில், அவன் கவிதையைப் பாடுவோர் தொகை பெருகி இருக்கிறது. கம்பன் காவியத்தில் ஈடுபட்டவர்களை எல்லாம் மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். தாமே படித்துச் சுவைத்து, அனுபவித்து அந்தக் கவிதைச் சுகத்திலேயே அமிழ்ந்து கிடப்பவர்கள் ஒரு சாரார். படித்து அனுபவித்ததைப் பலருக்கும் எடுத்துச் சொல்லி தான் பெற்ற இன்பத்தைப் பிறருடனும் பகிர்ந்து மகிழ்பவர்கள் மற்றொரு கூட்டத்தார். இனி, படித்து அறிந்த விஷயத்தை எல்லாம் அற்புதம் அற்புதமாக எழுதி வெளியிட்டு நேரிலே கேட்க வாய்ப்பு அற்றவர்களும் படித்து அனுபவிக்கும்படி செய்யும் ஆற்றல் பெற்றவர்கள் மூன்றாவது கூட்டத்தார். இந்த மூன்று கூட்டத்திலும் அக்ர ஸ்தானம் டிகேசிக்குத்தான். டிகேசி கம்பனைப் படித்தார்கள் என்றால் உண்மையில் அவர்கள்தான் படித்தார்கள். ஏதோ ரயிலுக்குப் போகிற அவசரத்தில், பக்கங்களைப் புரட்டிப் புரட்டி நாவல் படிக்கிற மாதிரி படிக்காமல், ஆர அமர இருந்து ஐம்பது ஆண்டுகளாகப் படித்தார்கள். காண்டம் காண்டமாக, படலம் படலமாக, பாடல் பாடலாக படித்தார்கள். வீட்டில் இருக்கும்போதும் படித்தார்கள், கோர்ட்டிற்குப் போகும்போதும் படித்தார்கள், சட்டசபைக் கூட்டத்திற்குச் சென்றும் படித்தார்கள். விஷயம் பலருக்குத் தெரிந்திருக்கும். டிகேசி அவர்கள் 1927 - 28 இல் சட்டசபை அங்கத்தினராக இருந்தபோது, அங்குள்ள தமிழ் அன்பர்களுக்கு மட்டுமல்ல, ஆந்திர நண்பர்களுக்குமே கம்பன் மோகம் ஏற்படும்படி செய்தார்கள் என்பதும், அதில் ஒரு ஆந்திர எம்எல்ஏ டிகேசியை சட்டசபைக் கட்டிடத்தில் சந்திக்கும் போதெல்லாம் தலைமேல் கைகூப்பி கங்கை இருகரை யுடையான் என்ற பாடலைப் பாடியே வரவேற்பார் என்பதும் பலரும் அறிந்ததுதானே. வீட்டிலே மலேரியாக் காய்ச்சலால் வாடி வதங்கிப் படுக்கையில் கிடந்த காலத்தும் படித்தார்கள்.

அப்போதுதான் தீவிரமாகப் படித்தார்கள். கம்பன் யார்? என்று இனம் கண்டுபிடித்தார்கள்.

கம்பன் பாடல்களை அவர்கள் படிக்கிறது என்றால், அதற்கு நேரம், காலம் என்றெல்லாம் பார்ப்பதில்லை. தனியே இருந்து படிப்பார்கள். காண வந்திருக்கும் நண்பரை உடன் வைத்துக்கொண்டு படிப்பார்கள், பல நண்பர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு படிப்பார்கள். அப்படி அவர்கள் உடன் இருந்து அவர்கள் படிப்பதைக் கேட்டவர்கள், அப்படியே அவர்களிடம் பாடம் கேட்டவர்கள்தான் வட்டத்தொட்டி அங்கத்தினர்கள்.

1924 ம் வருஷம் ஆம் முப்பது வருஷத்திற்கு முன்பே இலக்கிய சங்கம் கூடிற்று திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் டிகேசி அவர்கள் வீட்டில். பல நண்பர்கள், எல்லோரும் ஆங்கிலம் கற்றவர்கள்தான் இலக்கிய சங்கத்தின் அங்கத்தினர்கள். அவர்களை உடன் வைத்துக் கொண்டு கம்பனைப் படித்தார்கள். டிகேசி கம்பன் திருநாள் நடத்தினார்கள். (கம்பனுக்குத் திருநாள் நடத்த வேண்டும் என்று முதல் முதல் திட்டமிட்டவர்கள் அவர்கள்தானே) அதன் பின் சென்னை சென்றார்கள். இந்துமத அறநிலையக் காப்பாளராக இருந்துவிட்டு ஊர் திரும்பியபின், இதே இலக்கிய சங்கம் திரும்பவும் கூடிற்று டிகேசி அவர்கள் வீட்டில். மூன்று நான்கு பேரோடு ஆரம்பித்த கூட்டம் வாரா வாரம் பெருகிக்கொண்டே போயிற்று. முப்பது நாற்பது பேர் இந்த வட்டத்தொட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்வது என்பது வழக்கமாகிவிட்டது. இந்த வட்டத்தொட்டியில் இருந்துதான் டிகேசி அயோத்தியா காண்டம் ஆரண்ய காண்டம் முழுவதையும் முறையாகப் படித்தார்கள். மற்றவர்களுக்கும் பாடம் சொன்னார்கள்.

டிகேசி கம்பன் பாடல்களைப் படித்தார்கள். ஆனால் அதை மற்றவர்களுக்குப் படித்துக் காட்டவில்லை பாடிக்

காட்டினார்கள். கவிதையைப் படிப்பது என்பது அவர்களுக்குப் பிடிக்காத காரியங்களில் முதன்மையானது. கவி என்றால் பாடுவதற்கு என்று அமைந்ததே ஒழிய படித்து ஆராய்வதற்கு என்று ஏற்பட்டது அல்ல என்பது அவர்களுடைய தீர்மானமான அபிப்பிராயம். அதனால்தான், அவர்கள் முன்னிலையில் ஐந்தாறு பேர் இருந்தாலும் சரி, ஆயிரக்கணக்கானவர்கள் இருந்தாலும் சரி, எல்லோரும் அனுபவிக்கும்படி கம்பன் பாடல்களைப் பாடுவார்கள். பாடும்போது தாளலயம் (Rhythm) அறிந்து பாடுவார்கள். பாடும் கவிதையில் ஜீவநாடியான தாளலயத்தை மற்றவர்களும் அறிந்து அனுபவிக்கும் முறையில் பாடுவார்கள். பாடல்களை, பாடல்கள் உள்ள வரிகளை ஒரு தரம் அல்ல, பலமுறை மடக்கி மடக்கிப் பாடுவார்கள். கேட்பவர்கள் எல்லாம் இனிதாக, எளிதாக மனனம் பண்ணிவிடக்கூடிய வகையில் பாடுவார்கள். பாடல்களில் பிரதிபலிக்கும் கம்பனின் இதயத்துடிப்பை எல்லோரும் உணரும்படிப் பாடுவார்கள். அவர்களுடைய பாவம் நிறைந்த சரீரத்தில், ஒரு பாட்டை நிதானமான நடையில் ஆங்காங்கே நிறுத்தி இரண்டு மூன்று தடவை மடக்கி மடக்கிப் பாடுவதைக் கேட்டாலே அந்தப் பாட்டின் பொருள், அதன் அழகு, பாவம் எல்லாம் தெரிவதுடன் நம் கண்முன் ஓர் அற்புதச் சித்திரமே உருவாகும். அப்படித் தோன்றும் சொற் சித்திரங்களைப் பகைப்புலனாக வைத்து உயர்ந்த தத்தவங்களை விளக்கும்போது சுவர்க்கபோக அனுபவமே பெறுவோம் நாம்.

ஒரு சபையில் அவர்கள் பேசுகிறார்களென்றால் கம்பன் அங்கு வராமல் இரான். கம்பன் வருகிறான் என்றால் அவன் பாடல் வருகிறது என்றுதானே அர்த்தம்? பாடல் வந்தால் நல்ல சவுக்கமாகவே வரும். என்னுடைய முதல் அனுபவம் 1925 ஆம் வருஷம் நான் திருநெல்வேலி இந்து கல்லூரியில் மாணவன். அங்கு எங்கள் கல்லூரி மாணவர் கழகத்தின் ஆண்டு விழாவில் டிகேசி பேசினார்கள். நூற்றுக்கணக்கான

மாணவர்கள் உட்கார்ந்து பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோம். ராமனுக்கு மகுடம் சூட்டத் தீர்மானித்துவிட்டார் தசரதர். சிற்றரசர்களும் மந்திரக் கிழவர்களும் இசைந்துவிட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒரே எக்களிப்பு. கோசலையின் தாதிப் பெண்கள் நால்வருக்குச் செய்தி தெரிய வருகிறது. அதைக் கோசலையிடம் சொல்ல விரைகிறார்கள். ஓடுகிறார்கள். அவர்கள் நிலையை வர்ணிக்கிறான் கம்பன். அதைச் சொல்கிறார்கள் டிகேசி. விஷயத்தைத் தெளிவாக்கிவிட்டுப் பாட ஆரம்பித்தார்கள்.

**ஆடு கின்றனர், பண் அடைவு இன்றியே**
**பாடு கின்றனர், பார்த்தவர்க்கே கரம்**
**சூடு கின்றனர், சொல்லுவது ஓர்கிலர்**
**மாடு சென்றனர் மங்கையர் நால்வரே.**

பாட்டைப்பாட ஆரம்பித்ததும் என் பக்கத்தில் இருந்த பள்ளித்தோழன் "கொஞ்சம் வெளியே போய் வருவோமோ?" என்றான். "இல்லை, நீ போய் வா" என்றேன் நான். சரி என்று போய்விட்டான். கல்லூரிக்கு வெளியே உள்ள காப்பி ஹோட்டலுக்குப் போய் காப்பி சாப்பிட்டுவிட்டு, வெற்றிலை பாக்கெல்லாம் போட்டுக்கொண்டு, கொஞ்ச நேரம் வெளியில் நின்றவர்களிடம் அரட்டையும் அடித்துவிட்டு, அரைமணி நேரம் கழித்து திரும்பவும் ஹாலுக்குள் வந்தான். டிகேசி அப்போதும் ஆடுகின்றனர், பண் அடைவு இன்றியே பாடுகின்றனர் என்று ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள். அந்தப் பாட்டை, அந்தப் பாட்டை என்ன அந்தப் பாட்டின் முதலிரண்டு அடிகளைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அன்று எனக்கு இந்தப் பாட்டு மனனம் ஆயிற்று. இன்றும் அந்தப் பாட்டு என் உள்ளத்தைவிட்டு நீங்கவே இல்லை. டிகேசியை நினைத்தால் இந்தப் பாட்டு ஞாபகத்துக்கு வருகிறது. இந்தப் பாட்டைப் பாடினால் டிகேசி என் முன் வருகிறார்கள்.

இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, எண்ணற்ற கம்பன் பாடல்களை, அவர்கள் மேடைமீது நின்று பாடும்போது கேட்டிருக்கிறேன். என்னைப்போல் கேட்டவர்களும் பலர் இருப்பார்கள்.

**கானாள நிலமகளைக் கைவிட்டுப்**
**போனவனைக் காத்துப் பின்பு**
**போனானும் ஒரு தம்பி போனவர்கள்**
**வரும்அவதி போயிற்று என்னா**
**ஆனாத உயிர்விடஎன்று அமைவானும்**
**ஒருதம்பி அயலே நாணாது**
**யானோஇவ் வரசுஆள்வென் என்னே**
**இவ்அரசாட்சி இனிதே அம்மா**

என்பது போன்ற கம்பன் பாடல்கள் எல்லாம், அவர்கள் பாடிக் காட்டியதால், தமிழ் அன்பர்களிடையே பிரசித்தமானவை. இந்தப் பாடலை அவர்கள் பாடிக் காட்டினார்கள் என்றால்; கவிதையில் தாளலயம் எப்படி அமைந்து கிடக்கிறது, அப்படி அமைந்து கிடப்பது காரணமாகவே எப்படி அது கவிதையாகிறது, என்கிற விஷயம் எல்லாம் விளங்கிவிடும்.

நாமும் மேடைகளில் பலர் பேச்சைக் கேட்டிருக்கிறோம். அதிலும் கம்பராமாயணப் பிரசங்கம் என்றால், சொல்ல விரும்பும் பாடலை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து, சொல்லுக்குச் சொல் ஐந்தாறு அர்த்தங்கள் சொல்லி, கேட்பவர்களை எல்லாம் பிரமிக்க வைப்பது என்பதுதான் தமிழ்நாட்டில் நிலவி வந்திருக்கிறது. இன்னும் அந்தப் பழக்கம் இருக்கிறது ஒரு சிலரிடம். இந்தப் பிரசங்கங்களுக்குப் பக்கபலமாக பாரதம் பாட்டு அறாது, ராமாயணம் பொருள் அறாது என்று பழமொழிகூட எழுந்துவிட்டது. ஆனால் டிகேசியின் பேச்சு இப்படிப் பிரசங்கமாகவோ சொற்பொழிவாகேவா இருக்காது. பேச்சில் பதவுரையோ பொழிப்புரையோ கருத்துரையோ வரவே வராது. ஆனால்

சொல்லால் விவரிக்க முடியாத உணர்ச்சிகளை உருவாக்கும் கவிதையின் சொல்லழகு, சந்த அழகு எல்லாம் மெல்ல மெல்லத் தோன்றும். ஏன், கவிதையே அந்தக் கவிதையைப் பாடிய கம்பனே தன்னை விளக்கிக் கொள்வதாகத் தோன்றும். உயர்ந்த கவிதை எப்படித் தெளிவாக இருக்குமோ அப்படியே டிகேசியின் பேச்சும் இருக்கும். எளிமையான நடையிலே பேச்சு, ஆனால் இதயத்தைத் தொட்டுத் தொட்டுப் பேசும் பேச்சு. பேச்சின் மூலம், பேச்சில் வரும் விளக்கங்கள் உதாரணங்கள் மூலம் கம்பன் கவிதையின் உண்மையான வடிவம் எழும் நம் இதயத்துள்ளே. அவர் செய்வதெல்லாம் பேச்சின் மூலம்தான். பெரிய மாயாஜாலமாக இருக்கும்.

ஒருநாள் ஆங்கிலப் பேராசிரியர் டிகேசி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அவருக்கு கம்பராமாயணம் படிக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. அவர் "என்ன சார் கம்பன் கவியே கவி என்றெல்லாம் சொல்லி வருகிறீர்கள். உங்கள் கம்பன் எளிமையாக இல்லையே" என்று கேட்டுவிட்டார். அவ்வளவுதான். எளிமை என்ன என்பதை விளக்க முனைந்துவிட்டார்கள் டிகேசி. விளக்கம் என்றால் ஏதோ வின்னியாசமாக, வெறும் சொல்லால் விளக்கும் விளக்கம் இல்லை.

**வேதியர் தமைத் தொழும்**
**வேந்தரைத் தொழும்**
**தாதியர் தமைத் தொழும்**
**தன்னையே தான்தொழும்**
**ஏதும்ஒன்ற உணர்வு உறாது**
**இருக்கும் நிற்குமால்**
**காதல் என்பதுவும் ஓர்**
**கள்ளின் தோற்றிற்றே**

என்ற பாடலை இரண்டு மூன்று தடவை மடக்கி மடக்கிப் பாடினார்கள். நந்திக் கிராமத்தில் இருக்கிறான் பரதன். ராமன்

குறித்த தவணையில் வரவில்லை. ஆதலால், தன்னுடைய பிரதிக்ஞையின்படி தீ வளர்த்து அதில் குளித்துவிட தீர்மானித்துவிட்டான். சுற்றியுள்ளவர்களோ அவனைத் தடுக்கும் வகை தெரியாமல் மலைத்து நிற்கிறார்கள். இந்த நெருக்கடியான நேரத்தில் ராமன் அனுப்பிய தூதுவன் அனுமன் வந்து சேர்கிறான். ராமன் வந்து கொண்டிருக்கும் தகவலைத் தெரிவிக்கிறான். அவ்வளவுதான். பரதனது உள்ளத்தின் பாரம் நீங்கி, என்றும் இல்லாத ஒரு திருப்தி, களிப்பு, எக்களிப்பு ஏற்பட்டு விடுகிறது. அந்தக் களிவெறியில் அவன் செய்கிற காரியந்தான், வேதியரைத் தொழுவதும், தாதியரைத் தொழுவதும், தன்னையே தொழுவதும் என்றெல்லாம் விளக்கம் கூறினார்கள். காதல் வேகமும் கள்ளின் வெறியும் எப்படி எல்லாம் ஆளை ஆட்டுவிக்கும் என்று குறிப்பிட்டார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல கவிதை என்றாலே எளிமையாகத்தான் இருக்கும். கவிதையில் எளிமை இருந்தாலே அது கம்பன் கவி என்றுதான் அர்த்தம், ஏன் எளிமை என்ற ஒன்றை வைத்தே கம்பன் கவியை இனம் கண்டுபிடித்து விடலாமே என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார்கள். Good poetry is always simple; simplicity is the test of kamban; Kamban is the test of simplicity என்பதுதான் அவர்கள் ஆங்கிலத்தில் அன்று வைத்த முத்தாய்ப்பு.

இந்த வியாக்கியானத்தை நான் நினைக்கும்போதெல்லாம் தனிப்பாடல் ஒன்று ஞாபகத்துக்கு வரும். அந்தப் பாடல் இதுதான்.

**காரென்று பேர்படைத்தாய்**
**ககனத்து உறும்போது**
**நீரென்று பேர்படைத்தாய்**
**நீள்நிலத்தில் வந்ததற்பின்**
**வாரொன்று மென்மயில்நேர்**
**ஆய்ச்சியர்கை வந்ததற்பின்**

**மோரென்று பேர்படைத்தாய்**
**முப்பேரும் பெற்றாயே**

இந்தப் பாட்டை, தனிப்பாடல் திரட்டில் காளமேகம் பாடிய பாட்டு என்று போட்டிருக்கும். இல்லை இது கம்பன் பாட்டுத்தான் என்று சாதிப்பார்கள் டிகேசி. ஏன்? சத்தியம் கூட செய்வார்கள். வேம்புக்கும் பாம்புக்கும் சிலேடை பாடும் காளமேகத்தால் இப்படிப் பாட வரவே வராது. இந்தப் பாடல் எளிமையாக இருப்பதினாலே தான் இதைக் கம்பன் பாடல் என்று முடிவு கட்டுகிறேன். தனிப்பாடல் திரட்டில் காளமேகம் பாடிய பாடல்களோடு சேர்த்துவிட்டால், அந்தப் பாடலில் உள்ள கம்பன் முத்திரை, ஆம், எளிமை என்னும் அதே அற்புதமான முத்திரை தெரியாமலா போய்விடும்? என்பார்கள் டிகேசி நாமும் சரி என்று ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இல்லை என்று சொல்ல நம்மால் இயலவே இயலாது.

டிகேசியின் பேச்சைப் பற்றி இன்னும் என்ன என்ன எல்லாமோ சொல்லலாம். பேச்சுத்தானே அவர்கள் ஜீவன், மூச்சு எல்லாம். முப்பது வருஷ காலமாக நான் அவர்களிடம் கேட்ட பேச்சின் சாரத்தை எல்லாம் முப்பது பக்கங்களில் சொல்லிவிட முடியுமா என்ன?

டிகேசி கம்பன் பாடல்களைப் படித்தார்கள். கம்பன் பாடல்களைப் பற்றிப் பேசினார்கள், கம்பன் பாடல்களைப் பற்றி எழுதவும் செய்தார்கள். அவர்கள் எழுதியதைப் பலர் படித்தார்கள். படித்தவர்கள் அனுபவித்தார்கள், அனுபவித்தவர்கள் அதனால் பயன் பெற்றார்கள்.

ஆனால் கம்பன் பாடல்களுக்குத் தாம் விளக்கம் எழுதுவதைப் பற்றி டிகேசி என்ன நினைத்தார்கள் தெரியுமா? அவர்கள் அபிப்பிராயம், கவிதை, அதிலும் கம்பன் பாடல்களை விளக்கம் எழுதிப் பிறருக்கு விளங்க வைத்துவிடக் கூடும் என்று எனக்குத் தோன்றவில்லை. கம்பன் பாடல்களைப் பிறர்

தெரிந்தகொள்ள வேண்டும் என்றால் நேருக்குநேர் இருந்து நான் சொல்வதை, பாடுவதைக் கேட்க வேண்டுமே ஒழிய எழுதுவதைப் படித்துப் புரிந்துகொண்டார் என்பதெல்லாம் சவுடால்த்தனம் என்பதே. இதனாலேதான் பல வருஷ காலம் கம்பன் கவிதையைப் பற்றி எழுதவில்லை. ஏதோ ஆண்டுக்கொரு முறை, ஆனந்தவிகடன், கல்வி, கலைமகள் போன்ற பத்திரிக்கைளில் ஆண்டு மலர்களுக்கு எழுதுவார்கள். ரேடியோவில் ஒன்றிரண்டு பேச்சுக்கள் பேசுவார்கள். அதுவும் ஒரு பாட்டு இரண்டு பாட்டிற்குத்தான் விளக்கம் பெறுவோம் நாம். அதையே வாசகர்களால் ஆம் அச்செழுத்தில் படிப்பவர்களால் புரிந்து கொள்ள முடியாது என்பது அவர்கள் எண்ணம். பின்னர் பலருடைய வற்புறுத்தலுக்கு இணங்கித்தான் கம்பர் தரும் காட்சியைத் தொடர்ந்து கல்கியில் எழுதினார்கள். எழுதினார்கள் என்றால் கம்பனை நமக்கு அறிமுகம் செய்து வைத்து அவனையே நம்மிடம் நேரே பேசச் செய்தார்கள். அதற்குத் தகுந்தாற்போல விளக்கம் கொடுத்தார்கள். தங்கள் தங்கள் புலமையையும் கலையறிவையும் வெளிப்படுத்துவதையே முக்கியமாக வைத்து கம்பன் பாடல்களை எடுத்துச் சொல்லும் மற்ற வியாக்கியான கர்த்தர்களைப் போல் அவர்கள் எழுதுவதில்லை. கம்பன் பாடல்களை விளக்கும்போது மூடியிருக்கும் திரையை விலக்கிவிட்டுத் தான் ஒதுங்கி நின்று காட்சிகளையெல்லாம் நம்மை நேராக அனுபவிக்க விட்டுவிடுவார்கள். அதுவே அவர்கள் விளக்கங்களின் வெற்றிக்குக் காரணம்.

டிகேசி கம்பனைப் படித்தார்கள், அவன் காவியத்தைப் பற்றிப் பேசினார்கள், எழுதினார்கள் என்பதோடு டிகேசியின் சேவை நின்றுவிடவில்லை. டிகேசி கம்பனுக்குச் செய்த சேவைகளில் எல்லாம் சிறந்த சேவை, அவன் காவியத்தில் உள்ள செருகு கவிகளைக் கண்டுபிடித்து, அவைகளைத் துணிந்து களைந்ததுதான். கம்பராமாயணத்தில் செருகு கவிகள் உண்டென்பதையோ, அவைகளை அகற்ற

வேண்டுவது அவசியம் என்பதையோ, மறுப்பவர்கள் இல்லை. டிகேசியின் பேரில் புகார் சொல்கிறவர் கூட களையை வெட்டுகிற வேகத்தில் கொஞ்சம் பயிரையும் சேர்த்து வெட்டிவிடுகிறார்கள். இவ்வளவு கவிகளைச் செருகு கவிகள் என்று தள்ளியிருக்க வேண்டாம் என்றுதான் அங்கலாய்க்கிறார்கள். டிகேசிக்கு முன்னால் எத்தனையோ பேர் கம்பராமாயணத்தைக் கற்றிருக்கிறார்கள், பேசி இருக்கிறார்கள். பதிப்பித்திருக்கிறார்கள். அந்த வரிசையில் நினைவு கூற வேண்டியவர்கள் வ.வெ.சு. அய்யர், டாக்டர் சாமினாத அய்யர், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், ரா. ராகவ அய்யங்கார், கோவிந்தராஜ அய்யங்கார், டி.என். சேஷாசலம் முதலியவர்கள். இவர்களில் பலருக்குக் கம்பராமாயணத்தில் செருகுகவிகள் உண்டென்று தெரியும். அதைச் சொல்லவோ அல்லது களையவோ துணிவு பிறக்கவில்லை. அவ்வளவுதான். ஆனால் அந்தக் காரியத்தை மிக்க துணிவோடு திறம்பட நிறைவேற்றியவர்கள் டிகேசி.

கம்பராமாயணத்தில் உள்ள செருகு கவிகளை எப்படி எப்படி டிகேசி கண்டுபிடித்தார்கள்? அதை அவர்களே சொல்கிறார்கள்.

"கம்பருடைய கவிகளுக்குத் தனியான ஒரு சுவை உண்டு. செய்யுளினங்கள் பூர்வமானவைதான். ஆனால் இதய பாவத்தை உட்கொண்ட செய்யுள்கள் அடியெடுத்து வைக்கும்போது, தனியான கதிநயங்களைக் காண்கிறோம். அவைகளின் பாவமும் வேகமும் எங்கேயோ இருந்து வந்த மாதிரி புத்தம் புதியவையாய் இருக்கும். ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு தனியான ரசம். கவிக்கு ஏதோ நவரஸம் என்கிறார்கள். ஆனால் கம்பருடைய கவிகளைப் பார்க்கும்போது ஆயிரக்கணக்கான ரஸங்கள் உண்டென்று சொல்ல வேண்டி இருக்கிறது. இப்படித் தனித்த ரஸம் வாய்ந்த, உயிர்த் தத்துவம் வாய்ந்த கவிகளாய்

இருப்பதாலேயே கம்பருடைய கவிகளை இனம் கண்டு கொள்ள முடிகிறது."

கம்பருடைய பாடல்களை இனம் கண்டுபிடித்த பின் மற்றவைகளைச் செருகு கவிகள் என்று ஒதுக்குவதில் சிரமம் இருக்காதல்லவா? இதைப் பற்றி நல்ல நகைச்சுவையோடு ஒரு கதை சொல்வார்கள்.

கம்பர் ஏதோ ஒதுங்கலான ஒரு குக்கிராமத்தில் ஒரு பிரபுவோடு தங்கியிருந்தார். மாலையில் ஒரு புலவர் கோயிலில் கம்பராமாயணப் பிரசங்கம் செய்யப் போவதாகவும் அதற்குப் போய்வரலாம் என்றும் அந்தப் பிரபு கம்பரிடம் சொன்னார். கம்பரும் இசைந்தார். இருவருமாகப் போனார்கள். புலவர் வெகு தடபுடலாய்ப் பிரசங்கம் செய்தார். அநேக பாடல்களை அபாரமாக அனுபவித்துப் பாடினார். பிரசங்கம் முடிந்ததும் புலவருக்கு கம்பரை அறிமுக்கப்படுத்தினார் பிரபு. புலவர் ரொம்ப ரொம்ப சந்தோஷப்பட்டவராய் கம்பரைப் பார்த்து, "அடடா தங்கள் கவிகள் அனைத்தும் அற்புதமாய் அமைந்திருக்கின்றன. அன்னை கலைமகளின் அருள் கொழித்த அருமை கவிகள்தான் அவை" என்று பாராட்டினார். அதற்கு கம்பர், தாங்கள் பாடிய பாடல்களில் ஒன்றிரண்டு என்னுடையதாகவும் இருக்கின்றன. ரொம்ப சந்தோஷம் என்று பதில் சொன்னார்.

இதிலிருந்து கம்பன் காலத்திலேயே அவர் காவியத்தில் செருகு கவிகளைச் செருக முனைந்துவிட்டார்கள் மற்ற கவிஞர்கள் என்று தெரிகிறதல்லவா? செருகு கவிகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தைப் பற்றி அவர்களே சொல்லியிருக்கிறார்கள் அருமையான நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில்

"அயோத்தியா காண்டத்தில் விட்டது விடாதது எல்லாவற்றையும் நன்றாய்க் கணக்குப் போட்டுப்

பார்த்திருக்கிறீர்கள். ஐயோ 627 செய்யுள்கள் போய்விட்டதே என்று வருத்தப்படவில்லை, கையை நெரிக்கவில்லை. என்னுடைய கிராமத்தில் (தென்காசியில்) நல்ல நீர்வளம் உள்ள புஞ்சை ஒன்று, ஒரு அடிக்குக் கீழ் தண்ணீர். அதில் பூர்வமாக வளர்ந்த பனைகள் காடாய் நின்றன. பிறகு பனைகளுக்கு இடையில் தென்னங்கன்றுகளை வைத்தார்கள். சரியான முறையிலே முப்பது அடிக்கு ஒன்றாய் வளர்த்தார்கள். தென்னைகள் உண்டாய்விட்டன. தென்னை வைத்து இருபது வருஷம் ஆய்விட்டது, காய்ப்பே இல்லை. நான் முதன்முதலாகப் போய்ப் பார்த்தபோது இப்படி இருந்தது. சரி, இதற்குப் பனைகளையெல்லாம் வெட்ட வேண்டியதுதான் என்றேன். கணக்குப் பிள்ளை காவல்காரர் எல்லோரும் ஆதிகாலத்துப் பனையை வெட்டலாமா என்று ஆட்சேபித்தார்கள். தென்னைகளைக் காய்க்க விடாமல் அவைகள் செய்து கொண்டு நிற்கலாமா என்று கேட்டு உடனே பனை வெட்டுக்காரனுக்கு அச்சாரம் கொடுத்துவிட்டேன். ஒரு வாரத்தில் பனைகளை அப்புறப்படுத்திவிட்டார்கள். அதுமுதல் தென்னை மரங்கள் வீரியமாய் வளர ஆரம்பித்தன. சுற்று வட்டகையில் அவ்வளவு வளமான தோப்பும் இல்லை, காய்ப்பும் இல்லைதான். களையாய் இருக்கிறவைகளைக் களைந்தெறிந்தாய்விட்டது என்று சந்தோஷப்பட வேண்டியதுதானே. மிஞ்சிய 584 கவிகளும் வாடாத கற்பகத் தருக்கள் அல்லவா? என்றும் வாசனைதான். இதயத்தைப் போஷிப்பதுதான்."

ஒருநாள் டிகேசி அவர்களுடன் நாங்கள் இரண்டு பேர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது ஒரு கட்டத்தை விளக்கினார்கள் வழக்கம்போல. ராமன் காட்டுக்குப் புறப்படுகிறான், சுமித்திரையிடம் சென்று விடைபெறுகிறான். சுமித்திரை இலக்குவனையும், ராமனுடன் போக அனுமதிக்கிறாள், இல்லை போகச் சொல்லி உத்திரவே

போடுகிறாள். சுமித்திரை பேச்சு இரண்டு மூன்று பாடல்களில் இருக்கிறது. அதில் ஒரு பாட்டு

**ஆகாதென்றால், உனக்கு**
**அவ்வனம் அயோத்தி**
**மாகாதல் இராமன் நம்**
**மன்னவன் வையம் ஈந்தும்**
**போகா உயிர்த் தாயர் நம்**
**பூங்குழல் சீதை என்றே**
**ஏகாய், இனி இவ்வயின்**
**நிற்றலும் ஏதம்.**

இந்தப் பாடலை, இராமன் மணிமுடி துறந்து காட்டுக்குப் புறப்படும்போது இலக்குவன் பேசுகிறானே அந்தப் பேச்சோடு, பாடல்களோடுதான் ஒப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன பாட்டு.

**செல்லும் சொல்வல்லான் எதிர்**
**தம்பியும், தெவ்வர் தூற்றும்**
**சொல்லும் சுமந்தேன், இரு**
**தோள் எனச் சோம்பி ஓங்கும்**
**கல்லும் சுமந்தேன், கணைப்**
**புட்டிலும் கட்டமைந்த**
**வில்லும் சுமக்கப் பிறந்தேன்**
**வெகுண்டென்னை? என்றான்**

இதைச் சொல்லிவிட்டு, கவிக்கு ஓர் உருவம் உண்டு. அந்த உருவத்துக்குப் பொருத்தமான அவயவங்களும் உண்டு. வார்த்தையும் தொனியும் கவி உருவத்துக்கு ஒத்து வரவேண்டும். எதுகை மோனைகள் உணர்ச்சிகளுக்கு அழுத்தம் கொடுக்கும் உறுப்புகளாய் இருக்க வேண்டும். உணர்ச்சி அம்சங்களுக்கும் பாவத்துக்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருந்தியவைகளாய்த் தொழில் செய்ய வேண்டும். அப்படி இருந்தால்தான் கவிக்கு உருவம் உண்டென்று சொல்லக்கூடும். செல்லும்

சொல்வல்லான் நல்ல உருவத்தோடு கூடிய கவி. ஆனால் ஆகாதென்றால் என்று ஆரம்பிப்பது கவியே இல்லை. ஆகாதென்றால் என்பதில் வேகமே இல்லை, மாகாதல் இராமன் என்பது தமிழாகவே தோன்றவில்லை, வையம் ஈந்தும் போகா உயிர்த்தாயர் என்பதில் பொருள் முடிபோ இலக்கண முடிவோ இல்லை, இவ்வயின் நிற்றலும் ஏதம் என்று என் இவ்வளவு அவசரமாகத் துரத்துவானேன்? இத்தனையும் சொல்லிவிட்டு, களிமண்ணால் செய்த பிள்ளையாரைப் பிசைந்து அளித்த மாதிரி லட்சுமணன் என்னும் அரிய உருவத்தையே பிசைந்து அழித்துவிடுகிறது இந்தச் செய்யுள் என்றும் சொன்னார்கள். இப்படியே ஒவ்வொரு பாடலையும் சுண்டிப் பார்த்து உண்மையான கம்பன் பாட்டைக் கண்டுபிடித்தார்கள். செருகு கவி என அகற்றும் ஒவ்வொரு பாட்டிற்கும் அவர்கள் காரணம் சொல்லக்கூடும். அதைக் கேட்கும் வாய்ப்புப் பெறாதவர்கள்தான், அவர்கள் செருகு கவிகளை நீக்குவதைப் பற்றிப் புகார் பண்ணிக் கொண்டிருப்பார்கள்.

டிகேசி அவர்களுடைய அங்கலாய்ப்பு எல்லாம் செருகு கவிகள் சேர்ந்ததில் இல்லை. இந்தச் செருகு கவிகளைச் செருகுவதற்காக எத்தனை நல்ல கவிகளை, காவியத்திலிருந்து அகற்றினார்களோ என்பதைப் பற்றித்தான். செருகு கவிகளால் உண்மையான கவிகளுக்கே தீங்கு நேரிடுகிறது என்பது அவர்களுடைய தீர்மானமான அபிப்பிராயம். அந்த அபிப்பிராயம் இன்று வலுப்பெற்று வருகிறது என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. திரு. சொ. முருகப்பா அவர்களது இராம காதைப் பதிப்பே சொல்லும்.

டிகேசி பேரில் இன்னொரு புகார், அவர்கள் கம்பன் பாடல்களைத் திருத்துகிறார்கள் என்று. பாடல்கள் எல்லாம் கம்பனோ கற்றுச் சொல்லியோ எழுதியவை. அப்படியே நம்மிடம் வந்துவிடவில்லை. இடையில் எத்தனையோ பேர் ஏடுகளை எழுதியிருக்க வேண்டும். எழுதியவன் ஏட்டைக்

கெடுத்தான் படித்தவன் பாட்டைக் கெடுத்தான் என்பதெலலாம் நமக்குத் தெரியும்தானே? அப்படி இருக்க கம்பன் பாடல்களில் எழுதியவர்கள் செய்த தப்பிதத்தால் பிழைகள் இருந்தால் பிழைகள் இருக்கின்றன என்று நம்பினால் அவைகளைத் திருத்துவதில் தப்பென்ன? சுந்தரர் தேவாரத்தில் ஒரு பாட்டு. பாட்டு இதுதான்.

**மையார் கண்டத்தினாய் மத**
**மாவுரி போர்த்தவனே**
**பொய்யாதுழ என்னுயிருள் புகுந்தாய்**
**முன்னம் போந்தறியாய்**
**கையார் ஆடரவா கடவூர் தனுள்**
**வீரட்டத்து எம்**
**ஐயா, என் அமுதே எனக்கு**
**ஆர்துணை நீ அலதே**

இதில் இரண்டாவது அடியில் இன்னம் போந்தறியாய் என்றிருந்ததை முன்னம் போந்தறியாய் என்று திருத்தியிருக்கிறார்கள். டிகேசி அதற்குக் காரணமும் சொல்கிறார்கள்.

இரண்டாவது அடியிலுள்ள விஷயம், உண்மையாகவே இப்போது என் உள்ளத்துக்குள் புகுந்து கொண்டாய் கடவுளே, ஏமாற்றமான காரியம் அல்ல. ரொம்ப ரொம்ப சந்தோஷம். இதற்குமுன் வர வழி தெரியாமல் தானே போயிற்று என்பதான ஹாஸ்யமும் எக்களிப்பும் கலந்த பாவத்தில் நிற்பது. முன்னம் போந்தறியாய் என்பதில் பொருள் தெரிகிறது அல்லவா? இதைக் காணாமல் இன்னும் போந்தறியாய் என்று பிழையாய் எழுதிவிட்டார் படி எடுத்தவர். இந்தப் பாடத்துக்குப் பொருள் ஏது? பொய்யாது என்னுயிருள் புகுந்தாய் என்பதோடு பொருந்தவில்லையல்லவா? பிழைபட்ட பாடத்தோடு சங்கடப்பட்டுக் கொண்டிருப்பதில் பிரயோஜனம் என்ன? copyist முக்கியமா? ஜட்ஜ் முக்கியமா? ஜட்ஜ் அபத்தமாக

எழுதுவார் என்று சொல்வதில் என்ன புண்ணியமோ? பாடல் உண்மையான உணர்ச்சியிலிருந்து எழுந்தது. ஆயிரத்துச் சில்வானம் வருஷங்களுக்குப் பின் வந்த நமக்கு உண்மையைக் காட்டுகிறது. ஆனந்தத்தை அளிக்கிறது.

இந்த விளக்கத்தைக் கேட்டபின் இந்தச் சின்னத்திருத்தம் அவசியமே என்று தோன்றுகிறதல்லவா? இப்படியேதான் அவர்கள் செய்த ஒவ்வொரு திருத்தத்திற்கும் காரணம் சொல்வார்கள்.

இன்னும் ஒரு சந்தர்ப்பம். ஒருநாள் நான் உடனிருந்து அவர்களிடம் பாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன். ஜனகனது பேரவையில் விசுவாமித்திரன், ராமன், லட்சுமணன் மூவரும் இருக்கிறார்கள். காட்டிற்குத் தன்னுடன் வந்த ராமன் தாடகையை வதம் செய்தது, அகலிகை சாபந் தீர்த்தது எல்லாவற்றையும் சொல்லிவிட்டுப் பின்னால் ராம லட்சுமணருடைய குலமுறை கிளத்தத் துவங்குகிறான் விசுவாமித்திரன். இதைக் கம்பன் சொல்கிறான். பாட்டு இதுதான்

**கோத மன்தன் பன்னிக்கு**
**முன்னை உருக் கொடுத்தது, இவன்**
**போது வென்றதுஎனப் பொலிந்த**
**பொலன் கழற்கால் பொடிகண்டாய்**
**காதல் என்றன் உயிர்மேலும்**
**இக்கரியவன் பால் உண்டால்**
**ஈது இவன்தன் வரலாறும்**
**புயவலியும் என உரைத்தான்**

இந்தப் பாட்டில் மூன்றாம் அடியில் காதல் என்றன் உயிர் மேலும் இக்கரியவன் பாலுண்டால் என்ற அடிகளைப் படிக்கும்போது என்னவோ தட்டுகிறது. மேலும் விசுவாமித்திரன் ராமன் பேரில் உள்ள அன்பை, இப்படித்

தமுக்குப் போட்டுத் தெரிவிக்க வேண்டிய அவசியமும் இல்லைதானே. ஆதலால் டிகேசி இந்த வரியையே எடுத்துப் போட்டுவிட்டு அந்த இடத்தில் வேதம் என்ற உருவுடையாய் மிதிலையர்தம் உயிர் அனையாய் என்று ஜனகனை விளிப்பதாக அமைத்துவிட்டார்கள். இந்தத் திருத்தத்தோடு பாடலைப் பாடினார்கள். அவ்வளவுதான். அந்தப் பாடலை அன்றிரவு எத்தனை தரம் சொல்லிச் சொல்லி மகிழ்ந்திருப்பேன் என்று நினைக்கிறீர்கள்? பாட்டு புதிய உருவமே பெற்று விடுகிறது இந்தத் திருத்தத்தால் என்று சொன்னால் அது மிகையே ஆகாது.

கம்பன் கவியைத் திருத்துகிறார்கள், திருத்துகிறார்கள் என்று குறைகூறும் அன்பர் பலர். ஒரு சிலர் கம்பராமாயணத்தைப் படித்தே இருக்கமாட்டார்கள். ஏன் தமிழ்க் கவிதைப் பக்கமே நெருங்கியிருக்க மாட்டார்கள். அதன் குளிர் நிழலிலே தங்கியிருக்க மாட்டார்கள். இவர்களும் நிரம்பத் தெரிந்தவர்கள்போல டிகேசி கம்பனை எப்படித் திருத்தலாம்? அவர் பல பாடல்களைக் கம்பன் பாட்டல்ல என்று ஒதுக்கலாம்? என்று கூக்குரல் போடுவார்கள். மற்றொரு கூட்டத்தார் அச்சில் கண்டது அத்தனையும் சத்தியம் என்ற மனப்பான்மையோடே பல வருஷ காலம் கம்பராமாயணத்தைப் படித்தவர்கள், பாடல்களை மனனம் பண்ணியவர்கள், மேடைகளில் ஏறி அவைகளை வெளுத்துக் கட்டியவர்கள். இவர்கள் கம்பன் பாடல்களை டிகேசி திருத்துகிறாரே என்று குறைபடுவதில் அர்த்தம் உண்டு. அத்தகைய அன்பர்கள் டிகேசியை அணுகி விளக்கங்கள் கேட்டால் அவர்கள் சொல்லத்தான் சொல்லுவார்கள். சொன்னதைக் கேட்டுத் திருப்தி அடைவதோ அன்றி, திருப்தி அடையாமல் இருப்பதோ அது அவர்களுடைய மனப்பக்குவத்தையும் பண்பையும் பொறுத்தது.

இன்றைய தமிழ்க்கவி உலகில் டிகேசி மதித்த கவிஞர் இருவர் தான். பாரதியும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுமே. பாரதியாரோடு நெருங்கிய தொடர்பு டிகேசிக்கு இருந்திருக்க வேண்டும். நேரில் அறியேன். ஆனால் கவிமணி அவர்களை டிகேசி எப்படிப் பாராட்டினார்கள் என்பதை அறிவேன். அதைப்போலவே கவிமணியும் டிகேசியை மிகவும் மதித்தார்கள். பாடிப்படித்தமுதம் பாவில் வடித்தெடுத்து நாடி நமக்குதவும் நல்லறிஞன் என்று கூறுவார்கள் ஒரு தரம். அதில் திருப்தி அடையாமல் கம்பன் கவியின் கவி அமுதம் ஊட்டி நம்மை அம்புவியில் தேவராய் ஆக்கிடுவான் என்று பாராட்டுவார்கள். கவிமணியவர்கள் டிகேசி கம்பராமாயணத்திலிருந்து செருகு கவிகள் அகற்றுவது பற்றியும், திருத்தங்கள் செய்வது பற்றியும் என்ன நினைக்கிறார்கள் என்று நாம் அறிய வேண்டுவதுதானே. கவிமணியவர்கள் அமரர் ஆவதற்கு இரண்டு மாதத்திற்கு முன்னே நான் அவர்களைச் சென்று கண்டேன். பலவிஷயங்கள் பேசிய போது இதைப் பற்றியும் பேசினோம். என்ன தம்பி என்ன நினைக்கிறாய் டிகேசி அவர்கள் செய்துள்ள திருத்தங்களைப் பற்றி, செருகு கவிகளை கம்பரமாயணத்தி லிருந்து அகற்றியதைப் பற்றி என்று கேட்டார்கள். நான் என்ன சொல்வது, டிகேசி சொன்னது அத்தனையும் சரி என்றுதான் சத்தியம் செய்பவன் ஆயிற்றே நான் என்றேன். அவர்கள் சொன்னார்கள், டிகேசி சொல்வது போல கம்பன் சப்பைப் பாடல்களையே பாடி இருக்க முடியாது என்று சொல்வது சரியல்ல, சில சமயம் வெறும் செய்யுள்களாகவே அவன் பாடி இருக்கவும் கூடும். ஆனால் டிகேசி அவர்கள் கம்பனை ஒரு சமயம் தன் அருமந்த குழந்தையாகவும், ஒரு சமயம் தன் வழிபடுதெய்வமாகவும் வைத்திருந்திருக்கிறார்கள். அதனால்தான் இத்தணை துணிவோடு காரியங்கள் செய்தார்கள் என்றார்கள். இதற்கு விளக்கம் கேட்டேன் நான். சொன்னார்கள். குழந்தையிடம் தந்தைக்கு இருக்கும் அன்பு

இருக்கிறதே அது அலாதியானது, குழந்தை செய்யும் தவறுகள் எல்லாம் தந்தைக்குத் தெரிவதே இல்லை. அதிலும் பிறர் எடுத்துக்காட்டிவிட்டாலோ கன கோபம்தான் வரும். தவறை தவறு அல்ல என்று சாதிப்பதில் தந்தை முனைந்து விடுவார். ஏன் சண்டைக்கே புறப்பட்டு விடுவார். இதேபோலத்தான் தெய்வத்தினிடமும், தெய்வம் செய்கின்ற காரியங்கள் பல நமக்குப் புரிவதில்லை. ஆனால் ஒரு அசையாத நம்பிக்கை, அது செய்கின்ற காரியங்கள் அத்தனையும் சோடையல்ல என்று. சோடையாக இருந்தால் அது தெய்வம் செய்ததல்ல என்று திடமான அபிப்பிராயம் என்றார்கள். டிகேசியின் கம்பன் பக்திக்கு எவ்வளவு அற்புதமான வியாக்யானம். இந்த வியாக்யானத்தைப் புரிந்துகொண்டால் டிகேசியோடேயோ அல்லது டிகேசியுடைய திருத்தங்களோடேயோ எவரும் முட்ட வேண்டிய அவசியமே இருக்காதே.

டிகேசி கம்பனோடு நாற்பது வருஷ காலத்திற்கு மேலாக வாழ்ந்தவர்கள். அவன் காவியத்தில் நுழைந்திருக்கும் செருகு கவிகளை அகற்றவோ, அவன் கவிகள் எழுதுபவரது கவனக் குறைவால் பிழைபட எழுதப்பட்டிருந்தால் அந்தப் பிழைகளைத் திருத்தவோ தகுதி உடையவர்கள், உரிமையும் உடையவர்கள். இந்த உரிமையை மறுக்க, நாம்யார்? என்று தான் கேட்கத் தோன்றுகிறது எனக்கு.

"கம்பருக்கு நான் செய்த சேவைகளில் எல்லாம் பெரிய சேவை அவரை அனுபவித்ததுதான். நான் அறிந்த காரியத்தை ஊரார் அறிந்ததில்லையே என்று சொன்னால் ஈடுபாட்டைக் குறிக்கிறதே ஒழிய அகம்பாவத்தைக் குறிக்காது" என்று அவர்கள் சொல்லும்போது அவர்கள் உள்ளத்தையல்லவா அப்படியே திறந்து காட்டுகிறார்கள்? இது போதாதா நமக்கு?

கம்பர் பிறந்தது திருவழுந்தூரிலே, வளர்ந்தது வெண்ணெய் நல்லூரிலே வள்ளல் சடையப்பர் இல்லத்தில்.

கம்பன் காவியம் பாடியது யாருக்காக என்றால், முதலில் தன் ஆத்ம திருப்திக்காக. தன் ஆத்ம அனுபவங்களை வெளியிடுவதற்காக. நல்ல கதை என்பதற்காக, உத்தம மோத்தமனான ராமனை உருவாக்கிக் காட்டலாம் என்பதற்காக, தெய்வமாக்கவி வள்ளுவன் வையத்தில் வாழ்வாங்கு வாழ வகுத்த வழிகளை நல்ல கவிதை உருவத்தில், கதை மூலமாகச் சொல்லலாம் என்பதற்காக, எல்லாவற்றிற்கும் மேலாக கவிதையை அனுபவிக்கும் வள்ளல் சடையப்பர் கேட்டு இன்புறுதற்காக, இந்த உண்மையைத் தெரிந்திருந்தார் திருநெல்வேலியில் ஒரு அன்பர். டிகேசி அவர்களின் பள்ளித்தோழர். திரு. பி. ஆவுடையப்ப பிள்ளையவர்கள். அவர் தமிழ்க் கவிஞர் அன்று, என்றாலும் அவருக்குப் பாட வந்தது. பாட்டு இதுதான்

**கம்பனும் வெண்ணெய் நல்லூர்**
**வள்ளலும் கலந்து பேசி**
**இம்பரில் பிறப்போ மாயின்**
**இருகுணம் ஒருங்கு சேர**
**உம்பரின் தேவ தேவை**
**ஒருவரம் கசிந்து கேட்க**
**செம்பது மத்தோன் செய்தான்**
**சிதம்பர நாத மாலை.**

உண்மைதான். வள்ளன்மையும், கவிதா ரஸம் அறியும் ஆற்றலும் நிறைந்திருந்த ரசிகமணியவர்களைக் கம்பனும் சடையப்பரும் சேர்ந்தமைந்த ஓருரு என்று கொள்வதில் வியப்பில்லைதானே.

ஆனால் நான் மேலும் ஒன்று சொல்வேன். அசோகவனத்தில் சிறை இருக்கிறாள் சீதை. அவளைத் தேடித் தென்திசை வந்த வானர வீரர்களில் அனுமன் கடல் கடந்து வந்து, இலங்கையில் அசோகவனத்தில் காண்கின்றான். அனுமனை அனுப்பும்போது, சீதையைக் கண்டு வருவான்

என்று நம்பினான் காகுத்தன். ஆனால் அனுமன் ஆற்றலை அறிந்த கவிகுலக் கோனாகிய சுக்ரீவனோ கண்டுவிட்டால் சீதையைக் கொண்டே வந்துவிடுவான் என்று எண்ணினான். இதை உணர்ந்த அனுமனும் சீதையை அவள் இருந்த பர்ணசாலையை, ஏன் பர்ணசாலையிலிருந்த அசோக வனத்தையே பெயர்த்து எடுத்துச் செல்லத் துடிக்கிறான். அந்த ஆற்றல் உடையவனே தான் என்பதை சீதைக்குப் புலப்படுத்த தன் பேருருவைக் காட்டுகிறான். அனுமனுடைய அந்த பேருருவைப் பார்த்துவிட்டு, சீதை சொல்கிறாள். "என்னைக் கண்டுபிடிக்க நீ ஒருவன் இருந்தாய். நீ ஒருவன் இல்லாது போயிருந்தால் ராமனுடைய புகழை யார் அறியப் போகிறார்கள்? ராமனுடைய அருளும் புகழும் உன்னாலன்றோ உலகம் உள்ளளவும் நிலைபெறுகிறது" என்று. இதைச் சொல்கிறான் கம்பன்.

**ஆழி நெடுந்தகை ஆண்தகைதன்**
**அருளும் புகழும் அழிவின்றி**
**ஊழி பலவும் நிலை நிறுத்தற்கு**
**ஒருவன் நீயே உளயானாய்**

என்று. இந்தப் பாடலைப் பாடும்போது, கம்பன் தனக்குப் பின்னால் ஆயிரம் வருஷத்துக்கு அப்பால் தோன்ற இருக்கும் டிகேசியை நினைத்திருக்க வேண்டும். ஆம் அப்பா என் புகழை நிலைநிறுத்த நீயே ஒருவன் உளயானாய் என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்திருக்கவும் வேண்டும், இல்லையா?

வாழி கம்பனும் டிகேசியும்.

❖❖❖

# 9 கம்பன் காவிய மாளிகை

தாஜ்மஹால் தலைதூக்கி நிற்கிறது நமது நாட்டிலே. அதைக் கட்டி முடிக்க வேலை செய்தவர்கள் இருபதினாயிரம் பேர். பிளான் தயாரித்தவர்கள், சிற்பிகள், வர்ண வேலைக்காரர்கள், கொத்தனார்கள் எல்லாருக்குமே கட்டிட நிர்மாணத்தில் பங்கு உண்டு. இப்படி ஒரு கட்டிடம் கட்டலாம் என்று முதல் முதல் திட்டம் வகுத்தவர் (Designer) முகமது இசாகிபண்டி. இவர் துருக்கி தேசத்தவர். இவருடன் துணையாக வர்ண வேலை செய்ய அங்கிருந்தே வந்தவர் சத்தார்கான். சமர்க்கண்டிலிருந்து வந்த முகம்மது ஹரீப்தான் தலைமை டிராப்ட்ஸ்மன். முகம்மது ஹனீப்தான் தலைமைக் கொத்தனார்.

மஹால் கட்ட வெள்ளைச் சலவைக்கல் ஜெய்ப்பூரிலிருந்து வந்தது. பேத்பூர் சிக்ரியிலிருந்து லக்ஷத்துப் பதினாயிரம் வண்டி சிவப்புக்கல் வேறு வந்திருக்கிறது. ஒரு சதுர கெஜம் நாற்பது ரூபாய் விலையுள்ள மஞ்சள் சலவைக்கல் வந்தது நர்மதை நதிக்கரையிலிருந்து. தூய வெள்ளைப் பளிங்கு கற்கள் சைனாவிலிருந்து வந்தன. அதன் விலையெல்லாம் கொஞ்சமாய் ஒரு சதுர கெஜத்திற்கு ஐந்நூற்று எழுபது ரூபாய் மட்டுந்தான். பல சொல்வானேன் இலங்கையிலிருந்து

வந்த Lapiz lazuli என்ற பல வர்ண விஸ்தாரம் உடைய கல்லின் விலை மட்டும் ஒரு சதுர கஜத்திற்கு ஆயிரத்து நூற்றி ஐம்பத்தாறு ரூபாய் என்றால் கேட்கவா வேண்டும்.

கட்டிடம் கட்டி முடிய இருபத்திரண்டு வருஷம் ஆகியிருக்கிறது. கட்டிடம் கட்ட மொத்தச் செலவு (மூர்ச்சை போட்டு விழுந்து விடாதீர்கள் ஐயா) எல்லாம் மூன்றரைக் கோடி ரூபாய் மட்டுந்தான். இப்படி ஒரு கட்டிடம் நமது நாட்டில் இருக்கிறதென்றால் அது நமக்குப் பெருமை தானே: பெருமை, இத்தனை பணத்தையும் இத்தனை நாளையும் செலவழித்துக் கட்டியதனால் அல்ல. இவ்வளவு அருமையான சலவைக்கல் கனவை (Dream in marble) நனவாக்கி வைத்துவிட்டானே, சிருஷ்டித்து விட்டானே இந்த ஷாஜஹான் சக்கரவர்த்தி என்பதில்தான். தன் காதலியின் ஒரு நினைவு மலராக ஏன் உலகம் உள்ளளவும், உயர்ந்த, உத்தம, லக்ஷ்ய, காதலின் சின்னமாக அல்லவா அம்மாளிகை தலை தூக்கி நிற்கிறது. வல்லவனாக்கிய சித்திரம்தான் அது. வண்மைக் கவிஞன் கனவும் அதுவேதான் என்று அதிசயித்து விடுகிறார்கள். பார்த்தவர்கள் பரவசமே அடைந்துவிடுகிறார்கள் என்று சொன்னாலும் அது பொய்யில்லையே.

இதே உணர்ச்சிதான் கம்பனது காவியமாகிய இராமாயணத்தைப் பார்க்கின்றபோது ரசிகருக்கும் உண்டாகின்றது. கம்பன் தனது காவிய மாளிகையை எவ்வளவு ரசனைச் சுவையுடனும் அழகுணர்ச்சியுடனும் கட்டி முடித்திருக்கிறான். இப்படி ஒரு மாளிகையை அற்புதமாக சிருஷ்டிக்க அவன் என்ன பொருள்களை எங்கிருந்தெல்லாம் சேகரித்தான். இல்லை ஒரு பெரிய மாய வித்தைக்காரனைப் போல இப்போது இங்கே ஒரு அலங்கார மாளிகை தோன்றட்டும் என்று சொல்லிக் கண்மூடிக் கண் திறப்பதற்குள்ளே செய்து விட்டானா? இல்லை இவனென்ன தெய்வ தச்சனா? தெய்வீக அழகுடைய கட்டிடங்களையெல்லாம் கணப்பொழுதில் கட்டி

முடித்துக் காட்டுவதற்கு என்றெல்லாம் எண்ணுகிறோம். அதிசயிக்கிறோம். மூக்கின் மேலேயே விரலை வைக்கிறோம்.

ஆங்கிலப் பேராசிரியர் ஒருவரிடம் காவியம் (Epic) என்றால் என்ன என்று ஒருவர் கேட்டார். காவியம் என்றால் ஹோமர் எழுதிய இலியட் என்னும் காவியத்தைப் போல எழுதப்பட்டதெல்லாம் காவியமே என்று லேசாகப் பதில் சொல்லிவிட்டார் அவர். (Epic in a poem written in imitation of Homer's Iliad) வேறு என்ன சொல்ல? இதே போலத்தான் நம்மவர்களுக்கு நம் காவியத்தை விளக்க வேண்டிருக்கிறது. கம்பனது இராமாயணம் போல் எழுதப்பட்ட ஒரு காவியமே காவியம், என்று சொல்வதைத் தவிர, காவியத்திற்கு வேறு இலக்கணம் கூற இயலவில்லை.

காவியத்திலே ஒரு வீர புருஷனுடைய கதை சொல்லப்படும். அவன்தன் வாழ்வும் தாழ்வும் விரிவாகவே விளக்கப்படும். மனிதனாகப் பிறந்தவன் எப்படி வீரனாக வளர்ந்தான். எப்படி லக்ஷ்ய புருஷனாக தெய்வீக சௌந்தர்யம் உடையவனாக வாழ்ந்தான் என்பதெல்லாம் தான் கூறப்படும். பின்னும் தேவரும் தொழும் தேவனாக அவன் எப்படி உருவானான் என்றெல்லாம் நம்மால் காவியத்தி லிருந்துதான் அறிய சாத்தியப்படும். சாதாரணக் கதையிலிருந் தல்ல. காவியகதிக்கும் கதைப் போக்கிற்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். கதாசிரியன் நடக்கிற இடத்திலே காவிய கர்த்தா பறப்பான். அவன் குளறுகிற இடத்திலே இவன் தெய்வமாக் கவிதை செய்வான். அவன் கதை சொல்லுவான். இவன் காவியம் இயற்றுவான். அவ்வளவுதான். Where narrative walks epic flies Narrate stammers while epic talks with tongue of men and angels.

இராமகதையை உலகுக்குத் தந்தருளிய பெரியார் வான்மீக முனிவர். இராமகதை மக்கள் வாழ்வைப் பண்படுத்த

ஒரு நல்ல சாதனம் என்று கண்டவர் அவர். கதையையும் நன்றாக அமைத்துக் கொடுத்துவிட்டார். இத்தகைய நல்ல அஸ்திவாரத்தின் மேல்தான் தன் காவிய மாளிகையைக் கட்ட ஆரம்பித்திருக்கிறான் கம்பன். அஸ்திவாரம்தான் அவருடைய அஸ்திவாரமே தவிர, மேல் கட்டுக் கோப்பெல்லாம் இவனுடைய் சொந்தமே. வான்மீகரது கதையில் எங்கெல்லாம் அழகுணர்ச்சி குன்றுகிறதோ அங்கெல்லாம் கம்பனது அழகுணர்ச்சி கொட்டும். எங்கெல்லாம் தமிழர்களது பண்பாடு, நாகரிகம், பண்பு பாதிக்கப்படும் என்று கருதினானோ அங்கெல்லாம் புதிய முறையிலே கட்டிடம் திருத்தி அமைக்கப்படும். கம்பன் கதையிலுள்ள சம்பவங்களைச் சித்தரிக்க முயன்றாலும் சரி, பாத்திரங்களில் உள்ள உணர்ச்சிகளையோ மனோ விகாரங்களையோ வெளியிட விரும்பினாலும் சரி, கவிதா கருத்துக்கள் நான் முந்தி நீ முந்தி என வந்து விழுந்து பணி செய்யும். கம்பனது அழகுணர்ச்சியும் கற்பனா சக்தியும் இசை ஞானமும் கடைசி வரை அவனுக்கு துணை நின்று காவிய மாளிகையை உருவாக்க உதவுகின்றன.

இப்படி நல்லதொரு அஸ்திவாரத்திலே எழுப்பப்பட்ட அழகிய காவிய மாளிகையை முதலில் கொஞ்ச தூரத்திலிருந்தே பார்க்கலாம். இந்த மாளிகையை அப்படி நின்று பார்த்தவர்களுக்கு எழுகின்ற முதல் உணர்ச்சி அதன் காம்பீர்யம்தான். இமயமலை எவ்வளவு கம்பீரமாக வான்நோக்கி வளர்ந்திருக்கின்றதோ அவ்வளவு கம்பீரத்துடன் கம்பனது காவிய மாளிகையும் காட்சி அளிக்கிறது. கம்பனுடைய காவியத்தைப் படிக்கும்போது - மாமல்லபுரத்துப் பிரம்மாண்டமான கற்கோயில்களைப் பார்க்கும்போதும் சிரவனபெலகோலாவிலுள்ள கோமாடேஸ்வரனுடைய அத்தாப் பெரிய சிலையைப் பார்க்கும்போதும் உண்டாகும் உணர்ச்சிதான் உண்டாகிறது.

மேல்நாட்டு இலக்கியங்களை, காவியங்களை அந்த அந்த பாஷைகளின் மூலமாகவே அறிந்து அனுபவித்த ஸ்வர்கீய வ.வே.சு அய்யர் அவர்கள் "ஒரு பெருங் காப்பியம் அநேக அவயவங்கள் சேர்ந்ததாய் இருப்பினும் ஒரு ஜீவ பிராணியைப் போல ஒரு தனிப் பிண்டமாக இருத்தல் வேண்டும். தலை இடை கடை என்ற பாகுபாடும் அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது ஏகம் என்ற உணர்ச்சியும் அக்காவியத்தில் தோன்ற வேண்டும். ஒவ்வொரு அவயவமும் தான் தனக்கு முன்னேயுள்ள அவயவத்தோடும் பிணைக்கப் பட்ட ஒன்று என்கிற உணர்ச்சியை வளர்க்க வேண்டும்" என்று கூறுகிறார்கள். இந்த இலக்கணத்தை வைத்துக் கொண்டு கம்பன் காவிய நிர்மாணத்தை ரசனையை நோக்கினால் அவன் காவியம் உன்னத இலக்கியமாகவே நிற்கும்.

கம்பனது காவியத்திலே பிரதான சம்பவம ராவண வதம. பாலகாண்டம் காவிய சம்பந்தத்தோடு அவயவசம்பந்தம் இல்லாது சற்று ஒதுங்கியே நிற்கிறது. காவிய மாளிகையின் முன்வாசல் பூஞ்சோலைதான் அது. இராமன் சீதா லக்ஷ்மண ஸமேதனாய் காட்டுக்குப் புறப்படுவதிலேதான் ராவண வதத்திற்கு விதை விதைக்கப்படுகிறது. அயோத்தியா காண்டத்தைத் தொடங்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பன் காப்பு பாட்டிலேயே இதைக் காட்டுகிறான்.

**வான் நின்று இழிந்த வரம்பு இகந்த**
**மாபூதத்தின் வைப்பு எங்கும்**
**ஊனும் உயிரும் உணர்வு போல்**
**உள்ளும் புறத்தும் உளன் என்ப**
**கோனும் சிறிய கோத்தாயும்**
**கொடுமை இழைப்பக் கோல்துறந்து**
**கானும் கடலும் கடந்து இமையோர்**
**இடுக்கண் காத்த கழல் வேந்தே.**

என்று பாட்டு. இமையவர் இடுக்கண் தீர இராவணவதம் நடந்தாக வேண்டும். இராவண வதம் நடக்க இராமன் காடு வந்து சேர வேண்டும். இராமனைக் காட்டிற்கு அனுப்ப கூனியாகிய மந்தரை சூழ்ச்சி செய்யவும் சிற்றன்னையாகிய கைகேயி வினை சூழவும் வேண்டும். ஆகவே எங்கே பற்ற வைத்த தீ எங்கு சென்று மூளுகிறது என்று நமக்குத் தெரிகிறது. இப்போது இராமன் முடி சூடுவதைத் தடுக்க முனையும் கூனி காவிய அரங்கத்திலே தோன்றுவதைக் கூட கம்பன்

**இன்னல் செய் இராவணன்**
**இழைத்த தீமை போல்**
**துன்னரும் கொடு மனக்**
**கூனி தோன்றினாள்.**

என்றுதான் கூறுகின்றான். இலக்குவன் சூர்ப்பனகையின் மூக்கை அறுத்து மானபங்கம் செய்தான்.

**உயிர் மூக்கினை நீக்கிய முறையை**
**மலைது மித்தென இராவணன்**
**மணியுடை மகுடத்**
**தலைதுமித்தற்கு**
**நாள் கொண்டது ஒத்ததாகவே**

படுகிறது அவனுக்கு. ஏன் கடைசியிலே இராவணன் இராமன் அம்பால் அடியுண்டு உயிரற்று வீழ்ந்து கிடக்கிறபோது அவன் மனைவியாகிய மண்டோதரி அழுது புலம்பினாலும்

**காந்தையருக்கு அணியனைய**
**ஜானகியார் பேரழகும்**
**அவர்தம் கற்பும்**

**ஏந்து புயத்து இராவணனார்**
**காதலும் அச்சூர்ப்பனகை**
**இழந்த மூக்கும்**
**வேந்தர் பிரான் தயரதனார்**
**பணியினால் வெங்கானில்**
**விரதம் பூண்டு**
**போந்ததுவும் கடைமுறையே**
**புரந்தானார் பெருந்தவமாய்**
**போயிற்று அம்மா**

என்று தானே புலம்ப வருகிறது கம்பனுக்கு. காவிய இலக்கணத்திற்குக் கொஞ்சமும் மாறுபடா வகையில் எழுந்த இலக்கியமே கம்பனுடைய இராமகாதை. இக்காவியம் என்னும்படி காவியத்தில் பல அவயவங்களையும் பிரதான சம்பவமாகிய ராவண வதத்தோடு இணைத்து இணைத்து மொத்தத்தில் பார்க்கும்போது ஏகம் என்ற உணர்ச்சியை உண்டாக்கி விடுகின்றான் அவன்.

இன்னும் ஓர் அதிசயம். நாம் வாழும் உலகில் இன்னும் எத்தனை எத்தனையோ கோளங்கள் எல்லாம் இப்பேரண்டத்தில் சூரியனைச் சுற்றிச் சுற்றி ஓடுவதையே பார்க்கிறோம். அண்டங்கள் எல்லாம் உய்ய அருளும் ஆதவனை நடுநாயகமாக வைத்து அவனைச் சுற்றி ஓடுவதிலேதானே இறைவனது திருவிளையாடல்களை நாம் அறிகிறோம். எல்லா உலகும் ஒரே தலைவனிடத்திலிருந்து தோன்றுவதும் அவனிடத்திலே சென்று ஒன்றுவதும் தான் இயல்பு என்னும் பெரிய தத்துவத்தையல்லவா விளக்குகிறது, இச்சூரிய மண்டல விவகாரம் (Solar System). இது போலவே ராமனை நடுநாயகமாக வைத்து காவியத்தில் வரும் மற்ற பாத்திரங்கள் எல்லாம் நடமாடுகின்றன. பெற்ற தந்தையும் தாயும் உடன் பிறந்த சோதரரும் கட்டிய மனைவியும் அவனிடத்தில் இடையறா அன்பு பூண்டு அவனை விட்டு அகலாது அன்பு

பூண்டிருந்தல் இயல்பே. ஆனால் கங்கைக் கரையில் இருக்கும் வேடுவர் தலைவனும் கிஷ்கிந்தை நகரிலே வசிக்கும் வானர வீரனாகிய சுக்ரீவனும் ஏன் அரக்கர் கோனாய் விளங்கிய விபீஷணனுமே இராமனால் ஆகர்ஷிக்கப்படுகிறார்களே. அவனோடு அண்டி அவனுடன் சகோதர உறவு கொண்டாடி உலக சகோதரத்துவத்திற்கே அடிகோலுகிறார்களே. காவிய நாயகனோடு நாயகர்களாக ஒன்றிச் சேர்ந்து காவியத்தில் பிரதான அங்கம் பெற்று விடுகிறார்கள். இதெல்லாம் என்னவென்றால் எல்லாம் கம்பனுடைய காவியரசனைத் திறம்தான் என்று பதில் சொல்லத் தோன்றுகிறது. எத்தனை எத்தனையோ துக்கடாப் பேர் வழிகளை, சம்பவங்களை எல்லாம் ஒன்றாக இணைத்து ஒரு பெரிய கம்பீரமான காவியமாளிகையையே அல்லவா உருவாக்கிவிடுகிறான். அவன் கொஞ்சம் நுழையலாம். கம்பீரமாக எழுந்து நிற்கும் இக்காவியமாளிகையிலேதான் என்னென்ன அதிசயங்கள் எவ்வளவு எவ்வளவு விஸ்தாரமான மண்டபங்கள் - அறைகள்

விதானத்திலும் சுவரிலும் செய்திருக்கும் - நகாஸ் வேலைகள்தான் எவ்வளவு அழகையும் சோபையையும் கொடுக்கின்றன. பெரும்பெரும் கற்பாறைகளை அப்படி அப்படியே பேர்த்தெடுத்து அதையும் அப்படி அப்படியே வைத்துக்கட்டிய வான்மீகரது கதாமாளிகை எங்கே, அந்த மாளிகையின் அஸ்திவாரத்தின் மேலே பழைய மாளிகையைத் தட்டி நொறுக்கி விட்டு சிற்றுளியின் நயமெல்லாம் தெரியும்படி வல்லவன் ஆக்கிய சிற்பம் போல் அழகுணர்ச்சியெல்லாம் நிறைந்து நிற்கும் கம்பன் காவிய மாளிகை எங்கே? (By the ide of the valmigi massive, if at time gorgeons fise, Kamban construction stands like. Pleasure done of classical beauty and finished perfection). இந்தக் கம்பீரமான காவிய நிர்மாணத்திலே சில்லறை அலங்காரங்களையும் கம்பன் மறந்துவிடவில்லை. (He conceived like a tika and finished like a jeweller) சுருங்கச் சொன்னால் கம்பனுடைய காவியம்

பல்லவ சிற்பிகளின் பெரிய வீச்சையும் சாளுக்கிய சிற்பிகளின் சிற்றுளி வேலையையும், மொகலாயர்காலத்துச் சின்னஞ் சிறு சித்திரம் வரைபவர்களின் கலை நயத்தையும் ஒருங்கே ஞாபகத்துக்குக் கொண்டுவரக்கூடியதாக இருக்கிறது.

இனி இக்காவியமாளிகைக்குள்ளேயே நுழைந்து பார்த்தால் வேறு ஒரு காவியத்திலும் இத்துணை வேறுபட்ட அருங்குணங்கள் இந்த அளவுக்கு அகப்படாது என்றுதான் தோன்றுகிறது. கம்பனே,

**அழகெல்லாம் ஒருங்கே கண்டால்**
**யாவரே ஆற்றவல்லார்**

என்று அவனுடைய சிருஷ்டியான சீதைக்குக் கொடுக்கும் வர்ணனை அவனுடைய காவியத்துக்கும் பெரிதும் பொருந்தும் என்கிறார் வ.வே.சு. ஐயர்.

காவிய மாளிகையின் கவிதா மண்டபத்தின் அழகையே அனுபவிப்பதா. சித்திரச் சாலையில் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் சித்திரங்களையே கண்கொள்ளாமல் பார்த்துக் கொண்டே நிற்பதா அல்லது நாடக அரங்கத்திலே வரும் நடிகர்களின் நடிப்பிலே மயங்குவதா என்று தான் தெரியவில்லை. எப்பக்கம் திரும்பினாலும் மாளிகையின் அழகுகள் நம்மை அப்படி அப்படியே வசீகரித்து விடுகின்றன. மாளிகை எப்படி இருக்கிறது என்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அதற்கும் கம்பனது உதவியைத்தான் நாம் நாட வேண்டியிருக்கிறது. லங்கா நகரத்திலுள்ள மாளிகைகளை வர்ணிக்கும் கம்பன்

**பொன் கொண்டு இழைத்த**
**மணியைக் கொடு பொதிந்த**
**மின் கொண்டமைத்த**
**வெயிலைக் கொடு சமைத்த**

**என் கொண்டு இயற்றிய**
**எனத் தெரிகிலாத**
**வன் கொண்டல் விட்டு**
**மதி முட்டுவனமாடம்**

என்று பாடுகிறான். பொன், மணி, மின், வெயில் இவைகளால் ஆக்கப்பட்ட மாளிகைகள்தான் லங்கா நகரத்தில் உள்ள மாளிகைகள். ஆனால் இவைகளையெல்லாம் விட இன்னும் பிரகாசமான பொருளாலும் இம்மாளிகைகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படி அதிபிரகாசமான பொருள் என்ன என்பதை பௌதிக சாஸ்திரம் இன்னும் கண்டுபிடித்தாக வில்லையே என்று எண்ணிக்கொண்டேதான், "என் கொண்டியற்றிய எனத் தெரிகிலாத" என்று கம்பன் தன் வர்ணனைக்கு முத்தாய்ப்பு வைக்கிறான்.

இதுபோலத்தான் கம்பன் தனது காவிய மாளிகையை கவிதா மேதைமையினாலும் சிற்பியின் திறமையினாலும் நாடகப் பண்பினாலும்; கட்டி முடித்திருக்கிறான் என்று மட்டும் கூறிவிட்டால் அது அவனது காவிய மாளிகையைக் கட்டுவதில் கையாண்ட முறைகளை முற்றிலும் விளக்கியதாகாது. இவற்றிற்கு எல்லாம் மேலாக, ஒரு தெய்வீக அமானுஷ்ய மான சக்தி ஒன்று கம்பனிடம் இருந்திருக்கிறது. அந்த சக்தியின் துணைகொண்டே இந்தக் காவிய நிர்மாணம் செய்திருக் கின்றான். கை புனைந்து இயற்றா கவின் பெறு வனப்புடன் அம்மாளிகையும் கம்பீரமாக எழுந்து நிற்கிறது நம்முன்னே. ஆனால் அந்த சக்திதான் என்ன என்று சொல்ல முடியவில்லை. என் கொண்டு இயற்றிய எனத் தெரிகிலாத என கம்பன் சொன்ன படியே நானும் கையைத்தான் விரிக்க வேண்டியிருக்கிறது.

❖❖❖

# 10 கம்பன் ஒரு சிறந்த சினிமா டைரக்டர்

இன்றைய உலகம் சினிமா உலகம். சினிமாவிலே வருகின்ற காட்சி ஜோடனைகள், பாத்திரங்கள், அவர்கள் நடை, உடை பாவனைகள் அவர்களது உணர்ச்சி மிகுந்த நடிப்பு, மெருகேற்றும் பாடல்கள் எல்லாம் மக்கள் உள்ளத்தில் அழுத்தமாகப்படுகின்றன. நீங்கா நினைவாய் நிலைத்து விடுகின்றன. ஆதலால் இந்த சினிமா ஓர் அற்புதமான கலை என்று போற்றப்படுகிறது.

இந்தக் கலை இந்திய மண்ணில் தோன்றி எத்தனையோ வருஷங்கள் ஆகிவிட்டன. ஆதலால் இந்திய சினிமாவில் பொன்விழா இவ்வாண்டு நடைபெறுகிறது என்கிறார்கள். எனக்கு ஓர் ஐயம். இந்த அருங்கலை நமது தமிழ் மண்ணில் அடி எடுத்து வைத்து ஐம்பது வருஷங்கள் தானா ஆகிறது. இக்கலைக்கு அடிப்படை நாடகங்கள் தாமே. அந்த நாடகங்கள் தான் தமிழ்க் கலை உலகில் நீண்ட நாட்களாக இருந்து வந்திருக்கின்றன. இயல் இசை நாடகம் என்று நமது தமிழ் இலக்கியங்கள் அன்றே வகைப்படுத்தப்பட்டிருக்கிறதே. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னேயே சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் என்று போற்றப்பட்டிருக்கிறதே.

இது எல்லாம் சரிதான். நாடகத்திற்கும் சினிமாவிற்கும் செய்முறைகளில் கையாளும் உத்திகளில் (Technique) எவ்வளவோ வேறுபாடு உண்டோ? உதாரணமாக ஒரு காவிய நாயகன் உள்ளத்தில் பழைய நினைவுகள் எழுகிறது என்றால் எழுத்தில் அதைச் சொல்லிவிடலாம். அரங்க மேடையில் அந்த நினைவுகளை கண்ணுக்குத் தோன்றும் வகையில் காட்ட முடியாதே. சினிமாவில் என்றால் திரைச்சீலையில் கதாநாயகன் தலையை மட்டும் பெரிதாகக் காட்டி அவன் மண்டையில் ஓடும் எண்ணங்களை எல்லாம் காட்சி வடிவில் காட்டி காண்பவர்களுக்கு விளக்கி விடுதல் கூடுமே. இப்படி Play back பண்ணுவது எல்லாம் சினிமாவில் கையாளும் உத்தியாக அமைவ்து காரணமாக எந்த விஷயத்தையும் எவ்வித கோணத்திலும் காட்டி மக்களை மகிழ்விக்க முடியுமே. இன்னும் பல காட்சிகளை எட்ட இருந்தும் காட்டலாம். அருகில் நெருங்கி முக பாவங்களை உணரும் வகையிலும் காட்டலாம். இவைகளைத் தானே Long distance short, close up என்றெல்லாம் சினிமாக் கலைஞர்கள் குறிப்பிடுகிறார்கள். இது எல்லாம் நாடகத்தில் சாத்தியமாக இராதே என்பர் சிலர்.

ஆனால் இத்தனையையும் இதற்கு மேல் உள்ளதையும் காவியங்களில் காட்ட முடியும் என்கிறேன் நான். இது தமிழ் நாடகக் காட்சிகள் எல்லாவற்றிலும் காண முடிகிறதோ இல்லையோ கவிச்சக்கரவர்த்தி கம்பன் எழுதிய ராமாயணத்தில் அவன் திறமையாகக் காட்டியிருக்கிறான். அந்தக் காட்சி அண்மைக் காட்சி என்னும் Long distance shot, close up என்னும் சினிமாக் கலையின் திறனுள்ள செயல்முறையை அவன் எவ்வாறு காட்ட முயன்று வெற்றி பெற்றிருக்கிறான் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் மட்டும் சொன்னால் போதும். கிஷ்கிந்தையில் ருஷ்ய முகபர்வதத்தில் வாலிக்கு அஞ்சிய சுக்ரீவன் மறைந்திருந்து வாழ்கிறான். அங்கு துணைவியாம் சீதையை இழந்த ராமனும் அவன் தம்பி இலக்குவனும்

வருகிறார்கள். இவர்களை அனுமான் சந்தித்து அளவளாவ அவர்களைத் தன் தலைவனான சுக்ரீவனிடம் அழைத்து வருகிறான். இவர்கள் தூரத்தே வருவதைக் காண்கிறான் சுக்ரீவன். தூரத்திலே வருகிற போது யாரோ இரண்டு அழகர்கள் வருகிறார்கள் என்று தான் தோன்றுகிறது. சுக்ரீவனுக்கு இரண்டு மரகத மலைகள், அம்மலைகள் மேல் சந்திர உதயம் தோன்றியது போல இரண்டு சௌந்தர்யமான முகங்கள் என்றே உணர்கிறான். இதனைப் பாடுகிறான் கம்பன் ஒரு Long distance shot ஆக.

**கண்டனன் என்ப மன்னோ**
**கதிர்வன் இருவர் காமக்**
**குண்டலம் துறந்து கோலவதனமும்**
**குளிர்க்கும் கண்ணும்**
**புண்டரீகங்கள் பூத்துப்**
**புயல் தழீஇப் பொலிந்த திங்கள்**
**மண்டலம் உதயம் செய்த**
**மரகதக் கிரியனுக்கே**

ராமனும் இலக்குவனும் நெருங்கி வருகிறார்கள். சுக்ரீவன் அவர்களை கொஞ்சம் நெருக்கத்திலேயே பார்க்கிறான். அவர்கள் கைகளில் வில்லேந்தியிருக்கிறார்கள். பரந்த மார்பும் உயர்ந்த தோள்களும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆம் இவர்கள் வெறும் அழகர்கள் மாத்திரம் அல்ல சிறந்த வீரர்களும் கூட என்பதை நோக்கிலேயே தெரிந்து கொள்கிறான் சுக்ரீவன். ஆம் இது ஒரு Closeup காட்சி.

**நோக்கினான் நெடித நின்றான்**
**நொடி வரும் கமலத்து அண்ணல்**
**ஆக்கிய உலகம் எல்லாம்**
**அன்று தொட்டு இன்று காறும்**

**பாக்கியம் புரிந்த எல்லாம்**
**குவிந்து இருபடிவம் ஆகி**
**மேக்குயர் தடந்தோள் பெற்று**
**வீரராய் விளைவு என்பான்**

என்பது கம்பன் பாடல்.

இந்த Close up காட்சியோடு சுக்ரீவன் திருப்தி அடையவில்லை. இவர்கள் யாராயிருத்தல் கூடும் என்று அவர்களை ஊடுருவி நோக்கியே அவர்களுடைய அவதாரத்து உண்மையையும் ரகசியத்தையுமே உணர்ந்து கொள்கிறான். இது ஒரு Xray படம் எடுத்தது போலவே அமைந்துவிடுகிறது. தேவர்கள் குழுவில் ஒரு பிரம்மா ஒரு இந்திரன், ஒரு சிவன் என்றெல்லாம் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் மூல மூர்த்தியாம் பரம்பொருள் தெய்வமாக இருப்பதில் திருப்தி அடையாமல் மண்ணுலகில் மனிதனாக அவதரித்து மக்களைப் போல் மானுடனாகவே வாழ்ந்து அவர்களது இன்ப துன்பங்களை அனுபவிக்க விழைகிறார்கள். ஆம் தேவர் உலகையும் இந்த மானுடம் வென்று விடுகிறது என்பதனை ஆய்ந்து தெளிந்து விடுகிறான் சுக்ரீவன். சுக்ரீவன் தெளிந்தானோ இல்லையோ கம்பனுக்குத் தெளிவு ஏற்பட்டு விடுகிறது. அதை அவன் பாடுகிறான்.

**தேறினன் அமரர்க்கெல்லாம்**
**தேவராய் தேவர் என்றே**
**மாறி இப்பிறப்பில் வந்தார்**
**மானுடராகி மண்ணோ**
**ஆறுகொள் சடிலத்தானும்**
**அயனும் என்று இவர்களாதி**
**வேறு குழுவை எல்லாம்**
**மானுடம் வென்ற தன்றோ.**

என்று முத்தாய்ப்பே வைக்கிறான்.

சரி Long distance shot, close up என்ற சினிமா டெக்னிக்கிற்கு உதாரணம் கொடுத்துவிட்டீர், பழைய எண்ணங்களில் உள்ளத்தில் ஓடுவதைக் காட்ட சினிமாக்காரர்கள் கையாளும் தொழில் திறமையை உத்தியை உமது கம்பன் எப்படிக் காட்டுகிறான் என்று தானே கேட்கிறீர்கள். அதற்கும் ஒரு சான்று தருகிறேன்.

இலங்கையில் ராமன் ராவணனுடன் போர் ஏற்று நிற்கிறான். போரிலே ராமனது கையே மேலோங்கி நிற்கிறது. இந்த நிலையிலும் சீதையை எப்படியும் அடைந்துவிட வேண்டும் என்ற ஆவல் மட்டும் இராவணன் உள்ளத்தில் அடங்காத ஆவலாக ஊற்றம்பெறுகிறது. இதற்கு என்ன என்ன தந்திரங்கள் எல்லாம் கையாளலாம் என்று பார்க்கின்றான் இராவணன். தன் அருமைத் தம்பியாகிய கும்பகருணனை ராமனுடன் போர் செய்யும்படி அனுப்பிவிட்டு, ஒரு மாயாஜால சிருஷ்டி பண்ணி அவனை இழுத்துக் கொண்டு சீதையிருக்கும் சோக வனத்திற்கு வருகிறான், அந்த மாயாஜாலனோ சீதையை அணுகி, ராமனை விட்டுத் திரிலோக அதிபதியான ராவணனையே காதலனாக ஏற்று அவனது காதற் கிழத்தியாக வாழ்வதே சிறப்பு என்று கூறி அவள் மனதைக் கலைக்க முனைகிறான். எதற்கும் கலங்காத சீதை, எந்தை இவ்வாறு கூறான் என்று மாயாஜாலனையும் அவன் கூறியதையும் வெறுத்து ஒதுக்கி விடுகிறான். இந்த நிலையில் போர்க்களத்துத் தூதுவன் ஒருவன் ஓடிவந்து இராமனுடன் ஏற்று நின்ற போரில் கும்பகர்ணன் வீழ்ந்துவிட்டான். மாண்டு மடிந்துவிட்டான் என்று ராவணனிடம் சொல்கிறான். இந்தச் செய்தியைக் கேட்ட ராவணன் அப்படியே மயங்கி விழுந்துவிடுகிறான். இதே செய்தி சீதையின் காதில் விழுகிறது. அச்செய்தி அவளுக்கு எத்தகையதொரு மாற்றத்தைக் கொடுக்கிறது என்பதை கம்பர் சொல்கிறார். காவியத்தில் கும்பகர்ணனை நேரில் சீதை பார்த்திராவிட்டாலும் அவனுடைய ஆகிருதியைப் பற்றி

திரிசடை முதலியோர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறாள். ஆற்றிலே அவன் குளிக்கும்போது கால் தேய்க்கக் கல்லாக இருப்பது மகாமேரு மலை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் என்றல்லவா சொல்லியிருக்கிறார்கள் அவர்கள்.

**கல்லன்றோ நீராடும் காலத்து**
**கால் தேய்க்க**
**மல்லேந்து தோளர்க்கு**
**வடமேரு**

என்பதல்லவா வர்ணனை. இந்தப் பெரிய அரக்கனுடன் அல்லவா ஆறடி உயரமே உடைய ராமன் போர் ஏற்று நிற்கிறான். அந்தக் காட்சி அவள் கண்முன் தோன்றுகிறது. அந்தப் போரில் ராமன் வெற்றி பெறுவது எங்ஙனம் என்று ஒரு துணுக்கமே அடைகிறாள், அஞ்சுகிறாள். அந்தச் சமயத்தில் அந்த அரக்க வீரனைத் தன் நாயகனான ராமனது அம்பு வீழ்த்தி விடுகிறது. அவனும் மாண்டு மடிந்து விடுகிறான் என்ற செய்தி வருகிறது. இந்தச் செய்தி அவளது செவியை எவ்வளவு குளிர்வித்திருக்கும். செவியை மாத்திரந்தானா குளிர்விக்கும் உள்ளத்தையே பூரிக்க வைத்துவிடாதா? சரி தனக்கு இனி விடுதலை விரைவிலேயே கிடைத்துவிடும் என்று மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியுமா? அந்த மகிழ்ச்சியில் அவள் உடல் ஒரு சுற்றுப் பெருத்துவிடாதா என்ன என்றெல்லாம் நாம் எண்ணத்தானே செய்கிறோம். அத்தனை எண்ணமும் கம்பனது உள்ளத்திலும் எழுந்திருக்கிறது. பாடுகிறார்.

**கண்டாள் கருணனை**
**கண் கடந்த தோளானைக்**
**கொண்டாள் ஒரு துணுக்கம்**
**அன்னவனைக் கொன்றவனாம்**

**தண்டாத வாழினி**
**துடித்த துனிவார்த**
**உண்டாள் உடல் தடித்தாள்**
**வேறொருத்தி ஒக்கின்றாள்**

என்றல்லவா பாட வந்திருக்கிறது. அவளுக்கு கண்டாள் கருணனை என்றும், அவன் கடவுள் தாளிணை என்றும் பாட முடிந்திருக்கிறாரே அவனால். அதில் எண்ணங்கள் அவள் மூளையில் Overlap பண்ணும் காட்சியை அல்லவா காட்டிவிடுகிறான். பழைய நிகழ்ச்சிகள் அவள் எண்ணத்தில் எப்படி தோன்றுகின்றன. தோன்றுவதை காவியத்தில் எப்படிக் காட்ட முடியும் என்பதையும் அல்லவா பாடியிருக்கிறான்.

இப்படியே கம்பன் காவியத்தில் பல காட்சிகளைக் காட்டலாம். அதன் மூலம் அவன் சினிமா உத்திகளில் எவ்வளவு தேர்ந்திருக்கிறான் என்பதையும் தெரிந்து கொள்ளலாம் நாம். ஆம் கம்பன் ஒரு தேர்ந்த டைரக்டரே என்று ஒரு சபாஷ் போடலாம்.

இப்படி என்றால் சினிமாக்கலை தமிழ்நாட்டிற்கு வந்து ஐம்பது வருஷங்கள் தானா ஆயிற்று ஆயிரம் வருஷங்கள், ஆகவில்லையா என்று கேட்கத் தோன்றுகிறது எனக்கு. சரி பொன்விழா மகிழ்ச்சி அல்ல வைரவிழா நடத்தலாம். இல்லை ஒரு பன்னூற்றாண்டு விழாவே கொண்டாடலாம் நாம்.

❖❖❖

# 11 கம்பன் - ஒரு கடல்

காரைக் குடி யதனில்
கம்பன் கவி அரங்கில்
பேராவ லுடன் கூடி
இருக்கின்ற பெரியோரே!
கவி அரங்கில் பங்குபெறும்
கவி வாணர் பெருமக்காள்!
கவி அரங்கின் தலைமையினை
கவின் பெறவே தாங்குகின்ற
தெய்வசிகா மணி அருணை
தேசிகனே! அன்புள்ள
தாய்மாரே! தம்பியரே!
தமிழறியும் சபையோரே!

உழைப்பதுவின் லக்ஷியமே
உன்னதத்தின் குறிக்கோளே
கழகச் செயலாளா!
கணேசப் பெருமானே!
உமக்கெல்லாம் உள்ளார்ந்த
அன்பு வணக்கங்கள்.

இயற்கையினில் பத்து வகை
எல்லோரும் பாடிடுவர்
செயற்கை அழகில்லாமல்
செப்பிடுவீர் கடல் அழகை
என்றெழுதி யிட் டழைத்து
என்னை இங்கே நிறுத்தியுளார்.

அன்னதனை,

நன்றுரைக்கும் வாய்ப்பினையோ
நானறியேன் என்றாலும்
அரங்கின்றி வட்டாடும்
ஆற்றல் மிகவுண்டு
கறங்காய்ச் சுழலுதற்கும்
காதல் பெரிதுண்டு.

ஆதலினால்

செயலாளர் அன்பினுக்கும்
செம்மனத்தோர் தண்ணளிக்கும்
வயமாகத் தலைவணங்கி
வழுத்துவேன் சிலவார்த்தை.
கம்பனது காவியத்தில்
காணுகின்ற கடலழகு
பம்பிப் பரந்துளதைப்
பாரறியும் நீரறிவீர்.

ஆதலால்,

அன்னதனை விரித்துமது
அவகாசம் கவராது
என்றனது வாழ்க்கையிலே
எனக்கும் கடலுக்கும்

நேர்ந்த உறவதுதான்
 நிமிர்ந்து வளர்ந்தவிதம்
சீராக ஒரு சிறிது
 சொல்வேன் செவி சாய்ப்பீர்.

சின்னஞ் சிறுவயதில்
 சிறுதிவலை மழைகண்டால்
வன்னச் சிறுதாளால்
 வாகாய் நடந்துவந்து
தெருவீதி தனிலோடி
 தெள்ளேணம் கொட்டி
ஒரு சிறிதும் கூசாமல்
 உல்லாச மனத்துடனே
ஒடுகின்ற தண்ணீரில
 உள்ளிறங்கி, உடல் நனைந்து
பாடுகின்ற சிற்றோடைப்
 பண்ணுக்குத் தாளமிட்டு
வாடுகின்ற பயிர்வளர்க்கும்
 வளங்குறையா மழையினிலே
ஆடுகின்ற அனுபவத்தை
 அந்நாளில் பெற்றவன்நான்

இம்மட்டோ,

காகிதத்தில் கப்பல் செய்து
 கற்களெனும் சரக்கேற்றி,
சாகரத்தின் மீதுவிடும்
 சாதுரியம் காட்டிடுவேன்.,
கூரை தனிலிருந்து
 குதித்துவிழும் தண்ணீரில
ஆராத முத்தொளிரும்
 அணியழகில் மெய்மறப்பேன்.

அன்னை தடுத்தாலும்
அண்ணன் அடித்தாலும்
பின்னைச் செயலறியேன்
பிள்ளைப் பிராயத்தில்.

பள்ளிக்குச் செல்லும்
பருவம் அடைந்ததன்பின்
தெள்ளத் தெளிந்துள்ள
தெண்ணீர்க் கயங்கண்டால்
உள்ளம் பறிகொடுத்து
உற்று உற்று நோக்கிடுவேன்
பள்ளத்தில் பாய்கின்ற
பனிநீரின் ஓடையிலே
கல்வியொடு கவிதை
கணக்கில்லா சாத்திரத்தை
பல்விதமாய்க் கண்டு
படித்து மகிழ்ந்திடுவேன்.
சுழித்தோடிக் குமிழியிடும்
சுழன்று சுழன்று நிலம்
குழித்தோடிக் குதித்து வரும்
குவலயத்தில் எம்பொருநை.
வற்றாத நீர் நிறைந்து
வசியோடு வளம்பெருக்கி
கற்றாவின் மடிபோல
கலன் நிறைத்துப் பசியகற்றும்
எத்தனைநாள் அவள் மடியில்
இனிதாய்க் கிடந்துறங்கி
நித்தம் அவளோடு
நீந்திப் புனலாடி
சித்தம் மயங்கிச்
சிந்தை பறிகொடுத்து

புத்தம் புதிய சுவை
    புதுமலரின் வாசமுமே
பெற்றதெல்லாம் சொன்னால்
    பேதலிக்கும் உங்கள் உளம்
கற்றுத் தெளிவதுவோ
    கன்னி தருவதெல்லாம்.

இன்னும் வயதேறி
    இங்கிதம் அறிந்தபினர்
மன்னும் பொதியை இடை
    வழிந்தோங்கும் வடஅருவி
கண்டேன் களித்தேன்
    காணறிய காட்சியென்று
மண்டுபெருங் காதலுடன்
    மாந்தி உடல் தடித்தேன்.
குற்றால மலையிருந்து
    குதித்துக் குதித்து வரும்
சிற்றாற்றங் கரையினிலே
    சிறியேன் சிலநேரம்
நின்றேன் நினைப்பொழந்தேன்
    நீள்உலகின் துயர் மறந்தேன்.

அத்தோடு,

தென்றல் சிலுசிலுப்பில்
    தெய்வ ஒளி கண்டேன்.
பித்தம் தெளியவைத்து
    பிணிஅகல வினைசெய்து
நித்தம் குளித்திடவும்
    நேராகத் தானழைத்து
உடல் குளிரச் செய்வதடன்
    உயிர் தழைக்க ஊட்டுவதை

வடஅருவி ஆடிடுவோர்
    வாகாய் உணர்ந்திடுவர்.,
நேற்றுவரை தரையினிலே
    நேராய் நடந்தநதி
இற்றைக்கு எழுந்திருந்து
    எக்களிப் போடாடுவதும்,
விண்கிழித்து ஒழுகுகின்ற
    வண்ணமலர்த் தாரையினில்
வானவில்லின் ஜாலமெல்லாம்
    வகைவகையாய்த் தோற்றுவதும்
உள்புகுந்து அருவியிலே
    உல்லாசமாய் ஆடி
விள்ளற்கரிய தொரு
    வித்தகங்கள் பேசுவதும்.

இன்னும் இது போன்று
    எத்தனை அனுபவந்தான்
    எம்மான் அருளாலே
    நித்தம் நான் பெற்றேன்
    நிமலன் அடிபணிந்தேன்.

மழையோடும் அருவியோடும்
    மாட்சிபெறும் ஆற்றோடும்
இழைந்து பலகாலம்
    இனிதாய்க் கழித்ததின்பின்
அன்றொருநாள்க் காலையிலே
    அலைவாய்க் கரைசேர்ந்து
நின்றேன் நிமிர்ந்தேன்
    நீலப் பெருங்கடலைக்கண்ணுற்றேன்
ஒன்ற ஒசையிலே
    உள்ளம் சிலிர்த்ததுகாண்

நாமென்றும் நமதென்றும்
நாடுகின்ற பொருள்போகம்
விரிந்து பறந்திருக்கும்
வியன் கடலைக் கண்டதுமே
கரிந்த வினையதுபோல்
கழன்றோடிப் போயினவே.
எல்லை அறியாது
இரவெல்லாம் உறங்காது
அல்லும் பகலுமெல்லாம்
அலுக்காது தான் புரண்டு
அணியணியாய் அலைவீசி
அழகாய்த் திரண்டுருண்டு
தணியாத வேட்கையுடன்
தக்க இசைபாடி
முத்தோடு பவளமதை
முன்னிக் கடலொதுக்கி
தத்தை மொழியார்க்கு
தனித்த கலனாக்கி,
வண்ணக் கடல் தழுவி,
வானவளை யந்தொட்டு
விண்ணினையே வியப்பாக்கும்
விந்தைகளும் எத்தனைதான்.
ஆதியோடு அந்தம்
அற்ற கடல்பரப்பு
ஆதி பரம்பொருளின்
அழகான காட்சியன்றோ?
காலைக் கதிரவனும்
கண்விழித்து ஓடிவந்து
கீழைக் கடலிலிருந்து
கிளம்பி வருகையிலே

எண்ரிய ஜோதியோடு
எங்கும் எழில்பரப்ப
கண்ணுதலோன் நடனமிடும்
காட்சியன்றோ நினைவுவரும்

இம்மட்டோ
கடல் அலைமேல் இரவினிலே
கவிபாடும் முழுமதியம்.
மடல் அவிழ்ந்த மலர்போல
மனதிற்குச் சாந்திதரும்.

இப்படித்தான்
கல்லெனக்கு கவிசொல்லும்
கடலெனக்கு காவியமாம்.
புல்லெனக்குப் புத்தகமே
புனல் எனக்கு வாழ்வு தரும்.
இதுவரை நான் சொன்னதெலாம்
எனக்கென்றே வாய்த்ததொரு
புதிய அனுபவமென்று
புகல்வதற்கு நான் துணியேன்.

என்றாலும்,
இத்தகைய அனுபவம் என்
இலக்கிய நல்வாழ்வினிலும்
சித்தித்த தென்பதனை
சிறியேன் உணர்கின்றேன்.
கவியென்றால் இன்னதென்று
காணஅறியாது
தவிக்கின்ற நாளிலெனைத்
தடுத்து ஆட்கொண்டவனும்,
உள்ளத்தில் எழுகின்ற
உணர்ச்சியினை உருவாக்கி

தெள்ளத் தெளிந்த தமிழ்
    தேன்பாகில் ஊறவைத்து
இன்பச் சுவைஉணரும்
    இனிதான வாய்ப்புணர்த்தி
இன்னிசையில் பாடியவன்
    எங்களவன் பாரதிதான்.
அன்னவன்றன் பாட்டினிலே
    அறியாப் பருவமதில்
கன்னல் சுவை அறியும்
    கனிவை நான் பெற்றிருந்தேன்.

அத்தோடு

குயில்வந்து கொம்பிருந்து
    கொஞ்சி இசைப்பதையும்,
மயிலாடி நடம்புரிந்து
    மனம்மகிழ வைப்பதையும்,
தேனோடு தினைமாவும்
    தித்திக்கும் முக்கனியும்
கானக் குழலிசையும்
    கனிவண்டின் ரீங்காரம்
எல்லாம் கலந்ததொரு
    இனிய கலவையைப் போல்
சொல்லாலும் இசையாலும்
    சொக்கவைப்பான் பாரதியே.
பாப்பாவின் பாட்டினிலே
    பறிகொடுத்த நெஞ்சுடனே
சாப்பாட்டை யும் மறக்கும்
    சாதனையைப் பெற்றவன்நான்.
பாரதியின் பாட்டைவிட
    பண்ணோசை மிக்கொலிக்கும்
தாரகையே எங்கள் தமிழ்
    தேசிய விநாயகனாம்.

மலர் மலராய் உருவாக்கி
மாலையெனவே தொடுத்து
சீலர்களாம் சிறுவர்
செல்வத் தமிழருக்காய்
இன்றும் உதவுமொரு
இனிய கவிஞனவன்,
பன்னற் கரியதொரு
பண்பாடு பெற்றவனாம்.

இவ்விருவர் கவிதைகளும்
இனிய மழைத் தாரையென
செவ்வியுடை இளமனது
செழித்து வளர்வதற்கு
உற்றதொரு தாரகமாய்
உதவியது அந்நாளில்
கற்ற கவிதையெல்லாம்
கனிந்த கனியலவோ?

கவிதை இது என்று
கண்டறிந்த பின்னருமே
புவியிலுளோர் போற்றும்
புலவர் பலர் கண்டேன்.
சங்க இலக்கியங்கள்
சார்ந்த பெருங்காப்பியங்கள்
தங்கம் போல் மாற்றுயர்ந்த
தனித் தமிழே யானாலும்
அன்னவற்றில்,
அழகான இன்னிசையை
அற்புதமாம் ஆற்றொழுக்கை
பழக்கமிலாச் சொற்களிலே
பார்த்தறிய வகையில்லை

வள்ளுவப் பெருந்தகையார்
வாழும் வகையுரைப்பார்
தெள்ளுதமிழ் இன்பமங்கு
தெரிந்திடவோ தெம்பு இல்லை
மக்களது நாகரிகம்
மன்னரது பண்பாடு
ஒக்க உரைக்கின்ற
உன்னதமாம் நூல்க ளெலாம்
என்னறிவை வளர்த்தாலும்
என்னிதய தாபமது
இன்னும் தணியவிலை
ஏங்கி நின்றேன் கவியினுக்கே
அவ்வைக் கிழவி தரும்
அழகான பாக்களிலே
கவ்வை தனை யகற்றும்
கவிதைச் சுகமறிந்தேன்
மூவேந்தர் புகழுரைக்கும்
மூன்று தொள் ளாயிரத்தில்
நாவேந்தர் சொல்நயத்தை
நன்றாய் அனுபவித்தேன்
கலிங்கத்துப் போரினிலே
கருணாக ரன் புகழ்தான்
ஒலிக்கும் பனுவலெனும்
உன்னதமாம் பரணிதனில்
சயங்கொண்ட கவிஞனவன்
சாற்றும் கவிகளிலே
நயங்கண்டு நின்றேன் யான்
நல்ல தமிழ் அறிந்தேன்
நந்திக் கலம்பகத்தின்
நலமார்ந்த கற்பனையில்

புந்தியொடு உளமுருக்கும்
புகழ்க்கவிதை வளம்நிறைந்து
வற்றாத முக்கூடல்
வகையான பள்ளோடு
குற்றாலக் குறவஞ்சி
கூறாத இன்பமுண்டோ?

இன்னும் இதுபோன்று
எத்தனையோ இலக்கியங்கள்
என் கவிதைக் காதலினை
இனிதாய் வளர்த்ததுகாண்.

சிற்றாறு என்றாலும்
சிந்தை மகிழ்வித்து
பெற்ற முடைச் சிறியர்
பெரிய மனம் போல
ஆற்றொழுக்கின் கதியினிலே
அணிசிறந்த இசைபேசி,
காற்றில் மிதக்குமொரு
கவிதை உலாவருமே.
சலசலக்கும் சிற்றோடை
சாந்தி தருவதையும்
பலபலவாம் வண்ணமதை
பனிநீர் அருவியிலே
கண்டு களிக்கின்ற
கவிதைச் சுகமெல்லாம்
பண்டறியா விட்டாலும்
பார்க்கத் திறனுண்டு.

இப்படியே,

எண்ணற்ற கவிதைகளை
    இனிதாகத் தான்மாந்தி
நண்ணுகின்ற நதியழகும்
    நாடுகின்ற அருவிதரும்
இன்ப உணர்வை யெல்லாம்
    எளிதாய் நான் பெற்றபின்தான்
கம்பனது காவியமாம்
    கரையருகே வந்துநின்றேன்.
காவியப் பெருங்கடலைக்
    கண்ணுற்ற போழ்தினிலே
ஓவியமாய் உணர்விழந்து
    உன்மத்த மெய்திவிட்டேன்.
எவ்வளவு பரந்த கடல்
    எவ்வளவு விரிந்த நிலை
இக்கடலின் எல்லையினை
    எப்படி நாம் கண்டுகொள?
அகலமதை அளந்தாலும்
    ஆழம தை அறிய
சகல கலா வல்லவனும்
    சாதித்தல் கூடிடுமோ?

அலைமேல் அலைவந்து
    அழகான முத்தையள்ளி
மலையாய்க் குவிப்பதுபோல்
    மன்னன் கவி சொல்வான்.
விண்ணில் ஒளிருகின்ற
    மீனித்தைப் போலெல்லாம்
கண்ணிற் கினிய பல
    காட்சிகளைத் தந்திடுவான்.

கற்பனையாம் தேரேறி
    ககன மதிற் பறந்து
அற்புதமாம் கவி உலகில்
    அமுதொழுகும் இசை பரப்பி
நீல நெடு வான் முகட்டை
    நித்தம் தழுவி வரும்
நீலக்கடல் அலையில்
    நின்று கவி சொல்லி
பொங்கும் திரைகளிலே
    போதம் விளைவித்து
எங்கும் அவன் ஒளியை
    எல்லோர்க்கும் காட்டிடுவான்.

இதன் பின்னர்,

அன்பென்னும் புணையேறி
    அறிவென்னும் தண்டோடு
கம்பனெனும் கடலினிலே
    கரைகாணப் புறப்பட்டேன்.
அப்பப்ப! அக்கடலில்
    அன்றடித்த சுழற்காற்றில்
செப்பரிய மழையோடு
    சேர்ந்த பெரும் புயலில்
சிக்கிச் சிதறுண்டு
    செல்கதியை அறியாது
துக்கித்து தயருழந்தும்
    துணிவை விடவில்லை.

ஆதலினால்,

மழைநின்று புயல் ஓய்ந்து
    மகிழ்வெய்தும் காலையிலே
தழைக்கின்ற அறிவொளியைத்
    தந்தான் கவியரசன்.

அப்போது,

எல்லாரும் எல்லாப்
பெருஞ்செல்வ மெய்திடலால்
இல்லாரும் உடையாரும்
இல்லாத கோசலத்தை
ராமனெனும் லக்ஷியத்தை
இலக்குவனின் சேவகத்தை,
கோமான் தசரதனின்
கொற்றமுடைச் சத்தியத்தை,
தள்ளரிய நீதியெனும்
தனியாறு புகமண்டும்
பள்ளமெனும் தகைசிறந்த
பரதன் அவன் பண்பை.
கங்கை நதியினிலே
கனிந்த உளத்தோடு
வங்கமதை யோட்டும்
வள்ளல் குகன் அன்பை,
வாலியெனும் வானரனின்
வளமிகுந்த வீரமதை,
சீலநிறை வீடணனின்
சித்தத் தெளிவதனை,
ஆழிசூழ் இலங்கையிலே
அசோக வனத்திடையே
சிலைபோல் சிறையிருந்த
செல்வியவள் பொறையை,

இவையோடு,

இன்னும் இவைபோன்று
எடுத்தனையோ நித்திலங்கள்
கம்பனெனும் கடலிருந்து
கைப்பற்றிக் கொண்டேன் யான்.

கடல் கடந்த அனுமனுமே
காட்டிடுவன் பேர் உருவை
அடல்மிகுந்த கம்பனுமே
அன்னவனை விஞ்சிடுவான்.

இன்னும்,

எத்தனையோ சிறுநதிகள்.
இக்கடலைத் தானடையும்
அத்தனையும் உள்ளடக்கி
அமரநிலை பெற்று
வித்தகர்கட்கு வித்தகமாய்
விற்பனர்க்கு நிலைக்களனாய்
பத்தர்கட்கு பத்திமையாய்,
பரமார்த்த சாதனமாய்,
கம்பன் எனும் பெருங்கடலே
கற்பவர்க்கு களிப்பருளும்
நம்பன் அருளாலே
நம்மிடை யேபிறந்து
கல்வியிற் பெரியவனாய்
கவிச்சக்ர வர்த்தியெனவே
எல்லோரும் போற்றுகின்ற
இனிய நிலை பெற்றான்.
அன்னவன்தான்,
இற்றைக் கவி யுலகில்
ஏற்றமுறு பீடமதில்
வீற்றுக் கொலுவிருந்து
விம்மிதத் தோடாட்சிசெய்வான்.

இத்தகைய

தமிழ்க்கவிஞன் சந்நிதியில்
தலைதாழ்த்தி கைகூப்பி
அமிழ்தனைய தமிழ் பாடி
அன்பன் விடைபெறுவேன்.

# 12 கம்பன் என் பகைவன்

"வாருங்கள் வாருங்கள்
வணக்கம் யாம்செய்கின்றோம்,
பாரிடத்தல் எங்களையே
பார்ப்பதற்காய் வந்ததற்கு
பாராட்டுகின்றோம் யாம்
பக்கத் திருந்திடுவீர்
பேரவாவோடு உம்வரவை
பேணிஎதிர் பார்த்திருந்தோம்
நாலாறு நாட்பொழுதாய்
நாங்கள்எல் லாருந்தான்.
காலையில்தான் வீட்டுள்ளே
கடும்பகலில் ஆபிசில்
மாலையிலே இங்குவந்து
மகிழ்வோடு தானிருந்து
வேலைதரும் தளர்வை
விரட்டி விடலாகாதோ?"
என்றெனையே வரவேற்றார்
என்றனது அன்பர் சிலர்
அன்றொரு நாள் மாலையிலே
ஆற்றங் கரையருகே.

பொன்னி யெனுந்தெய்வப்
புனலாலே வளம்பெருக்கும்
கன்னியவள் காவிரியின்
காதல் மடிதவழ்ந்து
தெள்ளத் தெளிந்தோடி
தென்றல் இசை பரப்பி
உள்ளத்தில் உவகையினை
ஊட்டுகின்ற ஓரிடத்து
ஓங்குகின்ற மரத்தூடே
உதிக்கின்ற நிலவொளியில்
பூங்குலைகள் தூங்குகின்ற
பொழிலடுத்து மணற்பரப்பில்
வீற்றிருந்தார் அன்பர்
விரைந்தங்கு சென்றேன் யான்
போற்றி அவர் உரைத்த
பொன்னுரைக்குத் தலைவணங்கி
அன்பர்களே! அறிஞர்களே!
அஞ்சாறு நாட்கணக்கில்
இன்பம் நுகர்வதற்கும்
இனிதான கூட்டுறவை
நாடிவர மனமிருந்தும்
நற்பொழுது வாய்க்கவிலை
வீட்டிருந்து செயவேண்டும்
வேலைஇருந்தது காண்
என்று தெரிவித்து
எங்கெங்கோ சிந்தனையைச்
சென்றுவர விட்டு
சேர்ந்தேன் அவர்பக்கல்
காரியந்தான் என்னவென்று
கணக்கிடவே நானறிவேன்

பாரிடத்தில் பங்குனியில்
பகருகின்ற அத்தத்தில்
காரைக்குடியினிலே
கம்பனுக்குத் திருநாள்
சீராகச் செய்கின்ற
செட்டிநாட் டன்பருடன்
சேர விரைந்திடுவீர்
சென்றங்கு தானிருப்பீர்
வேறுள்ள வேலையெலாம்
விட்டிடுவீர் இப்போது,
என்றெமக்குத் தெரியாதா?
இத்தனை நாள் பழகியுந்தான்
என்று ஒரு நண்பர்
எவ்வத் தொடுபேச,
வருஷந்தோ றுந்திருநாள்
வகையாய் நடத்துகின்றார்
விருந்தருத்தி மக்களுக்கு
வித்தார மாய்ப்புகட்ட
இந்தத் திருநாளில்
ஏற்ற முறுமுறையில்
வந்தனையைக் கம்பனுக்கு
வண்ணமுறச் செய்வதற்கு
என்னதிட்ட மிட்டுள்ளான்
எழிலார் கணேசனுந்தான்
என்றுமிக்க ஆவலுடன்
எனைக்கேட்டார் மற்றொருவர்.
“கம்பன் திருநாளில்
கவிதை அரங்குண்டு
கம்பன்என் தந்தையென்பர்,
கவிஞன்என் காதலனாம்,

கம்பன்என் ஆசானே,
கம்பன்என். தோழனுந்தான்,
கம்பன்என் தெய்வமையா!
காண்கின்றோம் இவ்விதமே
என்றுபலர் பாமாலை
இயற்றிப் புனைகின்றார்
நன்றாயி ருக்குமென்று
நான்வேறேசொல்லணுமோ"
என்றுஒரு பெருமிதத்தோடு
எலலோரும் திருநாட்கு
என்னோடே வருக என்று
எக்களிப்போடே அழைத்தேன்.

இவ்வுரையைக் கேட்டொருவர்
எழுந்தார் சினத்தோடே
தெவ்வரைப்போ லேவெகுண்டு
தெறலோடு எனைப்பார்த்து
என்னையா சொன்னீர்?
யாரிடத்தே பேசுகின்றீர்
கன்னித் தமிழ்மொழியில்
காவியத்தைத் தானெழுத
கதைவேறே கம்பனுக்கு
கையில் கிடைக்கலையோ?
பதைக்கின்றோம் எண்ணுகையில்,.
பழிபூண நாணுகின்றோம்
சித்திரத்தில் தீட்டநல்ல
சிலப்பதிகா ரம்இருக்க
உத்தார மாய்ப்பேச
உயர்சங்கத் தமிழிருக்க
எவனோ எழுதிவைத்தான்
ஏட்டில் ஒரு கதையை

புவனம் முழுவதுமே
போற்றிப் புகழ்கிறது
வடநாட்டு வான்மீகி
வன்மமொடு திராவிடரை
திடமாக இழிவுசெயத்
தீட்டிவைத்த அக்கதையை
இந்தப் பயல்கம்பன்
ஏனோ தமிழருக்காய்
சொந்தக் கதையாக்கி
சொகுசாய் உரைத்திட்டான்.
ராமபிரா னவனாம்
ராவணனை வென்றவனாம்
நேம மொடுவாழும்
நீர்மை தெரிந்தவனாம்
என்றெல்லாம் ஆரியனை
ஏத்திப் பணிந்துநின்று
குன்றனையை வலிபடைத்த
கோலமுறு வாலியையும்
தென்னாட்டு வீரனவன்
தெருளுடைய ராவணனாம
மன்னனையும் மக்களையும்
மதியாது இழித்துரைத்து
தமிழரெனும் நம்மையெலாம்
தலைதூக்க ஒட்டாமல்
அமிதிவைத்த வன்என்று
அறியீரோ நீரெல்லாம்?
கொங்கையோடு அல்குலையும்
கூசாமல் தான்விளக்கி
மங்கையவர் மாண்பையெலாம்
மண்ணாக்கி மயலாக்கி,

கலையென்றும் ரசமென்றும்
　　கவிதைச் சுவையென்றும்
தலைமேலே தூக்கிவைக்கும்
　　தாசரெலாம் நீர்தாமே?
கம்பரச மென்பதெலாம்
　　காமரச மல்லாது
இம்பர் உலகத்தில்
　　எதற்கும் பயனுண்டோ?
இப்படிப் பட்டவனை
　　என்பகைவன் என்றுசொலி
தப்ப வழியின்றி
　　தகிக்கின்ற தீயிட்டு
தன்மானத் தொடுநாமும்
　　தலைநிமிர்ந்து தான்நடக்க
என்உள்ளம் விரைகிறது
　　எத்தனையோ நாளாய்த்தான்
என்றுகடுங் கோபமுடன்
　　என்மேலே தான்பாய்ந்தார்
நன்றாக இருந்ததொரு
　　நண்பர் ஒருதோழர்.

மற்றொரு நண்பரோ,

தோழர் உரைத்த தெலாம்
　　தொடர்ந்து நீர் கேட்டுவிட்டீ!
ஆழ்ந்தகருத் தொடுநானும்
　　அக்காவி யம்படித்தேன்
கவிதைச் சுவையறியும்
　　காதுடையேன் ஆனாலும்
புவிதனிலே இக்கதையைப்
　　போற்ற முடியஇலை

வெள்ளைக் கலையுடுத்து
 வீணை கரத்தேந்தி
வெள்ளை அரி யாசனத்தில்
 வீற்றிருக்கும் கலை மகட்கு
பொன்னாலும் பொருளாலும்
 பொற்கோயில் அமையாது
எண்ணத்தால் சிறந்தோங்கும்
 எழிலார் கலைக்கோயில்
கட்டும் ஒரு பணியில்
 கருத்துடையோன் கம்பன் என்றால்
இட்டமொடு சிறந்த
 எத்தனையோ கதையிலையோ?
ஆதிசிவன் பெற்றெடுத்து
 அகத்தியனு மேவளர்த்து
ஓதிப் பெருமை கொள
 உயர்ந்தாள் தமிழணங்கு.
தமிழோடு சைவமுந்தான்
 தழைத்து வளர்ந்தஇந்த
தமிழ்நாட்டில் கம்பனுக்கு
 தக்க கதை கிடைக்கலையோ?
பிறவாத யாக்கையுடைப்
 பெரியோன் சிவனிருக்க
இறவாத புகழை யெலாம்
 இராமனுக்கோ ஏற்றுவது?
அறுபத்து மூவருடை
 அழியாப் பெருமையொடு
அறுபத்து நான்காய்
 அமைந்த விளையாடலுமே
ஏற்றமுறும் வகையில்
 எங்கள்சிவ னருளைப்

போற்றுமொரு காவியத்தைப்
 புவிக்களிக்கக் கூடாதோ?
வீர புருஷனென
 விளக்கியந்த ராமனையே
பாரறிய வான்மீகி
 படைத்திருந்தும் காவியத்தில்,
மூவர்க்கும் மேலான
 முதலவன் இவனென்றும்
நாவாலே ராமனென
 நாளுந் துதிசெய்தால்
நாடுகின்ற பொருள்போகம்
 ஞானமொடு புகழும்
வீடுதேடி வருமென்று
 விரித்துவிட்டான் கம்பனுமே.
இப்படியெல்லாம் சொல்லி
 இந்தத் தமிழகத்தில்
தப்பிதமாய்ப் பிரச்சாரம்
 தமிழ் மொழியில் செய்ததனால்
சிவனடியே மறவாத
 சிந்தையொடு வாழ்வதற்கு
இவனாலே எவ்வளவோ
 ஏதம் விளைந்துளது
இதனாலே கம்பனையே
 என்பகைவன் என்றுசொல
கதத்தோடு என்னுடைய
 கடன்என்றே குறிக்கின்றேன்

(என்று ஒரு போடு போட்டார். போட்டவர் அழுத்தமான சைவர். சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று எண்ணுகின்றவர், பேசுகின்றவர். இவருக்குப் பதில் சொல்லவோ நான் துணியவில்லை. அதற்குள் ஆரம்பித்தார் மற்றொருவர்)

நண்பர் இருவருமே
    நயமாகச் சொன்னதெலாம்
எண்ணுதற்கு உரியவையே
    என்றாலும், என்னுடைய
எதிர்ப்பெல்லாம் கம்பனுக்கு
    இதனாலே தானில்லை
முதிர்ச்சி யொடுஅறிவு
    முற்றும் உடையவர்கள்
கவியென்றும் கம்பனென்றும்
    காலங் கழிப்பதற்கு
புவியிலின்று நேரமில்லை
    புகல்கின்றேன், புகல்கின்றேன்
நாட்டின் நிலைதெரிந்து
    நடக்கத் தெரியாமல்
பாட்டென்றும் கூத்தென்றும்
    பணவிரயம் செய்கின்ற
கூட்டமதைப் பார்த்து
    கூறுகின்றேன் ஒருவார்த்தை.
ஆட்டமொடு கவிதை
    அரும்பசியைத் தீர்க்காது
போர்வந்து போயிற்று
    புதிதாய்ச் சுதந்திரமும்
ஊர்தேடி வந்துநமை
    உயரத்தில் வைத்தளது.
என்றாலும் நாட்டினிலே
    எல்லா இடத்தினிலும்
குன்றாத பஞ்சந்தான்
    கூத்திட்டு நிற்கிறது.
அரிசிக்குப் பங்கீடு
    அரைவீசைச் சர்க்கரைதான்

குறிக்கின்ற பொருட்கெல்லாம்
　　கொள்ளை விலையேதான்
உடுக்க உடையின்றி
　　உண்பதற்கு உணவின்றி
படுப்பதற்கு பாயின்றி
　　பரிவின்றி வலியின்றி
பஞ்சமொடு பசியால்
　　பரிதவிக்கின்றார் மக்கள்.
நெஞ்சிரக்க மில்லாது
　　நினையாது எண்ணாது
கலையென்றும் கவியென்றும்
　　கதைபேசித் திரிகின்றீர்
சிலைஒன்று கம்பனுக்குச்
　　செயவேண்டும் என்கின்றீர்.
உம்மைப் போலுள்ளவர்கள்
　　உதவார்கள் இந்நாளில்.
நம்மையெல்லாம் காப்பதற்கு
　　நண்பர் பலர்வேண்டும்
கம்பனோடு நீரும்தான்
　　கடும்பகைவன் இனத்திற்கு
நம்பாதீர் இவரையென
　　நாவலித்துக் கூறுகின்றேன்.

(என்று ஆர்ப்பாட்டமே செய்துவிட்டார் இந்த நண்பர். மூன்று பேர் கம்பனை என் பகைவன் எம் பகைவன் என்று சொல்லி அவர்கள் கருத்தையெல்லாம் அறுதியிட்டுக் கூறிவிட்டார்கள். உண்மைதானே. கம்பன் இவர்களுக்குப் பகைவன்தான். இவர்கள் மூன்று பேருக்கு மட்டுந்தானா பகைவன்? இல்லை இன்னும் எத்தனையோ பேர்களுக்கு அவன் பகைவன். ஆம் பகைவன்தான்.)

பாட்டும் உரையும்
பயில்கின்ற பண்பறியா
ஒட்டைச் செவிபடைத்த
ஊமையருக் குப்பகைவன்
உள்ளத்தில் எழுகின்ற
உணர்ச்சிக்கு உருவத்தை
அளிக்கின்ற ஆற்றலினை
அறியாதார்க் குப்பகைவன்
துன்பம் துடைக்கவல்ல
தூய கவிதையினை
இன்ப மொடுபாட
இயலாதார்க் குப்பகைவன்
எங்கும் நிறைந்துள்ள
எழிலார் இறையருளின்
பொங்குகின்ற பூரணத்தைப்
போற்றாதார்க் குப்பகைவன்
கண்ணுதல்போல் சடைவிரித்து
கடலலைமேல் கதிரவனும்
பண்ணிசையோ டாடுவதைப்
பார்த்தறியார்க் குப்பகைவன்
அந்திதரு சித்திரத்தின்
அழகினிலே தான்மயங்கி
வந்தித்துப் போற்றி
வாழ்த்தாதார்க் குப்பகைவன்
கலலினிலும் செம்பினிலும்
கடவுளையே காட்டுகின்ற
பல்திறத்துச் சிற்பிகளின்
பண்பறியார்க் குப்பகைவன்
கற்றதனால்ஆயபயன்
கடவுளையே தொழுதலென

முற்றும் உணராத
மூடர்களுக் குப்பகைவன்
தனக்குவமை இல்லாதான்
தாளில்ப் பணியாது
மனத்துக்கண் மாசுடைய
மாக்களுக்கெல் லாம்பகைவன்
அரன்அதிகன் உலகளந்த
அரிஅதிகன் என்றுரைத்து
பரகதிக்குச் சொல்லமொரு
பரிசில்லார்க் குப்பகைவன்
சத்தியத்தொடு அஹிம்சை
சமயத்தில் சமரசமே
நித்தியமும் வாழ்வினிலே
நிறுத்தாதார்க் குப்பகைவன்
அஞ்சாது திருடாது
அருள்நெறியில் தான்நின்று
எஞ்சாது பணிபுரியும்
ஏற்றமிலார்க் குப்பகைவன்
வாய்மையொடு மரபை
வையத்தில் காப்பதற்கு
தூயஉயிரை விடத்
துணிவில்லார்க் குப்பகைவன்
கள்ளத்தால் பிறர்மனையைக்
கொள்ளத்தான் குறிக்கொண்டு
உள்ளத்தால் உன்னுகின்ற
உலுத்தர்களுக் குப்பகைவன்
வாழ்வாங்கு வையகத்தில்
வாழத் தெரியாமல்
பாழும் நெறிகளிலே
பட்டலைவார்க் குப்பகைவன்

எல்லாப் பெருஞ்செல்வம்
    எல்லோரும் எய்துதற்கு
வல்லான் உரைத்ததனை
    வகுத்தறியார்க் குப்பகைவன்
அறிவின்மைக் குப்பகைவன்
    அன்பின்மைக் குப்பகைவன்
வறியவர்க்கு வழங்குமொரு
    வண்மையிலார்க் குப்பகைவன்
தமிழறியார்க் குப்பகைவன்
    தகவில்லார்க் குப்பகைவன்
அமுதினையே மாந்த
    அறியா தார்க்குப் பகைவன்
வெண்மைக் குப்பகைவன்
    வெறியருக் குப்பகைவன்
ஒண்மை அறிவில்லா
    ஒன்னார்க் குப்பகைவன்

பகைவன் பகைவன்எனப்
    பல்லோரும் சொன்னாலும்
பகைவனுக்கும் அருளுமொரு
    பண்புடையோம் ஆனதினால்
கம்பன் திருநாளில்
    கவிஞனவன் வாழ்கஎனப்
பம்பும் உணர்ச்சியுடன்
    பல்லாண்டு கூறிடுவோம்.

கம்பன் வாழ்க!
    வாழ்க வாழ்க!
கம்பன்புகழ் வாழ்க!
    வாழ்க! வாழ்க!
கன்னித்தமிழ் வாழ்க!
    வாழ்க! வாழ்க!



அமரர். கலைமணி. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் தமிழ் கூறும் நல்லுலகுக்கு நன்கு அறிமுகமானவர். அவரது தமிழ்ப்பணியும் கலைப்பணியும் தமிழக வரலாற்றில் புகழ் அத்தியாயங்கள் என்று ஓர் அன்பர் சொன்னார். முற்றிலும் உண்மை.

தஞ்சாவூரில் அவர் உருவாக்கிய கலைக்கூடமும், தமிழ் மக்களுக்கு அவர் விட்டுச் சென்றிருக்கும் நூல்களுமே அதற்குச் சான்றுகளாகும்.

குற்றாலமுனிவர். ரசிகமணி டி.கே.சி.யின் பிரதம சீடரான அவர் ஆக்கித் தந்துள்ள இலக்கியப்படைப்புகளும் கலைப்படைப்புகளும் தமிழுக்கும் கலையுலகுக்கும் கிடைத்த அரிய பொக்கிஷங்கள்.

## ஆசிரியரது பிற நூல்கள்

1. வேங்கடம் முதல் குமரி வரை (ஐந்து பாகங்கள்)
2. வேங்கடத்துக்கு அப்பால்
3. இந்தியக் கலைச் செல்வம் (வானொலிக் கட்டுரைகள்)
4. கலைஞன் கண்ட கடவுள்
5. கல்லும் சொல்லாதோ கவி
6. அமர காதலர்
7. தென்றல் தந்த கவிதை
8. தென்னாட்டுக் கோயில்களும், தமிழர் பண்பாடும்
9. பிள்ளையார்பட்டிப் பிள்ளையார்
10. தமிழறிஞர் வெள்ளகால் சுப்பிரமணிய முதலியார்
11. ரசிகமணி டி.கே.சி.
12. மதுரை மீனாட்சி
13. இந்திய கலைச் செல்வம்